R65
N32
225263

கற்பகம்
008
நூலகம்

# வேதாந்த சாஸ்திர ரத்நாவலி.

4 OCT 1932

இது

திருப்பூவண மடாதிபதி

ஸ்ரீலஸ்ரீ

காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.

விலை ரூபாய் ஒன்று.

1932.

மீனலோசனி பிரஸ், மதுரை:—1932.

# வேதாந்த சாஸ்திர ரத்நாவலி

## (1-வது பாகம்) இதில்

1. நாகாஜீவ வாதக் கட்டளை.
2. கீதா சாரத் தாலாட்டு.
3. சசிவர்ந போதம்.
4. மஹாராஜா துறவு.
5. பக்தி சதகம்.
6. வைராக்கிய தீபம்.
7. பிரஹ்ம நாமாவலி.
8. வேதாந்த சூடாமணி.
9. கைவல்ய நவநீதம்

என்னும் ஒன்பதும் இருக்கின்றன.

4 OCT 1932

# வேதாந்த சாஸ்திர ரத்நாவலி.

## இரண்டாம் பாகம்.

(1. அஞ்ஞவதைப் பரணி. 2. விவேக சூடாமணி. 3. பஞ்சதசி. மூன்றும் இருக்கின்றன.)

விலை ரூபாய் ஒன்று.

கீதாத் திரயம். (ஈசுவர கீதை, பகவற் கீதை, பிரஹ்ம கீதை மூன்றும்) ரூபாய் ஒன்று.

## பிழை திருத்தம்.

| புத்தகம். | பாட்டு. | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|
| சசிவர்ண போதம் | 33 | தறியே | தறிவே |
| மஹாராஜா துறவு. | 23 | தந்தையாய் | தந்தைதா |
| | 42 | யிறையுநீ | விறையுநீ |
| | 106 | ஞாருதன் | ஞாலருதன |
| பக்தி சதகம் | 1 | யிதன் | யிதென் |
| வைராக்கிய தீபம். | 76 | மெங்ஙண | மெங்ஙன |
| | 78 | துரைகுவ | துறைகுவ |
| பிரஹ்ம நாமாவலி. | 22 | லவாவர்க் | லவரவர்க் |
| | 75 | சர்வாந்தார | சர்வாதார |
| வேதாந்த சூடாமணி | சி.பாயிரம் | பிரகாசண் | பிரகாசன் |
| | 70 | முறைதே | முறைமே. |
| | ... | லுரைத்ய | லுரைத்த |
| | 92 | னின்றும் | னென்றும் |
| | 97 | பலிக்கை | பவிக்கை |
| | 124 | லடுத்தங்வம் | லடுத்தவம் |
| கைவல்ய நவநீதம். | பாயிரம் 5 | முணறு | முணரு |

சற்குருப்யோ நம: 5

# திருக்காளத்தி
# ஸ்ரீ சேஷாத்திரி சிவனார்
# அருளிச் செய்த
# நாநா ஜீவ வாதக் கட்டளை.

இது

திருப்பூவண மடாதிபதி
ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய சுவாமிகளால்

மதுரை
மீனலோசனி அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப் பெற்றது.
1931.

225863

## சிறப்புப் பாயிரம்.

இப்பியி னிடையே யெழுமிர சதம்போ
லென்றுமா யிலகியின் பாகி
யொப்பிட வேது மின்றிய பிரமத்
தூர்திடும் பகுதிமுன் னுய
வப்பிர பஞ்ச முறைமையைத் தால
வருந்ததி நியாயமே யென்னச்
செப்பினன் யாருந் தெளிவுறச் சேஷாத்
திரிசிவ னென்னு மருந் தவனே.



# நாநா ஜீவ வாதக் கட்டளை.

## காப்பு.

**ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்ப
லவனை, ஞானகுரு வாணியையு ளுடு.**

சுத்தப் பிரமமா யிருக்கின்ற சர்வ சாக்ஷியினிடத்திலே அக்கினியிற் சூடு போல அபின்னமாக ஒரு சத்தி உண்டு; அந்தச் சத்தி அவ்வதீதப் பிரமத்தில் அடங்கியிருக்கும் போது அதற்குச் சுத்தப் பிரம மென்று பெயர். இந்தச் சத்தி விசிரிம்பித்துச் சுத்தப் பிரமத்தை வியாபிக்கும் போது அப்பிரமம் பரை வியாபகத்துக்குள் இருந்தபடியினாலே அதற்குப் பரப்பிரம மென்று பெயராம். இலக்ஷண சூன்யமா யிருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்தில் புருட சமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ் சநித்தாற் போல அவிகிர்த சத்துவ ரஜஸ் தமோ குணங்கள் உண்டா

யின. இவற்றில் சுத்த சத்துவத்திற்கு ஆநந்த ரூப சத்தி யென்று பெயர். சுத்த ரஜஸிற்குச் சித் ரூப சத்தி யென்று பெயர். சுத்த தமஸிற் குச் சத் ரூப சத்தி யென்று பெயர். இவற்றில் காரண மான ஆநந்த ரூப சத்தியுடனே பரப் பிரமங் கூடிச் சர்வாநந்த மென்னுஞ் சுழுத்தி யவஸ்தையை யடைகின்ற போது பரப் பிரம மென்கின்ற பெயர் போய்ப் பரமாநந்த ரென்கிற பெயர் வந்தது. இந்தப் பரமாநந்தர் சித் ரூப சத்தியுடனே கூடிச் சர்வப் பிரகாச மென்னுஞ் சொப்பனாவஸ்தையை யடைகின்ற போது பரமா நந்த ரென்னும் பெயர் போய்த் தேசோமய ரென் னும் பெயர் வந்தது. இந்தத் தேசோமயர் சத் ரூப சத்தியுடனே கூடிச் சர்வ வியாபக மென் னுஞ் சாக்கிராவஸ்தையை யடைகின்ற போது தேசோமய ரென்னும் பெயர் போய்ப் பரிபூரண ரென்னும் பெயர் வந்தது.

இந்த அகண்ட பரிபூரண சச்சிதாநந்தப் பிர மத்தினிடத்திலே சுத்தியில் ரஜதம் போல மூலப்



பிரகிருதி யென்னும் ஒரு சத்தி உண்டு. அந்த மூலப் பிரகிருதியும் விகிர்த குணமாகிய மூக் குணத்தோடு கூடியிருக்கும். அந்தப் பிரகிருதி யின் சத்துவ குணத்தை மாயை யென்றும் சர் வக்ஞ வுபாதி யென்றும் ஈசுர காரண சரீர மென் றுஞ் சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மல சலப் பிரதிவிம்பம் போலப் பிரமம் சுலட் சணமாகப் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதந்நியத்தைச் சர்வக்ஞனாகிய ஈசுர னென்று சொல்லப்படும். இந்தச் சத்துவ குண மாயையி னிடத்திலே சத்துவத்தில் சத்துவம் சத்துவத் தில் ரஜஸ் சத்துவத்தில் தமஸ் என மூன்று குணங்கள் உண்டு. இவைகளில் சத்துவத்தில் சத்துவம் பிரதாநமாகும் போது அதில் பிரதிவிம் பித்த ஈசுரன் சகத்தை இரக்ஷிக்கையினால் விஷ்ணு வென்றும், சத்துவத்தில் ரஜஸ் பிரதாந மாகும் போது அதில் பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தைச் சிருஷ்டிக்கையினால் பிரமா வென்றும், சத்துவத்தில் தமஸ் பிரதாந மாகும்போது அதில்

பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தை உபசம்மாரம் பண்ணுகையினுல் உருத்திர னென்றுஞ் சொல்லப்படுவன்.

இப்படி மூலப் பிரகிருதியின் சத்துவ குண கற்பனை சொல்லப்பட்டது.

இனி மூலப் பிரகிருதியின் இரஜோ குணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றும், சீவ காரண சரீரங்களென்றும் ஒன்றற் கொன்று தாரதம்மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் மலினசலப் பிரதிவிம்பம் போலப் பிரம சைதந்நியம் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதந்நியங்களை கிஞ்சிஞ்ஞ ரென்றும், ஜீவ சிதா பாச ரென்றும், பிராக்ஞ ரென்றுஞ் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் ரஜவில் சத்துவம் ரஜவில் ரஜஸ் ரஜவில் தமஸ் என மூன்று குணங்கள் உண்டு. இரஜவில் சத்துவம் பிரதான மாகும்போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் தத்துவ க்ஞான நிஷ்டனுவன்.



இரஜவில் ரஜஸ் பிரதாந மாகும்போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் காமக் குரோத பரனுய்க் கர்ம நிஷ்டனுவன். இரஜவில் தமஸ் பிரதாந மாகும்போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கம் ஆகிய இவை களை யடைவன்.

இப்படி மூலப் பிரகிருதியின் இரஜோ குண கற்பனை சொல்லப்பட்டது.

இனி மூலப் பிரகிருதியின் தமோ குணத்திற்கு ஆவரணம் விக்ஷேபம் என இரண்டு சத்திகள் உண்டு. இவ் விரண்டில் ஆவரண சத்தியானது தத்துவ ஞானியையும் ஈசுரனையுந் தவிர மற்றைச் சீவருக் கெல்லாம் சரீரத் திரயம் சிதாபாசன் சாக்ஷி சைதந்நியம் என்னு மிவைகளின் ஒன்றற் கொன்றுள்ள பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனுல் மறைபட்ட சீவர் இருபத் தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நானென் றபிமானிப்பர். இந்த அபிமானத்தை அகங்காரக் கிரந்தி யென்றும், சம்சார பந்த மென்றுஞ் சொல்

லப்படும். சற்குரு கடாக்ஷத்தினாலே இந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவங்களின் ஒன்றற்கொன்றுள்ள பேதந் தெரிகின்றதே முத்தி.

இப்படி ஆவரண சத்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

இனி விக்ஷேப சத்தியினின்றும் சத்த தந்மாத்திரையான ஆகாசந் தோன்றிற்று. ஆகாசத்தினின்றும் பரிச தந்மாத்திரையான வாயு தோன்றிற்று. வாயுவினின்றும் ரூப தந்மாத்திரையான அக்கினி தோன்றிற்று. அக்கினியினின்றும் ரஸ தந்மாத்திரையான அப்பு தோன்றிற்று. அப்புவினின்றும் கந்த தந்மாத்திரையான பிருதிவி தோன்றிற்று. இந்தச் சூக்ஷ்ம பஞ்ச பூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விக்ஷேப சத்தியினிடத்திலே தமஸில் சத்துவம் தமஸில் ரஜஸ் தமஸில் தமஸ் என்னுமிவை அர்பங் கருவாக விருந்தபடியால் அதன் காரியமாகிய இந்தத் தந்மாத்திரைகளான பஞ்ச பூதங்களும் முக்குணங்களுடனே பிறந்தன. இந்தப் பஞ்ச பூதங்கட்குத் தந்மாத்திரைகளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும், சூக்ஷ்ம பூதங்களென்றும் முக்குண பூதங்களென்றும் சாஸ்திரங்களில் நாமஞ் சொல்லப்படும்.



இந்தச் சூக்ஷ்ம பூதங்களினின்றும் சூக்ஷ்ம சரீரங்களும், ஸ்தூல பூதங்களுந் தோன்றும். அஃதெங்கனமெனின்:-ஆகாச முதலான பஞ்ச பூதங்களின் சத்துவாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக்கரணத்தில் ஆகாசத்தின் அம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கும் இடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற † விருத்திக்கு ‡ உள்ளமென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் வாயுவி

† விருத்தி - பரிணாமம். ‡ உள்ளம் - தேஜஸ் என்றும் பாடமுளது.

னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் வாயுவைப் போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மந மென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அக்கினியி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் அக்கினியைப் போல ஈதின்ன தென்று விளக்குவிக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தி யென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அப்புவி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் அப்புவைப் போல விஷயங்களிற் பற்றி இழுங்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்த மென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் பிருதிவியி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப் போலக் கடினமாக நின்று நா னென் றபிமானிக்கின்றது; இந்த அபிமான விருத்திக்கு அகங்கார மென்று பெயர்.

இன்னும், ஆகாச முதலான பஞ்ச பூதங்களினுடைய சத்துவாம்சத்திலே பூதத்திற் கொவ்



வொரு மாத்திரை யெடுத்துத் தனித் தனியே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரிய மென்று சொல்லப்படும். இவைகளில் சுரோத்திரம் ஆகாசத்தி னம்ச மானபடியால் ஆகாசத்தின் குணமான சத்த மாத்திரத்தை அறியும். துவக்கு வாயுவி னம்ச மானபடியால் வாயுவின் குணமான பரிச மாத்திரத்தை அறியும். சக்ஷு அக்கினியி னம்ச மானபடியால் அக்கினியின் குணமான ரூப மாத்திரத்தை அறியும். சிங்குவை அப்புவி னம்ச மானபடியால் அப்புவின் குணமான ரஸ மாத்திரத்தை அறியும். கிராணம் பிருதிவியி னம்ச மானபடியால் பிருதிவியின் குணமான கந்த மாத்திரத்தை அறியும். இப்படி ஐந்தும் ஒன்றோடொன்று கூடாதபடியால் ஒன்று மற்றொன்றின் குணத்தைக் கிரகிக்க வறியாது. அந்தக்கரணத்தில் ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க் கூடினது கொண்டு ஐந் திந்திரியங்களினாலும் ஐந்து விஷயங்களையும் அறியும். இந்தச் சத்துவ குணத்தி லுண்டான அந்தக்கரணம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும்

ஆகப் பத்தும் சத்துவாம்ச மானபடியால் ஞாந சாதந மாயின.

இன்னும், ஐந்து பூதங்களினுடைய இராஜோம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது வியாநாதி பஞ்ச வாயுக்கள். இவைகளில் வியாந வாயு ஆகாசத்தி னம்ச மானபடியால் ஆகாசத்தைப் போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராண வாயு வாயுவி னம்ச மானபடியால் வாயுவைப் போல இருதயத்தி லிருந்து நாசிகாதி பரியந்தம் அலையும். அபாந வாயு அக்கினியி னம்ச மானபடியால் அக்கினியைப் போலச் சாடராக்கினியாக உஷ்ணித்துக் கொண்டு குதத்தைப் பற்றி நின்று உண்ட வந்நபாநாதிகளைச் சீரணிப்பிக்கும். சமாந வாயு அப்புவி னம்ச மானபடியால் சரீர நடுவான நாபித்தாநத்தினின்று உண்ட அந்ந ரசங்களை அப்புவைப் போல இழுக்கும். உதாந வாயு பிருதிவியி னம்ச மானபடியால் கண்டத்தைப் பற்றிப் பிருதிவியைப் போலக் கடிநமாக நின்று உண்ட அந்நபாநாதிகளைக் கடையும். இந்தப் பஞ்ச வாயுக்களையு மல்லாமல் வாந்திபண்ணுவிக்கின்றது நாகனென்றும், இமைத்து விழிப்பிக்கின்றது கூர்மனென்றும், குறுகுறுத்துத் தும்மச் செய்கின்றது கிரிகரனென்றும், கொட்டாவிகொள்ளச் செய்கின்றது தேவதத்தனென்றும், வீங்கச் செய்கின்றது தநஞ்சயனென்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவார். இவ்வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியால் வேறல்ல.



இன்னும், ஆகாச முதலிய பஞ்ச பூதங்களினுடைய இராஜோம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்துத் தனித் தனியே வைத்தது வாக்காதி கர்மேந்திரிய மென்று சொல்லப்படும். இவைகளில், ஆகாசத்தி னிடமாக வாக்கு வசனிக்கும். வாயுவி னிடமாகப் பாணி இடுதல் ஏற்றல் செய்யும். அக்கினியி னிடமாகப் பாதம் நடக்கும். அப்புவி னிடமாகப் பாயுரு மலசலாதிகளை வெளியிலே தள்ளும். பிருதிவியி னிட-

மாக உபஸ்தம் சுகத்தைப் பண்ணும்; இந்த ஐந்துந் தனித்தனியே இருந்தது கொண்டு மறு தொழில் செய்யமாட்டாது, வியாநாதி வாயுக்கள் ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க் கூடினது கொண்டு கர்மேந்திரியம் ஐந்தின் வழியினாலும் ஐந்து தொழில்களையுஞ் செய்து முடிக்கும், இந்த வாயுக்களைந்தும், கர்மேந்திரியங்களைந்தும் ஆகப் பத்தும் இரஜோம்ச மானபடியினால் கிரியா சாதக மாயின. அந்தக்கரணம்-5, ஞானேந்திரியம்-5, வாயுக்கள்-5, கர்மேந்திரியம்-5 ஆக இருபது தத்துவமுஞ் சூக்ஷ்ம சரீர மென்று சொல்லப்படும். இந்தச் சூக்ஷ்ம சரீரத்தை மாயாப் பிரதிவிம்பனாக விருக்கின்ற ஈசுரன், அவித்தையாப் பிரதிவிம்பராகிய ஜீவர்கள் அநேக ராகையால் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சரீரமாகச் சிருஷ்டித் தளித்தான்.

இப்படிச் சூக்ஷ்ம சரீர கற்பனை சொல்லப்பட்டது.

இனி, ஸ்தூல பூத வுற்பத்தி சொல்லுகின்றோம்; அஃ தெங்ஙன மெனின்:—தமோம்சமா



யிருக்கின்ற ஐந்து பூதங்களையும் ஒவ்வொன்றை இரண் டிரண்டாகப் பகுத்து முதற் பாதி ஐந்தையும் ஒவ்வொன்றை நான்கு நான்காகப் பகுத்து இரண்டாம் பாதி ஐந்தில் தன் னம்சத்துடனே கூட்டாமல் மற்றை நான்கு பூதங்களுடன் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகக் கொடுக்கின்றது பஞ்சீகரண மென்று சொல்லப்படும். இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களிலே ஆகாசத்திலே பரிச ரூப ரஸ கந்தம் ஆகிய நான்கு குணங்களும் வியாப்பிய மானபடியால் அதிருசியமாய்ப் போக நிச குணமாகிய சத்தந் திருசியமாம். வாயுவிலே ரூப ரஸ கந்தம் ஆகிய மூன்று குணங்களும் வியாப்பிய மானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணமாகிய சத்தமும், நிச குணமாகிய பரிசமுந் திருசியமாம். அக்கினியிலே ரஸ கந்த மாகிய இரண்டு குணங்களும் வியாப்பிய மானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணங்களாகிய சத்த பரிசமும், நிச குணமாகிய ரூபமுந் திருசியமாம். அப்புவிலே கந்த குணம்

வியாப்பிய மானபடியினாலே அதிருசியமாய்ப் போகக் காரண குணங்களாகிய சத்த பரிச ரூபமும், நிச குணமாகிய ரஸமுந் திருசியமாம். பிருதிவியிலே காரண குணங்களாகிய சத்த பரிச ரூப ரஸமும், நிச குணமாகிய கந்தமும் திருசியமாம்.

முன் சூக்ஷ்ம பூதங்களி னின்றும் சூக்ஷ்ம சரீரங்கள் தோன்றினாற் போலப் பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூல பூதங்களி னின்றும் ஆறு தத்துவமாய், நால்வகைப் பிறப்பாய், மூவகைச் சாதியா யிருக்கின்ற ஸ்தூல சரீரங்கள் தோன்றின; இவற்றுள் ஆறு தத்துவங்களாவன:—சர்மம் உதிரம் மாமிசம் சநாயு அத்தி மச்சை இவைகளாம். நால்வகைத் தோற்றங்களாவன:—சராயுஜம் அண்டஜம் சுவேதஜம் உத்பிஜ்ஜம் இவைகளாம். மூவகைச் சாதிகளாவன:—இக லோக பர லோக புத்தி இருவகையுங் கொடுக்கின்ற மநுட சரீரம் உத்தம சாதி. பர லோக புத்தியை மறைத்து இக லோக புத்தி மாத்திரங் கொடுக்கின்ற பசு பக்ஷி முதலானவை மத்திம சாதி. இரண்டு லோக



புத்தியையும் மறைத்திருக்கின்ற மரம் கொடி செடி முதலியவை அதம சாதி. இப்படிப் பிருதிவி தத்துவமா யிருக்கின்ற பூலோகத்திற் கண்டாற் போல அப்பு அக்கினி வாயு ஆகாசம் என்னப்பட்ட தத்துவங்களாய் நிரை நிரையே யிருக்கின்ற பிதிர் லோகம் தேவ லோகம் யட்ச கந்தர்வ சித்தர் லோகங்களிலும் நட்சத்திரமாகத் தோற்றுகின்ற சந்திரன் முதலான பிதிர்க்கள் சூரியன் முதலான தேவதைகள் கந்தருவர் சித்தர் என்னப்பட்டவர்கள் உத்தம சாதி. காமதேநு ஐராவதம் அந்நம் கருடன் முதலானவை மத்திம சாதி. கற்பக விருட்சம் பாரிசாதம் முதலானவை அதம சாதி. இந்தத் தூல சரீரமே அந்நமய கோசம், சூக்ஷ்ம சரீரம் மூன்று கோசங்களா யிருக்கும். அஃ தெங்ஙன மெனின்:—பிராண வாயுவும் கர்மேந்திரியங்களுங் கூடிப் பிராணமய கோசம், மநதும் ஞானேந்திரியங்களுங்கூடி மனோமய கோசம். புத்தியும் ஞானேந்திரியங்களுங் கூடி விஞ்ஞானமய கோசம், காரண சரீரமே ஆநந்தமய கோசம்.

இப்படிப் பஞ்ச கோசஞ் சொல்லப்பட்டன.

ஆறு தத்துவங்களா யிருக்கின்ற ஸ்தூல சரீரத்திலே இருபது தத்துவங்களா யிருக்கின்ற சூக்ஷ்ம சரீர மிருக்கின்றது. அஃ தெப்படியெனின்:—கர்மேந்திரியங்களுள் வாக்கும் ஞானேந்திரியங்களுள் சிங்ஙுவையும் வாயி லிருக்கும். உதாந வாயுவும் மநதும் கண்டத்திலே யிருக்கும். பிராண வாயுவும் புத்தியும் இருதயத்திலே யிருக்கும். சமாந வாயுவும் சித்தமும் நாபியி லிருக்கும். அபாந வாயுவும் பாயுருவும் குதத்தி லிருக்கும். வியாந வாயுவும் ஞானேந்திரியங்களுள் துவக்கும் அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். உச்சியிலே உள்ளமும் கருவிழி நுனியிலே சக்ஷுரிந்திரியமும் காதிற்குள்ளே சுரோத்ரேந்திரியமும் மூக்கு நுனியிலே கிராணேந்திரியமும் கழுத்திற்கு மேலே தனித் தனியே யிருக்கும். கழுத்திற்குக் கீழே கை கால் குய்யங்களில் பாணி பாதம் உபஸ்தம் மூன்றுந் தனித் தனியே யிருக்கும். இப்படித் தூல சரீர தத்துவங்கள் ஆறு. அதிற் குடி



புகுந்த சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் இருபது; ஆகத் தத்துவங்கள் இருபத் தாறும் பஞ்ச பூதங்களின் காரிய மானபடியினாலே ஒருமைப்பாடாகக் காரிய சரீர மென்று சொல்லப்படும்.

அவித்தையிற் பிரதிவிம்பித்த சிதாபாசன் சாக்கிரத்திலே இந்த இருபத் தாறு தத்துவங்களுடனே கலந்து நின்ற போது விசுவ னென்றும் வியாவகாரிக சீவ னென்றுஞ் சொல்லப்படுவன். சொப்பநத்திலே தூல சரீரத்தை விட்டு அந்தக் காணத்துடனே கூடி நின்ற போது தைஜச னென்றும் பிராதிபாசிக ஜீவ னென்றும் சொப்பந கற்பித னென்றுஞ் சொல்லப்படுவன். சுழுத்தியிலே காரிய சரீர தத்துவங்கள் இருபத் தாறையுங் கைவிட்டுக் காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தியிருக்கும் போது பிராக்ஞ னென்றும் பாரமார்த்திக சீவ னென்றுஞ் சொல்லப்படுவன். பிரம சைதந்நியமும் சாக்கிரத்திற்குச் சாக்ஷியா யிருக்கும் போது சீவாத்மா வென்றும் சொப்பநத்திற்குச் சாக்ஷியா யிருக்கும் போது அந்த ராத்மா

வென்றும் சுழுத்திக்குச் சாக்ஷியா யிருக்கும் போது பாமாத்மா வென்றும் அவஸ்தாத்திரய சாக்ஷியா யிருக்கும் போது ஞாநாத்மா வென்றும் கூடஸ்த னென்றுஞ் சொல்லப்படும்.

இப்படிச் சீவனுக்கு மூன்று சரீரங்களும், மூன் றவஸ்தைகளுஞ் சொல்லப்பட்டன.

## இனி ஈசுரனுக்கு மூன்று சரீரங்களும் மூன்றவஸ்தைகளுஞ் சொல்லும்படி:

கற்பிதப் பிரபஞ்ச வடிவமாகத் தோன்று கின்ற தூல பஞ்ச பூதங்களும் அந்தப் பூதங்களி லே தோன்றிய மூன்று சாதியா யிருக்கின்ற தூல சரீர சமஷ்டியுங் கூடி ஈசுர தூல சரீர மென்றும், விராட் டென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சாக்கிராவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் வைசுவானா னென்றும், இந்த இருவகைக் கும் அதிஷ்டாந சைதந்நியம் பிரமா வென்றுஞ் சொல்லப்படும். சூக்ஷ்ம பூதங்க ளைந்தும் அந்தப் பூதங்களிலே தோன்றிய சூக்ஷ்ம சரீர சமஷ்டியுங்



கூடி ஈசுர சூக்ஷ்ம சரீர மென்றும் இரண்ய கர்ப்ப மென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சொப்பனாவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் சூத்ராத்மா வென்றும் இந்த இருவகைக்கும் அதிஷ்டாந சைதந்நியம் விஷ்ணு வென்றுஞ் சொல்லப்படும். இந்தத் தூலம் சூக்ஷ்மம் இரண் டின் வாசனை யுடனே கூடியிருக்கின்ற மாயை ஈசுர காரண சரீர மென்றும் அவ்வியாகிருத மென் றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சுழுத்தி யவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் அந்தரி யாமி யென்றும் இந்த இருவகைக்கும் அதிஷ் டாந சைதந்நியம் உருத்திர னென்றுஞ் சொல்லப் படும். சீவன், தன் மூன் றவஸ்தைகளிலும் தன் மூன்று சரீரங்களா யிருக்கின்ற இருபத்தேழு தத் துவங்களுடனும் நா னென்று கலந்து நிற்கின்றது போல ஈசுரனுந் தன் மூன் றவஸ்தைகளிலுந் தன் மூன்று சரீரங்களா யிருக்கின்ற முப்பத் திரண்டு தத்துவங்களுடனுங் கலந்து நிற்பன். ஆகையி னாலே சீவ சிதாபாசன் தன் சரீர மாத்திரமே

கலந்து நிற்பன். ஈசுரன், தன் சரீரமாகிய சகல சரீரங்களோடும் சகல பிரபஞ்சங்களோடும் கலந்து நிற்பன். இந்த இருவகைக்கும் சாக்ஷியாயிருக்கின்ற பிரம சைதந்நியமும், சகல சரீரங்களிலும் சகல பிரபஞ்சங்களிலும் நிறைந்து அப்பாலும் பத்துத் திக்கையும் அதிக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

சீவனுக்குத் தூல சரீர வியவகாரத்திற்கு அந்நமய மான சட்கோச தத்துவங்கள்-6, சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-31. சூக்ஷ்ம சரீர வியவகாரத்திற்கு சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-25. காரண சரீர வியவகாரத்திற்கு சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5. சீவ வியவகாரத்திற்கு சீவன் ஈசுரன் பிரமம்-3. சாக்ஷி வியவகாரத்திற்கு சாக்ஷி-1. ஈசுரனுக்குத் தூல சரீர வியவகாரத்திற்கு சமஷ்டி அந்நமய கோச தத்துவங்கள்-6, சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, சமஷ்டி சீவன் அவித்தை-2, ஈசுரன் வித்தை பிரமம்-3 தூல பூதங்கள்-5 ஆகத்



தத்துவங்கள்-36. சூக்ஷ்ம சரீர வியவகாரத்திற்குச் சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் 20, சமஷ்டி சீவன் அவித்தை-2, சூக்ஷ்ம பூதங்கள்-5, வித்தை ஈசுரன் பிரமம்-3 ஆகத் தத்துவங்கள் 30. காரண சரீர வியவகாரத்திற்கு வித்தை ஈசுரன் பிரமம்-3. ஈசுர வியவகாரத்திற்கு ஈசுரன் பிரமம்-2. பிரம வியவகாரத்திற்குப் பிரமம்-1. இந்திரிய வியவகாரத்திற்கு இந்திரியம்-1. சட்கோச தத்துவங்கள் 6, அந்தக்கரணம் 5, வாயு-5, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள் 22. மனோராச்சிய வியவகாரத்திற்கு அந்தக்கரணம்-5, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-10.

இப்படித் தத்துவங்களி னுடைய தோற்றமும் நிலையுஞ் சொல்லப்பட்டன.

இனித் தத்துவங்கள் ஒடுங்குகின்ற வழி சொல்லுகின்றோம்.

சகல சீவரிடத்திலு மிருக்கின்ற தூல சரீரங்க ளனைத்தும், தமக்கு ஆதாரமான தூல பூதங்

கவிலே மடிந்து பூத மாத்திரமாக ஒடுங்கும். இந்தத் தூல பூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தந்மாத்திரைகளான தமோ குண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரண்ய கர்ப்பாவஸ்தையென்று சொல்லப்படும். சூக்ஷ்ம சரீர தத்துவங்களிருபதுங் கட்டு விட்டுப் பூதங்களினுடைய சத்துவ குணமும், இரஜோ குணமுமாக ஒடுங்கும்; அஃதெங்ஙனமெனின்:—சகல பிராணிகளிடத்திலு மிருக்கின்ற அகங்காரமும் கிராணேந்திரியமும் உதாந வாயுவும் உபஸ்தேந்திரியமும் பிருதிவியில் ஒடுங்கும். சித்தமும் சிங்ஙுவையும் சமாநனும் பாயுருவும் அப்புவில் ஒடுங்கும். புத்தியும் சக்ஷுவும் அபாநனும் பாதமும் அக்கினியில் ஒடுங்கும். மநதும் தொக்கும் பிராணனும் பாணியும் வாயுவில் ஒடுங்கும். உள்ளமும் சுரோத்திரமும் வியாநனும் வாக்கும் ஆகாசத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக் குண பூதங்களாகும். இந்தச் சூக்ஷ்ம பூதங்களும் பிருதிவி அப்புவில் கரைந்து ஒடுங்கும். அப்புவும் அக்கினியிற் சுவறி ஒடுங்கும்.



அக்கினியும் விளக்குப் போல வாயுவி லணைந்து ஒடுங்கும். வாயுவும் ஆகாசத்திலே ஒய்ந்து ஒடுங்கும். ஆகாசமும் விக்ஷேப சத்தியில் ஒடுங்கும். ஆவரண சத்தியும் விக்ஷேப சத்தியும் மூலப் பிரகிருதியின் தமோ குண மாத்திரமாய் ஆல் மரம் ஆலம் விரையில் ஒடுங்கினாற் போல இன்னம் ஒரு சிருஷ்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். இந்த மாயையும் அவித்தையும் அதி நுண்மையான மூலப் பிரகிருதி யென்று சொல்லப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்கும். அந்த விந்துவும் பாம் பென்கின்ற பெயர் போய்ப் பழுதையாகக் கண்டாற் போலத் தனக்கு அதிஷ்டாந சைதந்நிய மான பிரம சைதந்நிய மாத்திரமாக ஒடுங்கும். இப்படிப் பொய் யெல்லாம் மெய்ப் பொருள் ஒன்றாகக் கண்டு, அதுவே சுபாவ சித்தமாய் நிசமா யிருக்கின்ற தன் வடி வெனக் கண்டு தெளிந்து கவலை கெட் டிருக்கின்றவனே சீவன் முத்தன்.

இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித் தோற்றி ஒடுங்கின தத்துவங்கள்-33. அவை யாவன:—பூதங்கள் 5, ஸ்தூல சரீர தத்துவங்கள்-6, சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, காரண சரீர மான மாயை அவித்தை-2, இவற்றில் பிரதிவிம்பித்த சீவன் ஈசுரன்-2, இவைகட் கெல்லாம் அதிஷ்டாந சைதந்நியமா யிருக்கின்ற † பிரமம்-1, இவையாம். இவைகளில் பூதங்கள்-5, மாயை-1, மாயாப் பிரதிவிம்பான ஈசுரன்-1, பிரமம்-1 ஆக இந்த எட்டும் சகல பிராணிகளுக்குஞ் ‡ சமுதாயமாக வநுபவிக்கப்படும். மற்றை இருபத்தெட்டும், அவன் அவனுக்கு § பிருதக்காக வநுபவிக்கப்படும். அஃதெங்ஙன மெனில், பிருதிவி தத்துவம் ஒன்று இறக்கில் எல்லாருக்கும் ஆதார மில்லை. மழை மறுக்கில் எல்லாருக்குஞ் சல மில்லை. தேயு வில்லாதிருந்தால் பாக மில்லை.

---

† பிரமத்திற்குத் தோற்ற மொடுக்கங் கூறினது நாம கற்பனையைப் பற்றி யென்க.

‡ சமுதாயம்-பொது.

§ பிருதக்கு-வேறு.



வாடை தென்றல் இல்லாவிட்டால் வாயு வியக்கமில்லை. ஆகாசம் இறக்கில் ஒருவருக்கும் அவகாச மில்லை. மாயையும் மாயாப் பிரதிவிம்பரும் இறக்கில் சகல சமயங்களுக்குந் தெய்வ மில்லை. பிரம மில்லையோ ஒருவருக்கும் அறி வில்லை; ஆகையால் இந்த எட்டும் எல்லாருக்குஞ் சமுதாயமாம். பிருதக்கு எங்ஙன மெனின், ஒருவனுக்கு ஸ்தூல சரீரம் இறக்கில் எல்லாருக்கும் ஸ்தூல சரீரம் இறவாதபடியினாலும், சூக்ஷ்ம சரீரத்தில் ஒருவனுக்கு அங்க † வைகல்யம் வந்தால் எல்லாருக்கும் வாராதபடியினாலும், முத்தரா யிருந்த சுகர் வாமதேவர் முதலியோருக்கு அவித்தையும் சீவனும் இறந்துபோ யிருக்க மற்றையோருக் கெல்லாம் அவித்தையும் சீவனும் இறவாதபடியினாலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் அவனவனுக்குப் பிருதக் கென்பதிலே சந்தேகமே யில்லை.

இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறில் எப்போதும் தானாகவே காணப்படுகிற தத்துவம்

---

† வைகல்யம்-குறைவு.

ஒன்று. எப்போதும் தனக் கந்நியமாகக் காணப்படுகிற தத்துவங்கள் ஏழு, தானாகவும் தனக் கந்நியமாகவும் அநுபவிக்கப்படுகிற தத்துவங்கள் இருபத்தெட்டு; அஃதெங்ஙனமெனில், அவஸ்தாத்திரய சாக்ஷியாயிருக்கின்ற பிரம சைதந்நியம் எல்லா வவஸ்தைகளிலுந் தானாக விளங்குகையினாலும், மற்றைத் தத்துவங்கள் போலத் தனக் கந்நியமாக விளங்காதபடியினாலும் அந்தப் பிரம சைதந்நியம் ஒன்றுமே தானாகக் காணப்படுகிறது. பஞ்ச பூதங்கள் மாயை மாயாப் பிரதிவிம்பர் ஆக ஏழும் தந் தந் தொழி லான வெட்டு கொத்து உழவு பஞ்சகிருத்தியம் தசாவதார முதலானவை ஒரு காலும் தன்னுடைய தொழி லாகக் காணப்படாதபடியினாலே தனக் கந்நியங்களே யல்லாமல் தானாகமாட்டா. மற்றை இருபத்தெட்டுத் தத்துவங்களுள்ளே நான் பிராமணன் நான் க்ஷத்திரியன் நான் வைசியன் நான் சூத்திரன் நான் பிரமசாரி நான் கிருகஸ்தன் நான் வானப் பிரஸ்தன் நான் சந்நியாசி நான் ஆண் நான் பெண்



நான் கறுவல் சிவலை கட்டையன் நெட்டையன் நான் பருத்தேன் இளைத்தேன் என்று தானாக வழங்குகிற ஸ்தூல சரீரம் ஆறு தத்துவங்களும், மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் மாடு என் கன்று என்றாற் போல என் சரீரம் பருத்தது இளைத்தது நரைத்தது என் சரீரம் பிறந்து இத்தனை நாளாயிற்றென்று தான் வேறு தூல சரீரம் வேறாக வழங்குகிறபடியினாலும் நான் கண்டேன் கேட்டேன் தொட்டேன் போகித்தேன் கொடுத்தேன் வாங்கினேன் நடந்தேன் புசித்தேன் சிந்தித்தேன் நிச்சயித்தேன் இந்தப் பஞ்சத்திற்குச் சீவித்தேன் என்று தானாக வழங்குகிற சூக்ஷும சரீர தத்துவங்கள் இருபதும், மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் வீடு என் உடைமை என்றாற் போல என் கண் என் காது என் மூக்கு என் நாக்கு என் கை என் கால் என் மநம் என் புத்தி என் அகங்காரம் என் சித்தம் என் பிராணன் என்று தான் வேறு அவைகள் வேறாக வழங்குகிறபடியினாலும்,

நான் அறிவேன் அறியேன் என்று தானாக வழங்குகிற அஞ்ஞானமும் சிதாபாசனும், மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் அஞ்ஞானம் என் சீவன் என்று வழங்கக் கண்டபடியினாலும், இந்த இருபத் தெட்டுத் தத்துவங்களும் தானாகவும், தனக்கு அந்நியமாகவும் வழங்குகின்றது சித்தம்.

இப்படிச் சொன்ன குருவைப் பார்த்துச் சீடன் கேட்கும்படி:

இந்த இருபத் தெட்டுத் தத்துவங்களுந் தானானால், சாக்ஷியைப் போல ஒரு தன்மையாகத் தோற்ற வேண்டுமே யல்லாமல், பஞ்ச பூதங்களைப் போலத் தனக் கந்நியமாகக் காணக் கணக் கில்லை. இந்த இருபத் தெட்டும் தனக் கந்நியமேயானால் எப்போதும் புறம்புபட்டே இருக்க வேண்டு மல்லாமல் தானாக வழங்கக் கணக் கில்லை. தானுமாய் தனக் கந்நியமுமாய் இருக்கு மென்கிறது இருட்டா சித்தன் என்றாற் போலும், வேளாள தீக்ஷிதன்



என்றாற் போலும் விருத்தமா மென்னுஞ் சங்கைக்கு:—பரமார்த்தமாகத் தான் என்கின்றது ஒரு வகையும், அத்தியாசத்தினாலே தான் என்கின்றது ஒரு வகையும் ஆக இருவகையும் உண்டு. சாக்ஷி சைதந்நியத்தைத் தான் என்கின்றது பரமார்த்த மல்லாமல் உபசார மல்ல. தனக் கந்நியமா யிருக்கின்ற இந்த இருபத் தெட்டையும் தான் என்கின்றது கட்டையைக் கள்ள னென்றாற் போலும், பழுதையைப் பாம் பென்றாற் போலும், புத்திர தாராதிகளைத் தான் என்றாற் போலும் மயக்கமே யல்லாமல் உண்மை யல்ல. ஆகையினால் அஞ்ஞான காலந் தொடங்கித் தா னல்ல வென்று காணப்பட்ட தத்துவங்கள்-7. இப்போது இப்படி விவேகம் பண்ணின பின் தா னல்ல வென்று காணப்பட்ட தத்துவங்கள்-28 ஆக இந்த 35 தத்துவங்களையும் அதற்குச் சொன்ன குணம் குறிகளுடனே கூடக் காண்கின்ற அறிவானது கடத்தைப் பார்க்கின்றவன் கடத்திற்குப் புறம்பாகவே யிருந்து கடத்தைப்

பார்க்கின்றது போல அவைகளை அறிகின்றதென்றும், முப்பத்தாறுந் தத்துவமாகிய அதுவே தானென்றும், அதுவே பரமசிவமென்றும் கலக்கமறத் தெளிந்தவனே சிவ தரிசநமுடைய சீவன் முத்தனென்று சொல்லப்படுவனென் றுத்தரம்.

இப்படிப் பிரமமே தாமென்றும், மற்றை முப்பத்தைந்து தத்துவங்களும் தமக்கந்நியமென்றும் பிரித்தறியாத அவிவேகிகள், அகங்காரக் கிரந்தியினாலே புத்திர தாராதிகள் தபிக்கின்றதைக் தாம் தபிக்கிறோம் என்கிற மூடகரம் போல இந்த இருபத்தெட்டினுடைய தொழில்களையும் தம் தொழிலென்று மயங்குகின்றபடியினாலே இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாற் கட்டுப்பட்டு அந்தக் கர்மத்தின்படியே சநந மரணாதி சம்சாரத்திலே அடிபடுகிறோமென்று மயங்குவர். பிரம சைதந்நியமே தானென்றும், மற்றை முப்பத்தைந்தும் தானல்லவென்றுந் தெளிந்த விவேகியானவன், அகங்காரக் கிரந்தியற்றபடியினால் இந்த இருபத்தெட்டினுடைய தொழில்களையும் நான் செய்யவில்லையென்றும், இந்த இருபத்தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்கவில்லையென்றும் திடப்படத் தேறி மயக்கமற்றிருக்கின்றபடியினால் இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கர்மமில்லாதபடியினால் சநந மரணாதி சம்சாரமில்லாமல் முத்தனாய்ப் பிரம மாத்திரமாகவேயிருப்பன். இவனைச் சீவன் முத்தனென்றும், திடப் பிரக்ஞனென்றும், அதிவர்ணாச்சிரமியென்றும், குணாதீதனென்றும், பகவற் பத்தனென்றும், பிராமணனென்றும் வாசிட்ட முதலிய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவங்களை விசாரம் பண்ணி மோக்ஷமடையக்கடவர்.



நாநா ஜீவ வாதக் கட்டளை

முற்றிற்று.

---

சற் குருப்யோ நம:



# திரு ஆமாத்தூர்
# திரு வேங்கட நாதர்
அருளிச் செய்த
# கீதா சாரத் தாலாட்டு.

இது

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.

## சிறப்புப் பாயிரம்.

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள் -கீதைக்
கருத்துயர்தா லாட்டாகக் கட்டுரைத்தான் யாருங்
கருத்துயர்தீர்ந் தெய்தக் கதி.

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

# கீதா சாரத் தாலாட்டு.

### காப்பு.

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங் கண் மூன்றுஞ், செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற, பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள், கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

### நூல்.

சீராரும் பரமார்த்த தெரிசனத்தை யருள் செய்யப், பேராருந் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ. 1

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினா, லருச்சுநற்கு மெய்ஞ்ஞான மனைத்து முரை செய்தவரோ. 2

செஞ்சமரிற் பந்தசநஞ் சேதம்வரு மென்
திரங்கி, யஞ்சினவன் பயந்தீர்த்தே யமர்செய்யச்
சொன்னவரோ. 3

சுற்றமதிற் சோகமெனச் சொல்லிவினை சற்
றறிந்தவன்போற், கற்றுணர்ந்த பேரதனுற் கலங்
கார்கா னென்றவரோ. 4

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்த பேரேனு
மலங்காம னிருக்கும் வகையுரையு மெனவினவ.

நீயுநா னும்புவிமே லிருபர்களு மெய்யுணர்
வா, லாயுங்காற் பிறந்திறப்ப தார்க்குமில்லை யென்
றவரோ. 6

ஈங்கெவர்க்கும் பிறந்திறப்ப தில்லையென் றீ
ரிவ்வுலகி, னீங்குபவ மார்க்கிதனை நிச்சயமாய்ச்
சொல்லுமென. 7

இத்தரையிற் பிறந்திறப்ப தெடுத்தவுடற்
கடுத்தபொறி, நித்தியமா யிவாந்மா நின்சொருப
மென்றவரோ. 8



அங்கமுயி ரிந்தியநா னன்றிவே றொனக்கா
னே, னிங்கியான் வேறுண்டே லெனக்கறியப்
புகலுமென. 9

மெய்யுயிரிந் தியங்களல்லால் வேறறியே
னென்றவனைப், பையவவை யாலறியப் படானுநீ
யென்றவரோ. 10

தேகம்வே றாகிலதைச் சேர்ந்ததிவ னெதெ
னவே, சோகமே வினைகருமத் தொடர்ச்சியினு
லென்றவரோ. 11

தேகமெடா முன்கருமச் செயல்வருமா றே
தெனவே, யேகமா மாமும்வித்து மெனுமுறை
போ லென்றவரோ. 12

காயமுந்தா னும்பிறிதேற் கன்மமெவர் செய்
ததெனத், தியவுடற் கலதுகன்மச் செயறனக்கே
தென்றவரோ. 13

படர்கரும முடல்செய்யிற் பலமுறுவ தார்க்
கெனவே, யடர்பலமு முடற்கேயா மறிவாற்கே
தென்றவரோ. 14

வெய்யவினை யுடற்கென்றான் மெய்யிங்கே விழவாங்மா, வையமற நரகசொர்க்க மநுபவிப்ப தேதெனவே. 15

அநுபவமே யிலையதுவீ ணாரோ பிதநிகழ்த் திற், றநுகரணச் செயறனதாச் சார்வதுபோ லென்றவரோ. 16

மற்றுடலின் செய்கைதன்மேல் வருமயக்க மேதெனவே, முற்றுணர்வொன் றில்லாத மோக மென்று சொன்னவரோ. 17

அறிவதே கந்தனக்கோ வாங்மாவிற் கோவெனவே பிறிவுசெயி லசித்துடலம் பிரமமறி வென்றவரோ.

தேகமசித் தாகிலிந்தச் செயல்வருவ தேதெ னவே, யேகபரஞ் சோதியின்முன் னிருக்கையினா லென்றவரோ. 19

இருக்கினும சேதநத்துக் கிச்செயலுண் டோவெனவே, யுருக்குபடாக் காந்தமுன்னி லூசி [illegible] லென்றவரோ. 20



சொன்னசெய லுடற்கானாற் சுகதுக்க மியா ர்க்கெனவே, யன்னசுக துக்கமுந்தா னவ்வுடற் கே யென்றவரோ. 21

சேதநமா மாங்மாவைச் சேராத துக்கசுக மோதுசட மாமுடலை யுற்றிடுமோ சொல்லுமென.

பூதமைந்தோ டைந்துயிர்கள் புலன்கள்பத்து மநமுதனான், ஈதிருமெ யிதின்மநத்துக் கின்ப துன்ப மென்றவரோ. 23

இந்தவிரு வகைத்தநுவிற் கேதுவே தென வினவ, முந்தியகா ரணமதனான் மூன்றுதநு வென்றவரோ. 24

மநமறியுந் துக்கசுக வரவென்றீ ரம்மநமும், வினவிலசே தநமலவோ விரித்தெனக்கு விளம்பு மென. 25

அம்மநத்தி லாங்மா வபேதம்போற் றோன்று தலால், விம்முதுக்க சுகத்தைமந மேவுமென்று சொன்னவரோ. 26

அந்தமனோ துக்கசுக மதனிடத்து நில்லா மல், வந்திலங்கு மாங்மாவை மருவியதென் சொல் லுமென. 27

வெய்யகன லின்சூடு மேல்வைத்த சட்டியி னூ, டெய்யபுன லூடுவந்தங் கொன்றுதல்போ லென்றவரோ. 28

சித்தாகு மாங்மாவுஞ் செடமாகுஞ் சித்தமுந் தா, னொத்தாங்கி ரண்டுமொன்றா யுற்றவகை சாற் றுமென. 29

வல்லிரும்பு கனலூடனே மருவியது போன் மநமு, மொல்லையிலாக் மாவுடனே யுற்றதுகா ணென்றவரோ. 30

உற்றதெத னூலெனவே யுள்ளமவி வேகமு றப், பற்றியதன் மேலுமதன் பண்புவந்த தென் றவரோ. 31

அடுத்தகுணம் போமோபின் னுங்மாவை விட் டெனவே, யெடுத்தசெம்பூ நிறம்படிகத் தேறு தல்போ லென்றவரோ. 32



சுத்தபடி கம்போற் சொரூபமாய்த் தானிருக் க, மெத்தவுமா சாமலிங மேவியதென் சொல்லு மென. 33

அநாதியாம் வாசனையா லடைந்ததா சாமலிங, மநோபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரை த்தவரோ. 34

பந்தமெது முத்தியெது பகுத்துரைக்க வேண்டுமென்றன், சிந்தைதெ ளியவென்று திருத் தா ளினைவணங்க. 35

தேகாதி தானெனவே சேரபிமா நங்கள்பந்த மாகாத மாநம்விடி லரியமுத்தி யென்றவரோ. 36

அபிமாநம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வகையுந் தபியாம லுணறியத் தயவாகக் கூறுமென. 37

மறந்திடுமஞ் ஞாநத்தான் மாநம்வந்த தஞ்ஞா ந, மிறந்துவிடின் மாநமும்போ மென்னவுரை செய்தவரோ. 38

அந்தமுறை யஞ்ஞாந மணுகுவதும் போவதுவுஞ் சந்தயமி லாதறியத் தயவாகக் கூறுமென. 39

அஞ்ஞாநம் வந்தத நாதியது சொல்வதல்ல
மெய்ஞ்ஞாநத் தாலேவி டுமென்று ரைத்தவரோ.

இரவியெதி ரடுத்துவந்த விருட்போல வஞ்ஞாநம், வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை யேதெனவே. 41

அந்தவறி வுவந்தா லஞ்ஞாந மில்லையப்பாற்
சந்ததமு மாநந்த சாகரங்கா ணென்றவரோ. 42

வேதாந்தத் தாற்குருவான் மெய்ஞ்ஞாநம் வந்தவுடன், நீதான துக்கசுகந் தீராத தேதெனவே. 43

பற்றறுமோ துக்கசுகம் பரோட்சஞா நத்தாலே
யற்றமா மவ்விரண்டு மபரோட்சத் தென்றவரோ.

பரோட்சமப ரோட்சமெது பகுத்துரைக்க வேண்டுமென்றன், நிரோதமாம் புத்திநன்றாத் தெளியும்ப டிக்கெனவே. 45

பகர்ந்தசத்த ஞாநம்ப ரோட்சம நுபவத்தா
லகம்பிரம மெனுஞாந மபரோட்ச மென்றவரோ.



தான்பிரம மென்றறிந்துந் தநுவைத்தா னென்றபுத்தி, யேன்போக வில்லையதை யெனக்கறியப் புகலுமென. 47

கேள்வியினான் மநநத்தாற் கிளர்ந்தயோ கங்களினால், ஆள்பிரமத் தநுபவம்வந் ததுதீரு மென்றவரோ. 48

ஆதியாஞ் சிற்சொரூப மாகாத தானினிமேற்
சோதிமந நாதியினாற் சொரூபமா மோவெனவே.

எப்போதுஞ் சிந்மயந்தா னெனன்மறந்து தேடுவது, செப்புமிடற் றணியிருக்கத் தேடுதல்போ லென்றவரோ. 50

தேடியபின் றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொருபங், கூடுவேனோ யானென் குறைதீரச் சொல்லுமென. 51

வந்தவுடல் வேறாயும் வாசனையாற் றானெனலாற், சந்தயமென் றற்சொருபந் தானாதற் கென்றவரோ. 52

தநுவைத்தா னெனும்பிரமை சத்தஞா நத்தி லரு, தநுபவமெய்ஞ் ஞாநத்தா லறும்வகையே துரையுமென. 53

விளக்குவிளக் கெனுமதனல் வெய்யவிருள் போய்விடுமோ, துளக்கமிலா விளக்கேற்றிற் றொலையுமிரு ளென்றவரோ. 54

நெடுங்கால மாங்மாவை நீங்காத வஞ்ஞாநம், விடுங்கால மெங்ஙானோ மெய்ஞ்ஞாநத் தாலெனவே. 55

அந்தகா ரங்குகையி லாயிரநா ளிருந்தாலுஞ், செந்தீபங் கண்டவுடன் றீர்வதுபோ லென்றவரோ. 56

கருமயோ கந்தவமே காரணமா நீங்காம, லருமையா ஞாநம்வந்தோ வஞ்ஞாநம் போமெனவே. 57

குத்துவெட்டும் படைகளினாற் கூடுமோ விருடோக்க, வுத்தமமாம் ரவியுதித்தா லோடுமிரு ளென்றவரோ. 58



அஞ்ஞாந விருடோக்க வறியாத நல்லகன்ம, மெய்ஞ்ஞாலங் தனைப்பரிக்கும் விதமெவ்வா றெனவினவ. 59

இந்திரஜா லம்போல விவ்வுலகை நம்மிடத்திற், றந்திரமாத் தோற்றுவித்தோஞ் சத்யமலவென்றவரோ. 60

மித்தையெனுஞ் சகத்துநின்பால் விளங்குமோ வெனவினவ, சுத்திதனி லேரஜதந் தோன்றுதல்போ லென்றவரோ. 61

அயல்வெள்ளி சுத்தியின்மே லாரோ பிதங்கூடு, மியலுள்ள சகமுமுன்வே றிருந்ததுமுண் டோவெனவே. 62

மநபயக்கம் பிடிக்கிலில்லா வத்துவுந்தோன் றிடுமதுவோ, கநவில்விண்ணிற் றுன்பறக்கக் கண்டதுபோ லென்றவரோ. 63

கநவுபோற்ப்ர பஞ்சமென்றீர் கண்விழித்தாற் கநவுபொய்யாம், வினவுசகந் திரமுமெய்யா விளங்குவதென் சொல்லுமென. 64

மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வருமள
வும், பொய்யாம்பின் கனவதுபோற் போதம்வரி
லென்றவரோ. 65

முன்புகண்ட கனவுபொய்யா முழிசாக்ரம்
போலவென்றீர், பின்புமுத்தித் தசையடைந்தும்
ப்ரபஞ்சநிற்ப தேதெனவே. 66

தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம்
போல்வதல்லாற், பரந்தசகங் காரியத்திற் பயன்
படா தென்றவரோ. 67

கன்மவினை யஞ்ஞானங் கடந்துமதன் காரியமாம்
புன்மையுறு மெய்யுடனே போகாத தேதெனவே.

வெட்டவிழு மரம்பசந்து விளங்குதல்போற்
சிலகால, நட்டகன்ம மாய்ந்துமங்க நடித்திடுங்கா
ணென்றவரோ. 69

சென்மம்போய் முத்தியினைச் சேரச்சி லிருக்கத்
தொன்மையாங் மாபலவோ சொரூபம் பகருமெனை.



பிரமமென்று மீசனென்றும் பெருகுபல சீவ
ரென்று, முறைமயக்க மலதாங்மா வொருவனே
யென்றவரோ. 71

ஏகந்தா னாங்மா வெனும்வகையே மெய்யானால்,
லாகந்தோ றும்பலவா யமர்ந்ததென்னோ சொல்லு
மெனை. 72

பலகடத்திற் சலத்தூடு பானுவிம்பந் தோன்
றுதல்போற், றொலைவில்புத்தி தொறுமாங்மாத்
தோன்றுதல்கா ணென்றவரோ. 73

ஆதித்தன் போலாங்மா வளவில்புத்தி தொ
றுந்தோன்றிற், சாதிக்கு முத்தியெவர் தமக்கத
னைச் சாற்றுமெனை. 74

பந்தமுத்தி தானுமந்தப் பரந்தபுத்தி தனக்
கேயா, மந்தவிம்பந் தனக்கிலையென் றறிவுவரச்
சொன்னவரோ. 75

பரமேக மாயுமதிற் பலசீவ ரேதெனவே,
யொருகடலிற் பலகுமிழி யுதிப்பதுபோ லென்ற
வரோ. 76

சீவனது தானென்றுஞ் சேரும்பி ரமமென்று, மாவதுவோ பேரின்ப மாங்கமெதனக் கோதுமென. 77.

ஏகம்பி ரமமி ரண்டிலைநீ வேறுமல, சோகமுறும் பேதமறிற் றோன்றுமின்ப மென்றவரோ.

சீவபே தம்போமோ சித்தொன்று மோவெணவே, யாவன்மந மறுஞ்சுழுத்தி யவத்தையிற்பா ரென்றவரோ. 79

பேதமல விவ்வுலகம் பிரமமய மென்றறிந்தும்
பூதமய மாய்த்தோற்றல் போகாத தேதெனவே.

கானலைநீ ரென்றோடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும், வானுலவு நீராகி வயங்குதல்போ லென்றவரோ. 81

அறிவானு நல்லறிவு மறியப்ப டும்பொருளும்
பிறிவாய்மூன் றாயிருத்தல் பேதமல வோவெனவே

சொப்பநத்திற் றனித்தொருவன் றோற்றம்வே றில்லையங்கே, கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போ லென்றவரோ. 83



கற்பனையாம் பேதங்கள் காணுமற் போம்வகையை
விற்பனமா நானறிய விளம்புமென வேவணங்க. 84

துரியமாம் யோகத்தாற் றூயமகம் லயமாகு, லரியமூ வகைவிகற்ப மழியுமென்று சொன்னவரோ. 85

சிறந்திருக்கு மாந்மாவுஞ் செகமெல்லா நிறைந்திருந்து, மறைந்தெனக்குத் தோன்றாத வகையேது சொல்லுமென. 86

சத்துச்சித் தாநந்தந் தாமூன்று மதனுடனே
யொத்துற்று நாம வுருவஞ் சகமாகி. 87

இருக்கையினிற் றோற்ற திலைமூன்றும் பிரமமென, மரிக்கில்வரும் பின்னிரண்டு மறிசகமென் றுரைத்தவரோ. 88

அறிந்துகொண்ஞா னத்தாலே யாந்மாவை யென்றுரைத்தீர், சிறந்தொளிரு மாந்மாவுந் திருசியமா மோவெனவே. 89

முந்தியஞா னத்தாலே முதிருமஞ்ஞா னந்து சக்கிற், சிந்தையிலாந் மாச்சுயமாய்த் திகழுமென்று சொன்னவரோ. 90

இனியமுத்திச் சுகமிருப்ப தெப்படியென்
றேவினவ, வநுபவத்தி லறிவிடயா னந்தம்போ
லென்றவரோ. 91

மநலயம்வந் தவரலது மற்றிலரோ முத்தரெ
னச், சநகனைப்போற் சீவந்முத்தர் தாமுமுள
ரென்றவரோ. 92

சீவந்முத்தி யடைந்தோர்கள் செயலுமவர்
தங்குணமு, நாவுரைக்கும் வாசகமு நானறியச்
சொல்லுமென. 93

வருங்கருவு பிறப்பினொடு வளர்தல்பருத் தல்
குறைத, லொருங்கலுமெய்க் கென்றதனை யொரு
த்திருப்பா ரென்றவரோ. 94

பார்ப்பதுவுங் கேட்பதுவுங் பகர்வதுவுஞ்
செல்வதுவு, மேற்பதுவுங் கரணதன்ம மெனத்
துணிவா ரென்றவரோ. 95

பசிதாக முயிர்க்கெனவே பயந்துக்கஞ் சுகங்
காமம், வசிகோப மதிக்கெனவே மகிழ்ந்திருப்பா
ரென்றவரோ. 96



வீடுந்தா ரமுமுறவு மேவியென்று மிருந்தாலு
நீடுந்தா மரையிலைநீர் நிகராவா ரென்றவரோ. 97

பற்றிடுங்கா யமுந்தானும் பன்னுளொன்
றாயினும்பி, னுற்றபுளி யம்பழமு மோடுமொப்பா
ரென்றவரோ. 98

கூறுமுல கியர்கையுடன் கூடினுமெய்ஞ் ஞா
னம்வந்தோர், சேறும்பிள்ளைப் பூச்சியும்போற் றிரி
வார்கா ணென்றவரோ. 99

ததிபூடு கடைந்தவெண்ணெய் தான்மோரிற்
கிடப்பதுபோன், மதியோடு கூடினும்பின் மயங்
கார்கா ணென்றவரோ. 100

அருச்சுநன்றன் பொருட்டாக வனைவருக்கு
ஞானம்வரப், பொருந்தியதே சிகவடிவாம் புண்ணி
யனே கண்வளரீர். 101

ஆயர்குல மாத ரளவிலோ ரைப்புணர்ந்துந்
தூயபதி னாறு யிரவருடன் றோய்ந்திருந்தும். 102

பரமமுநி வர்முன்னே பரிச்சித்தைத் தீண்டி
யன்று, பிரமசரி யஞ்செலுத்தும் பேரொளியே
கண்வளரீர். 103

ஆதிமூ லம்விசயற் காதிமறை யின்பொருளை,
யோதியு ணர்த்துமிந்த வுண்மைதனைக்—காதலுற்
றுக், கற்றோருங் கேட்டோருங் காசினியில் வாழ்ந்
துமுத்தி, பெற்றோர்கண் முத்தர்பெறும் பேறு.

கீதா சாரத் தாலாட்டு முற்றிற்று.



சற் குருப்யோ நம:.

## இறும் பூதூர்
## ஸ்ரீ தத்துவ ராய சுவாமிகள்
## அருளிச் செய்த
(மோக வதைப் பரணியில் உள்ள

# சசி வன்ன போதம்.

இது

திருப் பூவண மடாதிபதி
ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய
சுவாமிகளால்
பதிப்பிக்கப் பெற்றது.



சற் குருப்யோ நம:.

## மோக வதைப் பரணியின்க ணுள்ள

# சசி வன்ன போதம்.

மதிபருதி யெரிநீர்கால் வானவணி யியமானன் வடிவா யெல்லா, வதிபதியா யனைத்துமா யல்லாத வறிவுருவை யகத்துள் வைப்பாம்.

சொல்லாற்றம் மதிவிரகாற் றாயதிது தீய திது வென்னு மாக்க, ளெல்லார்க்கு மதுவதுவா யிறையிருக்கும் படியேயா யிருக்க வென்றே.

*அலகை யச்சம றவக வான்களு
முலகின் முத்திபெ றம்பரி சோதுவாம். 1

புணர்ந்த பாவமெ லாம்பரி பூரண
முணர்ந்த ஞானிவி ழிபட வோடுமே. 2

---

* அலகை—விளி.

எழிலாரு ஞானி புகழென்னை கூற வுயர்வீடி
வன்சொல் வழிசெய், தொழிலாளர் சேர்கை யது
கேளு முன்னை யிதிகாச மொன்று சொலவே. 3

தந்தாப மற்ற பரனேவல் செய்த வவனுற்ற
பேறு தனைமுன், செந்தாம ரைக்கண்மு தல்வற்
கெ மண்ண றிருவாய்ம லர்ந்த திதுவே. 4

உவமிப்பின் ஞானி விழிபட்டு முன்னை வினை
விட்டு முத்தி யுலகிற், றவமற்ற வெய்ய வினையே
புரிந்த சசிவன்ன னெய்து கதையே. 5

எம்புகு வாருள பாதகரா மியாவர்க்குளு
மிக்கவ னுதுமிவ, னும்புகல் வார்குல மும்மெரி
வாய் நரகம்புகு மாறுந டந்தனனே. 6

மலமேவிய தீவினை யின்வலியான் மகிழும்
பர்ப தத்திலி ருந்தவிவன், குலமேவிய தென்புல
வாணர்களுங் கொடிதாநர கங்குடி யேறினரே. 7

மிகமேவிய புண்ணிய பாவமெனும் வினை
யின்பயன் மேலொரு காலமுறு, திகமேவரு மெ
ன்பத னுலுளரோ யெல்லாமிவ னைச்செற வெய்
தினவே. 8



தன்புத்திர னெயம்வி டாமையினற் றவறுற்
றவி வற்பெறு தந்தையுளந், துன்புற்றினி யென்
னைகொ லோபுதல்வன் றுயர்தீர்வகை யென்றுக
ழன்றனனே. 9

ஒன்றாலும்வி னைத்துயர் துய்ப்பதலா லொழி
விக்குமு பாயமு னக்கிலதே, யென்றாலும நிந்தவ
னன்புவிடா திவனைக்கொடு ழன்றன னெங்கணு
மே. 10

ஒருமாதவன் மற்றிவன் வேதனைகண் டொ
ழிவற்றுள வொன்றையு ளத்துணரும், பரமாகிய
ஞானிகள் கண்ணுறலே பரமாவிழ்த மென்றுப கர்ந்
தனனே. 11

தானந்தமி லாதத னைத்தருவான் சத்திச்சுர
மென்னுமி டந்தனில்வாழ், மாநந்திப ராயண
ரென்பவர்நின் மைந்தற்குறு நோய்க்கும ருந்தென
வே. 12

முடியாவுப தேசமி தென்றவனு முனிவன்பத
மெய்திமொ ழிந்தனனிக், கொடியான்வெரு வாது
றுயிற்றியநோய் கூறற்கரி தாயகொ டுந்தொழிலே.

ஈங்குன்றிரு முன்பக ரும்படியோ விவனெய்
திய தீவினை யென்னவெலா, நீங்கும்படி தன்னரு
பூதியிஞ னிகழும்விழி வைத்தன னின்மலனே.

கணியாதப வக்கடு வானதிருக் கண்வைத்த
லும் விட்டன காதகடும், பிணியாவையு நல்லபி
தாவிறைதாள் பேணிப்பணி யென்றுபெ யர்ந்தன
னே. 15.

இடனேமுத லாகவு வந்திறையோ னேவும்
பணி செய்திவ னுஞ்சிலநா, ளுடனேயிவ னேதிரு
மேனிதனக் குரியானென வுற்றன னும்பரொடே.

நன்றாய்முனி தாள்வழி பாடதனு ஞானவித
மானபி றப்பினைவிட், டொன்றாகிய வீடுண ருத்த
மர்கட் குளசாதந னாலுமு தித்தனவே. 17

முனிவன்றிரு முன்புள தன்குறைதான்
மொழிவன்சில வஞ்சலி குஞ்சியதாய்ப், பணிவந்
திரு கண்கள்ப தங்களிலே பலகால்வலம் வந்துப
ணிந்தனனே. 18.



அருளேவடி வாகிய மாமுனிதா னறியாதவர்
போலவ முங்கலுறும், பொருளேதென மைந்தனை
நோக்கினனிப் பொல்லாதப வப்புண ரிக்கெனவே.

வெருவும்பிற விக்கடல் வித்தாமுன் வேதா
கம கீதைவி ளம்புமதைக், குருவுந்தன தன்பன்ம
நத்தளவிற் கொளுமாறுதொ குத்திவை கூறிடுமே.

மரணபவங்க ளானபுனலை யுடையது மதி
யைவிழுங்கு காமவாவு பெரியது, காணவொழுங்க
ளுதவிடய விரைநுகர் கணமொடியங்கு மீநமிகவு
முகள்வதே. 21

பெருமிதமென்று கூறுபெருமை யுடையது
பிணிகளெனுங்கெ டாதபுலவு கமழ்வது, வருமிட
ரின்ப மானதிரைகள் பொருவது மநமெனும்வஞ்ச
ராஜமகா முறைவதே. 22

அளவிலகந்தை யாமையபரி மிதமுள தவாவு
நிறைந்த வாழமறிய வரியது, களவுநெருங்கு பாரு
மலையு முடையது கலகவிடங்கண் மேவுநிருமி
னெளிவதே. 23

துகளெனுநன்க லாதநுரைக டருவது துற
வெனுமின்ப மானகரையை விடவகன், மகளிரொ
னுந்த வாதவலிய சுழியது மறலியுமஞ்சு கோபா
வடவை யெரிவதே. 24

வெருவருகின்ற போகமுதலை யுடையது
விவிதமநந்த மானதுறையு மறிபவ, ரொருவர்க
டந்து போகவிரகி லெழுபவ வுததிவிளம்ப யாவ
ருலகி லறிஞரே. 25

பொறிவழிசென்று மீளுமவல மதிகொடு
பொருசமயங்க ளாறுமறிய விழுமதி, லறிவழி
வொன்றி லாதபொருள தெனவுள வநுபவவங்க
மேறுமறிஞ ரகல்வரே. 26

புணரிகடந்து போகவிரகி லெனமொழி
பொழுதுபுலம்பி யாவிபுதல்வ னிறுமுன, முணர்
வெனும்வங்க மேறுமறிஞ ரகல்வரொன் றுரையை
வழங்கி நாதனுவகை யருளவே. 27

வாழியென விறைவனடி தொழுதுவரு பவமா
மாழியினை யகலுமறி வருளுகென வவரே. 28



பரவறிவு மபரவறி வெனவுமிரு பரிசாத்
திரவறிவை யறியுமவர் மொழிவர்தெளி வுறவே. 29

அபரவுணர் வருமறைகண் முதலகில கலையு
முபரமம தறவுதவு முணர்வுபர வுணர்வே. 30

ஆகமவி தங்களறி வாரபர மறிவார்
யோகமொடு றங்குமவ ரேபரமு ணர்ந்தோர். 31

புராணமிதி காசமெவை யும்பொருள னைத்தின்
பிராணனறி யாதுளவி டத்திவைபி தற்றே. 32

இயலறிவ திசையறிவ தினமறிவ துளவா
மயலறிவ தறிவதல வறிவறிவ தறியே. 33

கவிலுகலை யறுபத்து நாலுமறி வாரும்
பவலயம தறுசுத்த பரமறி யாரே. 34

ஆகவறி வாளரறி வாரிவைய னைத்து
மேகவறி வாளரிவை யாவுமறி யாரே. 35

ஐயறிவ றிந்தவைய டங்கினவ ரேனு
மெய்யறிவி லாதவர்கள் வீடதுபெ றாரே. 36

மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாந்
தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே. 37

பூசனையு மதுசகல பொருளுமறி தமையு
மீசனையும் வேறதற வறிவதறி வெனவே. 38

தானெனுமு டம்பதுத னைத்தவிர வேறு
யானெனும ருத்தமுள வோவருளு கெனவே. 39

எனதாடை பொன்பூம கன்றையல் பாய்மா
விபங்கண்மு கங்கால்கை மெய்யென்ன வென்னுந்,
தனதாயு ரைப்பான்வ குத்திந்த வூனைத் தானென்
றயர்த்துஞ்சொ லத்தக்க தன்றே. 40

தாளாக வூராழி யார்வென்னில் வீணை தண்
டாக வன்மார்பு தட்டாக மொட்டா, நாளாம வர்ச்
சென்னி கூந்தற்கொ டித்தேர் நாணுளு மூர்வா
னில் வேறாக நாடே. 41

கடக்குஞ்ச ரம்பண்ணி யுண்ணின்றொ ருத்
தன் கைபாத கன்னங்கண் மெய்போலி யக்குங்,
கிடக்கும்ந டத்தாவி டத்திவ்வு டம்புங் கிடக்கும்
மொ ருத்தன்ந டத்தாவி டத்தே. 42



ஒருகூறு மலமாகு மொருகூறு டம்பாகு
மொருகூறு மநமாகு முண்டற்ற வந்த, மிருகூறு
நீயாகி லொருகூறு நீயாமி ழிக்கும்ம லஞ்சோதி
டப்பட்ட வுடலே. 43

கிளராத ரத்துண்ணு மந்நஞ்சு டக்கை கிட்
டப்பொ ருதேயி ருந்தார்மு னிந்தார், தளராது
றப்பொன்று முயிர்போக வன்றே தழற்பள்ளி
யீதேது யின்றூர்ச கித்தே. 44

நிழற்பாவை கண்ணாடி யிற்பாவை கைகா
ணிமிர்க்கும்மு டக்கும்மி வன்செய்யு மெல்லாந்,
தொழிற்பால வாமற்றிவ் வுடலஞ்செய் தொழி
லுஞ் சுடர்ஞான வடிவான வன்செய்த தொழிலே.

அறிகின்ற பொருளென்று மறிவானில் வே
றேயானுவிவ் வூனை நானென்ன லாமோ, செறி
கின்ற புள்ளல்ல வேகூடிவ் வகையே செடமான
வுடனின்னில் வேறென்று தெளியே. 46

நிலமாகும் வற்பென்ற னெகிழ்கின்ற நீரா
நெருப்பாமி திற்சுட்ட வெல்லாமு மநிலஞ், சல
மான புரையான வானிந்த வுடலஞ் சடமான
வைம்பூத வுருவங்க டாமே. 47

விழியைப்பு மானென்னில் ரவியாதி யாலே
விளங்கின்ற தல்லால்வி ளங்காமை யாலே, யொழி
யப்ப டெங்கன்ன முதனுலு முன்ற னுருக்கண்ட
கண்டன்னை யொப்பாக வுன்னே. 48

அழலுண்பொருள் களினுண்பவை முக்கூ
றதின் முதற்கூ றணியென்புந டுக்கூறது மச்
சைக்கணி யாகு, மெழில்கொண்டக டைக்கூறது
வாக்காயெழு மென்றே யியனுன்மறை யந்தங்களி
சைக்கின்றன வாமே. 49

உண்ணும்புனன் முக்கூறதின் முதற்கூறுவர்
நீரா முதிரந்நடு விற்கூறுக டைக்கூறபி ராண,
னெண்ணும்மிதி லிருகூறவை நீயாயிடி னன்றே
விறுகின்றபி ராணன்னது நீயாகுவை யிசையே. 50

பிராணனு மல்லதுஞ்சி லுணர்வின்மை யா
லஃ துணரும்பு லன்க ளொழிவாற், பிராணனை



தென்னின் மன்னை யொழியாது சேனை நகர்சூழ்வ
லஞ்செய் பொழுதே. 51

கரணமொ டுங்கவாயு நிகழ்வென்கொ லென்
னி னுடல்காவ லாகு மலதேன், மரணம டைந்த
தென்று தமர்சுட்டி டாமுன் வளைவாலின் ஞாளி
கொளுமே. 52

இனமுற வெண்ணவுள்ள கரணத்தி லொன்
றி தெனலாவி தென்ன தெனலான், மநமுன
மந்நமென்ற வதனுலு மல்ல மதியல்ல வந்த வகை
யே. 53

இடரின்புள தாய்நிலை யற்றறிவற் றெண்
ணுங்கர ணங்களி லாயெவரு, மடரும்பிற விக்கடி
யென்றுணரு மகங்காரமு நீயல வென்றறியே. 54

ஐயப்பட லோர்பொரு ணிச்சயமா யறியப்
படல் யானென தென்றமதஞ், செய்யப்படல்
செய்வது சிந்தனையாஞ் சித்தம்மது வன்றென
நீதெளியே. 55

முன்னாகவு டம்பது சித்தமதே முடிவாக
மொ ழிந்தபொ ருட்டிரடா, னின்னாகில நீயறி
யும்பொருளாய் நிகழ்கின்றத னாலென நின்மலனே.

உன்னாலறி யப்படும் யாவையுமுன் னுருவன்
றென வோதினை யொக்குமெனக், கென்னாலறி
யாதொழி யும்பொருளோ யானாகுவ தென்றனை
னென்றலுமே. 57

அறியாப்பொருள் காரண மாயைகுறித் தறி
யும்பொருள் காரிய மாமுலகின், நெறியாற்றிகழ்
நான்மறை யந்தமெலா நீயன்றென வோதுவி ரந்த
ரமே. 58

அறியும்பொரு ளன்றறி யாப்பொருளன் றறி
வாகிய நீயெனு மப்பொருடான், பொறியின்வழி
கின்றறி யும்பொருளோ போதக்கண் விழித்தறி
யும்பொருளோ. 59

வேதப்பொரு டானிது வேறுசொலும் வினை
யாவையு மன்றொரு வேறுமிலாப், போதப்பொரு
ளந்தமறைக்கணியாம் புநிதப்பொரு டத்வமசிப்
பொருளே. 60



நிமல மாம்பர மதுவெ னும்பொரு ணீயெ
னும்பொருள் சீவனே, யமல மானவி ரண்ட யிக்
கிய மசிப தப்பொரு ளாவதே. 61

அருமை யாகிய பிரம முன்னிலை யாகு மாரு
யிர் பின்னிலை, யிருமை யானவி ரண்ட யிக்கிய
மெய்து மாறெவ னென்னவே. 62

உபாதி யால்வரு பேத மேயிவர் பேத மன்
றொரு வுயிரினின், கபாதி யாமுடல் போலி றைக்
குள கார ணாதிகள் காயமே. 63

ஈசன் முற்றறி வான்வி யாபியெ னைக்கு
மேதுவி யம்புமா, காச கன்னிரு பாதி பாவனை
கார ணாதிக ளாவதே. 64

நீதி யாலிரு பாதி நீக்கிட நீயெ னச்சொல்ப
தத்தினு, மாதி யாகிய தற்ப தத்தும சுத்த சுத்த
மு ரைத்துமே. 65

ஆக முன்றிக பேழு நாமென றும்ப தத்
தில சுத்தமே, சோக மின்றிய சான்று நாமென
றும்ப தப்பொருள் சுத்தமே. 66

அகில காரண மாகி நானென றற்ப தத்திலை
சுத்தமே, சகல காரண சான்று நானென றற்ப
தப்பொருள் சுத்தமே. 67

செறிந்த காரண காரி யங்கள்சி தைந்து மே
லுறு சித்ததா, யறிந்த வாதனை தானு மற்றதவ்
வசிப தப்பொரு ளாவதே. 68

அசுத்த மாகிய திருப தத்தினு முக்கி யப்
பொரு ளாகுமே, விசுத்த மானதி லக்கி யப்பொரு
ளென்று சொல்லுவர் விமலரே. 69

முரண்ட சீவப ரங்க டம்முடன் முக்கி யப்
பொரு ளாவதே, யிரண்டில் வேறறு சிற்சொ ரூப
மி லக்கி யப்பொரு ளாவதே. 70

ஊக்கி யப்பர சீவர் தங்களு டம்பி ரண்டுமி
லக்கணை, வாக்கி யப்படி நீக்கி னுலொரு வத்து
வேபர வத்துவே. 71

ஓரில் விட்டதும் விட்டி டாதது முபய மும்
மென வுணர்வுளோர், தேரி லக்கணை திரிவி தத்
திலி சைப்பர் மற்றதி யம்புவாம். 72



மஞ்சு கூப்பிடு தென்றல் போலவும் வடம
கீரதி யுள்ளதே, விஞ்சு கோஷம தென்றல் போல
வும் விட்ட லக்கணை யாவதே. 73

சிவலை நின்றது வெள்ளை போயின தென்று
செப்புதல் போலவே, கவலை யின்றிவி டாத லக்
கணை யென்று நீகொள்க ருத்திலே. 74

மேவும் விட்டுவி டாத லக்கணை மெய்ம்மை
யாதெனி னந்தவித், தேவ தத்தனெ னும்பொ
ருட்படி சிந்தை செய்திடு தீரவே. 75

விட்ட லக்கணை தனையும் விட்டுவி டாத லக்
கணை தனையுநீ, விட்டு விட்டு விடாத லக்கணை
யால்வி ளங்குவி ளங்கவே. 76

போது மேவிய தேசம் விட்டொரு புருட
னைக்கொளு மாறுபோ, லோது மீருடல் கண்டு
விட்டத னுண்மை காணவு ணர்ந்திடே. 77

பிரியாவுயிர் காரிய மாமுடலும் பிரமத்துற
காரண மாமுடலுங், கரியாகிய வாதனை யுங்கழியக்
காட்டும்படி கண்டுகொள் கண்ணுறவே. 78

காணத்திர ணிர்பினு மப்பொருளைக் காணக்
கிடை யாதவை கையறவே, மரணப்படி னும்மனு
கண்டுகொளும் வழியில்லையெ னும்படி நீமதியே.

எந்தக்கா ணங்களு மேவனறு விதில்வாதனை
யால்விட யங்களொடே, யந்தக்கா ணங்கள்பொ
ருந்தல்கா வவைமாய்தல்சு ழுத்திய வத்தையதே.

வினவிற்ப ரத்தையறி வுறுதற்க வத்தை
புலன் வினைமாறியே, நனவிற்சு ழுத்திநிலை வரி
னப்பொ ருட்டிகழு நலமாகவே. 81.

இவிதத்த வத்தைகளை யறிவுற்ற வத்துரியா
நிலைசிவனே, யிவிதத்தி லப்புருட னனவுற்ற வத்
துரிய நிலையீசனே. 82.

அகிலக்க ரிப்பரம துரியப்பொ ருட்டுரிய
மதுவாகையே, புகலுற்ற தத்வமசி யெனுமுப்ப
தத்தின்முடி பொருளாவதே. 83.

நிமலப்பொ ருட்சுருதி நெறியிற்பெ றக்கரு
ணை நிகூறவே, யமலப்பொ ருட்பெறுத லருமை
த்தெ னக்கழறி யடிவீழவே. 84.



தமரக்க லைக்களவு தெரிவற்ற தற்பொருள
தனையீகுவா, னமரர்க்க ளப்பரிய பதநற்பு னற்
கொடுசெய் தபிடேகமே. 85

பவனத்தில் வைத்தவமிர் தினின்மிச்சி விட்
டினிய பரிவோடுமா, தவனப்பொ டிக்கவச மென
விட்டு டற்பகைக டலைசாயவே. 86

உதகத்து டற்பொருளொ டுயிர்கைக்கொ
டுச்சியிசை யொருபோதொடே, பதகத்த லத்தை
விட விருகைத்த லத்தொடிரு பதமேவியே. 87

ஒழியப்பு லக்கணுப நிடதப்பொ ருட்டெரிய
வுளஞானமாம், விழியைக்கொ டுத்துமொழி யென
முப்ப தப்பொருளும் வெளியாகவே. 88

நனவைத்து வக்கிமுடி துரியத்தை முற்ற
விறை நவினீதியே, மநவர்க்க மற்றவநு பவமுற்ற
சிற்கக வலியோதுமே. 89

புரண மாகவே புறம்புள புலன்களு மந்தக்,
கரண மியாவையும் வழங்கிடம் நனவெனக் கண்
டேன். 90

புரண மாகிய புறம்புள புலன்கெட வந்தக், காண மியாவையும் வழங்கிடங் கநவெனக் கண் டேன். 91

மரண மாகிய நிசையிது வெனும்படி மகாநி, காண மியாவையு மிறந்துள சுழுத்தியுங் கண் டேன். 92

எஞ்ச லின்றியெக் காணமு மிறந்திருண் டிருந்த, துஞ்ச லங்குணர் போதமாந் துரியமுங் கண்டேன். 93

துரிய மாகிய போதமோர் துளக்கமற் றனைத் தின், கரிய தாயிருந் திடம்பா னனவெனக் கண் டேன். 94

புணர்ந்த விச்சகத் தொழித்துணர் போத மாந் தனையே, யுணர்ந்த மற்றது பான்கந வெனும் படி யுணர்ந்தேன். 95

சான்று சாக்கிய மிறந்திடத் தானிருந் தமை யுந், தோன்று ருவிடம் பான்சுழுத் தியெனத் துணிந்தேன். 96



மரித்த தென்றுணர்ந் துரைத்ததும் மரித் திடந் தனிலே, தெரித்த போதமே ததுபான் றுரி யமாய்த் தெளிந்தேன். 97

இறையெ னும்பொருட் டுரியமே யென்னை யாண் டவனே, மறையி னந்தநற் பதப்பொரு ளனவென மதித்தேன். 98

பண்டை விச்சுவ வாதனைப் பழுதுபோய் முழுதுங், கண்ட கண்ணதே யாகிய கநவதுங் கண்டேன். 99

காட்சி யாவையுங் கண்ணதா யக்கணுங் களை ந்த, மாட்சி யாகிய வகோசா முறக்கமாய் மதித் தேன். 100

அருந்த வாமறை யந்தமா மகோசரந் தனினீ யிருந்த வாறறி வித்தவா றெங்ஙன மிசைப்பேன்.

எம்பி ரானிடந் தொறுமிடந் தொறுமது வதுவாய்த், தம்பி ரானடஞ் செயும்வகை சாற்று வன றறியேன். 102

ஆவி யேயடி யேன்செய்கைம் மாறனக்
கென்னெனிற், பாவி யேனது தானுமுன் னுடை
யதாம் பண்டே. 103

ஆவல் செய்தென தாக்கையுள் ளளவுநின்
னடியார்க், கேவல் செய்வதே யன்றிமற் றொன்று
நா னறியேன். 104

இறவி லெப்பத மும்பெற வேண்டிலே னெ
ன்றும், பிறவி வேண்டுவ னின்றிருப் பணிசெயப்
பெறினே. 105

என்றுபல கால்விழுமெ ழுந்தொழும ழும்
புரியு மென்னையினியா, னின்றுபல வாகவுரை
செய்தவவ னன்பினொடு நெஞ்சுருகியே. 106

வெட்டிலறி வின்றியிறை தன்னிலறி வின்றி
யிவ்வு டம்பினுடனே, வீட்டிலுறை வானையினி
வீடுபெறு மென்பதுவி ளம்புகிலமே. 107

வஞ்சவலி யானாகில் வீழ்பிதிர ரநரகு பாழ்
படமிகா, விஞ்சைவலி யாலடைய வேறினர்சு ரா
தியர்கண் மேலுலகமே. 108



தேவரும னித்தருமி வன்றொழில்வி யந்து
ரைசெ யப்படுவதோ, மூவரும்வ ணங்கிமுடி யால
வன தேவல்செய முந்துறுவரோ. 109

ஞானியைந மன்சுரனெ னுதொழிக ஞாலமுய
நாதனருளான், மேனியது கொண்டுதனை கல்க
வரு மென்றறையும் வேதமுடிவே. 110

சசி வன்ன போதம் முற்றிற்று.

---





83

சற் குருப்யோ நம:

விருத்தாசலம்

ஸ்ரீ குமார தேவ சுவாமிகள்

அருளிச் செய்த

# மஹா ராஜா துறவு.

இது

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.

## சிறப்புப் பாயிரம்.

திங்களொண் கவிகைத் திகிரியந் திணி
தோட் டிகழ்கடற் றுனைமா ராஜ, னங்கண்மா
நிலத்திற் றுறந்துவீ டடைந்த வரியவிக் காதை
யைத் தமிழா, லிங்குமா தவத்தோ ரிசையுமென்
றிசைப்ப விசைத்தனன் வீடுறக் கேட்டோர்,
கொங்கவிழ் பொழில்சூழ் பழமலை யுறையுங் குமார
தே வென்னுமா முநியே.

சிவன்றிரு வுருவா மைந்து சிங்மய வெழுத்
தும் வாழி, நவந்தரு நீறும் வாழி நயநநன் மணி
யும் வாழி, கவின்றருங் குமார தேவன் கழலிணை
யிரண்டும் வாழி, யவன்றிரு வடியார் தம்மோ
டாருயி ரனைத்தும் வாழி.

சற் குருப்யோ நம:

# மஹா ராஜா துறவு.

## பாயிரம்.

அமரர்கள் பரவுந் திருமுது குன்றி லாழத்
துப் பிள்ளையைச் சிகரிக், குமரசற் குருவை யிம
கிரி ராஜ குமாரியாம் பெரியநா யகியை, மும்மலமு
மொருங்கே யகற்றிடு முக்கண் முதல்வனைச் சாந்
தநா யகனை, நமதெணப் படியே முடிந்திடத்
திநமு நாடிநின் றிறைஞ்சிவாழ்த் திடுவாம். 1

தொய்யின் முலைக்கோ டிரண்டுகவான் றுதிக்
கை மூன்று விழிதுரிசற், றுய்ய சைவ முதன்மத
முந் துலங்க வருமொண் பிடியுலக, முய்ய வுதவு
மொருகளிற்றை யுலவா விருத்த சைலத்தில்,
வையம் பரவு மாழத்து வாழைங் கரனை மாநினை
வாம். 2

இருட்கலி வலியின் ஞானகன் னெறிக ளிறந் துயிர் கொடுநெறி மேவி, மருட்கொடு கலங்கா வகைகலி யென்றும் வந்தணு காப்பதி தன்னிற், றெருட்சத்தி கருணை யுருவதாய் நின்று தெளி விக்கு மிறைவியெங் குருவோர், அருட்கடல் பெரிய நாயகி யுலகுக் கனைமுதல் வியைப்பணிந் திடு வாம். 3.

திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத் திருந்திழை யுமையுளங் களிப்பப், பொங்கரா வொடுநற் புலிமுனி வர்கண்மால் போதய னமரர்கள் போற்றத், துங்கநான் மறைக டுதித்திட வைந்து தொழில்விளக் கிடப்பொது வதனிற், செங்கழ லதிர நடஞ்செயும் பொருளைத் திரம்பணிந் திட ரொழித் திடுவாம். 4.

அருளுருவா யுயிர்கடமக் கன்னை யாகி யஞ் ஞானந் தனையகற்றி யமல மாகி, மருவிலதாய் மெய்ஞ் ஞான மாகு முத்தி வாய்த்திடவே காத்தருளி வநேகரேத்த, இருள்கெடவே மிளிருமிருங் கழல்



களார்ப்ப விறைபுரியுந் திருநடத்தாற் களித்து வாழுந், தெருண்மருவு மறைநான்கும் பரவுந் தில் லைச் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். 5

செக்கர் போன்றொளிர் முக்கட்சி வம்பிளை
மிக்க போருள் வேலையை யோர்கொம்பாற்
றக்க வன்பர்க்கு தவுந்த ருவினை
இக்க தைநிறை வேறவி றைஞ்சுவாம். 6

கடிகமழ் கரிய கூந்தற் கனிமொழித் துவர் வாய்த் தெய்வப், பிடிதரக் கோட்டால் வள்ளிப் பெண்கொடி படருஞ் செய்ய, படிபுகழ் புயமாங் குன்றிற் பாயவண் கழுநீர் நீப, மடலவிழ் செழுந் தார்ச் செவ்வேண் மலரடி வணக்கஞ் செய்வாம். 7

வண்டுழா யலங்கன் மாயவன் மலர்மேல் வதிந்தநான் முகன்மறை யறியாத், தொண்டை வாய்க் கெண்டை விழிக்கழை மொழியொண் டுடி யிடை யுமையையோ ரிடத்திற், கொண்டகோ னருளைப் பொருளெனக் கருதிக் குலவிய சாதநங்

தரித்து, மண்டியவடியார் யாவர்மற் றவர்தாண்
மனத்தினுஞ் சிரத்தினும் வைப்பாம். 8

சகரர்தம் வலிமையுந் தடந்தி ரைக்கட
லகலமும் பின்புளோ ரகழிவி லஞ்சிதான்
புகழுற விளக்கலே போல விச்செயு
டைகதரு கலைஞர்நூ றனைவி ளக்குமால். 9

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

தருக்கிளர் நைமி சாரணி யத்திற் றங்கிய முனிவர்கள் சூதன், வரப்பணிந் தேத்திக் கதைகள்பற் பலவா வகுத்துரைத் தனைமஹா ராஜன், திருக்கதை யெங்கட் குரைத்திலை யதுநீ செப்பெனச் சுருதியிற் சொல்லுஞ், சுருக்கமில் காதை யிதுவெனத் தொகுத்துத் தோமறக் கேண்மினென் றுரைக்கும். 1



குழைத்ததண் சினைத்தே மாவினொண் கனித்தேன் குலவிய பலவினற் பலத்தேன், றழைத்திடு கதலிப் பழமுகுத் திடுதேன் மூன்றிரண் டிலஞ்சியிற் றதும்பி, விழுத்தகு வயலிற் பாய்தர வினையு மிகுகரு ளுடதே சந்தா, னிழைத்தநற் றவத்தா லுயிரெலாம் புரந்தங் கிருந்தா சானுமோர் குரிசில். 2

மஞ்சம ரிஞ்சிசூழ் மாபு ரத்திருந்
தெஞ்சலி லெண்டிசை யிறைவர் தாடொழத்
தஞ்சமென் றடைந்தவர் தம்மைக் காத்திகல்
வஞ்சகர்க் காய்மஹா ராஜ மன்னனே. 3

தருநிழ லரசு வைகுஞ் சதமகன் றிருவின் மிக்கா, னுருவினின் மதனின் மிக்கா னுலத்தினிற் பலத்த தோளான், செருவினி லரியே றன்னான் றேனொடு ஞிமிறும் பாட, முருகுடைந் தொழுகுந் தாரான் மூவுல களிக்கும் வேலான். 4

அரசர்வந் திடுதிறை யளக்கு முன்றிலான்
முரசுக ளதிர முழங்கு மன்றலான்

கரைபொரு திரையெறி கடலந் தானையான்
அருவரை மார்பினன் யாளி மொய்ம்பினன். 5

அரசர்தம் முடியுழு தவிருந் தாளினன்
எரிதவழ் திகிரியை யேந்துந் தோளினன்
மருவலர் வலியினை மாற்றும் வாளினன்
றருநிதிக் கொடையினன் றருக்கு நாளினே. 6

கவரியோ டால வட்டங் காரிகை யார்கள்
வீசப், பவளவா யரம்பை யன்னார் பாகடை யுதவ
மூத்தத், தவளவா ணகையார் கீதந் தனிகடஞ்
செய்ய நின்று, குவலய மன்னர் போற்றக் குரை
கடற் றானை சூழ. 7

இந்திர ஞால யம்போ லியங்கிய மண்ட பத்
தில், சுந்தர மிருக ராஜன் சுமந்தபூ வணையின்
மீது, வந்திருந் தவனி தன்னை மநுநெறி முறை
யிற் காத்தே, யந்தமில் போகந் துய்த்தங் கிருந்
திடு மரசர் கோமான். 8

தூம்புடைப் பிறையெ யிற்றுத் தூத்தியி ராயி
ரந்தோட், பாம்பினற் பரிக்க லுற்ற பாரினைப்



பரிக்கப் பின்னர், மேம்படு புதல்வர் தந்தம் வீறு
டை வயிற்றில் லென்று, தேம்படு தெரியன் மார்
பன் சிந்தையா குலங்க ளுற்றான். 9

கங்கையே முதலா மிக்க கடவுண்மா நதியிற்
றோய்ந்தும், பங்கையா சனன்மா றிங்கட் பவளவார்
சடையான் றன்னை, அங்கையாற் பூசை செய்து
மதிதிகட் களித்துந் தீயில், பொங்குமா குதிக ளீந்
தும் பூவலம் வந்துந் தேவர். 10

ஆலயஞ் சாலை யக்கி ராரகந் தகவ நங்கள்
கோலமா கிலஞ்சி கூடங் குளம்பல செய்து மீரெட்
டேலுமா தாநத் தோடே யிரணிய முதலீ ரைந்து
சாலநற் றாந மீந்துந் தருமமென் றொன்கு செய்தும்

தவம்பல புரிந்து வேந்தன் றனையனைப் பூத்த
பின்னர்ப், பவந்தனைத் துடைத்தேன் மேலாம்
பரமநற் பதமு முண்டென், றுவந்துசா தககன்
மத்தோ டொழிவறு கரும மெல்லாம், நவந்தரச்
செய்து நாம நன்மஹா ராஜ னென்றே. 12

வேத நீதியிற் கூறிவி யன்றா
ஓத வெண்ணெண்க லையுமு ணர்த்துவித்
தேத மற்றகு ரவற்கி ரணியம் [போல். 13
போத மென்னப்பொ ழிந்தனன் கொண்டல்

கொடிநெ ருங்குக்கொ டிஞ்சியந் தேர்பரி
கடம லிந்தக யமொண்சி விகையிப்
படியி லூரப்ப யிற்றுவித் தாசிலா
வடிவி லங்கும கற்கும ணஞ்செய்வான். 14

மடங்க லன்னப லமுள்ள மாமன்னன்
இடங்கொ ளெண்ணெழு தேசத்தி றைவர்க்கு
முடங்கல் போக்கினன் கண்டுமு டிமன்னர்
தடங்கொள் சேனைகள் சூழ்வரச் சார்ந்தனர். 15

வடிகொள்வெண் சுதையாற் பித்திகை தீற்றி
வானுற மணிக்கொடி நிறைத்துக், கடிநறுஞ் சாந்
திங் குங்குமந் தன்னூற் கமழ்தர மறுகெலா மெழு
கிப், பொடிகொள்சிக் தூரத்தாற் கோலமே புனை
ந்து பூமலர் பொரிநனி சிதறிக், கொடிகொண்மூ



தெயின்மேன் மாடமொண் சிகரி கோதறப் புதுக்
கியே குலவ. 16

கதலியுங் கமுகு நட்டுக் காவண மலங்க ரித்
துப், புதியதோ ரணங்கள் கட்டிப் பொற்குடஞ்
செறித்துத் தீபம், இதமுற வெங்கும் வைத்தே
யிந்திர னகரம் போல, மதுமலர்த் தாம நாற்றி
மாபுரி யலங்க ரித்தார். 17

வில்லி லங்குகை வேந்தர்ம ரபினில்
நல்ல சாமுத்தி ரிகநூ னன்கதாச்
சொல்லி லக்கணத் தோடுது ரிசிலா
முல்லை மாலைமு ருகுவி ரியவே. 18

மூவுல கதனி லுள்ள முகிழ்முலைக் கருங்கட்
செவ்வாய்ப், பாவைய ரெழிலிற் போதன் பகுத்
தெடுத் துயிரோ டேய, ஓவியந் தீட்டி னென்
னலகினி லுரைக்கச் செய்ய, பூவுறை திருவி ரும்
பும் பொற்புட னவத ரித்தே. 19

இலங்கிய வாலொண் டளிர்குழைத் தினிய
விருதநக் கோங்கிணை யருப்பி, நலங்கிள ராம்பல்

குமிழிரு குவளை கண்ணுசெங் சரோருகம் பூத்
துத், துலங்கிய புயலைச் சுமந்திரு தாளாற் றேமி
லா மின்னென நுடங்கிப், பலந்தரப் படருங்
கொடியினை வேதப் பண்பினின் மன்றல்செய்
வித்தே. 20

அருந்ததி கணவன் முதன்முநி வர்க ளரும
றைக் கிழவர்க டம்மால், பொருந்திய கங்கைப் பூம்
புன லாட்டிப் பொன்னவ மணிகளாற் குயின்ற,
விருந்திடு மடங்கன் மென்றவி சேற்றி மிளிர்நவ
மணிமுடி கவித்துப், பருந்தடர் வேலான் பௌவ
மார் புவியைப் பரியெனத் தோன்றல்பா லளித்
தான். 21

சோகமே யின்றி யிருந்தனன் வேந்தன்
றோன்றலும் பார்பொது நீக்கி, ஏகமாய்ச் செங்
கோ லெங்கணுஞ் செல்ல வெண்டிசை விசயமுஞ்
செய்தே, மாகநா டென்னப் போகமே துய்த்து
மடந்தையோ டிருந்தன னென்றான், வாகைவே
லவன்பி னென்செய்தா னென்ன மறையவர்க்
குயர்முநி வகுக்கும். 22



மனைவியும் தானு மோர்நினை வாகி மாறுபா
டின்றியோர் காலும், தனையுணர் யோகி தந்தை
யாய் கடவு டங்களை யநுதின மிறைஞ்சி, அனையவ
ருரைத்த நெறிதனி னடந்து மருத்தங்கண் மாநி
னிற் றரித்தும், வினையம துடனே நான்முறை
யவரை வினவியுஞ் சிலபகல் போக்கி. 23

தனியிட மதனி லிருந்திரு வர்களுந் தங்க
ளிற் றாமுணர்ந் துசாவித், துனிசெய்மா மாயைப்
பிறப்பது நீங்கிச் சுகமதை யடைந்தநு தினமும்,
இனிமைய தாக விருக்கலா ஞானத் தென்றெனி
ஞானிகட் சார்ந்து, நனியவர் பாத பூசனை புரிந்து
நாடொறும் வினவினர் நன்றாய். 24

இருவரி லரசன் றனக்கறி வோங்க விருவ
கைச் சார்வையு மகற்றிக், கருவுடற் காவ றனையுங்
கை விடுத்துக் கருத்தசை யாதுமெய் யுணர்வை,
மருவிடி லகப்பற் றற்றுமேல் வீடு வாய்த்திடு மதற்
குமெய்ஞ் ஞானக், குருவரு ளின்றி விளங்கிடா
தெனவே கொண்டனன் மநத்தினிற் றுணிவே. 25

மனைதனி லாசை பொருந்தியே நின்று மகி
மையின் ஞானியா மெனவே, தனைமிக மதிப்போன்
றன்னைவந் தொருவன் றந்திடு ஞானமென் றிரந்து,
வினவன்மட் டையினைப் பருகுவோன் றன்னை
வேண்டித்தென் னம்பழந் தனையே, யினம்பணித்
திரிவோன் புத்திபோன் மெனவே யியம்புவர் முற்
றுணர் பெரியோர். 26

வேதவா கமசாத் திரபுரா ணங்கள் விளங்க
வே கற்றுணர்ந் தவற்றைத், தீதற வெவர்க்குந்
தெளிவுற வோதிச் செப்பிய வந்நெறி யதனிற்
சாதக மிலாத குருவினை யொருவன் றனடைந்
தாநந்தம் வினவல், ஏதமாங் கழுதை தன்னைக்குங்
குமத்தி னியல்புகேட் டிடுதல்போன் மென்றே. 27

சீவர்க ளிடத்தி லருள்சிவ பத்தி திருந்திய
துறவுமெய்ஞ் ஞானம், ஆவதோர் வடிவாம் வேதமா
முனியை யமலவா ரணியத்தி லடைந்தே, தேவர்க
டேவே துன்பமோர் காலுஞ் சென்றிடா முத்தி
தா னெய்திச், சாவதும் பிறப்பு நீங்குமோர் நெறி
யைச் சாற்றெனத் தாழ்ந்திட முனிவன். 28



இருவகைச் சார்வாம் புறப்பற்றை நீக்கி யிச்
சையின் மீட்டதி னினைவு, மொருவியே யுடற்கா
வலையுங்கை விடுத்தே யுட்கர ணங்கள்வா தனை
யும், குருவரு ணெறியே யொடுக்கிடில் வீடுங்
கூடுந்தா னுகவே பவத்தின், கருவழிந் திடுமிந்
நெறியைநீ விரைவிற் கைக்கொண்டு செல்லென
வுரைத்தான். 29

அந்நெறி குருவா லையமுந் திரிவு மகன்றிடத்
துணிவதாக் கேட்டு, முன்னெறி யான வாசியற்
கையினின் முயன்றனன் சிறிதுநா ளொருநாட்,
பின்னெறி யதனை நினைந்தனை வரையும் பெயர்ந்
திட விடைகொடுத் தரசன், மன்னெறிக் கோவ
மகன்றந்தப் புரத்தில் வதிந்தன னொருவனாய்த்
தனித்தே. 30

அரசர்க ளமைச்சர் புரோகிதர் பெரியோ
ரனைவரு மவ்விடத் தேகி, அரசனை நோக்கி நித்
திய கரும மகன்றவ னாவிருந் திடுதல், அரசிலக்
கணமன் றெனவவர் வேண்ட வவர்களை நோக்கி

யே வேந்தன், அரசியற் கையினை வேண்டல
னென்னை யறியவே வேண்டின னன்றே. 31

ஆண்டதோ ரரசு தனிலும்போ கத்து மாசை
யற் றேனினி வேண்டேன், மாண்டதோர் வநத்தி
லொருவனாய்த் தனித்தே மநத்தசை வறுத்துவீ
டடைவேன், பூண்டவென் மநமிங் கினித்திரும்
பாது போகத்தைப் பொருளென வெண்ணி,
வேண்டல னீங்க ளரசனை வேறே விதித்துக்கொ
ளுங்களென் றுரைத்தான். 32

ஆகியி னினது தாதையு நினையே யரசினி
னிளமையிற் சூட்டத், நீதின்றி யுனது புயவலி
மையினிற் செகமதைத் தாங்கினை யினிமேல்,
நீதியி னாகிய மதியினா தரவி னின்னைப்போ
லொருவர்மற் றுளரோ, ஈதியற் கையதன் றிவ்வுட
லுடனே யிச்செல்வ மன்றிவே றுளதோ. 33

அலதுநீ யேகி னவனியுங் காப்பற் றவத்தி
லே யலைந்திடும் யாமும், சலநம துறவே யித்தகை
யெமைநீ தவிக்கவிட் டேகுதல் கடனன், றிலகிட



யெமக்கீ தருளென வமைச்ச ரியம்பிட வரசனும்
பார்த்தே, உலகமெய் யெனவென் னாறமதி
யுடையோர்க் குரைப்பினு முணர்வுதி யாதால். 34

இவ்வர சியற்கை யற்பமற் றிதனா லெய்திடுந்
துன்பினுக் களவின், றவ்வகை யதனை யூகமின்
மையினா லறிகிலீர் நீங்களின் பென்றே, எவ்வகை
நினைந்தீ ரினியெக்கா லுங்கட் கீதின்ப மலமெனத்
தோன்றும், ஒவ்வமற் றிதனுக் கூகமே தோன்றா
துங்களுக் குலகயூ குதிக்கும். 35

என்றமற் றநேக மாவிரித் தரச னெடுத்
தமைச் சர்கடமக் கியம்பி, நின்றபின் னவனை
நிலுமென நிறுத்தி நிதிதனும் பொன்மனை விடுத்
தே, சென்றபின் னகர வீதியி னடக்கத் திரண்
டனை வர்களும்பின் றொடர்ந்து, வன்றுய ரடை
ந்து வாடியே மெலிந்து வாரியி னோசையி னழு
தார். 36

அவரவர் வினையி னவரவர் வருவா ரவரவர்
வினையள வுக்கே, அவரவர் போக மென்றதே

யாயி னாருக்கார் துணையதா குவர்கள், அவரவர் தேக முளபொழு துடனே யாதர வாரென நாடி, அவரவ ரடைத னெறிகன்மத் தடையு மாதர வாதர வாமோ. 37

வினையுள வளவுங் கூடியே நிற்கும் வினை யகன் றிடிற்பிரிந் திடுமால், வினையினால் வருமா தரவினி னியற்கை மெய்யுணர் வத்தனை யலவே, வினையிலை யுங்க ளிடத்தினா னிருக்க மெய்யுணர் வொன்றையே நாடி, வினையறு காரணம் புகுதவே வேண்டி விரும்பினே னீர்நிலு மிங்ஙன். 38

என்றுநல் வேந்த னேதிலார் போல வேகினா னனைவருங் கண்ணீர், நின்றெதிர் சொரிய வாய் விட்டே யலறி நின்றனர் தமர்கள்பின் னேகி, இன்றெமை யாவர் காத்தளித் திடுவ ரினியைநீ யேகுத னீதி, அன்றென வுரைத்தா ரவர்களை நோக்கி யரசனீ துரைத்தன னன்றே. 39

உறவாகு மெனவெனைநீர் தொடர்பதியல் பன்றாகு முயிர்கட் கெல்லாம், உறவாகு ஞானகனி பகையாகு மஞ்ஞான முய்த்து நோக்கின், உறவான வதையடைந்து பகையான விதைநீங்கி யொருமை யாக, உறவாத றனக்குத்தா னேயெனமற் றுறவு விடுத் துறையு மென்றான். 40



தந்தைதா யிருவருந்தம் புதல்வனெனும் வாஞ்சையினாற் றம்பின் னேகி, மைந்தவா வெங்க ளிரு வரையுமெவர் காப்பதற்கு வைத்தாய்நீதான், சிந்தைதா னுனக்கெங்கே மகனேயுன் றிருமுகத் தைத் திரும்பிக் காட்டாய், நொந்துதான் பெற்ற வயி றெரிகின்ற தெனவுரைக்க நோக்கி மன்னன்.

அறிவைநோக் கிடிலதற்குத் தாய்தந்தை யிலையிவ்வுட லதனை நோக்கி, யிறையுநீ ரூபா தார காரணமன் றிருமாயை யினிலுண் டாகும், குறியிதுவிங் காயின்மண்ணி லெனைப்பெறு தவ மிலையக் கொள்கை நீரு, நிறையுமதி யிலரோநீர் நில்லுமென விருவரையு நீத்துப் போனான். 42

அரிவையர்க ளுடமக்கிலக் கணங்கூறு நூல தனி லதனை யெல்லாம், உரிமையதா வுடையவ

னா மினியமனை தொடர்ந்தேகி யுருகி நின்று,
பரிவினுட னடிகள்பணிந் தாற்றியே பதைபதைத்
துப் பனிகண் பாயத், தரியெனுமை விடுத்துலக
மதனிலொரு கணமேனுஞ் சாவே னென்றாள். 43

நின்னுடைய நாயகனை நினைதுள்ளே யுற
நோக்கி நிற்க மாட்டா, தன்னுடைய நாயகனென்
றென்றனையே கருதிநீ யுழல்வ தென்னே, மின்ன
னைய விடையாய்கே ளனைவருக்கு நாயகனோர்
மேலா மீச, னன்னவனை யேதேடிப் போகின்
றேனெனவாசற் கரிவை சாற்றும். 44

ஞானமா னதுபொதுவே நூலதனிற் றுறவா
தற்கு நவில்வ தில்லா, ளானமா திலையலவோ
விடுகவென வுரையும்பதி யான வுன்னை, யினமா
விடுகவென வுரையுமதோ துறவறமிங் கெனக்
கென் சொல்லு, மானதா லுமையொழிந்து கதி
யிலையே யெனவெணியா னடுத்தே னென்றாள். 45

ஆகமத்தின் விதிதவறு தலைந்தனைநீ விவே
கியே யாவா யானுந், தேகமுதற் பிரபஞ்ச மதனி



னசை விடுத்துவநஞ் செல்லா நின்றேன், நாக
முலை யாயெனுரை தடுத்தலுன்றன் விரதமல நாடு
தன்னிற், போகுதியென் றவளைவிடுத் தேதில
ரைப் போலகன்று போகா நின்றான். 46

விரிவாய ஞானமதை யுணர்ந்தாலு மடந்தை
பதி விலங்க நிற்ற, லரிதாய சகைமையினு லேங்
கியே பதைபதைத்து மவனை நோக்கித், தரியாது
கதறியே வினைதனையே நொந்துதான் றளர்ந்து
நின்று, தெரியாது மறைந்தவிடந் தனின்மிகவு
முருகியே தேம்பி வீழ்ந்து. 47

வேந்தனே யுனைவிடுத்து முலகமதி லிருக்க
வோ விதித்தா னீசன், நீர்ந்ததோ வுமக்கெனக்
கும் வினைதானு மின்றளவிற் சேர்ந்து நிற்கும்,
போந்தவுமை யெக்காலங் காண்பேனு னினியென
வே புலம்பி மாதுஞ், சார்ந்தனள்பின் றிரும்பியே
நகரதனின் மாதுலன்றன் சார்பு தன்னில். 48

அரசனந்த நகர்விடுத்துத் தேசநா டுகளு
மகன் றடவி சென்றே, யிரவுபக லகநிலையே நிலை

யாக விருந்தவர்க ளிடமே சேர்ந்து, பரகுருவி னுபதேசத் தரியபொருள் வினவியவர் பகரக் கேட்டுத், திரமநமா யொருவாறாற் கலங்காத ஞானி யாய்த் தீர னாகி. 49

நகர்தனி லேகிப் பிச்சை நண்ணியே மனைக டோறு, மகமகிழ்ந் தங்கை யேற்றே யவ்விடத் தருந்தி யாங்கே, செகமுளோர் பேயென் றெண் ணிச் சிரித்திட நாண மின்றி, யிகபரத் திச்சை யற்றே யேகனா யுலாவ லுற்றான். 50

பொருந்திவா ழிடமொன் றாகிற் பொருந் திடும் பற்றென் றெண்ணி, யிருந்தவ ணோரி டத்து மெங்கெங்கு மொருவ னாகித், திருந்திய சமாதி விட்டுத் திரும்பிடா துறைக்க வுன்னி, யிருந்திருந் திடங்க ளெங்கு மேகமே நோக்கி நின்றான். 51

தோன்றிடு முலக மெங்கே தோன்றிடு மென்ன நோக்கித், தோன்றிடு நினைவி லென்றே தோன்றிய நினைவு தானுந், தோன்றிடு மிடத்



தைப் பார்த்துத் தோன்றிடுஞ் சொரூபத் தென் றே, தோன்றிடும் பொருள்க ளெல்லாஞ் சொரூ பமே யென்று கண்டான். 52

தோன்றிடும் பொருள்க ளுண்டாய்த் தோன் றியே யின்ப மாகித், தோன்றிடு மதனா லந்தச் சொரூபமே யென்று கண்டு, தோன்றிடுஞ் சொரூ பங் தன்னிற் றோன்றுமீ தசத்தே யென்று, தோன்றிடுஞ் சொரூபந் தானாய்த் துளக்கமற் றிருந்தான் வேந்தன். 53

கடிநகர் தோறுஞ் சென்றுங் கானகந் தோ றுஞ் சென்றும், படிவல மாக வந்தும் பார்வைமா றாட்ட மின்றி, மடிவிலா மநத்த னாகி மாசிலா நிலைமை பெற்று, முடியுடை வேந்தர் வேந்தன் முத்தியே வடிவ மானான். 54

முத்தியே வடிவமான முடியுடை வேந்தர் வேந்த, னெத்திசை தனக்கும் ராஜ னெனமவிட வேறில் லென்று, சத்திய மாக வெண்ணித் தன்

னிட மதனிற் றன்னைச், சுத்திசெய் தனைத்து மாகிச் சுயஞ்சோதி யாகி நின்றான். 55

தன்னையே யன்றி யொன்றுந் தானுதி யாவி டத்தின், மின்னையே யொத்த வைய மித்தைகற் பிதம தென்றும், பொன்னையே யன்றி வேறு பூடண மிலது போல, வென்னையே யன்றி யொன் று மில்லெனத் தேர்ந்தான் வேந்தன். 56

உலகினை வேற தாக வுணர்ந்திடிற் பந்த மாகு, முலகினைத் தானே யாக வுணர்ந்திடின் முத்தி யாகும், இலகிடத் தோன்ற வெல்லா மென்னினை வேயென் றெண்ணி, இலகிடக் கண்டு வேறற் றிருந்தன னிளமை வேந்தன். 57

கெசக் காம தாக விருந்தா சான்வோன் செல் வப், போகமுந் திரண மாமப் போதநாட் டாசி வற்கை, யூகபுந் தியினு லாசா னுபதேசத் தாள வந்தச், சோகமற் றிடுநா டெய்தித் தொழிலெலா முடித்தான் மன்னன். 58



பந்தம்வீ டென்று மில்லைப் பரம்பொரு ளொன்றே யென்றுந், தந்தஞ்சங் கற்பத் தாலே சாலமோ கிப்பர் தீயோ, ரந்தமா திகளு மில்லா வரும்பொரு ளுமே யென்று, சந்தத நோக்கி யக் தத் தற்பரந் தானே யானன். 59

குறைவிலா நிறைவ தாகிக் குளிர்ந்திளைப் பாறி வேந்த, னிறையள வேனுந் துன்ப மின்றி யே யின்ப மாகி, யுறைவிட மின்ன தென்ன வோரிட மின்றி யெங்கு, நிறைவதே யிடமாய் நின்று னிகரின்மா ராஜன் றனே. 60

எங்குமாய் நிறைந்து நின்ற வேகாச் சியம தாள்வோன், தங்குத லின்றி யெங்குந் தானெனக் கண்ட னுயோ, னிங்குறைந் தகன்ற பாண்டத் தியல்பினெஞ் சருவம் பற்றி, யங்குரு வகற்றி நின்று ஞாந்தி யாகி வேந்தன். 61

சிவன்முத் தர்கள்யா னிற்குஞ் செப்பிய மகத்த ரூபம், மேவரும் பாம முத்தி மேவிடு ஞச மாகுந், தாவரு நிலைமை நன்றாய்ச் சற்குரு வரு

ளாற் பெற்றுக், கேவல மாகி நின்றான் கேடிலா
ஞாந வேந்தன். 62.

இத்தகை ஞாநம் பெற்றே யெழின்முனி யாகி
யெங்குஞ், சித்தனாய்த் திரித றன்னைச் செப்புமுன்
னமைச்சர் தம்முள், வித்தக னொருவன் கேட்டு
வினவிட வேண்டு மென்றே, கத்தனா மரசைத்
தேடிக் கண்டடி பணிந்து நின்றான். 63.

பூவணை யாகி வாநம் பொருந்துமேற் கட்டியாகித்
தீவம தாகி யிந்து செங்கதிர் வீசுங் காற்று
மேவுசா மரம தாகி விடுதலை மனைவி யாகிக் [தன்.
கேவல மின்ப மாகிக் கிளர்ச்சியாய் நின்றான் வேந்

ரதமுதற் சேனை சூழ ரத்நசிங் காத நத்தில்,
விதவலங் காரத் தோடு வீற்றிருந் தமரும் வேந்
த, னுதவுகோ வணனாய் மேனி யுருத்தெரி யாத
நீறாய், முதன்முடி விரித்து நின்றான் முனிவனா
யொருவ னாகி. 65.

கரிரத மிவர்த லின்றிக் கானடை யாகி யெங்
கு, முரியதோர் மனையூ ணின்றி யூரெங்கு முண்



டா னாகி, யரியசா சாங்கக் கோல மகற்றியே
தவாங்க மாகித், திரியுமவ் வரசை நோக்கிச் செப்
பினா னமைச்சன் றானே. 66.

அவனியி னினக்கு மேலோ ரரசனு மில்லை
யிந்தத், தவவடி வாகி யெங்குஞ் சரித்திட லெற்றி
னுக்கோ, நவமதா யுடலி தோடே நண்ணுவ
தெனையீ தன்றி, யிவணெனக் கருள வேண்டு
மெனக்கறி வோங்கு மாறே. 67.

பதத்தினை வேண்டின் முன்னம் பற்றிநின்
றில்ல றத்தைப், பதப்பட நிறுத்தி யேகல் பண்ப
தா மேலா முத்திப், பதத்தைவேண் டிடிலோ
ஞானப் பார்வையிற் கூடு நீயெப், பதத்தினை
வேண்டி யிந்தப் பரதேசி யான தென்றான். 68.

அமைவுடை யமைச்சின் மிக்கோ யடைவு
டன் வினவிக் கேட்டா, யிமையள வேனுஞ்
சித்த மிதுவது வெனவோ டாது, சமைவுடன்
கேணீ சொன்ன சங்கைக்குத் தாங்க னன்றாய்,

நமைவிட வேறோர் வேந்து நாட்டிலை யென்ப
தொக்கும். 69

பதமதை வேண்டி னில்லைப் பதப்பட நிறுத்
தி யேக, விதமென்ற லொக்கு முத்தி யெய்து
தன் ஞானப் பார்வை, விதமதிற் றோன்று மென்
றாய் விருப்பமாய்க் குடும்ப பாரத், திதமதா யழுந்து
வோருக் கெங்ஙனம் பார்வை தோன்றும். 70

மனமிரு பொருளைப் பற்ற மாட்டாதட் டாவ
தான, மினமவை புறநோக் கான வேதினுற் கூடும்
வீடு, கனவுண்ணோக் காகு மில்லங் கருதிய புற
நோக் காகு, மனகவிவ் வூகந் தோன்ற வறைகுவ
னாமே கேளாய். 71

தென்றிசை கடப்போர் கங்கை சென்று
தோய்ந் திடுவ ரோதா, னன்றியு மவனி வாழ்க்
கைக் கமைச்சர்க ளுடனே காந்த, மொன்றியே
யூகஞ் செய்வா ருலகவேந் தாயி னோர்கள், கிந்தி
தை நோக்கா யில்லி னிற்பவர் முத்தி சேரார். 72



பாசந்தான் பகைய தாகப் பார்வைபெற்
றிடிற்பா சத்திற், பாசந்தான் வைத்துப் பின்னும்
பற்றவுங் கூடு மோதான், பாசந்தான் பகைய
தென்றே பகருநான் மட்டே கற்றோர், பாசக்
தான் விடவு மாட்டார் பரமெலா மெனவாய்ப்
போக்கும். 73

அர்தமா தியுமி லாவீ டடைந்துடற் பிறப்ப
றுக்கச், சுந்தர ஞானம் போதுந் துறவற மேதுக்
கென்றே, மந்ததி காரி யோரை மதித்துநா லுரை
க்குஞ் செய்தி, யந்தம தான பேருக் கத்தகை
விளம்பா தென்றும். 74

தோன்று கின்ற பொருளியல்புந் தோற்று
விக்கும் பொருளியல்புந், தோன்ற வுனக்கி யாமு
ரைக்கச் சோக மறவே கேட்டிடுவாய், தோன்று
பொருள்க ளநித்தமுமாய்த் தூய்மை யின்றித் துக்
கமுமாய்த், தோன்றுந் தோற்று விக்கும்பொருள்
சுகமாய்ச் சுத்த நித்தமுமாம். 75

பால ஞன பருவம்போம் பன்னு குமாரப்
பருவம்போங், கோல மான தருணம் போங்

கோலை யூன்றிக் குனிந்தெழுந்து, காலன் மாய்க்க
வனைவர்களுங் கல்லென் றழுது பேர்மாற்றி,யேலப்
பிணமென் றொருபெயரிட் டிடுகாட் டிடுத லொரு
தலையே. 76

கருவி னின்றும ழிந்துபோங் கண்ட குழந்
தை யினுங்குமரப், பருவந் தனிலும்போந்தருணப்
பருவந் தனிலு மழிந்துபோ, முருவ நடுங்கு மூப்
பதினு மொடுங்கு மந்தக் காலையினு, மொருவி
யழித லியல்பாகு முலகத் துடலின் வாழ்க்கை
யுமே. 77

பஞ்ச பூதம ழிந்துபோம் பானுத் திங்களு
டுக்கள்போம், வஞ்ச வசுரர் மடிந்திடுவர் மாகர்
பதம்போம் வல்லரக்கர், துஞ்சு வார்கள் போகிபதந்
துஞ்சும் பிரமன் பதந்தானுந், துஞ்சுந் திருமால்
பதந்துஞ்சுந் துஞ்சா தொன்றே பரமபதம். 78.

தோலி ரத்தமெ லும்பிறைச்சி சுக்கில மே
தை மச்சையொன்றாய்த், தாலி கரித்த வுடம்பா
குந் தொட்ட வெவையுந் தன்வடிவாய்க், கோலி



படக்கிக் கொளுமிதனைக் கூறு கூறா நோக்காது,
போலி யுணர்வோர் மகிழ்வெய்தும் புனித மென்
றும் பரமபதம். 79

அரத்தை யதனை யொழுங்காக வறையக்
கேணீ யவதியெல்லாம், பார்த்த சிருட்டி திதியொ
டுக்கம் பண்பாய் நிகழுஞ் சிருட்டிதனில், பொருந்
து பெரிய துன்பைந்து போய்மாண் டுறில தெண்
மடங்கே, யிருந்த திதிபு மிரண்டாகு மிளமை
யென்று மூப்பென்றும். 80

விருத்த பருவ மிகத்துன்பம் விளங்கு மிள
மை யிரண்டவையின், வருத்து பிணியின் மிகத்
துன்பம் வளமை யிளமை மூன்றாகுங், கருத்த
தறியாக் குழந்தையென்றுங் குமார மென்றுங்
காளை யென்று, மருத்த மறியா ததிற்றுன்ப
மடையும் பாலப் பருவத்தில். 81

தந்தை தாய வாசிரியர் தாங்கண் முனித
றனக்கஞ்சிச், சிந்தை கலங்குங் கௌமாரஞ் சிறந்த
காளைப் பருவத்தின், முந்து பசிநோய் காமநோய்

முழுகித் தணிக்கப் பொருட்டே, விந்தப் புவனத்
திரவுபக லிடைய றாத தொழிற்றுன்பம். 82

பொருளுண் டாகிற் காப்பதனாற் பொருந்துந்
துன்ப மரசாகி, னொருதம் மிகுத்த வரசரா லுதவுந்
துன்ப மொருகுடைக்கீழ், நிருப னாகி னேய்மரண
நேரு மென்னும் பயத்தாலும், வருவ தெனையோ
மறுமையினி லென்றும் வாடித் துன்புறுமே. 83

மாகர்க் கசுரர் பகையுளது மகிழ்ச்சி வாட்ட
மிகவுமுள, தாகத் தகலா நோயுமுள தநங்க
னுளது நகையுளது, போகத் தழுந்தன் மிகவுளது
பொன்ற லுளது கற்பத்தே, சோகத் திறங்க
ளிவையுடைய துறக்கத் தென்னை சுகமுளதே. 84

தேவர் மனிதர் துன்பத்தின் றிறங்க ளிவ்வா
றாகியிடி, லாவ கீழா மிருகமுத லசர மீறா மைவ
கையி, லோவ லில்லாத் துன்புக்கோ ருவமை
யில்லை நிரயத்தி, னேவ துன்பஞ் சொல்வதெனை
நேரயே பவத்திற் சுகம்வீடே. 85



இந்த விழிவை யுடைய விந்த மாயைய சத்தே
யந்த வுயர்வை யுடைய வந்தப் பிரமஞ் சத்தே
தந்த மதிற் றேர்ந்தோர் தள்ளி யஃதை நிற்ப
ருந்தன் மதி னன்றா யூகித் தமைச்ச பாராய். 86

பொய்யென் றிதனை யறிந்தோர் பொருந்தி
நிற்ப துளதோ, மெய்யென் றதனை யறிந்தோர்
மேவா திருப்ப துளதோ, வைய முளதோ விதனி
லமைச்ச பாராய் நன்றா, யுய்ய வறிவி லாதோ
ருழல்வர் நீக்க மாட்டார். 87

பொய்யை மெய்யென் றறிந்து போத மின்
மை யாலே, மெய்யைப் பொய்யென் றெண்ணி
மெலிந்தே யுழல்வ ருலகர், பொய்யைப் பொய்
யென் றறிந்து போத குருவி னருளின், மெய்யை
மெய்யென் றறிந்தே மெலிவு தீர்வ ருயர்ந்தோர்.

துன்பந் தோன்றி லெவருந் துறந்தே காய்த்
தனித்தே, யின்பந் தேட லியற்கை யின்ப மென்
றே தோன்றி, லன்ப தாக நீங்கா ரவர்கட் கெந்

ஙன் கூடு, நன்ப ரம ஞாந நாட்ட மமைச்ச சொல்லாய். 89

இழிவை யுணர்ந்தா லுயர்வை யெவருந் தேடி நோக்கு, மிழிவை யுணரா ருயர்வை யெய்த நோக்கா ரென்று, மிழிவை யிழிவென் றுணர வெந்தக் காலம் வாய்க்கு, மிழிவை யுடை யோர்க் கமைச்ச விதனை யூகித் துணராய். 90

பேத வாதி களைப்போற் பிரபஞ் சம்வே றெனவே, யீத கன்ற தலவே யெமையன் றியதில் லென்றே, போத விழியிற் றுறந்த புனிதத் துறவே கண்டாய், சீத மதிபோற் குளிர்ந்து செகந வெப் பந் தீரும். 91

இருந்த விடத்தி லிருந்தே யெய்த லாமென் றுரைக்கிற், றிருந்து நிமல மநத்தோர் தீர ரெனி னு மொழிந்தே, பொருந்தி யேகாந் தத்திற் போத மடக்க வேண்டும், வருந்து மநத்தோர்க் கென்னை வாய்க்கு மமைச்ச சொல்லாய். 92



முனமே யனைத்து முடித்து முழுது முணர் ந்தோ ரில்லின், இனமே சென்று நின்று மேக நீங்கா ரென்னில், திநமே யகமாய் நிற்போர் செக த்தி னியல்பை யுணரார், கனமாம் யாழ்ப்பா ணத் தின் கப்ப லோட்டம் போல. 93

ஒருத்த ரொரு ருளனை யொருவேந் தாக் கின் முன்னம், இருக்கு மிடத்தை நீக்கி யேக ராச தாநி, இருக்கு மன்றி முன்க ணிருக்கு மோ தான் சொல்லாய், திருக்கு ஞாந முடையோர் செகத்தை மெய்யென் றுழலார். 94

மனையினின் றுலும் பொருளுயிர்ச் சார் வின் வருத்தநங் கெடுதலின் மகிழ்ச்சி, இனிமை யில் வாட்டம் விடயவின் பதனி லெட்டுனை யாயினு மாசை, பினையதிற் றமது பிரவிர்த்தி தானும் பேசுமிந் நான்குமில் லெனினும், தனை யுணர் வதற்குச் சாதகஞ் செயுங்காற் றள்ளியின் னிற்றலே தகுதி. 95

தீதுறு மனையின் பினையிகழ்ந் தந்தச் செம்
பொரு ளின்பமே வேண்டிச், சாதக மதனிற்
றொடங்குகால் விடயந் தடையதாஞ் சாத்திய
மான, போதினி லவையுந் தோன்றிடா தந்தப்
பொருவிலா நந்தமே விடவே, ஆதலிற் றுறவின்
ஞாநமஞ் ஞாந மாகுமென் றறைகுவர் பெரியோர்.

இல்லற மதனி லுறைந்துளோ ரிடத்தி
விருப்பினா ஞாநங்கீ ழிரும்பில், புல்லிய மாரத்
திநமென விளங்கும் போக்கியில் வினைத்துற
வென்னும், நல்லற மடைந்தோ ரிடத்துறை ஞாந
நற்றங்க மிசையிரத் திநம்போல், எல்லையி லொளி
யாய் விளங்கிடு மாயி னில்சிறப் பன்றுஞா நிகட்
கே. 97

முனமனை வர்களு முறைவது மில்ல முத்தி
யை யுணர்ந் தறி ஞர்களும், பினமதி னின்ற படியி
னாற் சங்கை பேசுவர் துறவுடை யோரை, இன
மதை விடுத்தில் லறமது வெய்த விலையென
வியம்புவ துண்டோ, மநமதி னிதனை யூகிநீ
யமைச்ச மகிமையன் றில்லஞா நிகட்கே. 98



ஆடிய சகல மடங்குகே வலமு மகற்றியே
யொளிப்படை கொண்டு, மூடிய விருளை முழு
தையும் வீசி முடிவில்வீ டதனையே யுணர்ந்தோர்,
நீடிய ஞால மிசையினிற் பால னிசமரு ளுடை
யன்பேய் பிடித்தோன், கூடிய குணத்தி னூரிற்
போய்க் குடியின் கூலியா ளினியல் படைவார்.

வினைகளோ ரிரண்டுஞ் சமமதாய் ஞாந மே
விடு காலையி னிந்த, மனையின்பங் கான்ற சோற்
றிற்கண் டுவர்த்து மாற்றியே கைவிட வருமேல்,
தனையுள படியே யநுபவ மதனிற் றானுணர்ந்
தாநந்த மடைந்தோர், பினையுமவ் விடயம் பூண்
டார்க ளெனவே பேசுதல் வழங்குமோ சொல்லாய்.

விடயவின் பதனி னசையுளோர் தமக்கும்
விரிவதாம் பேரின்பச் சுவையின், அடைவினைச்
செவியிற் கேட்டவக் கணமே யவற்றினை யகற்
றிட வருமேல், இடைமுத லீறின் ஞானவா நந்த
மெய்தினோர் களும்பினு மிந்தக், கடைமனை வாழ்
வை நினைவர்க ளென்றாற் கண்டனர் நகையரோ
சொல்லாய். 101

பற்றிலை யாயி னவையினி லிருப்பேன் பழை
யவூழ் வினையெனி லாசை, சற்றெனு முதிப்பித்
தல்லவோ வூட்டுஞ் சகவின்பி லிறையெனு மிச்
சை, முற்றுணர் ஞானத் தோர்கள்பூண் பர்களோ
முடிவிலா நந்தமே பருகி, நிற்றலே மீட்டும் விழிப்
பினுங் கான னீரிற்கண் டுண்முக மடைவார். 102

பவமதை யினிமை யெனவெணி விடயம்
பற்றிநின் றுழன்றவர் தாமே, பவமதை யினிமை
யலவெணி விடயப் பற்றறுத் தருட்குரு வடை
ந்து, பவமதை யறுக்கு நெறியுணர்ந் தருளிற் பா
லின்ப மடைந்தவர் தாமும், பவமதை யினிமை
யெனவெணி னலவோ பற்றுவர் விடயவின் புரை
யாய். 103

கொடிமுதல் வாடும் வேர்முழு தினையுங்
கோதறக் களைந்திடிற் களைந்தும், படிமிசை
கொடிபூ காய்பழ மோங்கல் பகாதி சயமஃதினைப்
போல், அடிநடு வீறிற் பிரமந்தா னாகி யகப்பற்றை
யறுத்தவ ரிடத்தும், மடிவுறு மனையில் விரும்பி
யே நெஞ்சம் வருத்தந மாதலென் றறைவார். 104



ஆணவ மதனைத் தோய்ந்துட லினைநா னாமெ
னத் தினவெரி யவையைப், பேணலைச் சுகமென்
றுண்மகிழ்ந் திடுவோன் பேரின்பத் தாசைய
தாகிப், பூணவஞ் ஞான மிலையதின் ஞானம் பொருந்
தியச் சொருபந்தா னாகி, ஏணவா நந்தத் தழுந்து
வோன் விடய மெய்திடின் ஞானமே யிலையால். 105

கநவதனி லுணர்விலது காணுந்தநு வாதி
களைக் கருதி யேநின், றனுமவரி னிதுகநவென்
றுணர்ந்தவர்க ளசையிலதி னுகு தன்னில், தன
துசுய வுருவதனை யநுபவத்திற் றுனுணர்ந்திச்
சகம தெல்லாம், மநமதனிற் சாலமென வுணர்ந்தவ
ரிவ் வுலகின்பின் மைய னீங்கும். 106

கதிரவன்முன் னிருளிருக்கு நயாமுடை
யொருவன்குழிக் கண்ணே வீழும், அதிகவலிச்
சூரனமர்க் களக்குவெரு வுவன் கிருத நறையக்
காரம், இதமுளபா யசமுநீரம் பருந்தினன்கூழ்
தனிற்செய்வ னிச்சை யென்றால், விதமிவைநான்
கினுக்குங்குறை யதின்ஞாநிக் கிழுக்காகும் விட
யஞ் சென்றால். 107

இங்குறைந்த பாண்டமதன் வாதனையின்
வாதனைக ளிருக்கு மென்றல், துங்கவறி வுடை
யோர்கட் கின்றியமை யாததொழி லொடுங்கி
நிற்றல், அக்கிபைத்தம் பசம்வல்லார்க் கனல்சுடா
ததின்வினைக ளடுக்கா தென்றல், தங்கும்வினைக்
கேதுவாம் விடயமதில் விருப்பாகி சாரா தென் 108
றல்.

உணர்வுடைய ஞானியெவை புரிந்திடினு
மிழிவிலிழி வுரைத்த தாகின், இணையிலிரு தீய
னென்பர் யூகமில வதனான்மற் றெவைகள் செய்
தும், அணைவதிரூழ் வெனுமவனே தீயன்மிக
ஞாநமதற் காகுந் தாழ்வா, னணுகினன்றோ ஞான
மொரு வனை ஞானி யெனப்பெயரு நண்ணி நிற்றல்.

கருவயிற்றை யுடையதுவுங் கனவயிற்றை
யுடையதுவுங் கருதிப் பெண்ணின், உருவதனைக்
குறிப்பதினோக் கிடிற்றோன்று முளபடியே யுலகு
தன்னில், குருவையடைந் தவனருளிற் சொரூ
பத்தை யனுபவமாக் குறித்து ளோரும், இருவை



யத் திடம்பமாய்த் தமைஞானி யென்போரு மேதிற்
றோன்றும். 110

அருச்சுநற்கு மிராமருக்கு மதிகார மவை
யார்த்தே யறைந்த நூலின், கருத்தறியாய் ஞான
மொன்றே பிரமாணஞ் சரிதையது கணக்கன்
றாகும், விருத்தமறி வாசார முடையோனே ஞானி
யில்லோன் விருத்த னாகும், திருத்தமுட னமைச்
சவிது துணிவென்றே யுட்கொள்வாய் தீர னாகி.

என்றங் கநேக மாவிரித்தே யிராச யோகி
யுரைசெய்து, நின்று வாக்குத் தனையடக்கி நிமி
டத் தகற்றி மநத்தினையும், ஒன்று மில்லா
வெறும்பாழா யொன்றுஞ் சமாதி தனையடைந்
தான், நின்றங் கமைச்ச னிதுகண்டிந் நேர்மை
யுதிதென் றதிசயித்தான். 112

இந்த வுணர்வு நமக்கின்ன மெய்த வில்லை
னாமிங்கே, எந்த வுணர்வு கொடுநிற்பே மென்ன
வமைச்சன் யூகித்து, வந்த வழியே தான்றிரும்பி

வளப்ப முடைய மாபுரிக்கே, பந்த முடையோ ருடனிருந்து பகர்ந்தா னரச னியற்கையெல்லாம்.

கேட்ட பேர்கண் மிகவியந்து கிட்டா தென்று மிம்முநிபோல், தேட்ட முடனே யவர வர்க டேடி வந்து பணிந்திடவும், வாட்டமுடனே தாய்தந்தை மனையாள் பதத்தில் வீழ்ந்திடவும், நாட்ட மாறு பாடின்றி நகைசெய் திருந்தா னற்ற வனே. 114

வந்த பேர்க ளுடன்வார்த்தை மலரா திருப்ப தவாறிந்து, பந்த முடையே நமக்கென்னை பகர்ந் தாற் றேன்று மெனத்திரும்பித், தந்த மிடத்திற் சென்றார்க டவனுஞ் சிறிது நாட்கழித்துத், தொந்த மொன்று மில்லாத சுயமா முத்தி தானா னான். 115

இந்தமா ராஜன் சென்ற விதிகாசந் தனைப்ப டிப்போர், சிந்தனை யொன்று மின்றித் தீரவே துறவ ராகி, அந்தமு மாதி யில்லா வமலமே வடிவ



மாவர், எந்தமை யருளி னாண்ட வெழிற்குரு பரை யே வாழி. 116

அரியது துறவற மல்ல இல்லையான்
மருவிய துறவற மொருவி மன்னனாய்
உருகெழு முடிகவித் துலக மாள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக் கீதலே. 117

மஹாரா ராஜா துறவு--முற்றுப் பெற்றது.

பாயிர முள்படச் செய்யுள் 126.

சர்வஞ் சின்மயம்.



சற் குருப்யோ நம:

# திருப் பேரையூர்

# ஸ்ரீ சாந்த லிங்க சுவாமிகள்

அருளிச் செய்த

# பக்தி (வைராக்கிய) சதகம்.

இது

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.



# பக்தி(வைராக்கிய)சதகம்.

## சாஸ்திரம்.

வாழி நெஞ்சமே சென்றிடே னின்றிதோர்
வார்த்தையெற் குரைசெய்வாய், கீழி யாமியற்
றுயர்தவத் திவ்வுடல் கிடைத்ததன் றேமற்றீ,
தூழி காலமிங் கிருக்குமோ நீயுமோர்த் துணையெனி
னுளபோழ்தே, சூழு மேழ்பவர் துடைத்தல்செய்
யாயிதன் றொழுதான் றுணைத்தாளே. 1

தாளை யேதா மறிகிலா தெமக்கெளி தரு
சிவப் பிரகாசற், காளி யாமெனத் திரிந்தவன்
பணிபுரிந் தரியவீ டடைகில்லாய், கேளை யோ
மனை யாதிய வளற்றிலே கிடந்துழைத் தனைநெஞ்
சே, நாளை யோலையுந் தூதரும் வரினிவர் துணை
கொலோ நவில்வாயே. 2

நவிலி னிம்மனை மக்களுக் கொருதுணை கா
மல திலையென்றே, கவலை யுற்றான் றுண்மறந்

தனையுனைக் காலனார் கொடுபோயிற், குவலயத்
தைத் திவரைநா டொறும்புரந் திடுவையோ குறிக்
குங்கால், சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர்
தானுமோர் துணையாமே. 3

துணைய தாயெமைத் தொடர்தரு தொடர்
பரன் றொல்கழ றுணையல்லா, துணைவு செய்தடு
மிகலதஞ் ஞானமென் றுள்ளவா றுணராய்மற்,
றிணையி னெஞ்சமே பகையிவ ருறவிவ ரென
வினை வழியேவந், தணைவ சீவரை யுனிமுனி வா
திய வடுத்தென்னைக் கெடுத்தாயே. 4

கெடுவ தாம்பொருள் செல்வமே பல்வகைக்
கிலேசமற் றதுதன்னை, விடுவ தேசுக மெனவு
மோர்ந் திலைமுனம் விடுத்துளோர்க் குனைப்
போலு, நெடிய யூகம தில்லையோ சொல்லுதி
நெஞ்சமே யினிப்பற்றற், றடைது மேலா னருளை
யே பொருளென வருஞ்செல்வ மதுதானே. 5

தானை சூழமண் ணுலகையாண் டழிபவர்
தங்கள்வாழ் வினிதென்றே, நீநி னைத்தியோ



நெஞ்சமே யெஞ்சுறு நிமலனா னமதுற்றால், வா
னும் வையமும் வந்துதாள் வணங்குமெய் வாழ்வு
காண் டலும்வீண்முற், போன நாட்கிரங் கவும்வரு
மெனநலோர் புகன்றதோர்ந் திலைகாணே. 6

காணி யீதெம திடமிது வெனமனைக் கருதி
மண் ணாகின்றாய், நாணி லாய்மட நெஞ்சமே யுட
லிது நமதிட மலவென்றாற், பேண வும்படு மேயி
தற் கிடமதாம் பிருதிவி தனைநாகப், பூணி னான்
றிருச் சரணமே யுயிர்க்கெலாம் புகலிட மதுதே
ரே. 7

தேர்கி லாயிவண் புகழ்விழைந் தனையினித்
தேகம்வே றடைந்தாயேற், சாரு மோவதி லிதிற்
புக ழலதுநீ தானுணர்ந் திடுவாயோ, பேரி யாதி
யா மார்கொன்முற் பவத்திகழ் பெறினுமித் துணை
நெஞ்சே, யோரி னேரில்வீ டுறுதலே புகழிக
ழுறல்பிறப் பெனவுன்னே. 8

உன்னு கின்றனை யுனைமனோர் பெரிய
னென் றுணருமா செயவுன்பான், மன்னு மீசனே

பந்தம்வீ டளிப்பவன் மற்றைய ரறிந்தென்றோ, மன்ன வன்றிருப் பொன்னடி கரியதா வருந்தவஞ் செய்நெஞ்சே, பின்னை முன்னவ னுலகறிந் திறைஞ்சுமா பெருமைசெய் குவனோ. 9

ஓரி னுள்ளமே பாரின்மா னுடர்முத லனை வறு பிறப்பூடுஞ், சேரு மின்பமொன் றில்லையென் பதுபிரத் தியக்கமா நீவல்லாய், போர்க ளாதிதுன் பிமையவ ரடைவதும் புகலநூ லுணர்ந்தாயே, நேரி லாவரன் கழலலான் மிதசுக நிலைபிறி திலை யன்றே. 10

அன்றெ னக்குநீ யொருதுணை பிறப்பிறப் பதிற்றுய ரமுங்கேடுந், தின்ற லொன்றலால் வியா தியா திகளினாற் செறிதுய ரமுமோர்ந்தோர்ந், தென்று மேழ்பவக் கஞ்சிலை நெஞ்சமே யின்பவீ டெதுவென்றே, நின்று நின்றழு திலைதொழு திலைசிவ னேசர்தாள் பூசித்தே. 11

பூசை செய்துதோத் திரஞ்சொலித் தனை நினை புண்ணியர் பானண்ணற், காசை செய்தில



றம்பலக் கூத்தனை யடைகிலை யடைந்தாரிற், பேசு கின்றனை யறவரின் விளங்கினை பிறர்மனை நயக்கின்றாய், சீசி யிங்கிருந் தென்செய்தாய் நெஞ் சமே செத்திலாய் கெடுவாயே. 12

வாயி னாற்பல நூல்படித் துணர்ந்துநல் வழி பிறர்க் குரைசெய்து, நீயு லோகவா சாரமோ ரணுத்துணை யானுநீங் கிலைநெஞ்சே, தூய தாயி வண் பிறர்கொளக் குங்குமஞ் சுமந்துசெல் கா முன்னிற், காய மாநுடத் தின்றதற் கன்றியுட் களவுமின் மையினாலே. 13

நாலு வேதமு மொருசம நிலைசொல நவை செயீ ரவத்தைப்பாற், கோலு மூ, 5 சமயமா கியபடு குழியினா டழிகின்றாய், வேலை யாவுனக் குடறரு விதியுற வையுமதை விடுவிக்குங், காலை னார்தொடர் பையுமினந் தொடருதி போலுநீ கடைநெஞ்சே. 14

நெஞ்ச மேயுட லந்தமா யிவைவிடார் நிற்க
மற் றையர்க்கெல்லாம், வெஞ்ச மற்குதிப் பரிதி
லைக் கொருமிரு கண்டுபுத் திரன்சான்று, லஞ்ச
லிவ்வுடற் கிறுதியிப் பொழுதென வறியொணு
மையினுளுந், தஞ்ச மென்றான் சரண்விடே
லியாமுமச் சமன்வலி தடுப்பாமே. 15

தடுத்து மேலுமிவ் வுருவமா யினும்பெறல்
சற்றல மறைநாகத், திடத்தின் மாதவ ரிருவர்கந்
தெனவடைந் திருத்தல்சான் றரிதாகிக், கிடைத்த
தேகமும் விவேகமு மிருக்குஞான் றேகிநீ சனை
நெஞ்சே, யடுத்தி லாய்பல கலைமாய்த் தோரு
ணர் வாகிநின் றகலாதே. 16

அகலு மிவ்வுடன் மினின்விரைந் தெனின்
விரைந் தாற்றொழி தலதிங்கே, சகல முஞ்செய
நினைகுத ரனையினித் தடப்புன லிதுவென்றே,
பகலி னுல்விரி கானலை நெஞ்சமே கருதிநெற்
பயிராதி யிகலி னுற்செய நினைபவர் நிலைமை
யொத் திடுமென விடுவாயே. 17



வாய்மை யீதுணர்ந் திடுதிநன் னெஞ்சமே
வருகணத் தேதேனு, நீநி னைந்திடே லவ்வள வுட
னுற னிச்சயிப் பரிதத்தாற், போய தோர்கணச்
செயலுமேனல் பயனிலை புகனிகழ் கணத்தேனுந்,
தீமை நன்மைநீ நினைவதென் வினைவழிச் சிவன்
றரு குதலாலே. 18

தருவ தீமையி னன்மையு முழுநித் தனை
யுயர் கனைமேனின், றரைக ளாதிசெய் கூடத்தரிற்
பிறனைநச் சொருமக டவனைவல், புரித ரன்னி
னைம் பொறிகளாற் பற்றினும் புகனிரா சையை
நீயுற், றிரவி னும்பக லினும்விடே னெஞ்சமே
யின்பவீ டெளிதாமே. 19

ஆமு னிச்சையே மேலுமே லும்பிறப் பளிக்
கும்வித் தெனநெஞ்சே, நீம றித்திடா சைக்கடல்
சுவறுமே நினைவெனுந் திரைமாயும், போமி றந்
தெலா நினைவுமெப் பொழுதிலப் பொழுதுபூ ரணை
மாய, சோம சேகரத் தெந்தைபொற் கழலையுந்
தொழலைய மிலைநாமே. 20

நாம ரற்கருச் சனைமுத லியகொடு கலைஞ்
செய்தே மவையின்றித், தீமை செய்துளே மெனை
வுமுன் னிலைபொரு சிறிதசை வடைந்தாலும்,
யாமி யற்றப ராதமென் னினைவுமற் றசைகிலை
யெனிநெஞ்சே, யேம மிக்குறச் செய்யுநன் னிறை
கழற் கெனத்துணிந் திடுநீயே. 21

நீமெய்ஞ் ஞாநநன் னிட்டைசா ருதலரி
தெனவுநெஞ் சகமேசற், றோய்வி லாதுசெய் தியா
நமா திகளெளி தெனவுமுன் னுநின்றாய், சேய்க
டம்மினத் தாய்கொல்சும் மாவிருக் குதல்செயற்
கரிதாகிப், போயு ழைப்புனக் கெளியதா யிருந்த
விப் புதுமையென் புகனின்றே. 22

நின்று ருதலை குதல்விருப் புனக்கதை நீத்
திருக் குதநெஞ்சே, யென்ற னக்குநல் விருப்பு
வா ளாவிவ ணிருத்தநீ துயர்விடு, சென்று காண்
குவ லனநினைந் தலைதியோ சிவன்றிரி சயமன்
று, லொன்று நீயுனு திருப்பதே யதைத்தொட
ருபாயமென் றறிகண்டாய். 23



கண்ட வைம்புலக் காட்சிபோய்க் காட்சியாற்
கலந்தவா தனையாவும், விண்டு மூடமற் றலையிலாக்
கடலென விளங்கினை யெனிநெஞ்சே, யுண்டு
கொன்னமக் கொருதுய ராங்குவீ டெங்கையிற்
கனியேயாம், பண்டை மேவிய பயமெலா மறங்
குரு பதத்திலும் புகலாமே. 24

புகல ரும்பரப் பிரமமாங் கடரனிற் புணர்
பணைத் திரையீசன், சகமொ டாருயி ரொனுநனை
யாதிக டந்துமாற் றிடுமென்றே, பகரு நான்மறை
யெனினதி லெதையெதைப் பற்றுவாம் விடுகிற்
பாஞ், சுகசொ ரூபமே யனைத்துமென் றகற்றுதி
துவிதபா வனைநெஞ்சே. 25

நெஞ்ச மேயினிப் பாவநா திதமாய் நின்றி
டின் றெனினிற்பா, யெஞ்சு றுதகல் புரணபா
வனையையோர்ந் திலையெனி னுலகெல்லா, மஞ்ச
நக்களன் மேனியென் றோர்ந்திலை யெனினருள்
சுரந்தெம்பால், வஞ்ச மற்றிடும் படிக்கிவ ணடைந்
ததோர் வடிவையோர்ந் துய்வாயே. 26

உய்து நெஞ்சமே வாக்கினை மௌனமாக்
கிலையெனி னுளதேசொன், மெய்த ருஞ்சொலும்
பொய்நயம் பயக்கிலா விடத்தின துடைத்தேனும்,
பொய்த ருஞ்சொலி யான்செய்தேன் பிறர்செய்
தா ரெனினவை போறுலு, மெய்த ருஞ்சிவ மன்
றிதென் றென்றைநீ யிசைத்தல்பொய் யெனத்
தேரே. 27

தேரி னிவ்வுடல் சமாதியி லசைவறச் சித்திர
தீபம்போற், சார வைத்திடஃ தில்லையேற் குரு
பரன் றன தரும் பணிமேற்கொண், ணொரு மூழ்
வழி தொழில்பிறி தடையினு நெஞ்சமே யுயிர்க்
கெல்லாம், பேரி தஞ்செய்வித் திடுமுடை கெழு
மலப் பிணக்கிதஞ் செய்யேலே. 28

செய்பு நந்தொழி லைந்தொழி லியாமுமச்
சிவன து வடிவென்றே, யைய மற்றுண ராதியா
னெனுஞ்செருக் கடைந்துநா டொறுநெஞ்சே,
நைவ தென்னைநீ பஞ்சகோ சங்களு நாமல வெனு
வுண்மை, கையி லாமல கம்மென வுணக்கியான்
கழறியுந் தெளியாயே. 29



தெளிவு யிர்க்கரன் விளக்குதன் மயக்கவன்
றிரோபவிக் குதறேகம், விளிவை யுற்றல்சங் கார
மிங் கிதாகித மேவுத றிதிதோற்ற, மூளசி ருட்
டியே லம்பைநோ தலினுன்னை யும்பிற ரையுநா
டித், தளர்வ தும்மகிழ் வதுமடைந் துள்ளமே சம்
புவை மறந்தாயே. 30

மறைத்த லுங்கினைத் தலுஞ்செயு மாணவ
மாயைநின் றவைதம்மைத், துறத்த லேயிராப் பக
லகல் வீடெனச் சொல்வாத் துறவெய்தக், குறித்
தி டிற்பா யத்திஞா நத்திறற் கூடுமற் றவைநெஞ்
சே, நிறத்த பத்திநஞ் செயலறி ஞமறி னின்றமற்
றொன்றுமே. 31

ஒன்று நஞ்செய லில்லைநெஞ் சேயிவ ணொர்
மய லதனாலே, சென்று சென்றுவெம் பவக்கடன்
மூழ்கினஞ் செறிமய லேதென்ன, நன்று நீவினு
வினையிரு வினையையு நான்செய்தே னெனுமாந,
மென்ற றிந்திடு தொன்றையு மாற்றினை யெனி
ஞானக் கிணையாரே. 32

இணையின் ஞானபூ ரணன்முழு துணர்ந்த
மைத் திட்டவா றலதிங்கே, யணைவு றுதொரு
தீதெமக் கவன்றறி ஞர்தடுப் பவர்நெஞ்சே, பணை
கொ டாவர மாநமின் மையினுருப் பற்றினின் றில
கொல்லோ, வுணைவு றுதுடற் காவல்லை விடுதியு
ழுள்ளவா விடாதென்றே. 33

என்றும் வீடடைந் தவரிறு மாக்கயா னிறப்
பைவிட் டகலாம, னின்று தான்றலை சாய்க்கவோ
நெஞ்சமே நினைத்துணை யாக்கொண்டு, நன்று
தீயிதற் கென்செய்கேன் சாவனோ நானென விலை
யானோ, லொன்று செய்மலக் குடிலிதி லவாவைநீக்
குமாபதி தரும்வீடே. 34

வீடு கூட்டுவான் குறித்ததி னிமித்தமா விம
லனீ தலினம்பாற், கூடு மாயையை யெனதியா
னெனவெணிக் கொள்வதென் பயமாசை, நாடு
போழ்திவை சுழுத்தியிற் புரந்தவ னெவனவ னரு
ளாதி, யூடு மூழ்வழி புரப்பனென் றுள்ளமே யுடல்
கைவிட் டிருப்பாயே. 35



இருப்பை நாடொறு நெஞ்சமே சுகாசுக
மெதுவரு மதுவேயாய்ப், பொருப்பு வில்லிதாள்
விருப்பமெவ் வினையினைப் புசிக்குஞான் றடைவா
யோ, கருப்பை யுற்றுதித் தறற்குமி ழியினழி
காயமீ துளபோழ்தே, குருப்பி ரான்றிருக் கழற்கு
மெய் யன்புநீ கொள்ளறெள் ளிமையாமே. 36

ஆமை யாருறப் பைக்கையு மோர்மெயு ளடக்
கலிற் புலனைந்தும், தீமை சேர்விட யங்களிற்
செலாதமைத் துள்ளமே சிவைபாக, சோம சேக
ரன் சரணமே சரணெனத் தொழுதுநின் றழுதன்
றே, ஞம நாவினுற் செபித்திலை யவத்திலே நா
ளெலாங் கழித்தாயே. 37

தாயு மாகியென் றந்தையாய் வந்துதா டரு
சிவப் பிரகாசன், றூய பொன்னருள் வேண்டிலை
யீண்டுநின் றணிவிருந் தமையென்றோ, காய
மாயமென் றறிந்துமா தர்கடரு கலவிவேண் டினை
யென்றூற், றீயை நீமிக நெஞ்சமே யிதற்கியான்
செய்வதொன் றறியேனே. 38

எனை நூல்பல வோதினை யோதவற் றிறை
யரு ளடையா தார்க், கூன வெம்பவ மொழிப்பதற்
குள்ளமே யுபாயம்வே றிலையானு, லானை யீருரி
போர்த்தவென் றம்பிரா னருள்விரைந் தடையா
தே, தானி நாண்மிஞர் போகநீ வியந்தது தப்ப
லாற் சதுரன்றே. 39

சதுர்ம றைப்பொரு ளாகிய வொருசிவ சங்க
ரற் றெழுதன்பாய்,விதிர்வி திர்த்துமெய் பொடித்
திலை கடித்திலை விரைந்துசென் றவனொடும்,
பொதுவை யுற்றிலை நிற்றிலை மாதர்பாற் போகுத
றவிர்ந்தாவா, வெதுப டக்கட வாய்மட நெஞ்சமே
யினியுட லகன்றாலே. 40

ஆல நீழலி லன்றொரு நால்வருக் கருநெறி
யுரைத்தானைக், கால காலனைச் சிவப்பிர காச
வென் கண்மணி தனையுன்னா, தேவ வார்குழ லார்
மயல் கொண்டுநீ யிங்குழ லுவதெல்லாஞ், சால
வேபிழை யாகுநெஞ் சேசொனேன் றவறிலை
யென்மேலே. 41



என்னை கண்டுநீ மாதரார் வடிவமீ திச்சை
வைத் துழல்கின்றாய், பொன்னை யுந்துகி லையும்
பிரித் திடின்வெறும் புழுமலக் கூடல்லாற்,
பின்னை யுண்டுகொல் கண்டுநீ மயங்குதல் பிராந்தி
சங் கரன்பாதந், தன்னை நாடுதி நெஞ்சமே பாச
கோ ததியுறப் பெறலாமே.. 42

பெறுவ தென்னைகொல் சுக்கிலங் கலித்த
லாற் பெருந்தவ வலிகுன்று, முறுவ தவ்வள வோ
பினை நீவிரும் புடற்குமா நியதுண்டா, லறிவி
யாமறி யாமைதோய்ந் துடற்றின வதைச்சுக
மெனநின்றாய், செறிது நெஞ்சமே நமதுசிற் சுக
மினிச் சிவனையா தரிப்பாயே. 43

ஆத ரித்தனை குளகிரு தாதிய வடிசிலைக்
கூழ்காடி, யேது பெற்றிடி னும்புசித் தாற்பசி
யேகலுஞ் சமித்தற்றாற், பேத மற்றெலா மலமதா
தலுஞ்சரி யென்றிடிற் பினைநெஞ்சே, நீத ரித்தி
லா தவைவிழைந் துழல்வதென் னிமலனை நினை
யாதே. 44

நினைப்பி னுங்குறி காட்டிடுங் கோசரா விவற்
றுணே ரிழையாரை, யினிப்பை நல்குமுக் கனிமுத
லியவுண வினையெனி னிவைபோலு, முனைப்பல்
வாதைசெய் பகைபிறி திலையுணர்ந் துள்ளமே
யொழித்தாயேற், பினைப்ப ராபரன் றிருவடி நீழ
லியாம் பெறற்கிடை யூறின்றே. 45

இன்று சூழ்தரு வநிதைய ராதிபல் போகமு
மித்தேகத், தொன்று நோயெனிற் றேடமாய்
நீங்குமாங் குயிர்பெய ரினுநீற்றை, நன்றெ னவ
னிக் துரவின ரிறைபெயர் நவிலுவ ரெனிநெஞ்
சே, பொன்று காட்டுனை யாகநீ ருதிய போற்
றவை போற்றேலே. 46

போற்றி நீறணிந் துருத்திர சாதநம் பூண்டி
டைந் தெழுத்துள்ளே, சாற்று நீகுரு வாதிமூ
வுருவையுந் தாழ்ந்திறைஞ் சிவைசெய்தான், மாற்ற
லாம்பிறப் பிறப்பினை நெஞ்சமே மன்றுளா டியதா
ளுந், தோற்று முன்னொளிக் குள்ளொளி யாய
வைத் தொழுதுவாழ் தலுமாமே. 47



வாழ லாமரன் புகழினை மலர்கவி மாலைசெய்
துவன்றாளில், வீழு மாறுபொன் னிதழிசேர்
தோள்களின் மீதணிந் தினிநெஞ்சே, தாழு வா
யரி தேடுபொற் சரணமே சரணமென் றிதுவன்
றிப், பாழி லேகருங் காக்கைபோற் கதறிநாள்
பலகழித் தொழியேலே. 48

ஒழித்தி டும்பவப் பகைவிரைந் துள்ளமே
யோதழு துணர்வோர்முற், பழிச்சு பாடலை யாற்
கவை விடர்க்கிளம் பாவைய ருரைபோலுங்,
கழித்தி டேலுப சாரமென் றிதனைநீ கட்டுரை
யெனக்கொள்வாய், விழித்து மாரனை யெரித்ததே
வருள்பெறும் விருப்பினர் விருப்பீதே. 49

விருப்ப மாயிது கேட்டிநன் னெஞ்சமே விம
லனுக் கானல்லார், பொருப்பை நேர்தநஞ் சொரி
யினு மவர்களோர் புன்னுனித் துணையன்புந்,
திருப்பி டேலரன் றொழும்பர்தந் தொழும்பனாய்த்
திரிந்தவர் பணிசெய்தீண், டிருப்பை யென்மிக
நல்லையிச் சொல்லைநம் பில்லையேற் பொல்லாயே.

## தோத்திரம்.

பொல்லாதவெ னெஞ்சமோ ரைந்துபு லன்கடம்பா, லல்லாதரை மாத்திரை யுந்நின்ன டிக்கணன்பாய், நில்லாதிதற் கென்னைசெய் கேனிதை நின்றிடென்றே, சொல்லாய்திருத் தில்லையுண் மேவிய சோதிநீயே. 1

நீயேயருள் செய்யினல் லாதுபொய் னெஞ்ச வஞ்சத், தீயேனுனை வந்தடை தற்கொரு செய் கைகாணேன், பேயேனுமு னைத்தொட ரும்படி பேசதில்லைத், தூயோயொரு பாயம்வி டாதினிச் சூழ்ந்துநின்றே. 2

நின்றாய்திருத் தில்லையு ளாயென்ற னெஞ்சினுள்ளே, யென்றாலுமெ னக்கதி தூரம தாயிருந் தா, யொன்றாலுமு னைத்தொடர் கிற்குமு பாயங் காணேன், மின்றாழ்சடை யாய்தமி யேற்குவி ளங்கிடாயே. 3

விளங்கும்மெழிற் பேதையர் காதல்வி டாத யானக், களங்கம்மறு வோர்தொழு நின்கழல் கா



ணுமாறென், றுளங்கும்மொளித் தூமதி சூடிய தோன்றலேயென், னுளங்கொண்டிடு நீயினிக் கோயில தாவுவந்தே. 4

வந்தித்திடு வார்பவ நோய்க்கும ருந்தனையைச்
சந்தித்திடு வான்மறித் தான்மனந் தப்பியப்பா
லிந்தப்புவி யுங்கட லுங்கடந் தேகுமென்றா
லெந்தப்படி யுய்வதி யான்றில்லை யெம்பிரானே. 5

பிரானேதிருத் தில்லையு ளாயன்றிப் பேதை யென்மு, மொராமேனறிவர்க் தம்பிகை யோடெளி தோடிவந்தாய், வாரேனுவின மெய்யிறை யென் றுனை நாடிவாடி, யிரானாயடி யேற்கெதிர் தோன் றிலை யின்றிதென்னே. 6

என்னையக னேயிமை யோர்தொழு மீசனேசெம்
பொன்னார்திரு வம்பலத் தாடிய பூதநாதா
வுன்னாரரு ளாலினி வீட்டிடை யுய்த்தியின்றேற்
பின்னாருயக் கொள்ள வலாரென்பி ழைகடீர்த்தே.

தீராதவோ ரைம்புலச் சேட்டையுந் தீர்ந்து போய்வெங், கூரார்மழு வாளிநின் பாதங்கு ழைக்

துபோற்றி, நீராயுரு வித்தொழு துன்னெதிர் நிற்
கும்வண்ண, மோர்நாளுள தோதமி யேற்குமு
ரைத்திடாயே. 8

உரையேனனி வாய்திறந் தன்புகழ் தன்னை
நாளும், விரையார்மல ரிட்டருச் சிக்கவி ருப்புமில்
லேன், கரையேனுள நின்னினைந் தெத்திறத்
தாற்கடப்பேன், றிரையார்வினை யார்பிற விக்
கடற் றில்லையானே. 9

ஆனேறிவர்ந் தென்னெதி ரேவிரைந் தன்று
வந்தோய்க், கேனோவெறுப் பிப்பொழு தோர்சற்றி
ரங்குகில்லாய், நானோவறி வேனுன்பெ ருமையை
நம்பனேநீ, தானேபொறுத் தாளுகண் டாயென்ற
வறெலாமே. 10

எல்லாமறி வோயறிந் தேவருத் திட்டவாறே
யல்லாற்றமி யேனும்பு ரிவதொன் றில்லையானற்
பொல்லாமைசெய் வித்தவ னீபொறுப் பானுநீகல்
வில்லாயிளைத் தேனைப்ப வத்தினி விட்டிடேலே.



ஞலக்குழ லாரநு ராகம தென்னுமாயா
சாலக்குணந் தேற்குன தின்னரு டந்துகாப்பாய்
நீலக்கள மாலய னோடுமுன் னேடிவாடு
மூலக்கந லேகந லேந்துகைம் முக்கணனே. 12

கண்ணார்நுத லோய்கடை யேனையு மொன்ற
தாயே, யெண்ணவரு ளன்றுகு ரந்துளக் கின்றி
லாதென், விண்ணோரிறை யோய்க்குமுண் டோ
சொல்வெ றுப்பினோடு, தண்ணார்விருப் புங்கரிப்
போர்வைய சாற்றிடாயே. 13

சாற்றாய்திருத் தில்லையுள் ளாய்சிவ சங்கர
வெண், ணீற்றாய்கடை யேனுயு மாறென்ற னெஞ்
சுளஞ்சிப், போற்றாதிருந் தேன்வருந் தாமலென்
புத்திதன்னைத், தேற்றாயொரு நீயினி யன்பினைச்
செய்யுமாறே. 14

மாறாயவோ ரைந்துபு லன்வலி மாய்த்துநெஞ்சை
நீறார்திரு மேனிய வுன்கணி றுத்தமாட்டே

ணேருதப வக்கட லேறவு மெண்ணிணைந்தேன்
கூறுயென தெண்ணமெவ் வண்ணங்கை கூடுமென்
[றே. 15

அன்றேதமி யேற்கெளி மானுட னாகிநீவந்,
துன்றுள்கள ளித்தனை பெற்றமொன் றும்பெ
றுரி, னின்றேனல தைம்புல னென்வச நின்ற
தில்லை, யின்றேறுதவற் றைக்கொளு பாயமொன்
றீசவெற்கே. 16

எற்கோவுன தன்பும நத்திலை யென்றனெஞ்சங்
கற்கேகிக நாயதிக் கல்லைநீ கல்லைவில்லா [பாய்
முற்கால்வளைத் தாங்குவ ளைத்தன்பின் மூழ்குவிம்
சிற்கோலசி தம்பர நாயக தேவதேவே. 17

தேவேபுனை யன்பினிற் பூசைசெய் தேனுமல்லே
னாவான்மிகப் பாடிநின் றாடிக யக்குகில்லே
னோவாதுழ நீமநத் தோடிவ னூற்றனென்மற்
றாவாவினி யென்வரு மென்பத றிந்திலேனே. 18

அறியாமையிற் கீழவர் பல்பிழை யாற்றி
னுங், குறியாதருள் செய்வது மேலவர் கொள்கை



யன்றோ, மறியார்கரத் தோய்சிறி யேன்வினை
மாற்றியாளப், பொறியேலுனக் கென்முக மன்
சொலப் பொய்யனேனே. 19

பொய்யற்றவர் வந்தடை யும்பரி பூரணவிம்
பெய்யற்றவெற் குன்ன லானிலை வேறுமுண்டோ
ஐயற்கிட மேயிட மாகரு டாணுவேயென்
மையற்றவிர்ப் பானுன்க டாக்ஷம்வ ழங்கிடாயே.20

வழங்கெற்கிவ ணேதுசெய் தாலெது வாகு
மென்றேன், றெழுங்கற்பனை யாவுமி றந்துணர்
வேகமேயா, யொழுங்கிற்புல னாதியு பாதியொ
ழித்தொருன்னைச், செழுங்கைக்கனி யொத்துணர்
ரும்படி தில்லையானே. 21

தில்லைப்பதி மேயசி வப்பிர காசனேயோ,
தொல்லைப்பிற வாநெறி மேவிய தோன்றலேயோ,
வல்லர்ப்பிற விக்கிளைத் தேன்றனை யஞ்சலென்
றோர், சொல்லைப்பக ராய்விடை மீதினந் தோன்
றிநின்றே. 22

தோன்றாத்துணை யேபுணை யேபவத் தொல்
கடற்கென், போன்றார்க்குமி ரங்கும ருட்பெரும்
போதமேயிங், கின்றார்மனை யாதிய மோகமெ
லாம்விடுத்துட், சான்றாமுனை யேவினை யேனி
னிச் சாரவெண்ணே. 23

சார்ந்தாய்குரு வாதிய வாய்விடை தன்னில்
வந்தாய், கூர்ந்தாயரு விற்பிற வாநெறி கூட்டு
வித்தா, யோர்ந்தேன்குறை யின்றெனி னுங்குறை
யுண்டுகண்டாய், பேர்ந்தோடுமெ னெஞ்சுளுன்
னன்புபி றக்குமட்டே. 24

பிறவாநெறி யாகிய தோர்திருப் பேரையாவெம்
முறவேயற வேதவிர்ந் தென்மன மோடிவாடிப்
புறவாதனை பற்றிவ ளர்ந்திடு புன்மையாலின்
றிறவேயத னைப்புரி வானுளத் தெண்ணுவாயே.

எண்ணும்வடி வேதினி நீபுனைந் தெய்தினு
னுந், திண்ணம்மென வாவக லாவச்சி தம்பாத்தே,
கண்ணும்முன துண்மையைக் காணக யந்தனே



னென், னுண்ணின்றதைக் காட்டுதற் கீசசற்
றுன்னுவாயே. 26

உன்னும்முணர் வுக்குணர் வாயெனக் குண்
மைதந்தாய், மன்னுஞ்சுரு திப்பொரு ளாய்வழி
காட்டிநின்றாய், பின்னுங்குரு வாயடைந் துன்ன
ருள் பேணவைத்தா, யென்னென்றுரைப் பே
னின்கருணை யிருந்தவாறே. 27

இருந்தோருமி டத்துணர் வில்லைமா யைக்கி
தன்பாற், பொருந்தாவிடத் தில்லையு யிர்க்கொரு
போதமேனுந், திருந்தாவிவை கொண்டிறை யைந்
தொழில் செய்தியென்றே, வருந்தாவருண் முன்
னிலை தன்னைம தித்தியானே. 28

மதித்தென்பரு வத்தள விற்குரு வாதியாகி,
யுதித்துள்ளறி வோங்கும்வ கைக்குபா யஞ்செய்
தோயை, யெதிர்த்திங்ஙனஞ் சற்குரு சற்குரு
வென்றுரைந்துங், துதித்துந்திரி யாவெனக் கின்
னரு டந்துதோன்றே. 29

தோன்றாமன்மு னின்றொரு தாய்வயிற் றோ
ன்றுபல, ரீன்றாடனைத் தம்மின்வே றாகொடி
கழ்ந்தவாபோற், பூன்றாவொரு நீயரு ளாற்புனை
மேனியெல்லாம், யான்றான்பல தெய்வமெ னக்
கொடி கழ்ந்தவாறே. 30

இகழும்பொரு ளொன்றிலை மண்முத லெட்
டுமோர்தாய், நிகழுன்வடி வேயெனத் தேர்ந்துள
னெக்குநின்றாட், புகழும்படி யேயினி யீசவென்
புத்திதன்னை, திகழும்படி செய்திதி ரோபவஞ்
செய்திடேலே. 31

செய்பாய்கரி யான்றொழும் வெள்ளிளஞ்
சேவையூர்வோய், வையார்மழு வோய்திரு வுள்ள
மிவ் வஞ்சனேனு, மையாவிழி பெய்வுற நீர்பெரி
தன்பிலேனொடு, கையாற்றொழு தேத்திநின் கூத்தி
னைக் காணுமாறே. 32

காணாதப வக்கட லின்கரை காணவெற்குக்
கோணாகணி மார்பமெய் யன்புகொ டுத்தியென்றே



ாணாதிசைத் தென்றிருக் காளத்தி நாதவுன்றாட்
பேணாதவ லக்கடன் மூழ்கிய பேதையேனே. 33

பேதைக்கொரு பாகம ளித்திடு பேரையா
வெங், கோதைக்குநின் றோளுறு கோதைகொ
டென்றுநின்பா, லோதற்கெனு ளத்தைவி டுத்
தனை றோடிமாதர், காதற்களை யுண்டமை யானு
னைக் கண்டதின்றே. 34

கண்டேன்களி கூர்ந்துசி வப்பிர காசநாமங்,
கொண்டோங்குரு வோடிவ னுற்றெனை யாண்ட
கோவே, பண்டேயொரு நீவகுத் திட்டப டிக்கி
யானுன், றொண்டாகிவந் தின்றுனைப் பாடத்தொ
டங்கினேனே. 35

தொடக்காயெனைச் சூழ்ந்துள வைம்புலத்
தோற்றமெல்லாங், கெடக்கூறுதி நீயொரு சூட்
சிகி ளக்கிலாயே, லடக்காவவை யென்றன கத்
துள டங்குகாறுங், கடக்கேன்பவ வேலையெவ்
வண்ணமுக் கண்ணினனே. 36

கண்ணான்மத னைப்பொடி யாம்வகை கண்ட
வெண்டோ, ளண்ணாவுயிர் யாவும ளித்திடு மப்ப
னேயோ, தண்ணார்பொழிற் றில்லையு ளாயெனக்
கீது தாராய், மண்ணாதிய வாசைக ளற்றனை
வாழ்த்துமாறே. 37

வாழ்த்தேனுனை நாடொறும் வாழ்த்தவல்
லோர்கடாளிற், றாழ்த்தேன்றலை யாங்கவ ரேவற
லைக்கொள்கில்லேன், வீழ்த்தேனெடுங் காலம வத்
திலொண் மேருவில்லோய், பாழ்த்தேன்கிளி
போற்பல நூல்கள்ப டித்துமியானே. 38

யானாருடற் கின்பதன் பங்கலை யெண்ணா
வெண்ணித், தானேசிறு பாலரி னென்மாஞ் சஞ்
சலிக்கு, மீனாயினன் பாலல தென்கண்வி டுத்தி
கொல்லோ, வானேறுடை யாய்திதி யாமதி கார
ணீயே. 39

காரார்மிடற் றாடனி சூழ்தரு பொற்கடுக்கைத்
தாரார்புய னேசிவ காமச வுந்தரிக்கோர்



சீரார்மண வாளவென் றன்குல தெய்வமேநீ
பாராய்கடைக் கண்ணென தெண்ணம்ப லிக்க
[வின்றே. 40

இன்றென்னைசெய் கேனென நாடியி ருந்த
நீயேற், கொன்றெய்தினெவ் வண்ணம றும்மதை
யோதுவேனோ, வன்றன்னமு மேனமு மோர்வரு
மையநின்றா, னொன்றன்பர்கு ழாத்துற வீதரு
ளாயுவந்தே. 41

உவந்தாயென தைம்புல னும்மிரிந் தோட
வோர்நா, டவந்தான்சிறி தும்மிலி பால்விடை
தன்னின்மின்னோ, டிவர்ந்தேவ நாளும்வி ளங்
கிலை யென்னைகொல்லோ, வவந்தான்மிகு பாவி
யுன் லீலைய றிந்திலேனே. 42

அறியாமையிற் கட்டுண லுற்றதென் னாண்
மையத்தைப், பிறியாதுவி டேனென லெந்தைபி
ரானுண்மை, குறியீதிரு வர்க்குமென் றாலெ

னைக் கோபியேலே, செறிவாய்மல மேயிறை யோ
டிகல் செய்ததன்றே. 43

செய்விப்பன்வி னைத்தொகை வெம்பவஞ்
சேர்ப்பனுன்னை, யுய்விப்பனே லச்சிவ ஞண்மையு
மோர்வனென்றே, ரைவர்க்கெதி ரேயெனை நோக்
கிய றைந்ததையா, மைவெற்பன வாணவ நீயதை
மாற்றிடாயே. 44

மாற்றாயெனக் காணவ மாயையில் வந்துவந்
தே, தோற்றாவுள கேவல மாதிய சுத்தமொன்றா,
டேற்றாயவ ணேற்றியி ரண்டறுத் தெங்குமாகிக்,
கூற்றாவிகொள் பதத்தென் னுவியுங் கொள்ளு
வாயே. 45

கொள்ளேனெனி னுமெழுத் தைந்துமுட்
கோதியாதுந், தள்ளேனெனி னும்முனைச் சார்
தவஞ் சார்ந்திலாரை, விள்ளேனெனி னும்மெனை
நீகைவி டேல்விடேல்கா, ணள்ளாறுடை யாயவி
நாசிக யந்துளானே. 46



நயவாதுதில் லாபுரி யோயுனை நாடிநாளும்
வியவாதுட லோடுற வென்றும்வி டாதென்னுள்ள
கயவாதுறு போகமெ லாமிவை கண்டுவீடும் [ங்
பயவாதிதென் றேபயந் தேன்மிகப் பாவியேனே.

பாவார்பெரி யோர்புகழ் சிற்றம்ப லத்து
ளோயை, நாவாற்சிறி யேன்றுதி செய்யுமிந் நன்
கில்சொல்லு, மோவாதிரை யோருழை தாவிய
வுன்செவிக்கே, மேவாதல வென்றுது ணிந்துவி
ளம்பினேனே. 48

விளம்பற்கருஞ் சோதியென் கோவிடை
யோனென்கோவென், னுளம்புக்கசி வப்பிர காச
னென் கோவென்னங்கைத், தளம்பற்றிய சாந்த
னென் கோநின்ற னதுநாமம், வளம்பெற்றதி ருக்
கயி லாயசொல் வாயெனக்கே. 49

எனக்கீந்தினி யாண்டிடல் வேண்டுமெம்
மீசனேமற், றனக்கேசர ணஞ்சர ணம்புல னேறு
மென்றன், மாக்கோதனைத் தும்மிறந் தோங்கறி

வாகியாங்கே, பிணைக்காண்பவன் காட்சியு மற்றவை பேதவாழ்வே. 50

பக்தி (வைராக்கிய) சதகம்
முற்றுப் பெற்றது.

சாஸ்திரமும் ஸ்தோத்திரமும் உள்படச்
செய்யுள் 100.

சர்வஞ் சிந்மயம்.




161

உ

சற் குருப்யோ நம:.

திருப் பேரை யூர்
ஸ்ரீ சாந்த லிங்க சுவாமிகள்
அருளிச் செய்த
வைராக்கிய தீபம்.

இது
திருப் பூவண மடாதிபதி
ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய
சுவாமிகளால்
பதிப்பிக்கப் பெற்றது.



# வைராக்கிய தீபம்.

திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன்
றிகழ்தரு மூலமெலாந் தன்பான், மருவுசிற் சத்தி
யெனுங்கிர ணத்தால் வந்தெழு காரணீ ராக,
விருமையா மதிமாய்த் தறிஞராங் கார்தத் திடை
யருட் சுடருமிழ்ந் திலங்கு, மொருசிவா தித்தன்
றனைநம திருள்போ யொழியநா டொருமிறைஞ்
சிடுவாம். 1

துன்னியா ணவப்பாம் பெமதறி வெனுமோர்
சுடர்செழு பூரண மதியை, முன்னமே தீண்டிற்
றொளிவெளிப் படலான் மோசந காலமெய் திய
தாற், றன்னிடத் தீசன் முதற்புவி முடிவெண்
டருநுரை யாதிவந் தொடுங்கப், பின்னைய பினை
யாந் திரைகள்வீ சிடுமோர் பிரமவே லையிலினிப்
படிவாம். 2

எப்பொருள் களுமா யொப்புயர் வின்றி
யிருந்ததன் னுருவிறை குறையா, தப்படி யிருக்க

வாலியா நீரி னருளிறை யாயெமக் கேம, வைப்
பென வன்னை யெனப்பிதா வெனக்கண் மணியெ
னத் தவப்பய னெனவுட், செப்புயி ரெனவந்
தாண்டகா ளத்தி தேசிகன் றிருவடி பணிவாம். 3

அருந்திய காலத் தற்பமாப் பிற்பே ரௌடத
முடலினின் றுடலை, வருந்தல்செய் பிணியெல்
லாமகற் றுதவின் வஞ்சனே னெஞ்சின்மாற் றரி
தா, யிருந்தவெப் பற்றும் பிற்றைநாள் களின்விட்
டேகவன் றேகடைக் கணித்தல், புரிந்தநங் குரவ
னருளிருந் தமையெப் பொழுதுமுன் னினைந்து
வாழ்த் திடுவாம். 4

அரையன்வா யுரைகள் வரைதரு முடங்க
லதுவரக் காணின்மற் றவனு, டரையின்வாழ் பவ
ருண் ணடுங்கியோர்ந் ததன்வாய்ச் சாற்றிய முறை
செய்வா ரென்றூற், கரையில்பே ரின்பந் தரவெமக்
கிறைசொல் கட்டுரை யென்னின்வே றென்னை,
யுரையுள வேதா கமமவ னெனக்கண் டுரைத்தவா
புரிகுவ தல்லால். 5



கற்யழ மாகப் புரிதலிற் பெரிதென் கருத்
தினைத் திருத்திவந் தாண்ட, சிற்பா னருளாற்
சொற்பொரு ளறியா தேனும்வே தாகம வழி
யீண், டிற்பவ மாதித் துயரைமுற் றவத்தா
னுணர்ந்தவர் துறவெனும் வாளா, லிற்பொருந்
துதலை முதலவா வறுத்தோ ரின்பவீ டெல்
சொலற் கியைந்தேன். 6

துணையில்பே ராசைக் கடலுளோர் கரை
யாந் துறவுவந் துறவுவந் ததற்கோர், புணையெனப்
பெரியோர் வகுத்தநூல் களின்முற் போதமி
லேனுமீ துரைத்த, லுணையமெய் வருந்த வய
னெடு மாலன் றுயர்ந்துதாழ்ந் தோடியுங் காணு,
விணையிலி நடித்தல் செயமருங் கலகை யினமசைத்
திடுதலி னன்றே. 7

கயல்விழி மனைவி யனைமுத லியவாங் கட்
டது தனையென தெனவு, மியல்பதா மசுத்த
மாதியா ருடற்கட் டிதனையா னெனவும்வைத்

தெனுமோர், மயலதா மிருளைத் துறவென்
மொளியான் மாற்றிநெஞ் சகத்தினை விளக்கலு,
செயலினிற் நூற்குப் பெயர்வயி ராக தீபமென்
றுரைத்திடப் படுமால். ௮

பாயிர முற்றிற்று.

## நூலாசிரியர் பெயர்.

உருட்கரங் கூசன் மநமொடுங் கிடவென்
னுணர்வுசேத் திரக்கியா னெனதா, மிருட்கெடுத்
தெலசமாம் பொருட்டிகழ்த் திடுமோ ரெழில்வயி
ராகதீ பத்தை, மருட்கொடும் பாசக் குழிக்கண்
வாம் வீழா வகையரு ளினன்மறை முடிவின்,
றெருட்கமை வீர சைவனெஞ் சாந்த லிங்கதே
சிகன்றெருட் சுடரே.

---

## நூல்.

தோன்றிநின் றழியப் படுங்கொடும் பிறப்பிற்
றுன்பமே யன்றியெட் டுணையு, மூன்றிநெஞ் சகத்
தோர்ந் திடிற்பிறி திலையா லுண்டுபோற் றிரித்
துயிர்க் கெல்லாந், தான்றிகழ்த் திடுமோர் வகற்றிரு
ளிருளுந் தவிர்ந்துமற் றதுமுள படியே, யான்றவீ
டுறமுற் பவந்தவம் புரிந்தோ ரகத்தினுட் டெரி
தரு மன்றே. 1

உடலிதுற் பவத்தோ ரைம்பெருந் துயர்
மாய்ந் துறுகணைத் துயரினெண் மடங்கா, லிடை
யுள திதிக்கட் டியாமூப் பறிவோங் கிளமையிற்
பிணியுறு விடத்தும், விடலரும் பசிநோய் காம
நோய் தணிப்பான் மிகுபொரு டேடுத றுயரீண்,
டடையினு மதனைக் காக்குத றுயர்வேந் தாயினு
மிகுநாற் றுயரே. 2

இளமையிற் பிணியற் றெருகுடை நிழற்கீ
ழிருநில முழுவதும் புரக்கும், வளமை பெற்

றுடைய மகற்குமெய் பொழுது வருங்கொல்கூற்
றெனும்பயத் தானு, முளமிகப் பறைநின் றறையு
மேற் புவிநீ துடையரோ மற்றைய ரின்பங், களி
யிருத் திருப்பர் தெளிவிலா மையின்மேற் காரியங்
கருதுறு காரே. 3

பிறப்பிறப் புடைய ராயிடை யினும்பல் பிணி
யயந் தணிவில்கா மாதி, யுறப்படு தலின்வா
னவர்க்குமற் றென்னை யுளசுகந் தேவின்மா
துடத்திற், சிறப்பிவை யென்றுற் குறுக்கியோ
கிகளின் றீமையுங் கொடியர்வீழ் நிரயத், தறப்
பெருந் துயரு முரைப்பதென் பிறப்பூ டாதலாற்
றீதலா திலையே. 4

அரிதுபெற் றிடினும் பெற்றதின் விருப்ப
மறப்பெறு தனவிரும் புயிர்க, டரியதிற் கிலமீ
தெனைமுன மடையாச் செல்வமாய்ச் சொல்பவித்
திரமா, யுரியசிற் சுகமாய் நித்தமா யொருவீ டுள
தெனக் கேட்டுமற் றதனிற், பிரியமற் றினமு
றுணமுறும் பொல்லாப் பிறவியே பெறவிரும்
புதலே. 5



துன்பமெம் பிறப்பி னிழிவையு மழியாச்
சுகபர வீட்டுயர் வினையும், பின்பவை தொலைத்
தெய் தருங்கரு வியதாப் பெற்றவிப் பிறப்பையு
மிதனின், மின்புரை நிலையா மையையுமோர்க்
தனனோர் விவேகியு மெனிற்பினும் விடயத், தன்
புறு வீடு புகமிக விரையா தரைக்கணந் தரைக்க
ணுற் றிடுமே. 6

வினைப்பிறப் பொருவன் றுயரமென் றுணை
ரின் விடயபோ கங்கணைச் சுதலுங், தனக்குட
லநிய முணர்தரின் மரணஞ் சார்குறிக் குளநடுங்
குதலு, நினைத்திடி னிதன்பேற் றருமைமா
தவங்க ணீங்கிநாள் கழித்தலுந் துணிவி, லநித்த
மோர்ந் திடினோர் கணமெதிர் காலத் தவதிகூ
றிடுதலு மிலையே. 7

கருமமொன் றியற்றப் பிரார்கையிற் கருவி
கவர்ந்துளோன் பினுமவர் கொளுமுன், விரைவி
னென் ணிடசெய் யாதுமற் றதையே மிகச்சிரப்
பித்துரோக் குதல்போற், புரையில்வீட் டின்ப

மடைகுவா னதற்குப் பொருந்திய வருந்தவம்
புரியா, தொருகண மேனு நிலையிலிவ் வுடல்வைத்
தொப்பனை செய்துநோக் குதலே. 8

பவத்தனிப் பாவைக் குரவையைத் தாஙப்
படுவையைக் கொடுகெடப் பரிதா, லுவப்பொடு
தவப்பா தையினிவர்த் தன்றி யுண்மையித் தகவி
கந் தலகோ, ரவப்பொழு தகல விருப்பதென்
விருப்போ வகன்றவர்க் கருத்தலா திகளாற், றவத்
தினை மறந்தார் கொல்லெனுஞ் சொல்லைத் தம
துளத் துணர்கலார் போலும். 9

ஈதலே யறமு மநித்தமா மனைத்து மிகழ்ந்து
கை விடுதலை வீடு, மாதலாற் றூக் குரியவில்
வாழ்க்கை யதனையே யறமெனக் கூறிக், கோதி
லா வீட்டி னிலக்கண மிருத்தல் குறித்துமெய்
யுணர்வையுந் துறவு, டோதினர் வேதந் தனைத்
தமி ழுருவத் தொளிதெமக் களித்தவள் ளுவனே.

நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார்
நீத்தவர் பெருமையுள் முகப்பாற், சிறந்திட



னமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச் சிறுமைதூற்
றினாது தெரியார்க், கறந்தவா றியற்றி னவனி
னுங் கோடி யதிகமா மெனமாம மரூது, துறந்து
னோ னையும்பட் டணத்தெம தடிக டொகுத்தகட்
கிறைதிகழ்த் திடுமே. 11

பிறப்பெனு முவரிச் சுழியதா மெழிலார்
பெண்டிரா தியவுயிர்ச் சார்வுஞ், சிறப்புறு புவியா
தியபொருட் சார்வுந் தீரநீக் குதலுற வவற்றா,
டுறப்படு மெவைநீப் பினுமறி வுடையோ ரொரு
தம தனைபிதா வினையுந், துறப்பரேற் றுறப்
போர்க் கருநா கெனநீ சொற்றசொற் சத்திய
மாமால். 12

விடையது ரிறையே தாதைமற் றவன்பான்
பின்னெம தன்னையன் னவளைக், கடையனே
மறந்து துறந்துதா னன்றோ கடும்பவ விடும்பை
யுற் றனமிவ், வடைவுணர்ந் திலைபோன் றுட
லிதற் கேது வாயவர்த் தாய்பிதா வெனநெஞ்
சுடைவுறு நின்றுய் பவந்தொறிவ் வனமுற் றன
வுயிர்க் களவியா துரையே. 13

தனதகத் தகலா திருந்துபே ரின்பந் தருத
லான் மனைவியுந் தன்பா, லினிதுதித் தொருதன்
வினையொழித் தசையா திருத்திவீட் டமுதருத்
துதலா, லுனவருஞ் சுதனா மொருவனுக் கவனா
லுதயமா யெழுந்தமெய் யுணர்வே, பினையிஃ
தன்றி மனைசுத ரெனயாம் பேணிநாட் கழிப்பதும்
பிழையே. 14

வேண்டினான் டாகத் துறக்கவென் றமை
யால் விருத்தனாய்க் கருத்தழிந் துருவங், காணா
டல்செய் விழிபஞ் சடைந்துட னடுக்குங் காலம்
வந் தடைவதன் முன்னர், மாண்டகற் பதனாற்
சாலியைப் போலு மனைவியா ரியசமா தியினாற்,
றீண்டுமா னந்தம் புலவடைந் திடுதற் கெண்ணிநீத்
திடுவர்புண் ணியரே. 15

இளமையின் மனையைத் துறத்தறீ தெனிற்
று ளிறத்தலிற் றுறத்தலீ டலவா, லளவிறீ தலை
தாங் குயிர்ச்செய லன்றே லாபற்சந் நியாசந்தீ
ததுமெய், விளிதலாற் பழுதின் றேர்யினு மிருப்



பார் விடுதறீ தடுபிணி குறித்தே, லுளையுநோ
யிலரு மிறப்பதென் பிறப்போர்ந் தொழித்திடற்
பழித்திடா துலகே. 16

இக்கணத் திருந்த தினிவருங் கணத்து
டிருக்குமோ மரிக்குமோ வுடலென், றக்கண
மனையா திகட்கான் றனையர மன்றென வெணித்
துற வறஞ்சார், மிக்கவ னாபற் சந்நியா சியுஞ்சார்
வினாக்குரஞ் சேர்த்திவிட் டவனாந், துக்கமே
வலிற்பின் பவரிவன் போலுந் துரவான் றென்
பதுந் துணிவே. 17

பிறந்தவப் பொழுதே யினியொரு தலையாப்
பிறப்பறுத் திடுவமென் றெணியே, யுறைந்தனை
வயிற்றிற் பினையதுற் பவத்து டுறபெருந் துய
ரினா லுயிர்கண், மறந்துறு முறையுஞ் சுகாகன்
றமையு மதித்துநெஞ் சழிவினம் போல்வார்க்,
கறைந்திடு மலது பிறப்புணர்ந் தகல்வார்க் கவதியு
மறையுமோ மறையே. 18

கருப்பமா ருயிரத் துயர்பெயர்த் திடுதல்
காரண பூரண ஞாநம், விருப்பமா யடையக் கடவ
மென் றிருக்கும் வியாசர்சே யடைந்தது மதுவே,
திருப்பியீண் டதனைத் துறவின்மீ தேற்றிச் செப்
பலென் னெனிற்றுற வினைவிட், டிருப்பதோர்
ஞாந மெவன்கொனீத் தவரென் றிசைப்பதென்
பெயர்மெய்ஞ்ஞா நிகட்கே. 19

ஞாநியஞ் ஞாநங் கெடுத்தலாற் றுறவோ
னெனப்படு நவிற்றினஞ் ஞாநந், தானுட வினைநா
னெனுமக விருளென் றனையிஃ தெமக்குமொத்
ததுவா, வூனமின் மறைதேர்ந் தொருசிவ நா
னென் றுளத்துணிச் சயித்தவக் கணமே, யா
னென றவிர்ந்தவ் விருளுமாய்ந் திடுமென் றிசைத்
தனை யிதுபழு தன்றே. 20

திரிவித வுலகத் தரிதொரு ஞாநி தேர்விடத்
தென் றுமோ ரொன்றை, யுரைசெயிற் பிரம வித்
தையொத் தரிதோ வென்றுமிவ் வுலகுளைப்
பதனா, லரிசொல்கீ தையிலும் பிரமசா தகரி



ஞோர்க்குள வருத்தமென் பதனாற், பெரியதோர்
வருத்த மெனமறை துணிந்தப் பிரமநா னென
விருத் தலினே. 21

வருத்தமொன் றின்றிச் சாலலாம் பிரம
மென்றயன் வருத்தகீ தையினா, லுரைத்ததெற்
றினுக்கா யெனிற்பர ஞாந முணர்பவர்க் குன்னுத
லுரைத்த, னிரைத்திடு தொழில்க ளொன்றும்
வேண் டாது நீத்துவா ளாவிருத் தலினா, லருத்த
மற் றதனுக் கோர்ந்துநா றெளித லாகநீ துணிந்
தனை போலும். 22

சிறியவர் மணற்சோ றுண்டுதேக் கிடல்
போற் றேர்ந்துநா றெளிந்தமாத் திரத்தி, னறி
தரிற் சிவமும் விடயமா மெனநீத் தகத்திரு ளரு
துலைத் தந்தோ, வுறுமகம் பிரம மெனவுரைத்
திறுமாந் துறைதலோ ஞாந மஞ்ஞாநந், துற
வினை யுறாது மாயுமே வாயாற் சுடரெனி லிருளு
மிந் திடுமே. 23

ஞானியே யெவரும் வணங்குதற் குரியோ
னவிலுமா சௌசமில் பெரியோன், மானிலத்
தவன்ற னுடல்விடிற் குகைப்பால் வைக்கவென்
மறைப்படி புரித, றனும்வே தாந்தப் பொருடு
ணிந் திடினுஞ் சாற்றினில் வாழுமந் தணர்க்கின்,
றனதாற் றுறவு பெற்றகற் றவரே யமலவீ டடை
யுஞா னிகளே. 24

தேர்ந்திடி னபரம் பரமென விரண்டாய்த்
திகழ்தரு ஞானமாங் கவற்றா, டோர்ந்திடு மறையா
தியகலை யபர முயிர்பா ஹெடுவீர வயிக்கங், கூர்ந்
துண ருணர்வே பரமதைத் தெளியக் கூறன்மாத்
திரங்கலை ஞானஞ், சார்ந்துணர் வசிதப் பானை
யோர்ந் தன்றிச் சாற்றினவ் வயிக்கமாந் தலமே.25.

அடுத்தவிச் சிவன் றன்மையோர்ந் தன்றி
யதியொணுப் பானையஞ் ஞானங், கெடுத்தலாற்
சிவன் றனையுமோர்க் தொருவர் கிட்டொணு நன
விளிற் சுழுத்தி, யுடைத்துமற் றெவனுக் கவன
லஞ் ஞான முடைக்குமுட் காரணவா தனைக.



டுடைத்திடி னபாவ மெனப்படு நனவிற் சுழுத்தியு
மெளிவந்து தோன்றும். 26

யோகசா தனையால் வாதனை கரணக் கொழி
யுமவ் வியோகமு மிருமைத், தாகுமே கிரியை
ஞானமென் பேதத் தாதநா தியதொழில் யோக,
மேகமாம் பொருடோர்ந் ததுவிது வெனுஞ்சுட்
டிறத்தன்மற் றையதிரு வகைக்கும், போகவேண்
டுமைம் புலன்களு மிறந்தப் புலனவா வொழித்
தலாற் போமே. 27

ஐம்புல னடல்வேண் டும்விடல் வேண்டு
மொருங்குவேண் டியவனைத் தையுமென், றும்ப
ரும் பரவு மொருதமிழ் வேத முரைத்தலா னே
யிரு வகையா, நம்புறச் சார்பை வெறுத்தவா
வறுத்தைம் புலனெழித் தொழுங்கிஞு டருமச்,
செம்பொருள் காண்ப தறிவறி யாமை சிதைத்
தல்வீ டெனத்திகழ் தருமால். 28

அரம்பையுள் ளூறு தண் டெடுத்தலி னெருவ
னநுபவ மாஞ்சிவ முணர்த, னிரம்புமெய் யுணர்

வத் தண்டின்மீ தொன்றி நின்றநா ரனைத்துக் குதல்போல், விரும்பிரு வகைப்பற் றையுந்துறந் திருளை வீட்டல்வீ டிவற்றையே யன்றி, வரும்பர வுரனும் வீடும்வே றறியேம் வார்த்தைமாத் திரத்தி யாம் பெறவே. 29

இருவகைச் சார்பா மொருபுறப் பற்று மிடை யதாங் கடையுடற் பற்றும், விரிகர ணங்க ளாகு முட் பற்று மெனத்திரி விதம்விளங் கிடுமித், திரி விதத் தினையுங் காத்திரங் கரணஞ் சேர்த்தி யொன் றாக்கொடுட் பற்றும், வருபுறப் பற்று மெனவிரண் டாக மதிப்பரவ் வணர்ந்துற வையுமே.

இருவகைப் பற்றி லொருவனை ஞாதி யெனப்படிற் புறப்பற்ற தேனு, மொருவுத லிலரு மெவணமப் பெயருக் குரியர்வே றொன்றுமில் கொடியுந், தருமிலை மலர்கா யெனினகப் பற்றி றவர்புறப் பற்றையுந் தணவார், மருவினு மஃதோ ரொருவர்வே றன்றீர் மலர்க்கொடி வாடுறு வகை யே. 31



வேறக் கொடிவா டுதலினுட் பற்றை விடுக் கின்மற் றையபற்று நேரே, சோருத லியல்பா மதனையே முன்னர்த் தொலைக்கவேண் டுவதெ னிற் கடுமுட், சாருமோர் கொடியின் கிளையனைத் தையுமுன் றறித்தொழித் தலதத னிடையா, ரோர்தனி வேர்கொள் ளரிதரி தகப்பற் றொழித் தலும் புறப்பற்ற துறவே. 32

முள்ளில்சில் கொடிவேர் கொளலின்முற் சநகன் முதலவோ ரொருவர்மற் றொருதம், முள் ளமா சணுகா வியல்பிறு னகப்பற் றொழிப்பினு முனமெனை யுறழுங், கள்ளநெஞ் சினர்பற் பல ரும்வீ டடையுங் கதியதன் மையிற்றற வளந்த, தெள்ளியோர் புறப்பற் றொழித்தலே முதற்கட் செப்பின ரெவர்க்குமோப் புறவே. 33

விடத்தகு மகப்பற் றினைமுனம் புறப்பற் றொழிப்பதெற் றினுக்கென விளம்பல், படிற்றொ ழுக் கினர்சம் மதமும்வா னவரும் பயிலில்வாழ்க்

கையும்விடக் குதலென், றெடுத்துமைக் கறிவா
சாரமோ தியசொற் கிழுக்குமா குதலின்மா சியல்
பாத், துடைத்தசிந் தையர்க்கு நிந்தையி லொழுக்
காச் சொல்வர்முன் புறல்புறத் துறவே. 34

ஒன்றிய பாச விருடெரந் திடுதற் குபாயமைம்
புலனொடுக் கிடுத, லொன்றல திலையென் றது
செய்வோ னவைவேண் டனைத்துமுன் விடாது
வைத் துறுத, லென்றுமெய் விடத்து மெனைமுத
லுயிர்க ளெவற்றையுங் கொலைசெயேன் வெருட்
டே, னென்றுசொல் விரதி யொருவனு டொறுங்
கை யிடையினோர் படைகொளு மியல்பே. 35

சாதக தசைக்கண் விடயமே தடையாஞ்
சாத்திய மானபின் புசித்தற், காதல்லைத் திடி
னப் பிரமவா நந்தத் ததிகமோ விடயவா நந்தங்,
கோதில்வீட் டின்பம் பெறுகலா விடினுங் கூடு
தற் கெனிற்கரி பிழைக்கிற், றீதிலோர் சிங்க
மதனையே யன்றித் தேடுமோ தேளையூன் றினே
வே. 36



படையெடுத் தமர்க்கட் சாருமோர் வீரன்
யகைஞரைச் சயங்கொளா விடினும், விடையெ
னப் பொருதாங் கிறத்தலே யன்றி வெந்நிட வுன்
னிடா னதுபோற், கடையென விடய மிகழ்ந்து
பே ரின்பங் கருதினேன் பெறுகலா விடினு,
மிடையுறு தனைநா டுவதலான் மறந்து மெண்ணு
மோ மண்ணின்வாழ்க் கையையே. 37

இந்திர சாலத் தொருநகர் காண்போ ரெனத்
தநு முதற்பிர பஞ்ச, நந்தினுங் கெடினும் பூரியா
வாடா நன்மைச் சநகநா தியரு, மந்திரி முதலோர்
மீதுபூ பாரம் வைத்தொரே காந்தத்துள் ளுதியாத்,
தந்தொழி லொருக்கிச் சமாதியுற் றன்றே தவிர்ந்
தனர் கரணவா தனையே. 38

சொற்றிடின் மயக்க மற்றுதித் துளவச் சுக
ருமொண் டாதையைத் துறவா, வுற்றிருஞ் சமாதி
யுற்றகப் பற்று மொருவிவீ டடைந்தனர் சநகர்,
முற்றவ முனிவர் நால்வரு மொருநான் முகப்பிதா

விடத்தவன் வளத்தோர், பற்றுமற் றகப்பற் றையு
முயர் சமாதி பணியொழித் தெணியவீ டடைந்
தார். 39

தத்துவ முணரா வேண்டினேன் மனைமுற்
சகலமும் விடுத்துமெய்ஞ் ஞான, முத்திரை திகழச்
சமாதியுற் றல்லான் முடியுமோ வெனவுமை முத
லா, வைத்ததற் குழாத்தை யொருவிநீள் கல்லான்
மாத்தினீ ழலிற்சமா தியையுற், றத்தனே
யுணர்த்தி னெனினிப் பினும்வே றறைதனம்
மிகுமட னன்றே. 40

எடுத்துள குடும்பச் சுமையொடெண் ணொருவ
னெங்ஙனை ஞானவா சானை, யடுத்தவ னேவ னொ
டித்தருள் சுரக்கு மளவுநின் றுளமகிழ்ந் தன
னேன், கொடுத்தநான் வாங்கிக் கொளும்பர மார்த்
தங் கூடினுங் காலமா கிளாற், றடுத்துரை
தொழிலை விடுத்தலாற் சமாதி சார்ந்தலுந் துணையா
வும் படுமே. 41

தனித்திருந் தொருதம் மனத்தையைம்
பொறிவாய்த் தடுத்தகப் படுத்திசீ தெத்தை



நினைத்தெழா நின்றதென் றுநோக் குநரே நீக்கு
வர் வாக்கொடு தொழிலைப், பினைத்தடை யாம்
போக் குவரில்வாழ்க் கையையும் பேச்சைநா
டொறும்பழ குநரீ, தனைத்தினெனன் றேனும்
விடார்பிறர் காண்ப தன்மையா னகப்பற்றே
விடுப்பார். 42

தந்தைதாய் முதலாம் பந்தநீங் கிலர்க டா
முயு நெறியதின் றனுஞ்சம், பந்தனு ருரையும்
வேண்டிய தெய்தப் படாதுசுற் றமும்விடா விடி
னெ, னெந்தைவாக் கரைய ருரையுமா தியவாக்
கியம்பிர மாணமா மெனக்கொள், புந்தியார் புறப்
பற் றறவகப் பற்றைப் போக்கவாய்ப் போக்குத
விலரே. 43

விடுக்குநர் புறப்பற் றதினுயிர்ச் சார்பை விடுத்
துமற் றையபொருட் சார்பைப், பிடிக்குத
லொழுங்கன் றெனினுறை யிடமும் பேணுறு
தொழித்தநீ தெனவே, படிக்கணீ யுரைக்கக்
கேட்டன முனைப்போற் பற்றிநோக் காமையி

னன்றோ, விடுக்கவென் றனைத்தும் விடுத்தன ருலக மேத்துபத் திரகிரி முதலோர். 44

துறந்தவன் பொருட்சார் புறவழி விலக்குத் தூயஞா னாதிசாத் திரங்க, ளறைந்திதம் பேசிப் பொருள்கவர்ந் ததனு னச்சமு மிச்சையா திக ளுஞ், செறிந்துற வகத்துண் டினியவூ ணிருக் குஞ் செய்தியா னெய்சொரி தழல்போ, லிறந்தி டா மனவா தனைபினைத் தனதோ ரெணத்தை யெவ் வணத்தினான் முடிப்பான். 45

பொருளறத் துறந்து பைக்கமேற் றருந்திப் பொருந்தினு மோரிடம் பிடித்துள், வெருளறப் பணியா திபினுடற் பழக வேண்டுமின் றுருத ருனு, மிருளறத் தீப மேற்றன்முன் னொழில்க வொன்றும்வேண் டுதலா னிடரு, மருளறச் சிதலை முதலுயிர்க் குறுக ணுற்றலு மதன்பொருட் டாமால். 46

பிறிதுநோய் தன்னோய் போன்றுபோற் றுனேற் பெரிதுறா லரிதினோர்ந் துணர்த, வறி



வினை னுண்டோ வாவதென் றமையா னறைதரு சராசர மெவைக்குஞ், சிறிதுமோர் துயர மரவி யுற் றேனுஞ் செய்யுமே மெய்யுணர் வுடையான், மறவறு துரவைப் பொன்செய்வா னிகர்போல் வருந்திநா டொறும்வளர்ப் பவனே. 47

தனக்கினி யவனும் வகைசரா சரங்க ணினை கவென் றமைக்குரைத் ததுவும், வினைக்கடல் கடந்த பரதர்முற் சிவிகை சுமந்துசென் றதுவு மோர் மேலோர், பினைக்கொல்பாம் பாதி யுறு தலஞ் செலுங்காற் பேணலிற் றன்மாடந் திடும் போ, தினக்கறை யானு தியமரி யாதங் குரமுரி யாதியங் கிடுவார். 48

தம்மிடத் தேனுந் தமக்கினி யவர்பா லேனு மோ ரிடர்வந்து சாரி, னம்மவூழ் முறையென் றறிந்துமேழ் கடலோ ரனுவென வுருகுமென் போல்வா, ரிம்முறை துயர்வே றுயிருறி னிரக்க மின்றிய தன்றியுந் தம்மால், வெய்மைய கொலை யொன் றடையினு மதனா லென்பதென் மிகமுக மலர்ந்தே. 49

இம்மையி னிகழ்ச்சி மறுமையிற் சிறுமை
யெய்துமென் றுயிர்க்கொலை புரியாச், செம்மை
பைங் கநக மாதியைப் பற்றாத் துறவினைச் சில
ரடைந் திடினுந், தம்மையொத் துயிர்க ளனைத்
தையுங் காணுந் தயவுயர் தபனிய முதல, மும்
மையு மோட்டிற் காட்டிலன் னையிற்காண் டிற
வொரோர் தவர்க்கலான் முடியா. 50

அறைதலிற் கொல்லா நலத்தது நோன்மை
யெனவரு டிறவுசா ரகத்தா, டுறுமஃ துறவே சின
மழுக் காறங் குறுமையாற் கொடுஞ்சொல்கூ
றாமை, புறமுரை யாமை மருவிய விரண்டாற்
பொருவின்மெய் யுறுதியோர்ந் துரைத்த, னிறை
பெருந் தவத்தோர் வாக்கினிந் நான்கு நிகழுமென்
றியம்புவர் நெடியோர். 51

கான்றசோ றதனிற் கண்டுபொய்ப் போக
மனைத்தையுங் கைவிடுத் திடினுந், தோன்றுவ
லினைமெய் யெனக்கொடு மீக்கூற் றுறவிருப்
படையினத் துறவோன், சான்றதா யுளதன்



னுளமிலை யெனவுந் தற்பரா னந்தமுற் றவனைப்,
போன்றிரு விழிமேற் செருகியீண் டுரைக்கும்
பொய்யையெவ் விதத்தினுற் போக்கும். 52

இத்திற னருள்கைப் பிடித்தெலாம் விடுத்
தோ னேவல வொருவனே டுறினுஞ், சித்தசஞ்
சலமுண் டவனோரோர் காலை செயுஞ்செயல்
பிழைக்கினுட் சீற்றம், வைத்திடப் படுத லாற்றனை
துடர்பால் வந்தொரு பிணியுறிற் றுணிவோ, டத்
தனே யுளனென் றிருத்தலி னிருத்த லரித
னேன் றனையுறி னதனல். 53

யாதியா தொருவ னீக்கியா னேத லதனினு
லதனினு விலனென், றோதலா லனைத்துந் துயர்
தருமெனநீத் துயர்பரம் பொருளினைக் காட்டுங்,
நீதிலோர் குரவ னெங்குள னெனவே தேடுமா
லலைகடல் சூழும், பூதல மிசையோர் துறவினே
னறவு யொலிமலர் தேடும்வண் டினைப்போல். 54

சமாமுற் றிடாது புறந்திரி யொருவன் றன
தெதி ரடைதரு படைக்கணைக், குமரனை நோக்கி,

ஷிருபாக் கிரமங் கூறினுந் தேறல ரதுபோ, லமர்
தாத் துறவு சமாதியோ திடினு மவற்றினுக் கய
ண்டை யினரேற், றமரெனத் துணிவுற் றவரொ
டும் பழகார் தத்துவ நிலைதலைப் படுவோர். 55

நிரிடத் தன்றி யந்தாத் திடையே நிகழு
மோர் மழைகொள விரும்பார், பாரிடத் தெவரும்
விரோதிகள் சாலம் பண்ணலென் றெண்ணிமற்
றதுபோற், சீருடைத் துறவு சமாதிபெற் றுலகிற்
றிகழினு முயிர்க்கெலாந் தயவுஞ், சாரருட் குரு
பத் தியுமிலார் தமையுந் தமரெனப் பழகவுந்
தகுமே. 56

இதுநெறி யெனவோ ரூர்க்குமற் றொருவ
னேகினு மாத்தன்வாய்க் குறிக, ளதுதனிற் காணு
விடத்துல கருமோ ரடிபெயர்த் திடுகல ரதுபோ,
லெதிரா சமாதி யாதிபெற் றுடையோ ரென்
னினு முன்னவ னுரைத்த, சதுர்மறை யாக மாந்
தனிந் தகரேற் றமரென லவரையுந் தகுமே. 57

ஈங்கறை முறையிற் றேர்ந்துபா ரிதன்மீ
தெங்கணுந் தேடியோ ரிடத்தி, ரேங்கருண்



முதல நான்குமோர் வடிவா யுளதென மறையி
னீற் றுரைக, டாங்குரா வொடுஞ்செங் குவளைமார்
பொடும்பொற் சரணொடுஞ் சரணென வடைந்
தோர், தீங்கொழித் தருள்வான் றிகழுமோர் குரா
வற் கண்டுளங் குளிர்ந்தனன் றெளிஞன். 58

காரிய மாக லாற்சகம் படைக்குங் காரணன்
குலாலனி னுளனென், றோரியல் பெனவேழ் கட
லுமொன் றாக்கி யொப்பிடுங் கருணைய னேனும்,
பேரியை பிறப்புத் தனையடைந் தவர்க்குப் பினை
யுறு வகைகெடப் பார்க்குங், கூரிய விழியோ
னுதலி னறவுங் கொடியனு மாகுமக் குரிசில். 59

செப்பிருங் கைலைக் குருமுறை மையிற்றன்
சிரமிசைச் சரணம்வைத் துளவோர், மெய்ப்பர
னருளை நினைதொறு முளந்தீ மெழுகுகல் லென
வுரு கிடினு, மைப்பவந் துடைத்தன் பினர்க்குவீ
டளிக்கும் வல்லப முடையமற் றொருதா, ணெப்பு
மிக் கிலியா கலினிறை பத்தி யுளனுமன் றாகுமவ்
வும்பன். 60

கருடனை நினைவோர் பார்வையாற் பிறர்பாற்
கடுவொழித் தலிற்றனை நினைவோ, ரொருவரை
நோக்கி னவர்கணும் பாச மொழித்தல்செய் துற
வொடேய்ந் தறினு, மருண்மகட் புணர்ந்து ஞான
சந் ததிபெற் றவரொடு மகிழ்ந்திருத் தலினக்,
குருபரன் றன்னைப் பின்னைநே ரில்லாக் குடும்பி
யென் றுரைக்கவும் படுமால். 61

குலவுசெங் கதிரோ னிருளினை யுணராக்
கொள்கைபோற் றொரு காலுஞ், சொலுமறி
யாமை யறிகிலா ஞானத் தோன்றலே யெனினுமத்
தூயோ, னிலகுமா நந்த வுருவினை யணுக்கட் கீந்
ததற் கிணையொரு துணையின், மலவுட லவர்பாற்
கவர்தலி னிஃதோர் மடமைபெற் றுடையனு
மாமால். 62

வதுவைநாண் மறையோர் வழங்கியாத் திரை
யின் மற்றருந் ததியைநோக் குதவி, னிதுவு
மொன் றெனத்தம் முடல்பொரு ளாவி யீயுமெம்
போலிக டமக்குங், குதிரைகொண் டிடவன்



றடைந்துட லாதி கொடுத்தவன் போற்கொடுப்
பவர்க்கும், பொதுமையுற் றிவனோர் மானுடன்
றானாய்த் திகழுமப் பூரண புராணன். 63

பாரினட் டாங்கா திகளொடக் குரவற் பல
நாம் வலம்வந்து பணிந்து, சீரிய துதிசெய் தநு
தின மவற்றூற் றிருவுளத் தடைக்கவும் பட்டுத்,
தாமோ டணிமை யறவிறை கருணை சுரக்குநா
ளளவுநின் றேவ, லாரிவன் றனக்கொப் பெனச்
செய்தொண் சாண்பெற் றறியவேண் டுமுழு
தறிந்தான். 64

சற்குரு வருளா லேயமுந் தியாவுந் தானற
மறைமுடி வுணர்ந்த, பிற்குரு பான்றூண் முற்
சரண் புகுந்த பெரியவ ரினமரீஇ யிருந்தொண்,
சொற்களி னரிய பொருள்கடேர்ந் தவனத்
தொலைத்தொரு சிறிதுநாட் பின்னர்க், கர்குத
லாதி யனைத்துநீத் தென்று ஞானசா தகத்தினன்
கழிப்பான். 65

அரும்பொறி யின்மை பழியன்றி யார்க்கு
மறிவறிந் தாள்வினை யின்மை, பெரும்பழி யென
லா மொருவன்வீட் டின்பம் பெருமைகொ டிகழ்
கலர் பெரியோர், விரும்பஃ தடையும் வகையருட்
குருவான் விளங்கியு முளங்கையிற் கனிபோல்,
வரும்படி நாளு முயன்றுறு வென்போன் மதியி
லார் தமையிகழ் வதலால். 66.

பகர்தரு தொழில்க ளனைத்துமோர் சிறிது
பண்ணவேண் டுவபணி விடுத்துப், புகலுரை
யடக்கித் தனியிடத் திருந்து போற்றிசெய் தருட்
குரு பதம்பின், மிகமுயன் றிதய வருத்தமெய்
தாமன் மெலிந்துகை விடுதல்செய் யாம, லகமுக
மாக்கி மநத்தைநா டொறுமோ ரைம்புல னொழித்
தசை வறுப்பான். 67

உச்சியம் போதின் மீதரும் பசிக்கவ் வூர்வல
மாயிலந் தோறும், பிச்சைகை யிடையிற் காடிகூ
ழேனும் பெற்றது பற்றியுள் வெறுப்போ, டிச்சை
யற் றருந்திப் பொருந்தவே காந்தத் திடையினுந்



தாகம்வந் தடையி, னச்சிநீ ரூரிற் புகுந்துறு தேரி
யாதியி னருந்துத னன்றே. 68

ஞாநசா தகன்மற் றுதயமா தியினு ணயக்
கொணு மயக்கமா தலினு, மீனமார் விந்து மிகு
மெனு வகன்றோ ரிகழ்ந்தகை விடுத்தவா தலி
னுந், தானிரந் தொருபோழ் தருந்திடு முணவுஞ்
சமமலாற் றுழினு மிகினு, மூனதா ருடற்க ணு
யுறு மற்றைக் குறக்கமு மிகுந்திடு மன்றே. 69

மிகுத்திடு முணவிற் படுதழ லவிப்பான் விடு
யவன் கலங்கனீர் தெளிநீர், பகுத்திடா னது
போற் காடிசோ றேனும் பசித்தவன் புசித்திட
றகுமா, னகத்தவர் மனைதோ றழன்றெனக் கடின
னல்கிடென் றொருவன்வேட் டுணலா, னகத்துறு
பசியும் போக்கிமற் றதுகொ டதிகமென் பயன
டை வாளே. 70

எரிந்தெழு பசிநோய் தணிக்கவோர் மருந்
தென் றேற்றுணு தொருவனுச் சுவைவேட்,
டருந்திடு மளவும் வருந்தியப் பிண்ட மனித்தவர்

தம்மைநோ வதுவென், னிருந்துள கிரக வாழ்க்
கையும் பினைவர் தெய்திய துறவுமல் லதுவீண்,
டிரிந்துடல் வளர்த்தி யெனத்தனை விடுத்த தெய்
வத்தை நோவது மறந்தே. 71

எய்தவ னுறமற் றேவையென் றேவ தென
வுல குலைத்தலி னொருதாஞ், செய்துள வினைக்
குத் தக்கபே றிறைவன் சேர்க்குத றனைமறந்
தென்றே, வுய்தவ மறியாக் கைதவ ரைய முதவி
டார் தமையுத வினரை, வைதல்வாழ்த் திடுதல்
செய்துமற் றொருசாண் வயிறுநா டொறும்வளர்ப்
பதுவே. 72.

தன்னரு குறுசேய் சிரத்தொரங் குலியாற்
றன்புடைத் தொருவன்மீ தொருவன், சொன்ன
மாத் திரத்தி னவனையச் சேயுந் துணிவுகொ
டெழுந்தறை குதல்போன், முன்னவன் விளை
யாட் டாயவைந் தொழிற்கு முன்னிலை யாயசி
வனைப்பார்த், இன்னல்செய் சாப மிட்டுமோ தவறு
மென்கொலோ தவமிழப் பதுவே. 73.



பெண்ணைவிட் டகலா வொருவிடன் றன்
னைப் பிறர்வழக் கினிற்கொடு போகக், கண்ணை
விட் டகலா தவள்வரல் போலுங் கண்டுகொண்
டேகியாங் கஃதெவ், வண்ணமா யினுஞ்சிக் கிரத்
தினின் முடித்தவ் வனிதைபான் மறிதரன்
மானப், பண்ணிய சமாதி விடுத்தறி ஞருந்தம்
பசிதணித் தனையுறும் பரிசே. 74

நடந்துறங் கொருவன் றனைமல ரமளி நண்
ணுமா புரியின்மற் றவனுங், கிடந்துறங் குவதைக்
குறித்துமுன் னுறக்கம் விழித்தவா கிளக்குதல்
போலுங், தொடர்ந்தொரு கணமு மிடைவிடா
ஞாந நிட்டரைத் தூயதஞ் சமாதி, யடைந்தனர்
விடுத்தா ரென்பரே காந்த மவர்க்கநு கூலமா
தலினே. 75

நித்திரை தடைமீ றிடிற்கைகால் போர்த்து
நிசியிடைப் பூவணை துயில்வா, ரொத்துறு விடை
யிற் கிடையுமப் பயிக்க வூணுமெங் கணமித
மென்னி, வித்தனை யோர்நித் திரைமிகிற் பாயு,

மெரிகொடும் பசியிகிற் கறியுஞ், சித்தமே வேண் டா வென்றசொல் லன்றோ தெரியுமோ வவர்க் கவை யிகலான். 76

தென்பா வையினுட் கழிவட பரவை சேர் நுகத் துளையினிற் செலல்போ, லொன்பதிற் றென்ப தோடெழு விலக்க முளவியோ நியும் பிழைத் தேறிப், பின்பிறப் பிதுபெற் றதனினும் பாதி பிறப்புறு நாளதாக் குரரி, னின்பமீ தென மிக் குறங்கலர் பிறவிக் கறவெரீஇ யுளந்துளங் கிடுவோர். 77

அறவுநித் திரையைத் துறந்திடி னுடற்க ணடைதரும் பிணிகண்மற் றதனாற், குறைதலு மிகலு மின்றியோர் சமமாக் கொண்டுகண் டுயின் றுபின் விழிக்கி, லுறசுகா தநத்தி லெழுதுசித் திரமொத் துரைகுவ ரிறைதலை கழுத்தன்; செறி யுடல் வாங்கா தோங்கநே ரவர்பாற் சேருமோ காமநோய் சிறிதும். 78



உறக்கமும் பசியு மிருந்திடிற் காம முற்றிடா தற்றபோழ் துள்ள, மிறக்குமொண் சமாதி யடை தலி னடையா விடையிலு மடுபவத் துயரை, மறக்கலா மையினு லச்சமும் வீட்டை மதித்தலா லிச்சையு முடலை, வெறுக்குநிக் கிரகத் தாற்களிப் பறலு மேவலான் மேவிடா ததுவே. 79

எங்குள புனன்மற் றிதுகழீஇ யிடுதற் கென் றுகா விடைப்படு மசுத்தக், கங்குடல் குலையு மொருமகன் மலம்புக் காடவு நாடுமே யதுபோற், பொங்குபுன் மலவூன் பொதியிதென் றொழிப்ப லெனவரு வருத்துடல் பொறுக்குந், துங்கமா தவற்கு மெங்ஙன மடவார்த் தோயவு நேயமுட் டோன்றும். 80

அருந்தவம் புரிவோ ரெதிருரு வசிதா ளுதிய மாதர்வந் துள்ளம், வருந்திநின் றியாது புரியினு நோக்கார் மற்றிவ ணுற்றமா தரையும், பொருந்து மோர் வெளின்மீ தேறவிட் டுளநாய் போனனி

நோக்குமென் போல்வா, ரிருந்துள விடத்தாங்
கவர்வரின் விழியோ டென்படு மோபதைத் திதயம். 81

பெற்றதாய் முதலோர்ப் புரையமா தரையென் பெருந்துற வடைந்துளோன் றவமுஞ், சிற்றொரு மினைத்தன் மனையென விநோதத் திறத்துளைப் பிணமுனங் கிரகத், துற்றநா டனது மகடனை யவளை முறைத்திடா மையிற்பழு தென்னூற், பொற்றொடி யவர்தோ டழுவவும் விழைதல் புரியினென் னுங்கொலவ் வறமே. 82.

சிறந்தகற் புடைய மாதரும் பரத்தை யருமலாத் தெரிவையர் புவிமேற், பிறந்தநாட் பிறந்தான் போலுநெஞ் சகத்தைப் பிரிநடை யுரியனு மொருவ, னிறந்ததன் னிச்சை யெவணுமவ் வண்ணை மிகத்திலுஞ் செயப்படா துடலைத், துறந்தகா லையினு நரகில்வீழ்த் தியம தூதுவர் வருத்தலி னன்றே. 83



மைப்படு விழியா ரின்பமோர் முள்ளி மலசின்வாய்த் தேனையொப் பெனக்கண், டொப்பில்பே ரின்பம் வேண்டினேன் வேண்டி யுலகர்வே றெவைகொடுத் திடினுர், துய்ப்பமற் றுடுப்ப விரண்டுமே யன்றித் தொடுவனோ பிறிதிவற் றினுக்கூர், குப்பைசா ரிடம்புக் கிடுதலி னவற்றைக் குறித்தொரோ ரிடம்புகா மையினே. 84

தனைநனி யிரந்து வருந்திமற் றொருவன் சந்தந மாதிய பூசி, யிணமலர் மாலை புனையினு முனியா விழுத்துவை தடித்துதைத் துடலிற், பினைமல மாதி பூசினு மன்றேன் பிரியமப் பிரிய மொன் றின்றி, வினைவழி முனைவ னைத்தொழில் புரியும் விதத்தையே நோக்கியுண் மகிழும். 85

தந்தைதாய் பலமா தியகொடுத் திடவுந் தக்கைபுண் செவியினுக் கிடவு, மைந்தவா வெனலுங் குதித்தெழுந் தோடி வருதல்போ குதல்செயு மகவி, னைந்தொழில் புரியு மெந்தையூழ் வழியீந் தருள்சுக மாதிய வருங்காற், சிந்தையுள்

விழைந்து முற்செலா ரழிந்து பிற்செலார் மாசறத்
தெளிந்தோர். 86

இத்தரை யிடைப்பா ழாயவா லயமற் றிருண்
மிகு முடுக்கா திகளிற், சுத்தமெய்த் தவரொப்
பொழுதடைந் துறினுந் தோன்றுறா தச்சமங்
கவர்பா, லத்தனிவ் வுடலைப் புரக்குஞான் றழிப்பா
ரிலையவ னேயினு மழிக்கின், வைத்திவண் புரப்
பா ரிலையெனுந் துணிவு மநத்தினு ளிருத்தலி
னன்றே. 87

ஊனையோம் புதல்கை விடுத்தனை யுவப்பா
ருணர்வொன் றுளுடை நம்பி, தானுரைத் தமை
யா னுடல்விழைந் திடினத் தத்துவ நிலையுங்கை
தவறி, யீனமார் பிறப்புற் றிடுவினைத் தொழிற்கு
மிறையதி காரியென் றெண்ணு, ஞானமொன்
றனையே தொடருமோர் புருட னண்ணுவன் பா
கதி திண்ணம். 88

உள்ளதுண் டாமற் றில்லதின் றெனவெண்
காடரோ திடுதலி னுறமூழ், தள்ளொணு மையி



னெவ் விதத்தினு நுழைந்து தவம்புரி காலையூ
னுயிரை, விள்ளல்செய் திடினு ஞானசா தகனுண்
மேவுமவ் வாதனை யொடும்போய்த், தெள்ளிய
போக முண்டுமீண் டடைவன் சிவமதற் பவம
தொன் றிரண்டில். 89

அருந்தவ விலக்கிவ் வுடற்பரிப் பதுதா னச்ச
மா திகடரு மூலர், திருந்தூஞ் சிந்தை சிவன்
கணே யாவர் வரினுமென் றமையிற்பே திப்பான்,
பொருந்தினும் வாளோ டெதிர்முதிர் கொலைவெம்
பூதமா தியவளைந் திடினு, மிருந்தநஞ் சமாதி
நிலைகுலை யாதோ ரெண்ணிய வெண்ணியாங்
கடைவர். 90

தேவர்மா முனிவ ரசுரர்வா ளரக்கர் சித்தர்
வித் தியாதரர் முதலோர், யாவரும் விரும்பிச்
சித்திபுத் திகளு மெட்டுணை யச்சமா தியவுண்,
மேவுறா தகற்றித் தவம்புரிந் தடைந்தான் மேல
தா மூலபண் டார, மோவற வவையே சூடிசொ
ளென் போமனஞ் சடையரா லடையவும் படுமே.

ஒருவனுக் கிருளற் றுரியசிற் சொரூப முன்
னவா விளங்கினன் றறமிப், பருவர லுருவப் பற்
றுமற் றதுநேர் படுமள விறைபுரி தருமைங், கரும
மெவ் விடத்துங் கண்டுதற் செயலைக் கைவிடுத்
தச்சமா தியவுண், மருவுறு தகற்றித் தவஞ்செயல்
வழக்கால் வாழியெங் குரவனீ டூழி. 92

வைராக்கிய தீபம் முற்றுப் பெற்றது.

பாயிர முள்படச் செய்யுள் 101.

சர்வஞ் சிந்மயம்.





சற் குருப்யோ நம:.

ஜகத் குரு
ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
சம்ஸ்கிருதத்தில்
அருளிச் செய்த

# (பிரஹ்ம நாமாவலி)

## இலக்ஷணவிர்த்தி.

இது
கோவிலூர் மடம்,
ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக சுவாமிகளால்
செய்யுளில் மொழி பெயர்த் தருளப்பட்டு
திருப் பூவண மடாதிபதி
ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய
சுவாமிகளால்
பதிப்பிக்கப் பெற்றது.



# இலக்ஷணாவிர்த்தி.

## பிரஹ்ம நாமாவலி.

1 நிர்விகாரி
2 ஞாந வடிவன்
3 அசங்கன்
4 சுயம்பிரகாசன்
5 சொப்பிரகாசன்
6 ஆநந்த ரூபன்
7 சத்தியன்
8 நிஷ்கிரியன்
9 மூத்தன்
10 அகர்த்தா
11 அபோக்தா
12 நிருபத்திரவன்
13 நிர்லேபன்
14 நிர்ச்சம்பந்தன்
15 கூடஸ்தன்
16 ஆத்மா
17 நிர்த்தோஷன்
18 அப்பிரமேயன்
19 பிரத்தியக்ஷன்
20 அணு
21 அசரீரன்
22 நிரிந்திரியன்
23 அப்பிராணன்
24 அமநசன்
25 நிர்மலன்
26 சுத்தன்
27 புத்தன்
28 சர்வக்ஞன்
29 பரமாநந்தன்
30 சம்பு
31 அசலன்
32 நிர்க்குணன்

33 நிருவிகர்பன்
34 நிராகாரன்
35 நித்திய முக்தன்
36 அநாதி முக்தன்
37 அச்சுதன்
38 க்ஷேத்திரக்ஞன்
39 மனோவாசாமகோசரன்
40 அவ்யாகிருதன்
41 அக்ஷரன்
42 திருக்
43 பிரத்தியக்
44 சின்மாத்திரன்
45 சத்து
46 நிரீசுவரன்
47 நிர்ஜ்ஜீவன்
48 நிஷ்பிரகிருதி
49 அசம்சாரி
50 நிர்ப்பத்தன்
51 நிரவயவன்
52 அபரோக்ஷன்
53 சுவயம்
54 அஹேயன்
55 அநுபாதேயன்
56 அப்பிரவிருத்தன்
57 சிவன்
58 அமிர்தன்
59 நிரூபன்
60 சாந்தன்
61 அபயன்
62 நித்தியாநந்தன்
63 நிர்விஷயன்
64 அநூதநன்
65 புராதநன்
66 சூந்யன்
67 மகா சூந்யன்
68 நிவிர்த்தன்
69 அகாமன்
70 அலோபன்



71 உந்நதன்
72 அக்குரோதன்
73 நித்யன்
74 சர்வகதன்
75 சர்வாதாரன்
76 நிராதாரன்
77 ஆதி
78 அநாதி
79 விபு
80 மகத்
81 நிரஞ்சநன்
82 காரணன்
83 அகாரணன்
84 சாக்ஷி
85 ஸ்தாணு
86 பரிபூரணன்
87 அநந்தன்
88 சர்வசமன்
89 சர்வாதிஷ்டாநன்
90 அகண்டன்
91 அபரிச்சிந்நன்
92 அநாவிருதன்
93 சர்வகாரணன்
94 பிரமம்
95 யதார்த்த வஸ்து
96 சர்வாத்மா
97 சர்வாகாரன்
98 அநேகரூபன்
99 ஏக ரூபன்
100 பரமார்த்தன்
101 வஸ்து
102 நிஷ்பிரபஞ்சன்
103 நாநா ரூபன்
104 அபேதன்
105 நிர்விசேஷன்
106 அத்வைதன்
107 சர்வாபாவன்
108 சர்வதோமுகன்

## விஞ்ஞாபநம்.

# பிரஹ்ம நாமாவலி.

இந்நூலில் பிரஹ்மத்தினது 108 நாமங்களை கூறலின் "பிரஹ்ம நாமாவலி" அதாவது பிரஹ்ம நாமத் தொகுதி ஆகும்.

பிரஹ்மத்தின் லக்ஷணங்களை மீண்டு மீண்டும் ஆவிருத்தி யிந் நூலில் இன்மையின் "பிரமத் திற் குரிய வாகும் பெயர்க ளூற்றெட்டி னுக்கும்" என்ற சொல்லுதலினானும், நூலின் பெயர் விளங்கக் கூறுமையானும் "பிரஹ்ம நாமாவலி" என ஒரு நூல் சம்ஸ்கிருதத்தில் இருக்கின்றமையின் இப் பெயரே சாலச் சிறந்ததாம்.

---

## இலக்ஷணாவிர்த்தி.

# (பிரஹ்ம நாமாவலி.)

ஆரணம் பன்முகத் தால நாதியே
காரண னேயெனக் கழறி யேத்திடும்
பூரண மாஞ்சிவன் புதல்வ னாகிய
வாரணா நநத்தனை வணங்கி வாழ்த்துவாம். 1

காரண மானதன் கலையி னோர்கலை
தாரணி தனிலுறுந் தலங்கண் மேவியந்
தாரண வுரைப்படி யடங்கு மம்பலப்
பூரண நடேசனைப் போற்றல் செய்குவாம். 2

சித்தரும் பரவா நின்ற சீர்மிகுங் கழனி
தன்னிற்,பித்தனா மெனையு மாளப் போரு ளுருவா
யுற்ற, முத்தனா முத்தி ராம முதல்வனாற் கமல
பாத, நித்தமுந் தொழுது வாழ்த்தி நெஞ்சினி
லிருத்தல் செய்வாம். 3

வானவ ரசமாந் தொடர்பினா லுலகோர்
வழுத்துறும் வன்னியைங் கரனை, வானவ ரதந

மணியறு முகனை மாசறு கொற்றவா னிறையை, வானவர் முதலவன் பாலனை வலவன் வணங்குநற் திருநெலை மாதை, வானவ ரதனை முத்திரா மேச வள்ளலை வணங்கிவாழ்த் திடுவாம். 4

பிரமத்திற் குரிய வாகும் பெயர்களாற் றெட்டி னுக்கும், விரிவதாம் பநுவ னூலின் விளங்கிய பொருள்க ளுள்ளத், துரமதாத் தரிக்க வேண்டி யுற்றிடுங் கவிக ளாகப், பரமசற் குருவா யோங்கும் பகவனின் னருளாற் செய்தேன். 5

பன்னுபா யிரக்கவிக ளிருமூன் றாகும் பகர் நூலின் கவிநூறே டொன்ப தாகு, மன்னகவி முற்றுநிறைந் தெங்கு நின்ற வஸ்திபா-திப்பிரிய சொரூப மான, மன்னன்முத்தி ராமலிங்க தேசிகேசன் யநுவுமென திதயமதற் றுரைத்த தாகுஞ், சொன்னவிந்நூ றனிற்கவியொன் றருத்த மேனுந் தகளறவே யறிந்தவர்கள் பிரம மாவர். 6

பாயிர முற்றிற்று.

---

## நூல்.

சொல்லுறு மைங்கோச நாமல்ல வதனி னூற் றோற்றலிற னரைதிரையுடன் றாய்திலா வாலிபம தாதியுந் தாகபசி துனுபெலன் பெலம தில்லோ, னெல்லையற வேசொனவ னவையிலோ னுதியு மிகழ்காம மதமுலோப மிழிபயங் குரோதங்க ளாதியுஞ் சுகதுக்க மியலுட்பி மானமான, மல்லனுட னேகாண லாதியும் மறியாமை யறிவொடு சுழுத்திவிடய மவைகடமின் வருசுகமு மாகவைங் கோசத்தி னமர்விகா ரம்மெமக்கொன், றில்லையவி தம்பஞ்ச கோசங்க ளுறுவிகா ரங்களவை யின்மையினையு மிலகவறி கின்றவறி வேயுருவ மானதா லியாநிருவி காரியாமே. 1

இன்னலே யுருவ மான விந்தவைங் கோசங் கட்குந், துன்னுமக் கோசங் கட்குச் சொல்விகா ரங்க ளுக்கு, மன்னிய மாக நின்றே யவைகளை யறிவ தாலே, மன்னிய நாமே ஞான வடிவமென் றறிந்து கொள்ளே. 2

ஞானமில்லா லந்தனினு ஞானந்தோன்றி
னண்ணுபினு மூன்றவத்தை தமிலேதோன்று,
மூனவுல கங்கள்வரும் போதுங்கூட வுதியாம
லேகின்ற போதுங்கூட, வினமுட னேகாம
லிவைகளியாவு மியல்பாகக் காணுமறி வேசொ
ரூப, மானதனு லொன்றுடனுந் தொடக்கற்
றென்று மமர்ந்திடுசா மசங்கனென வறிந்து
கொள்ளே. 3

சகமதனைப் பிரகாசஞ் செய்புஞ்சண்டன்
சசிவந்தி யாதியையு மவைவிளக்கு, மகஞ்சட்சு
முதலைங்கோ சத்தையுஞ்சொல் லவையின்விகா
ரங்களையு மவையின்றோற்றந், தகவுதிதி மரித்
தன்முத லையும்விளக்குந் தமையொன்றும்
விளக்கவொணுத் தன்மையாலே, யிகழ்விலதா
மியாமிகவுஞ் சுயம்ப்ரகாச னென்னவித யத்து
றுதி யாகவெண்ணே. 4

நாமிலமே லைங்கோச முதலாகின்ற நயமிச்
சகங் களையறிவா ரிலாமையானுந், தீமையிலா
வறிவுருவே யானநம்மாற் செகங்களெலா மிகவறி
யப் படுகையானு, நீமமதா யாவையுமிவ் விதமாய்க்
கானு ங்கரினமை யறிவதற்கோ ரறிவுதானுந்,
தேமறவே வேண்டாத படியினுனுந் துகளறு
சொப் பிரகாச னுமென்றோர்வாய். 5

காலமொரு மூன்றிலுஞ்செய் யுபயகன்மங்
கருதமைங்கோ சச்செயலாக் காண்கையானுஞ்,
சீலமிலைங் கோசங்க ளிலாதபோது மிரன்கன்மந்
தோன்றுமை யானுநாமிவ், வேலுசெயற் கோசத்
தின் புறம்பதானு மியாங்கருத்தா வுடன்போக்
தா வன்றதாலே, சாலவுறு கன்மபெந்த செந்ம
மாதி தரித்தலில்யா மானந்த ரூபனுமே. 6

திநமாதம் வருடமொடு காலந்தோறுந் திகழ்
சரநந் தொரும்வருமூன் றவத்தைதம்மி, லின
மாகிப் பிறந்திறந்து போகுமைந்தா மிழிவான
கோசத்தின் வேறுமாங்மாப், பனியான கோச
முதிப் பதற்குமுன்னும் பஞ்சவித கோசமழிக்

தொழிந்தபின்னும், தனியான வொருவிதமா யிருக்கின்ற தன்மையினுஞ் சத்தியன்யாமென வேயோர்வாய். 7

இகவுலகம் பரவுலகங் களைக்குறித்தே யியற் றுபல விதகன்ம மவைகளாலே, பகுறுமெய்ப் போதினுமே விவகரிக்கும் பஞ்சவித கோசத்தின் சாட்சியான, விகழ்வினமைப் புறம்பாகக் காண லாகா திருந்தாலுங் கிரியையிலாத் தன்மை யாலே, புகழ்தலுறு நாந்திநநிஷ் கிரியனென்றே புண்ணிடீ யறுதியதா யெண்ணுவாயே. 8

ஞாநமுதித் ததன்பின்பைங் கோசங்கட்கு நமைவேறாய் மிகவுமறிந் ததுவேபோல, ஞாநம் வரு முனுங்கோச மவைக்குவேறா நாமிருந்தோ மென்பதுசித் தித்தலானும், பாநமலாக் காலத் தும் பஞ்சகோசம் பண்ணினசஞ் சிதகன்மந் தமைக்குறித்துப், பாநமதா நாங்கருத்தா வாகா தாலும் பலவிதசஞ் சிதமறுநா முத்தனுமே. 9



ஞாநமுதித் ததன்பின்புங் கன்மஞ்செய்யு நவையுறுமைங் கோசங்க டமக்குவேறா, யீன மிலா நாந்திநமு மிருப்பதாலே யின்றமுத லாகாமி யங்களாக, லூனமதாம் பஞ்சவித கோசஞ்செய்யு முறுகன்ம பெந்தநமக் கிலைய தாலே, ஞாநவுரு வாகியநா மகர்த்தாவென்றே நாடியுளக் தனிற்றிநமு நண்ணுவாயே. 10

பிராரத்த கன்மமதாற் சரீரநாசம் பெறுமள வும் வருகின்ற சுகதுக்கத்தை, யிராகவெறுப் புடன்புசிக்கு மைங்கோசங்கட் கீநமினு மந்நியமா யிருப்பதாலே, யிராவுசுக துக்கமவை புசிக்கின் றேனாய் மேவாமை யானுமறி வாமெமக்குப், பிராரத்தம் வேண்டாத படியினும் பேசுகின்ற வபோக்தாநா மெனவேயோர்வாய். 11

சனிவாத பித்தஞ்சி லேர்பநம தாதியாய் நவில்வியா தியுமுறிச்ச னலிகூடு மிடியாதி பீடை யுந் துலதநு நண்ணுறும லாதிருக்க, தநுவினுக் கிலதாலு மாமயக் கங்குரோ தங்காம லோபமுமை

சார்செவிடி லச்சைமுத லானசுர மேருக்க தநு
வினுக் கன்றிமூல, தநுவினுக் கில்லாத தாலுமே
காரியத் தநுவாக்கு சுரமுமூல தநுக்குறுத லாலு
மித் திரிவிதசு ரங்களுந் தநுவினையல் சீவனுக்கே,
சலியாத தாலுமே யறிவாந மக்கிப்ர சங்கம்வர
ஞாயமில்லாத் தன்மையா னிருபாதி யாகின்ற
நாமிகத் தவறினிருபத் திரவனே. 12

பகர்தலுறு தூங்கினவன் கையிற்றங்கும்
பதார்த்தமது நீங்கியிகத் தானேசெல்லுந், தகை
மையுற பூர்நமய மாதியான தரும்பஞ்ச கோசங்க
ளார்மாவாக, நிகழ்தலுறு மெமக்கயலாய்த்
தோன்றிவேறாய் நின்றுபுறம் பேயிறந்து நீங்க
லாலே, யிகழ்விலதா யிருக்கின்ற நாமேநித்த மீன
மிலா நிருலேப னெனவேகொள்வாய். 13

தானலவா யுறும்பஞ்ச கோசந்தன்னைத்
தானறும் படியாயு மவற்றின்வேறாய், ஞானவுரு
வாகுநமை நமக்குவேறாய் நண்ணவுமே வேண்டு
மெனத் தவஞ்செய்தாலு, மீனமலா லாகாத படியி



ஞனு மியனித்ய வபரோட்ச வெமக்கெக்காலு,
மூனமுறுங் கோசதொடக் கற்றதாலு மொப்பி
னிர்ச்சம் பந்தனக மெனவேயோர்வாய். 14

ஆர்றுகொல னடைகல்லே கூடமற்ற தவி
கார மாளலு மடவிகாரந், தோற்றுதல்போ லறி
வதனிற் பகுதியீசன் றவிதசகஞ் சீவருதித் திறத்
தலானுந், தோற்றியனவ யழிவதற்கு மூலமாகிச்
சுயஞ்சித்தா யிருக்கின்ற காமவற்றிற், சாற்றுபற்
றற் றறலாலு மிகவும்யாமே சாரகர்த்தா வாகியகூ
டஸ்தனாகும். 15

நானென்று மாநத்துக் கிடமதாக நவில்
கின்ற வாங்மாவாய்த் தோன்றுநின்ற, வீரமுறு
புத்ராதி தூலசூக்க விருதேகஞ் சீவனுமே வேறு
பேர்பெற், றூசமிறன் புறப்பாகித் தோன்றலாலு
முறுமிலைவகட் கப்பாலாய் நிருவிகார, ஞானகரப்
பிரமமதாந் தானும்வேறாய் நண்ணுத தாலுநா மாத்
மாவாகும். 16

தோடமெனும் வாதமுத லானதோடந் தன்னியிடு மிராகாதி யதனினோடும், பீடுபெறு ஞான வஞ்ஞானங்களோடும் பிறத்தலுட னிறத்தலுமே மயமதான, சேடிலதாந் தூலவுடல் சூக்கதேகஞ் செப்பியிடுஞ் சீவனொடு பூதங்கட்குங், கேடிலதாய் வேறாகி யிருப்பதாலுங் கினத்தியநிர்த் தோஷ னென வறியவேண்டும். 17

ஆனபொறி யாலறிதல் பிரமேயந்தா னன்றி யறி யாததப் பிரமேயமாகு, மூனவிந்தி யத்தறி சத் தாதிகட்கு முட்காரணத் தறிகால திக்கு வஸ்து, வானதெனும் பிரகிருதி புருஷருக்கு மங் கியமா யிருகாரணத் தறியலாகா, தீங்கிலா தவை களையு மறிவதாலே யிலங்குசற்சிற் சுகநாமப் பிர மேயன்றான். 18

ஏகதே சத்துடனெக் காலுந்தோன்று மியற மோ காரியமுப் பாதென்றிற்கு, மாகமெலா மெக் காலுந் தோன்றிசற்கு மங்கங்கண் முழுதினுமெக் காலந்தோறுஞ், சோகமுடன் றோன்றுறசீ வர்க்



கும்வேறாய்ச் சொல்கால மவத்தைமுழு தினுமே நாமொன், றாகுபிரத் தியக்ஷமதாய் விளங்கலாலே யறிவாநாம் பிரத்தியக்ஷ னாகுந்தானே. 19

பலகணி வெயிலினிற் பரந்து தோன்றிய
சலபர மாணுபோற் சாட்சி யாமெமை
யலைவுறு பொறியறி தற்க லாததா
லிலகுநா மணுவென விதயத் துன்னுவாய். 20

பகருமுட லுறுங்கன்மி யோகிலோக பாலர் வைசு வாநாரா தியசீவர்க்குஞ், செகசரீர முடை யீசன் றனக்கும்வேறாய்த் திகழுறுநாஞ் சிற்சுக சத் துருவதாலுந், தகைமைநமக் கிவ்விதமோ ருடலமில்லா தாலுமுட லெனதெனது பவத்தா லெற்கு, மிகவரிய மநித்தமெனும் யுத்திலோக மேவுமத னாலுமசரீரனாமே. 21

அவனவன் சாதியின் றொழிலவா வர்க்குறவி னரியர்சா தித்தொழிலது மமருசா தாரணம தா கிலது யோற்றேக மதனிலே வேறுபட்ட, வவமு

றும் பொறிகள்பல் விதமெனுங் காரியத் தாருமற் றென்றுசெய்ய வறியாம லதனை தன் காரியங் கை வந்து வதுவுநன வதனின்மட்டும், விவகரித் தூக் கநவி னொடுசுழுத் தியிலின்ன விடமென்று காண லற்றே வீகின்ற விர்தியத் தயலாக வவையமவ் வியாபார மவையுமறியு, மவிருமறி வேபருவ மாகியிந் தியமுதித் தடங்கலவை தொழில்கடம் மை யறிதலுட னசையாம லுறுநாளி ரிந்திரிய ஞருமென வறிகுவாயே. 22

பெலமுடனே பெலமிலதாய்க் காணப்பட் டும் பேசுபசி தாகமுடன் றோற்றப்பட்டு, நலம துடன் சீவித்தேன் மரித்தேனென்று நாடுநா வதனின்விவ கரித்துமற்றப், பலவிதமா மவத் தைகளிற் காணலாகா ப்ராணனுக்கும் வேறாயத், தொழிலைக்கண்டு, நலமிலதன் றன்மயின்றிச் சாட்சியாகு நாமசைவி லப்ராண னெனவே யோர்வாய். 23



ஒருமொரு கூத்தாடி பலவேஷத்தை யுருத லெனக் காமாதி பலவேஷங்கொண், டாருநன வதனின்வெளிச் சகமேயாகி யயர்கநவி னுட்சக மே யாகிமற்றைச், சீரிலதாஞ் சுழித்தியினிற் காணுதேகுந் தீதான மநச்செயலைக் கண்டு கொண்டு, சேருமதற் கந்நியமாய்ச் சாட்சியாகித் திகழ்வுறுநா மம்மநசென் றறிவாய்மைந்தா. 24

அறைகின்ற மலமூத்தி ரங்குப்பை சேறதிழி வாஞ்சுடலை சேரிமுதலா யளவின்மல மேவுற்ற புலியொடுக லங்கல்புகை யாகின்ற புழுதிமுதலா, யுறைகின்ற மலமேவு நான்குபூ தத்தினுட னூற கோழை சளிபித்தமு மொழுகின்ற மலமூத்ர முத லான மலமுற்ற வூனமுறு தூலதநுவோ, டுறு கின்ற காசபட லங்குரோத காமமுத லொழிவின் மல முற்றசூக்க வுடலினுடன் ஞாநவஞ் ஞாநமல முறுசீவ னுடனைந்து தொழில்களாதி, நிறை கின்ற மலமுற்ற வீசற்கும்வேறாகி நீண்மலமு மற்றுமிகவு நிகழ்கின்ற ஞாநவா நந்தவடி வானநா நிருமல னென்றுகொள்வாய். 25

கொள்கின்ற சாதிவன் ஞச்சிரம மதனுடன் கூறதன தன்மதன்மங் கூடுமத னுறுபயன தாஞ்சொர்க்க நரகாதி குறைவிலதின் மிச்சமான, வுள்கின்ற கோடிபவ முதலொருடக் குற்றுமிக வுலெ கின்ற சீவருடனே யுளகிருபை யவதார மாற்ச ரிய முதலான வுறுதொடக் கும்றவீச, னெள் சீவர் சங்கத்த சுத்தமுறு பூதங்க ளிபாவுக்கும் வேறதான யாமிவைக ளுடனுற்று நின்றிடினு மெமையசுத் தங்களெய் தாததாலும், வில்கின்ற விவைகணம் முடைவிவர்த் தங்களாய் மேவியே யுறுதலானும் விமலசித் தாகின்ற நாஞ்சுத்த னென்னவே விளங்கிடவ றிந்துகொள்ளே. 26

அறைதலுறு தாஞபுங் கூடிநின்று மறிவற்ற கடமாதி பூதாதிக்கு, முறைதனக்கோ ரறிவிலதா யொன்றிஞேட யுறுதலிஞ லறிவெனவே தோற்றுகின்ற, குறைவுறுமூன் றுடல்சீவன் மா யைகட்குங் கூறலுறும் வேருகி யவைகடம்மைக், கறையின்றிப் பிரகாசஞ் செய்தெப்போதுங் கரு போத வடிவாநாம் புத்தனுமே. 27



அறிதலுட னறிதலில தாகியே மூவித வவத் தையுறு ஞேயத்தையு மறியாமை யுடனறிவ தாயி லது சர்வப்புத் தியாகின்ற ஞாநத்தையு, மறியுமவ னறிவிலா னெனவிலது முயிர்களா யமர்ஞாது ருக்கடமையு மவர்களினி விர்த்திபிர விர்த்தியையு மதுவதற் காம்பலனு மெப்பொழுதுமே, யறுதியா யினதென வவத்தைமூன் றதனினு மறிகின்ற வடிவமேநம் மளவிலா வுருவான தாலுமித் திரிபுடி யை யழிவிஞ மில்லையாயி, னறிவரில தாலுநாஞ் சகலதிரி புடிகளையு மறிகின்ற தாலுமிவித மனைத் தெனவ வத்தையும றியுநாஞ் சர்வக்ஞ ஞெனு றறிகுவாயே. 28

தநதாதி யாதிசெல் வம்பிரிய மதுவிரா சாதி யா னீங்குகாலை தவிராத கையுடைமை பிரியமது செலவாதி தன்னிஞ லொருவுகாலை, யினமான புத்ராதி பிரியமவ ரனலுற்ற விலமதா னீங்கு காலை யிழிதூல வுடல்பிரிய மதுபுழுதி யானீங்கி விர்தியம் பிரியமதுவும், பினமாம்பி ராணகண் டமதான வாக்கினே பெறுபோத கன்றசீவன்

பிரியமது வும்பிராண னிறுகாலே விட்டுமெக் காலு
மே பிரியவுருவாங், கநமான வார்மாவை யன்றி
யொன் றிவ்விதங் காரண படியினாலுங் கருது
மெக் காலுமே தானாக வுற்றநாங் சுழுபா மாநந்
தனே. 29

கநவிடயஞ் சுழுத்திசொர்க்க விடயர்தன்
னிற் காண்சுகங்க டமையெதிர்த்த காணந்தன்
னிற், றனதுசுகப் பதிவிம்ப மாகத்தானே தங்கு
தலா லுஞ்சுழுத்தி யுபேட்சைநிட்டை, தனுகா
லர் தனிலுதிக்குஞ் சுகங்களாந்ம சுகமான படி
யாற்றற் சுகமதின்றிப், பனுசுகங்கள் வரவேறு
வழியிலாத படியாலும் பகர்சம்பு நாமென்றோர்
வாய். 30

தூய்தற்ற கிரகமூர் தேசம்விட் டலைகின்ற
தூலவுட லோகலோகஞ் சுழல்கின்ற விருதேக
முடன்மண்ணை வளையமாய்ச் சூழ்ந்தலைக் கின்ற
தாகி, யெய்கின்ற வறல்வந்தி யிவையசைக் கின்ற
கா லிவைகளுக் கிடமதாகி யெய்துற்ற வம்பரம்



225

பௌதிகச மட்டியோ டெலயிலவை யாவுமுட
லாய்த், தோய்வுற்ற மெய்யறிவு ளசைகின்ற வீச
னுஞ் சொல்கின்ற வேகமுடனே சுழல்கின்ற
பறவையென வீரைந்து திக்கினும் சூழ்கின்ற
நூறுகோடி, யாய்வுற்ற கற்பங்க ளோடிமிக நாடி
டினு மளவைகா ணதாகி யங்கந்த சாட்சியா
யசைவிலா தமருநா மசலனென வறிகுவாயே. 31

சத்துவமாங் குணந்தனிலீ சனையுமாக்கித்
தருமிரா சதந்தனிற்சீ வரையுமாக்கி, யத்தமோ
குணத்திலுல கதையுமாக்கி யவைகடமை விரித்
தடக்கி யுகங்கடோறும், வித்தாமாய் விளையாடல்
செய்துகொண்டு விளங்குபிர தாநத்திற் கதீத
மாகிச், சுத்தவதிட் டாநமதா யபரிச்சின்ன சுகவடி
வா யுறுநாகிர்க் குணனென்றோர்வாய். 32

ஆதமையேழ் தத்துவமாம் விகற்பங்கட்கு
மப்பாலா யவையினதிட் டாநமாகி, யேகமதா
மத்துவித ஞாநமாகி யிருக்கின்ற நாந்தனிற்றன்
விகற்பமற்றே, போகுமிவை தமிற்கூடி னலும்

பற்றுப் புகனிமல படிகம்போல் விகற்பமற்ற, வேகலிலாக் கடமாதி யுறும்வெயிற்போ லிருக்கின்ற நாகிருவி கற்பனுதும். 33

ஆதவெளி யுருவாகும் பிரமமென்று மதற்குருவ நாமமிலை யமூர்த்தமென்று மாமுன்பினுட்புறமில் பிரமஞ்சாட்சி யாகுமென்று மறிபடுத லகிலாதி, லேகமதாம் பிரமமிதற் கநியமாகி யிவைவிளக்கு மறிவுநிரா காரமென்று மீரிரண்டு சுருதிகளுங் கூறலானு மியல்கதிரை நாடுமந முடனேநீண்ட, சோகசிதா பாசனுக்குஞ் சித்தமென்னுந் தொடர்பால்வாள் வெட்டுமனற் சூடுங்கையிற் றொடருதல்போ லிலதேற்றற் சுபாவசித்துச் சொல்லுருவ ரகிதமென வேண்டுமோவென், சோகமிலுத் தியினலு நாமேயுள்ளிற் றோற்றுபொறி வெளிப்பொறியின் விடயமின்றித் தொடரவைபை விளக்குமநு பவத்தினலுந் துகளினிரா காரனு மெனவேயோர்வாய். 34

அயர்கருத் தாவாயு மேபுசிப் பவனுயு வநுதினமு மமர்தலாலே யதன்மமொடு தன்மமத னுனி



தம் பெத்தனே யன்றியொரு காலுமுத்த, னய மாக வலனென்று கன்மகாண் டத்தினி னண்ணுமாங் மாவிதென்றே நாடுபிர மாதாவி னுக்குமஞ் ஞானத்தி னவின்மலங் கன்மமதனு, லுயருதலிற் பெத்தனு யுறுவன்ஞா னத்தினி லுயர்முத்த னுவனென்றே யுபாசனா காண்டத்தி லாங்மாவி தென்றுதா னுரைத்திடுஞ் சீவனுக்கு, மயலாகி நிருவிகா ரவ்வறிவ தாமெமக் காகுபெந் தத்தொடக்கு வனுகவொரு காலத்து மில்லாத படியினு லமர் நித்ய முத்தனுமே. 35

ஆமயர்வின் மூவர்முதற் றேவர்சாலோ காதியெனக் கர்பிதமா யழியுமுத்திக், கேமுறப் புறம்பாகச் சித்தித்தென்று மெள்ளளவுங் கிரகிக்க விடக்கூடாதாய்த், தோமறுசற் சிற்சுகமே வடிவாந்தம்மைச் சுருதியினு லுணர்கின்ற தநாதிமுத்தி, யாமதனு லேழைந்தின் மேலாநாமே யநாதிமுத்த னெனவகத்தி னறியவேண்டும். 36

நழுவல்சுத நழுவாதச் சுதமதாகு நாடுமொரு நூறண்டின் மேலிராம, னழுவுகின்ற

தூலவுடல் பிராணயத்தி னழுவுலிங்க வுடல்பூத
ஞாநந்தன்னி, னழுவவித்தை யாமையபரன் சீவ
னாக நவிலுமையே முக்கயலாய்ச் சுகசிற்சத்தாய்,
நழுவலிலா தெக்காலுந் தானேயாக நண்ணி
விளங்கிடுதலினச் சுதனுமாகும். 37

மூலவஞ் ஞாநகா ரியமதா யமர்கின்ற மூன்று
தநு வுஞ்சேத்திர முன்னுமிதை யறிபவன் சேத்
ரக்ஞனகுநீ மொழியர்த்த மறியேனெனல், சீவ
மில பாவவரு வஞ்ஞாந மிதுபரம சித்திலா
ரோபமாகித் திகழநா தியதெனச் சொல்வதா நா
னெனச் சேத்திரந் தன்னினுற்ற, வாலம்ப மில்
லறிவ நாதியா யுருவத்தி யாசமாம் பூர்வதேக
வாங்மவநு பவமாம்பி ராந்திமேல் வருதேக வாங்
மப்பி ராந்திகட்கு, மூலமிது பிராந்திமூ லப்பிரமை
யறிவின்மை மொழிசேத்ர மத்யாசமு மோகமென
நீக்கியவ திட்டாந மாயறியு முரணினுஞ் சேத்தி
ரக்ஞன். 38



மலையுமந மென்னலந் தக்காணம் வாக்கென்
னன் மருவுபத் திந்திரியமாம் வருமிருவ கைக்கு
மிக வெட்டொணுப் பொருண்மனோ வாசாம
கோசரந்தா, னலைவில்பொரு ளிந்தவித மாகுமேற்
சூநியம தாமெனிற் சுருதிபிரம மஸ்திபா திப்பிரிய
மென்றுமதை யறிபவ னதுவாவ னென்றுமின்ன,
மெலையதற வோதலிற் பொருள்சூந்ய மலவாயி
னெட்டொணு தெவிதமென்னி லெழுகின்ற திரி
விதவ வத்தையறி கின்றசித் தெலையுற்ற வாக்கு
மநதி, னலைதலுறு மந்நுவய வெதிரேக மவையை
யறி பொருளலா தவையின்விடய மல்லவா தலின்
மனோ வாசாம கோசர னுநா மென்னவறிவாய்.

ஆற்றுமுரு நாமமொடு விவகரிக் கப்படுவ
தாம்பொருள்வி யாகிருதமா மவையிலா தவ்வியா
கிருதமா மிதுசகம தன்கார ணப்பிரமமாச், சாற்
றும்வே தாந்தத்தி னிற்சாங்க்ய மாமதந் தனின்
முக்கு ணங்களுற்ற தகவுபிர கிருதிக்கு முக்குணங்
தாழுமே சமமுடன டங்குகாலை, யேற்றுபிர தாக

மோ டவ்வியா கிருதமூல கதன்மூல மென்று
சொல்வ திருவகையி னிற்சர்வ சத்தியாய் சித்தா
தா பியலுசர் வக்ஞபிரமந், தோற்றுலகின் மூலமா
மறிவில்பிர தாநமது துகளுலகின் மூலமாகச்
சொல்லுமிவ் வேதுவாற் சகமூல மானநாந் துரிசி
லவ் வியாகிருதனே. 40

நாசமுறல் சரமற்ற தக்ஷரநா முண்டுபிர ளய
னாக மவையினாச நணுகின்ற மூவுடற் சகிதசித்
தானநா சந்தவில தாலக்ஷரங், காசின்மறு யுத்திசரா
மெனல்வேத மதனினாற் கழறுபொரு ளக்ஷரந்தான்
கருதுமீ மாங்கிசன் சங்கைகமுன் னுள்ளபொருள்
காணலாம் பொறியினதனா, லாசின்மறை விதி
திட்ட தத்தையுங் கிரியையுற் றதையுமே யறையு
மென்னி லாரணம் பொறியினாற் பிரமமறி யப்ப
டா ததுவிதி பேதமென்னப், பேசுமவை
யாலுரு திமிசையைச் செயவொணா தென்றுதான்
பேசல்போலப் பிரமமே நாமென்ன வறியெனக்
கூறலாற் பிரிவினா மக்ஷரந்தான். 41



அறிவதுதி ருக்காம தான்மாவ லாதுதா னமர்
திரிசி யங்களான்மா வன்றுலோ காயதன் சங்கைய
கம் வநிதைமுத லானபோ கங்களெல்லா, மறிந்
தநுப விக்கையா லாகந்தி ருக்கென்னு மவனையே
சாருவாக னமரவே கண்டித்த லிந்திரிய மில்காலை
யறிவுகெட் டொன்றையுந்தா, னறிந்தநுப வித்தி
டா தாலுமே யிந்திரிய மமர்காலை யறிவதாக வாக
மது விலகலா லாகமறி வன்றுபொறி யறிதிருக்
கென்னுமவனை, யறிதத்வ வாதிகண் டித்தலய
னால்வழக் கற்றபடி யேபிராண னான்மாவ லாதிந்தி
யங்களான் மாவுமே யன்றென்று ரைக்குமவனை,
யறியுபா சகனுமே நீக்கலப் பிராணபொறி யாக
முத வியாவுமநமில் லாவிடிற் றேற்றுமை யான்
மநந் திருக்குமற் றதுதிரிசி யங்களென்னு மவனை
யுந் தார்க்கிகன் கண்டித்தல் புத்தியில் லாது
விடின் மநதுசலந மதனாற்றி ருக்கன்று புத்தியே
யறிவென்னு மவனையும் புத்தனீக்க, லறிதலுறு
யாவுஞ்சு ழுத்தியிலி லைச்சூந்ய மான்மாவெ னவனை
நவில்பட் டாசாரி யதுவுமான் மாவன்று றுஞ்சுகம

டைந்தனன் சுழுத்தியிலென, வறைசீவ னறி வென்பன் யாவரையு நீக்கல்வே தாந்தியறி விர்சீ வனே யாதியாய் விடயவரை யிலகலா வறிவல்லை வவையறிபு நாந்திருக்கே. 42

அகநோக்க மநதினில கப்படும் வஸ்துவே பிரத்தியக் கந்தவாந்மா வவித்தையா திகளினற் சீவாதி யாய்ப்பராக் காம்விர்த்தி வெளிநோக்க மாய்ச், சகமீசர் தேவர்சாஸ் திரமென்னும் விட யங்க டமிலலைந் தோய்ந்துபருவஞ் சார்ந்துபர மோட்சமதை நாடிலாந் மாமிகத் தருநிரதி சய முத்தியென், பகர்சுருதி வாக்யவுப தேசமுந் றுடல்பொறிகள் பல்கரணம் யாவுநீக்கிப் பன்னி டும் பிரத்யக்கு விர்த்தியென் றுறுபெயர் பற்றியே தன்னை நோக்கித், தகைமையுறு வெய்யிலின் விளக்கெனக் குன்றியே சாட்சிமாத் திரமதாகச் சவிக்கின்ற விர்த்திஞா னத்தையே காணுநாந் தயங் கிடுபி ரத்தியக்கே. 43

செடமாகி யறிவற்றுத் தோற்றுகின்ற செகங்களையுஞ் செயற்கையறி வாகவுற்று, மட



மான தறுமியற்கை யறிவின்மூன்று வகையான வுடல்களையு மியற்கையான, விடமான வறிவாகிக் காணுநின்ற வியல்பான நமக்கறிவே வடிவல்லா மற், றிடமாமற் றொருவடிவு மிலாததானுஞ் சிந் மாத்ர னெனவென்றுஞ் சிந்தைசெய்வாய். 44

நானெனமூன் றவத்தையினுண் ணேக் காய்த்தோன்று நாலேழ்தத் துவங்கள்வெளி நோக்காயீதென், றீனமுடன் றோன்றுறுமேழ் தத்துவங்க விருவகையா மையேழுந் திரங்க டோறு, மூனதிரி விதவவத்தை களினுந்தோன்றி யொழிகையினுங் கூடவொழி யாமற்றனே, யீன மிலா நித்தியமாய் நிலைமையுற்றே யிருக்கின்ற நாமேசத் தென்னவோர்வாய். 45

வரமான பிரமாதி காரணே சுரரோடு வைசு வா நரன்முதலதாய் மன்னுபர மாங்கிச னிறுகா ரியவீசர் வகையுடன் விராட்டாதியாய்த், திரமான சுத்தமீ றுஞ்சத்தி பேதங்கள் செறிசிவ ராயி ருந்து திகழிவரு டன்சரிய தாயிலக ஞானயோ

கங்களைச் செய்ததிகழைவ், காண்வேல ஞதியா
னூதனே சுரர்மிகக் கருதிவரி னிற்பாதியாய்க்
கதிர்ஞாந யோகஞ்செய் கந்திதண் டீசாதி கண
யோகி கட்கும்வேறா, யுரமான நமிலவர்க ளோர
றொர்கா லந்தனி லுதிப்பதா லுண்மையலதா
லுயர்வாம கண்டசித் தருவமா கின்றநா முறுநிரீ
சுவரனுமே. 46

சீவனற் றொழிறனிற் சீவனுஞ் சீவனைச்
செறிபொருள வித்தைதன்னிற் சேர்பிரதி விம்பி
தசி தாபாச னவனளவில் செந்மநற் கன்மமுற்றே,
பாவமறு சித்தசுத் தியையுற்று பாசனை பலசந்ம
முற்றவதனாற் பகருமே காக்கிரம டைந்துசா தந
முடன் பரமதே சிகனையுற்றே, தாவில்சிர வணம
நந மேநிதித் தியாசந சமாதிசாட் சாத்காரமுந்
தடையறச் செய்துறுமஞ் ஞாநமும் பஞ்சவித
தகுபிரம முந்தவிர்த்துச், சீவத்து வங்கெட்டு விம்
பனை தந்நியச் சித்துமாத் திரமதாகச் செறிகின்ற
தாலியா நிர்ச்சீவ னென்னவே தெளிவுடன றிந்து
கொள்ளே. 47



பிரகிருதி யின்மைநிஷ் பிரகிருதி சாங்கியன்
பெறுசங்கை சீவாதியைப் பிரகிருதி முக்குணத்
தூண்டுபெணி நிற்கையிற் பிரமநிஷ் பகுதியெவிதம்,
விரவுநயி ரூதிகளை யன்றியே சர்ப்பாதி மேவா
தின் வாக்குமாத்ரம் விளங்குமு லப்பகுதி பிரமத்
தை விடவற்பம் வேறிலெனும் யுத்தியாலுந், திர
நனவு கநவுசக மியாவுமதை யறிகின்ற சித்தாக
வழிதல்கண்டுஞ் சித்தின்வே றுயறிந் தவனுந்ம
பிரமத்தி செய்கின்ற பாவியென்றும், பரமிலவை
யாவுநம தருவென்று கண்டவன் பரப்பிரம மென்
றும்வேதம் பன்னலா லுந்திரப் பிரமமா கின்றநாம
மகருநிஷ் பிரகிருதியே. 48

வரமில்சம் சாரமில் லோனசம் சாரியாய்
வந்நமாச் சிரமங்களு மருவிவைக் குரியதந் மாதந்ம
பேதமும் வருமிவற் றின்பலமதாத், தருசொர்க்க
நரகாதி யும்மவற் றின்சேஷ சநநமா ஞதியாவுஞ்
சம்சார மாகுமிது தநுவைநா மென்றிடிற் றன்னை
யுறு மிவ்வுடற்குத், திரமருவு நசமநிய மெனவறிந்
திவ்விதந் தேர்சிதா பாசனுக்கே சிறிதுமிலை யின

னையு முடலையும் பொய்யெனத் தேர்ந்திவற் கறிஞ
மான, பிரமமக மெனவறிந் தறமெமக் கற்பமும்
பெந்தசம் சாரமில்லாப் பெற்றியாற் சுத்தசித்
தாகின்ற நாமிகப் பேணசம் சாரியாமே. 49

கட்டுண்ட வன்பெத்த னதுவிலன பெத்த
னுங் கள்வன்க யிற்றினாலே கட்டுண்டல் போற்
பிரம நாமெனும் புத்தியை மறைத்துமே களவு
செய்த, திட்டவஞ் ஞாநமது வந்தவுட னேயகந்
தேகமென மாநித்திடுந் திருடனும் புண்யபா வங்
குரோத காமாதி தீயபா சங்களாலுங், கட்டுண்ப
னப்போது துக்கபய செர்மங்க ணக்கிலா துண்டு
பரனற் கருணையின்மெய்ஞ் ஞாநம்வந் துடன்மாந
மற்றபின் கநபெந்த துன்பவற்கும், விட்டொழித
லாலுமுட லிலகினன் மட்டிடா வியனகண் டாநந்
தமாய் மேவெமக் கொருபெந்த மும்மில்லை யாத
லான் மிகநாம பெத்தனுமே. 50

அத்தமுறு சாணுதி யவயவமு டைத்தாகி
யமர்கின்ற மூவுடற்கு மநியமாக யாகாய வுருவமாய்



மூவிதவ வத்தையின் கரியதாக, நித்தமுறு மென்
றனக் கெற்கெனவோ ரவயவ நின்றிடா தாலுநம்
போ னிகழுண்மை யல்லாது தன்னதவ யவ
மென்ன நேர்கின்ற பொருளுமன்றிச், சுத்தமுறு
நம்மினிற் கற்பிதம தாகியே தோற்றலுறு முலக
மதனைத் தொட்டுமே யவயவமி லாதாலு மிவ்
விதக் துகளுற்ற வுபயவகையாய்ச், சத்தமுறு
மவயவஞ் சற்றுமே சார்ந்திடாத் தகுதன்மை
யோடுதானே தானுயி ருக்கின்ற நாநிரவ யவனெ
னச் சந்ததமு மெண்ணுவாயே. 51

ஆதரமாங் கன்மகாண் டத்திலோது மதர்ம
தர்ம மதன்பலன்கள் பத்திகாண்டத், தோதலுறு
தேவதையும் பரோட்சமாகு முயர்ஞாந காண்டத்தி
லோதுபிர்மங், கேதமுறு மவைபோலப் பரோட்ச
மின்றிக் கேட்டவுடன் றுணுகக் கிளர்தலாலே,
யேதமிலா தப்படியெப் போதுந்தானு யிருக்குநா
மபரோட்ச னென்னலாகும். 52

அறைசுயந்தா னுயிருத்த லெவிதமென்னி
லஞ்ஞாந காலத்தி லநியமாகி, மறைவிலதா யில

கேழ்தத் துவமுஞாந மருவினபின் றானலவாய்த்
தள்ளலுற்ற, வறிவிலதாந் தத்துவங்க ளிருபத்
தெட்டு மாகமுப்பத் தைந்தினுக்கு மப்பாலுற்ற,
விறவின்முப்பத் தாறாந்தத் துவமெப்போது மியா
மாக விலங்கலினுஞ் சுயமென்றோர்வாய். 53

இதுவென்று தள்ளலுற லேயமஃ தின்மை
யத கேயமது வெங்ஙனமெனி லியன்மூர்த்த
மோடமூர்த் தமதெனப் பிரமத்தி னுக்குபய ரூப
முண்டா, விதையறிந் திதுவல்ல வல்லவென் றறி
யென்ன விசைசுருதி சொன்னபடியே யியல்பிரம
மதனுடைய சச்சிதா நந்தமா யெய்தமூர்த் தங்க
ளுடனே, சுதவுலக மூர்த்தத்தை யுஞ்சுருதி யாதி
யாற் சோதித்த றிந்துகொண்டு சொல்லுமிது
பாம்பல்ல வல்லவென் றறிதல்போற் றுகளபர
மார்த்தமாகி, யதமதுறு மேயமா முலகையல வல
வென்ற கற்றிநற் பரமார்த்தமா யறிவான நாமகே
யன்னெனக் காணலா மாகையா னாமகேயன். 54

அடைகின்ற பொருளுபா தேயமறு பாதேய
மடைபடாப் பொருளதெவித மாமெனிற் கன்ம



காண் டத்தினிற் சொர்க்காதி யாகந்த மேவிரும்
பித், திடமதுட னித்யாதி நால்வகைக் கன்மமுஞ்
செய்துளோ னப்பலத்தைச் சேருவன் பத்திகாண்
டத்தினிற் சிவனாதி தேவர்களை மந்த்ராதியா,
லிடையறவு பாசநா திகள்புரிந் தோன்பதம
தெனுமுத்தி யடைவனித்ய வெழின்முத்தி யிச்
சையாற் சவணாதி செய்துளோர்க் கியலுபல மப்ப
லம்போ, லடைபடும் பொருளலா தேர்கவே யுற்ற
தா மாகவுறு கின்றவதனா லவத்தையின் கரியதா
யெப்போது மேவுநா மாநுபா தேயனாமே. 55

ஏற்றபிர விர்த்தமற் றவனப்ர விர்த்தனா
மெவிதமெனின் வங்கமதனி னேகிநோர்க் ககல்
கரை மரங்களே குதலலா தேகுகப் பலிலுற்ற
தான், றோற்றவே யேகாது போற்கணிற் றோற்றி
னுந் துனுமாதின் மாறியெனல்போற் றொழிலகங்
காமுறினு மாந்மதிட் டியினிலொரு தொழினமக்
கின்மையானுந், தூற்றகங் காரம தொழிந்திருந்
தாலுநஞ் சுயதிட்டி தனினிவிர்த்தித் தொழிலை
யஃ தறுதலா னும்மதின் கண்ணதாய்த் தோற்று

பய தொழில்குறித்து, மாற்றுநந் திட்டியிலோர்
பிரவிர்த்தி யார்தொழிலு மாமெமக் கணுகலிலதா
லவ்விருவ கைக்குமமர் சாட்சியா கத்தொடக்
கற்றநா மப்ரவிர்த்தன். 56

இலக்ஷிய னென்னுமது நான்காவ தாம்
பொருளெவிதமெனி லொன்றுதிக்கி, லிலகலற்
றொன்றொழித லுறுமவத் தாத்திரய வியனுசக
மூன்றினுக்கு, மிலகுகரி யாகியே நான்கதாம்
பொருளதா மெலையிலத் துவிதசித்தா, யிலகியுற
கின்றநாஞ் சிவனென்ன வநுதினமு மிருதயத்
துன்னுவாயே. 57

ஆகின்ற மாணமிலா தமிர்தம்யோகா வமிர்த
மொடு தேவாமிர் தம்புசித்தே, சாகின்றோ னவ
னென்றே யுற்றபேருஞ் சாரீசர் பிரளயத்தி னசித்
தல்போல, வேகவநந் தாநந்த சித்துநாமென்
றிலகலுறு மோட்சவமிர் தத்தையுற்றோன், சோக
முட னெருக்காலு நசியாதானுஞ் சொல்கின்ற
வமிர்தனெனத் துணிந்துகொள்ளே. 58



உருவமில் லாதவ னிருபண மெவிதமெனி
லூறுபூத பௌதிகங்கட் குருவமுண் டிவையையறி
சட்சருவ மென்பர்சில ருறுமிவையி யக்குமநமே,
யருவமென் றறிவர்சில ரதன்வியா பாரத்தை யறி
புத்தி யருவமென்ப ரப்புத்தி கர்த்தித்துவ போக்
தித்து வங்கடமை யறிகின்ற சீவனவனே, யரு
வென்பர் சீவனையு முண்டுபணி யாட்டியு மடக்
கிவா சனையதாக வமருமூ லப்பகுதி யருவென்ப
ரதனினுக் கதிதமா யிவைகளுடைய, விரிவொடுக்
காதிகட் கமர்சாட்சி யாகவே மேவியே யுறுகின்ற
நாம் விளங்கவே தோற்றினுங் காணொணாத் தன்
மையின் மிளிர்கின்ற நிருபணமே. 59

விறகினிலுண் டாம்வன்னி விறகைச்சுட்டு
விஞ்சாமல் வீதலின்மெய்ச் சுருதியாலும், பிர
கிருதி புருஷசையோ கத்தினாலும் பிறந்தவகண்
டாகார விருத்திஞான, நிறைபிரமத் தினின்வே
றும் பகுதிபூமா னிகழ்சாத்ர மாதிகளைச் சுட்டுத்
தானு, முறுகரியா யுற்றமயி லிறத்தலாலே யுலக
மில்நாஞ் சாந்தனென வோருவாயே. 60

பயமற்றோ னபயனா மொன்றுக்கொன்று பயமுற்ற மிருகபட்சி மநுடர்மன்னர், மயலின் முநி சுராசுர ருலோகபாலர் மாலயனே முதலான பெயர்களாலுஞ், சுயசித்தா மகண்டநமை யறுக்க வெட்டச் சுடநனைக்கப் பிடிக்கவடைக் கப்படாதா, லியலுமொரு பயமதுவு மற்றேயுற்ற வெழிலான நாமபய னென்னவோர்வாய். 61.

ஈனவிட முறுதேனி ளோருநர்கள் சீமைநல் வீராச்சியம தாள்வர்சுகமு மெதிரியநல் வியாதியுட் பீடைமழை சோரர்காற் றிடியாதி துன்பமுறலா, லாநந்த மென்னல்கூ டாதிராச் சியமுழுது மாளுதலு நூறுவயது மரோகதிட காத்திரமு மாதியா மிலட்சண மடைந்தவர்க் குற்றமதுட, வாநந்த முண்டிதனி லூறுநூ றதிகமா யரிவரையி லுற்றசுகமு மமருகா லாந்தரத் தழிதலா லித்தனையு மமர்மாயை யென்றுதள்ளி, யூனமுறு வாங்கிபனு மசநமென வேவிட்டொ ருக்காலு மாறலிலதா யுளவகண் டாநந்த மெயுருவவானநா மொப்பினித் தியாநந்தனும். 62.



பிரிவதா முருநாம வுலகுசற் சிற்சுகப் பிரமமா மிலகலானும் பிரமத்தி னுக்குமே விடயமா யறியவொரு பிர்நசத் தின்மையானும், பிரமவுருவாநமக் கெக்காலும் விடயமில்லை பெறுவிடயம் வந்ததென்னப் பிறங்கலும் புத்ராதி துக்கசுகமவையிலோன் பெறுதல்போற் றோற்றினாலுந், தாவிவே கத்தினாற் பார்த்தவுட னேயவைக டகுமவற் றிலதுபோலச் சத்துமாத் திரமாக வேகண்ட பொழுதிலே சத்தையே யன்றியுலகம், விரிவாக வந்ததும் போனதுவு மில்லையென்று விடயமுறு மற்றெநாளும் விமலவாந் மாவினுக் கில்லாத தாவியா மேவுநிர் விஷயனாமே. 63

முன்னுமிழி தூலதநு வுதித்து நூறாய் மொழிகின்ற வருடமதில் லயமாதற்கு,முன்னுஞ்சூக் குமவுடலஞ் சிருஷ்டிதன்னின் முளைத்ததுதான் பிரளயத்தில் லயமாதற்கு,முன்னும்விசிட் டர்கண் ஞாநந் தன்னினாலே முடிகின்ற லயமதனை யடைதலுக்கு, முன்னுநா மிருக்கின்ற படியினாலே புரா ணனாம் பழையோனென் றகத்திற்றேர்வாய். 64

விளைதலுறுஞ் சமட்டியென மேவுமுடனூன்
மூன்றுந், தவிர்தலுறு புரமிந்தச் சார்மூன்று
புரத்திலுநா, மளவுபடா வடிவான வதிட்டானமாயி
ருந்து, விளையாடு மதனுணும் விளங்குபுராதன
னாமே. 65

சகலமுமே சிற்சடங்க ளாகத்தங்குஞ் சடங்க
ளெலாஞ் சத்தன்றி யெப்போதுந்தான், மிகவு
மசத் தானபடி யாலுஞ்சித்து மேவுமிலட் சணமு
மிலட் சியத்திலின்றிப், புகலுமிலட் சியமுமிலட்
சணத்திலின்றிப் போகின்ற படியாலு மதற்கப்
பாலே, பகருமொரு வஸ்துமில தாலுநாமே பழம
றைசொல் சூநியனென் றறிந்துகொள்ளே. 66

அவ்விதமாஞ் சூநியமு மறிவிற்சூந்ய மாமெ
னவே யபாவமா யறிகையாலே, யவ்விதமா யதை
யறியு ஞானந்தானு மமர்ஞாந பாவவது பவத்தி
னிற்று, னவ்விதமே யிலதாலவ் வறிவிறேடே
யமருசூநியமும்போ யயலொன்றுந்தான், செவ்வி



பெற வில்லாத படியினுனுஞ் செறியுமகா சூநிய
னென் றறியவேண்டும். 67

ஆர்பஞ்ச பூதப்ர பஞ்சவிட யங்களு மன்
றென்று நீங்கலாலே யைந்துவிட யவ்விகாரங்க
ளுந் தூலதநு வன்றுநா மாதலாலே, சார்சநந மா
ணமூப் பெவ்வந வாலிபஞ் சரைமுதல்வி கார
மவையுந் தநுசூக்க தநுவுமக மலதான்ம றப்பாதி
சங்கற்ப மாதியாகச், சேர்விகா ரங்களும வித்தை
யோடுறுகின்ற சீவனக மன்றதாலே செறியுமறி
வறியாமை முதல்விகா ரங்களுந் திகழ்மாயை யுற்ற
வீச, னோகம லாததாற் சர்வக்ஞ ஞேதிபோதிக
ளைந்து தொழில்களான கிரைவிகா ரங்களுந மக்
கில்லை யாதலி னிவிர்த்தனு மென்னவறிவாய். 68

மயிர்நகந் தோனீரி ரத்தமொடு கோழைசீ
மலசலந் தசைபீளையும் வழும்பத்தி சுக்கிலநரம்ப
முக் காம்வேர்வை வனமிற்கு தும்பியாதி, செவி
யுற்ற விவைகளைக் கேட்கினுந் தொடுகினுஞ்

சியென்ன வருவருப்புத் தீண்டிடிற் றூஷமேசெய்
யவேண் டிடுதலாற் சேர்கணிற் கண்டவுடனே,
நயமிலா வருவருப் புண்ணினைக் காணத்தை
நண்ணிலா வருவருப்பு நாற்றமுந் துர்க்கெந்த மாத
லா லாக்ராண நண்ணலில ருவருப்பு, வியமிலிவை
புறும்வநிதை தனைமேவி னிந்தை வியாதிதுன்
புறுதலானு மேவுமித் தோஷமெல் லாமறிந் ததி
லிச்சை விடுதலின காமனுமே. 69

தேகியென்று கேட்டுவந்த பேர்கடமக் கில்
லையெனு தெந்த நாளுஞ், சோகமின்றிக் கொடுப்
பவனே யீகையுடை யோனென்னச் சொல்வர்
ஞானி, தாகமின்றித் தனதிடத்துள் ளவைகளையுந்
தன்னையுமே தனையுற் றோர்கட், கீகையினு னுயி
கவு மலோபனென வநுதினமு மெண்ணுவாயே. 70

அதிகமதாஞ் சிவனினு மூலதேக மதினதி
கஞ் சூக்கவுட லலதேக, மதினதிக மதினதிகம்
பஞ்சபூத மதினதிகம் மாயையதி னதிகமீச,னதின
திகம் பிரமமிந்தப் பிரமமேநா மானதனு னுமவைக



ளனைத்தினுந்தா, னதிகமி லும்மதிக மிலாததா
லே யமர்நாமே யுந்நதனென் றறிந்துகொள்ளே.

கன்மமொடு கர்த்தாவி னிடமதாயுங் கருது
பஞ்ச பூதங்க ளிடமதாயுந், தொன்மைசுக துக்க
மவை வரினுஞ்சுற்றஞ் சோருடன் மிகுமாசர்
சநங்கடேகம், வன்மைபசு புண்மிருக செந்து
பீடை வகைவகையாய் யநேகவிதம் வந்தபோது,
மின்மநதிற் றுக்கினுநம் மிடத்திற்றுக்கா வித
மதனு லக்ரோத னுமென்றோர்வாய். 72

திதிக்ஷியாசந யுக்தி முற்றிற்று.

---

## சமாதி யுக்தி.

பிரிவுறுமெத் தேசத்து மெக்காலத்தும்
பெருவான மொருபடித்தா யுறல்போற்சுத்த, பரி
யக்த முளவகில பிரபஞ்சத்திற் பஞ்சவித கோச
முள விடங்களெல்லாம், விரிவுறுமக் கோசத்தைக்
காண்பானுயா மேவியே யெப்போது மிருத்த

லாலே, யிரிதலினு நித்தியனென் றெக்காலத்து மிதயத்தி லவ்விதமா யெண்ணுவாயே. 73

இதசாட்சி தனிலேக தேசகற் பிதமதாய்ச் செறிமாயை யீசரிவரிற் றிகழேக தேசகற் பிதமாம்வி ராட்டாதி சேர்கின்ற வைந்தவத்தை, யிதிலேக தேசகற் பிதமைந்து பூதங்க ளிதிலேக தேசமுலக மிதிலேக தேசகற் பிதமதாந் தேசங்க ளிதிலேக தேசமூர்க, ளிதிலேக தேசமாங் கிரகங்க ளிக்கிரக மிதிலேக தேசமுடல்க ளிதிலேக தேசமா மிந்திரிய மிவிதமா யெணுமொன்றொ டொன்றுகூடாச், சுதவுலக முழுதினையு மறிகின்ற வறிவதே சொருபமா யெங்குநிறைவாய்ச் சூழ்ந்துறைத லாலிபாஞ் சர்வகத னாமெனத் துணிவாக வெண்ணுவாயே. 74

எவமவித்தை விசிட்டனுக்கா தாரஞ்சூக்க மிதற்காதா ரந்தூல வுடலநேக, விவிதவுடற் காதாரம் விராட்டேயாதி மிளிர்சகங்க ளவைக்கிடந் தான் மாயையீச, னவர்தமக்கு மாதார மாகச்சச்சி



தாநந்த மாயிருக்கு நம்மிடத்திற், கவிழ்தலுறு மிவைகளெலா மேகதேச கற்பிதமா தலினாமே சர்வாந்தாரன். 75

ஆதார மென்று முன்சொ லவிதமீ சுரனங் சத்துக்
காதார மாக வுற்ற வழிவறு மெமக்கு வேறோ
ராதார மில்லா தாலு மலைதலில் யாமெ மக்கே
யாதார மான தாலு மகநிரா தார னாமே. 76

இயலுடல்க ளுக்காதி பூதமதி லைக்காதி யெண்ணும்விட் சேபசத்தி யிதுதனக் காதார மாயையோ டவித்தைக ளிவைக்கெலா மாதிவஸ் தாய்ச், சுயசித்த தாகவே யுறகின்ற தாலுமொரு சூக்கவுட லுற்றபோதே தோற்றியழி பல்கோடி தூலதநு வொருமூல துகளுடல முற்றபொழுதி, னயசிருஷ்டியிலுதித் தழிகோடி சூக்கதநு நவில்கின்ற சீவனுக்கு நாடுமுற் பத்தியில் லாதகா லாதி யென நண்ணியே சீவன்முத்தி, யயலிலா துற்ற வுடனேகின்ற தாலந்த மாகின்ற சீவனுக்கு மநிய மா யித்தனைக் கும்முதற் பொருளான தாலநா மாதியாமே. 77

இப்படியே யெவைகளுக்கு மாதியான வெ
மக்காதி யிலதாலு மநாதியென்று, செப்புகன்ம
மஞ்ஞானம் வேதமீசன் சீவனெனு முபாதிசித்தா
யுறுஞ்சகத்துக், கப்பினிரு பாதிசித்தாம் பிரமமா
றிற் கற்பிதமா மநாதியைந்தி னுக்குமூல, தப்பறு
சித் தினுக்காதி யிலதாலந்தச் சைதந்ய மானசா
மநாதிபாமே. 78

இதமறுவி சிட்டனினும் விபுசூக்க வுடலி
தனி னிழிதூல வுடலம்விபுவா மிதுதனினும் விரி
வுபா ரிதனினும் விரிவுநீ ரிதுதனினும் விரிவுகந
லா, மிதனினுங் காற்றுவிரி விதனினுங் ககநம்விரி
விதுதனி னிரண்யகர்ப்ப மெய்தும்விரி விதனி
னவ் வியாகிருதம் விரிவாகு மிதனினவ் வியத்தம்
விபுவா, மிதனினுஞ் சுத்தம்விரி விவைகடம் மா
லுமட் டிடவொணு தேவிரிந்த வெழின்மாயை
யுறுவீச ரவராலு மட்டிடவு மியலாத நந்தவிரிவா,
யிதமதுறு மத்திபா இப்பிரிய மாகமிலு மெய்து
மற் றொன்றுபெரிதா யெம்மைமட் டுக்கட்ட
வொன்றுமில் லாததா லென்றுநாம் விபுவதாமே.



அவதாவ ரத்தினறி வான்மகத் தானமிரு
சாதியதி னீசாதி யவர்களினு நான்குவன் னத்த
ரவ ரிற்கன்மி யவரினிற் றீக்ஷிதர்களா, மவரினிலு
பாசகர்க ளவரில்ரிஷி யவரில்யதி ரவர்தமிலு
மூலகபால ரவரினிற் பூதபதி யவரின்வைசு வானர
ருதியவ ரிற்புருஷரா, மவரினிற் குமாரவ ரியா
வரின் மேமகத் தாகுநற் றேவிதேவ னவர்களிரு
வர்க்கும்பி ராணபூ தமதாகி யவர்களாற் பத்தி
பண்ண, வவமறும கத்துவம துறுமெமக் கதிகசம
னும்வஸ்தி லாமனுமே யமர்கின்ற யாவையினு மதி
சயித் தவனுத லான்மகத் தாகுநாமே. 80

யகர்புனலின் முழுகினவ னுடலிலந்நீர் பற்ற
லெனப் யற்றியிடக் காணுமற்றான், சகலசகத்
துட்புறம்பு நிறைந்துநின்ற தம்மிடத்தி லேய
ழுந்தி யிருக்காநின்ற, புகலவத்தை மூன்றினுமே
கர்ணலுற்ற யொருவில்சுத்த பரியந்த சகத்திலொ
டே, யிகலுறுபற் றற்றுவெளி போற்றொடக்கற்
றிருக்குள நிரஞ்சனனென் றெண்ணுவாயே. 81

அவிருமூ வகையுடலி னுக்குமூ லங்கண்மா
யைம்பூத மவைகண்மூல மமர்சூக்க பூதபௌ திக
மவைகண் மூலமத வித்தையுறு சீவனோடு, நவமா
யை யுறவீச னவர்களுக் கதிகமாய் நவையில்சை
தந்யநாமே நண்ணுகா ரணமான தாலுநற் சச்சிதா
நந்தமா நம்மைவிட்டுப், பவமான காரியம தாமூ
லகி னுக்கயற் படிவமில் லாமையாலும் பகருகா
ரணவுருவ மாகின்ற நம்முடைய படிவமே பல்வ
கையதா, நவையான காரியச கத்தினுக் குருவமாய்
நண்ணுற்ற தாலுமிகவு நாடுற்ற சகலத்தி னுக்கு
மது திருமூநா நவிலுகா ரணனாகுமே. 82

இப்படிச்சக லத்தினுக்குமி லங்குகாரண மா
யுறுங், தப்பிலெற்கொரு காரணம்மில தாலுமெய்
புணர் வின்பமா, யொப்பினுஞ்சக லத்தின்மூல
வுருவமாயின தாலுமே, யெய்ப்பிலாவக மேயகா
ரண னென்னவேநித மெண்ணுவாய். 83

அகிலசக கிரியைக்கு மாதித்த சநிதாந மான
தேமூலமாக வமர்தல்போற் சர்வவிந் தியசகத்



தொழில்களு மசை [illegible] தின், விகல
வில் லாததோர் சந்நிதா நங்கொண்டு விதம்விதம
தாகமிகவும் விரிவாய்ந டக்குகினு மிலகுகரி யாக
வே மேவுநா நாமாகவுந், திசமூபிர விர்த்தியுநி
விர்த்தியுஞ் செய்யாது சேர்கின்ற வொன்றினு
லுஞ் செய்வித்த லில்லாது மத்யஸ்த னாகவே திந
மிவையை நாடிநின்று, துகளிலாக் கனலிபோற்
சகலவித தொழிலையுந் தோற்றுவிக் கின்றவதுவே
சொருபமா நாஞ்சர்வ சாட்சியென் றநதிநந் தாய்
மநதி னெண்ணுவாயே. 84

அலையினு மநதுபொறி யலையாத தூலவுட
லவைகோடி யலையினுந் தானலைவில்பூ தங்களவை
யசையினு மசையாம லமரினு மசைதல்போல,
வலைசூரி யாதிமண் டலமிதனி லலைவைசு வாநர
னாதியவித மலசுத்த வரையுலகொர் தநுவாக நா
மென்ன வடிமாந முற்றறிவினி, லலைதலுறு மீச
னவ ரினும்வேற தாகவே யறிவதனின் மறுசி
ருஷ்டி யாக்கியலை குமாரா தியதரித்த வனக்குமே
யமருதா னாகவிலகி, யலகிலித் தனைசலந் மத

னோடு கூடியும மையாம வித்யாவி னிலையினுக்
குங்காரிய தாகநிறை சைதந்ய மானநாந் தானு
வாமே. 85

அப்பினாற் கடமதைப் பூரித்தல் போலவே
யநமயம் பிராணமை தனா லதுமநோ கோசத்தி னாலே
துவி ஞாநமய மாங்கோச மதனாலதுஞ், செப்புமா
நந்தமய மதனினாற் பூரித்தல் சேர்ந்துநற் சீவனத
னாற் சேர்பூரி தம்பஞ்ச கோசங்க ளவையினாற்
றிகழ்பஞ்ச பூதநிறைவாங், தப்பலில் லவையினாற்
பூரித்த லுறுசகஞ் சகமதினா லெங்குநிறைவாய்ச்
சார்கின்ற மாயாவி சிட்டருந மாண்மிகத் தாழ்
வில்பூ ரித்தலுற்றுத், தப்புடைய நம்மினும்
வேறுபரி பூரணந் தோன்றுதலி லாதவதனாற்
சொல்லுபரி பூரண நாமென்ன வேநிதஞ் சுகமுட
னறிந்துகொள்ளே. 86

உடல்பொறிக டமின்மிகவும் விரிவதான
வுட்காரணா திகட்குமந்த மேயுடைத்தா, யடருமந்
தக் காரணாதி யாலுமெட்டி யறியவொணா விரிபஞ்ச



பூதங்கட்குந், திடமாயா விசிட்டருக்குங் காலமே
தந் தேசமே தங்களினா லந்தந்தன்னை, யிடமாகக்
காண்கினுமே யந்தமின்றி யியல்சாட்சி யானநா
மநந்தனாமே. 87

அகிலவுந் நதசுத்த மதிமென்றி னுக்
கொன்ற தாம்பத்தி னென்றுகுறைவா யல்கியே
சத்தியும் பிரமாம கத்துமுத லாக்கடினை யந்தமு
லகோ, டிகல்தேவ பாகமு மநுடபா கமுமென்ன
வெய்துபூ தங்களுடனே யிழியதங் மமத்திமோத்
தமமான பிரமன்முத லெய்துதம் பாந்தவுடல்கள்,
சுகஞாதி யோகியொடு பாசகன் கன்மியாய்த்
தோற்றலுறு சீவாதி சொல்லீச னீறதாய்த் தார
தந் மியமோடு துலங்குவத் தியாவினுந்தா, னிக
லில்சத் தாகார மாய்த்தார தந்மியம தெய்தாம
லெப்பொழுதுமே யிருக்கின்ற சைதந்ய மானநா
மேயென்று மியல்சர்வ சமனாகுமே. 88

அதிட்டாநஞ் சூக்கவுடல் விசிட்டனுக்கு
மமர்துல தநுக்களவைக் கும்பூதங்க, ளதிட்டாந

மவைக்குமதிட் டாநமாயை யமரீச னுங்கிளிஞ்சில்
வெள்ளிபோல, வுதித்தலுறு வாக்குமாத் திரமல்
லாம லுளவதிட்டா நந்தவிர வொன்றில்லென்றே,
மதித்திடநிர் ணயம்பிறந்த வதனுர்சித்தாய் வயங்
கிடுநாஞ் சர்வாதிட் டாநமாமே. 89

கவைகால மாதியாற் கண்டிதமு ரூதவறி
வானநா மேயகண்ட னவிலுமற் றொருயுத்தி
யுலகர்நிர் ணயமருகர் நனுபுத்த ராகமத்து, மவை
தேவ ராகமத தவைபிரம னரியீச ராகமத் தவையு
ராணைத் தவைபார தத்தவையு நீதிசா ரத்தவையு
மறைகின்ற கன்மகாண்டத், தவையுபா சநகாண்ட
மவையாவு முபநிடத மவைகளாற் கண்டித்தலா
மவைநிர்ண யஞ்செயறி யெமையொன்று கண்
டிக்க வாகாத தாலுமாக, வெவமிலுப நிடதத்தி
னதிதபிர மாணம்வே றில்லாத படியினலு மியாவு
பிர மாணத்தி னுக்குமவை முடியாத லாலும்நா
மேயகண்டன். 90

ஒருவருக் கொருவர்கள் பரிச்சிந்ந மாய்ப்பிரி
வெந டொளிர்சீவ ரொன்றினுக்கொன் றுறுபரிச்



சிந்நமாய் நாலைந்து தத்துவத் துடன்மிகத் தோற்
றுசூக்க,சரிரங்க ளாமிவைக ளைக்குறித் தபரிச்சிந்
நமாய்த்த னக்குளாறு தத்வமா கப்பரிச் சிந்நமாந்
தூலத்த நுக்களிவை யைக்குறித்துப், பரிச்சிந்ந
மின்றியொளிர் பூதங்க ளிவைகளைப் பற்றியப ரிச்
சிந்நமாய்ப் பனுமாயை யுறவீச னுஞ்சாட்சி யாக
வே பகருநம் மைக்குறித்துப், பரிச்சிந்ந மானவத
னுலுமே நம்மிலும் பரிச்சிந்ந மற்றதொன்று பண்
ணவில தாலுமப ரிச்சிந்ந னெமனப் பரிவினெடு
மறிகுவாயே. 91

தாபமுறும் விசிட்டனையா பரித்தல்சூக்க
சரீரமிதை யாபரித்த றூலதேகஞ், சோபமுறுந்
தூலதநுக் களையுமற்றுஞ் சொல்பூத மவைகளையு
மொன்றையொன்று, வாபரித்த விராட்டாதிப்
பிரபஞ்சங்க ளவைகளையு மாபரித்த வீசனுலு, மா
பரிக்கா தவரையுமே யாபரித்த வறிவாநா மநா
விருத னுகுர்தானே. 92

காட்சியா யவத்தை மூன்றிற் கண்டிடுஞ் சகங்
க ளியாவுஞ், சாட்சியி னிடத்து தித்துச் சாட்சியி

னிடத்தி ருந்து, சாட்சிமாத் திரம தாகத் தானமர் கின்ற தாலே, சாட்சியா கின்ற நாமே சர்வகா ரண னென் றோர்வாய். 93.

காலமூன் றினுமே யெங்குங் ககநம்போ லொருப டித்தாய்க்,கோலமாய் நிறைந்த நாமே கூறுநித் தியசுத் தாதி, சீலமா மிலட்சணத்தைச் சேர்ந் துறை கின்ற தாலே,சாலநாம் பிரம மென்றே சந்த தஞ் சிந்தை செய்வாய். 94.

பனுகநவி னிற்கண்ட சீவனீசு வாசகம் பனுநன்மை தீமைகேள்விப் படும்வேத வாகமபு ராணசாஸ் திரமாதி பல்விகற் பங்களுந்தா, மனக நவ தைக்காணு மறிவைவிட வின்மையி னவத் தைமூன் றதனினுங்கா ணகிலசக மும்மறியு மறி வைவிட வில்லாத வத்தையொன் றென்றிலகு, மினசகம தந்தந்த வத்தையைக் கண்டகரி யாக வே யிற்றபடியா லெண்ணவே வேறென்று மூன் றுகா லத்தினு மெய்தவந் ததுவமில்லை, யுனமிகப் போனதுமி லெனுமதப வத்தினை லொன்றுமற்



றில்லையுறுநா மொருவனே யுள்ளபொரு ளென்ன வே யநுதிநமு முளமதனி லெண்ணுவாயே. 95.

வயல்குளந் தேசமூ ராதிவஸ் தவைகட்கு மண்ணதே யுருவமாபோன் மருவுலகி னுக்குருவ கஞ்சச்சி தாநந்த மாயிலக லாலுமின்ப, மயநம்மை விடவுலக மற்பமில தாற்சர்வ மாமுலக மாகவுறுநா மாசர்வ வாக்மாயின் னொருயுத்தி நாமென்ன மரு வுரைக் கூன்றுகோலா, யயலில்கரி யுருவேந மக் குற்றல் போற்பறவை யரைமிருக நார்கண்முநிக ளமாருல கதிபர்பூ தாதிபதி வைகுவா நரனுதி சீவ ருக்கு, நயவீச ருக்குநா னெனுமுரைக் கூன்று கோ லாக்கரிய தானநாமே நண்ணியிடு மங்கங்கு சித்திக்கை யான்மிகவு நவிலுசர் வாத்மனாமே. 96.

கநவதனிற் காணவுறுஞ் சகங்களியாவுங் கண்டதன தாகார மானதேபோ, லுனுமவத்தாத் திரயசக மியாவினுக்கு முறுகின்ற நமதுசத்தா காரமேதான், வினவியிடு மாகார மானதாலும் விளங்குசத்தா காரமதை விட்டொடிற், சகமுறு

சகமதுவே யில்லாதாலுஞ் சாருநா மேசர்வா கார
ணமே. 97

பயில்சர்ப்ப மென்னவே தோற்றினது தானு
மப் பழுதைதனை யன்றியிலதின் பகர்வந்ந வாச்சி
ரம மொடுசொர்க்க நாகாதி பல்தேச மூர்கள்கால,
மியல்சாஸ்தி ரஞ்சீவ னீசுவர பேதங்க ளென்னு
மை யேழதாக வெணுதத்து வங்களுஞ் சச்சிதா
நந்தமா யிலகுநம் வடிவதாலு, மபமொன்றி
னுடையவுரு வலதாலு மொருகூத்த னளவில்வே
டங்கடம்மை யமர்தல்போ லும்பூமி யொன்றுமே
பல்விதற் பங்களா யாதல்போலுஞ், சுயசத்த தா
யிருக் கின்றதா னொருவனே சுழலுசீ வீசசகமாத்
தோற்றுபே தங்களா யுறுதலா னுமிகச் சொல்
லிடுமே நேகரூபன். 98

பலசட்டி நீரின்மதி பலவிதந் தோற்றினும்
பயிலுமதி யொன்றலாது பகரிரண் டல்லாது
போலவு மவனவன் பார்வையிற் றோற்றுகநவி,
பலவன்றி யொன்றுதல் போலும்ப டிகமண்ட



யத்தம்ப மிலகுஞானி பலவன்றி யொன்றுதல்
போலவுங் கநவினிற் பலவிதஞ் சகமிலகினும்,
பலவன்றி யொருவனே யாதல்போ லுஞ்சீவ பாச
கத் தென்றுமிகவும் பலவிதம தாயிலகி னுஞ்சச்சி
தாநந்த பகரிலட் சணமதாயே, பலவான சகலத்
தை யுங்கண்ட படியினுற் பனுசகத் தாகாசமே
பலரூப மாயிலகி னுஞ்சற்சி தின்பமாய்ப் பகருகா
மேகரூபன். 99

கநவபர மார்த்தமா நனவுபர மார்த்தமாங்
காணனி லபரமார்த்தங் கார்மின்னன் மற்றவைக
ணிலையிலைவி னுளடிமை காயமனை மதலைவீடு,
தநமுதலிவ் வுலகவஸ் தபரமார்த் தஞ்சுரர்கள் சா
ருலக மாதிநிலையாய்த் தங்குமிதி லயனுலக நிலை
யென்ன விவ்விதந் தாரதந் மியங்களாகப், பனு
வீச சீவசக முழுதுநன் குணரினே பரமார்த்த
மல்லதாலும் பகரிவைக் குச்சர்ப்ப மாதிக்கு நச்
வாதி பரமார்த்த வுருவாதல்போ, லாகநாம் பர
மார்த்த வுருவதா லும்மெமக் கழிவுவக் தொருவன்

துவு மாகுபர மார்த்தமா யுற்றிடா தாலுனாமதி
லில்பர மார்த்தனுமே. 100

புரிவஸ்து வென்னல்பொருண் மற்றதன்
றெனிலுலக மியாதெனிற் புரியினரவம் போலு
லகு பொய்யதாற் பொருளல்ல வெனிலரவு போ
லுறும் புரியினரவப், பிரமைவரா லாமுலகு போலி
சா நிரவயவ பிரமத்தி லுலகுதானும் பிரமையென்
பதுதகா தென்றிடிற் றன்சிவப் பிற்குவமை யற்ற
படிகத், துரையிரத் தப்படிக மென்பிரமை போற்
கசப் புக்குவமை யில்குளத்தை யுறுகுளங் கைக்கு
தென் றிடபிரமை போலவு முலகமே போலிராத
பிரமத்தி லுலகமா ரோபமா மிவ்விதம் பிரமையா
முலகினுக்குப் பிறங்கதிட் டாநபொருட னையன்றி
யிலையதாற் பேசலுறும் வஸ்துநாமே. 101

பிரபஞ்ச மின்மைநிட் பிரபஞ்சம் வாதிகள்
பேதமாஞ் சங்கையுலகைப் பெயர்த்தறிவை யுற
வெனச் சுருதிசொல வாலுலகு பேர்த்துவிட
வேண்டுமென்னிற், நிரமில்சக முளதாயி னொரு



வசெத் தநமதாற் றீராது சங்கைசுகர்நற் றெட்
சணு மூர்த்திமுதன் முத்தரா லேசகந் தீர்ந்ததவ்
விதமுமக்குத், தருசகமின் ஞானமிலை யெனில
வர்க ளாலிறந் தற்றதே லுலகுதானுந் தயங்கலுட
னிப்போது நக்கணக் கிலையிலாச் சகமதனை யில்
லையென்றே, சுருதியும ழித்திடச் சொன்னதாற்
சொப்பநத் துகளுலகி னுலகிலென்றே துணிவு
டன ழித்தலுல கில்ஞான மாதலாற் றுகளினு நிட்
பிரபஞ்சன். 102

இயலுநா ணாரூபம் வெகுரூப மாஞ்சங்கை
யிவையெலாம் பிரமமல்ல வென்னும்வாக் கியத்
தினு லுலகைத்து டைத்துமிக வேகசித் துருவ
தாக, வியல்சுருதி பிரமத்தை நிலைநிறுத் தப்பிரம
மென்னும்வெகு ரூபமென்ப தெவிதமெனில்
வெகுவிதம் பிரிவுபெறு நீரினு லினனொருவ
னேயநேக, வயலுருவ மேயென்ன விலகல்போல்
வெகுரூபி யாயுறும வித்தையாலே யலகிலொரு
பிரமமும் வெகுரூப மேபோல வமரவே யிலகல்
கொண்டு, சுயமாக வெகுரூப னென்பதுப சாரமாச்

சொல்லுறு மாகையாலே தோற்றிமெ வித்
தைதன் னைக்குறித் தென்றுநாத் துகளினு காரு
பனே. 103

தேசமதன் பேதங்கள் பூதபேதந் தேகமதன்
பேதமோ டிந்திரியபேத, மீசர்களின் பேதங்கள்
சீவபேத மெனத்தோற்று மாயாகா ரியத்தினுக்கு,
மாசுறுமா யைக்குமதிட் டாநசித்தாய் மருவுசச்சி
தாநந்த நம்மைவிட்டுப், பேசுறுமோர் பேதவுரு
விலதாளுமே பிரிவிலா வபேதனெனப் பேணு
வாயே. 104

நிருவிசே ஷன்னுயர்வு தாழ்வாம்வி சேஷ
முவை நீங்கினவ னிற்றலோட னேர்கோண லாதி
யா விலகலுறு மதுடனொடு நிகழ்தருப் பட்சிமுத
லாஞ், சருவமென் விசேஷங்க ளுடனுற்றவ் வடி
வையுஞ் சாரதன் றெழிலுமுறல்போற் றயங்குகி
னும் வெயிலேக ரூபமாய் விபுவதாய்த் தனிநிருவி
சேஷமாபோற், பொருவிபுப் பிரமமுன் சொல்
விசே ஷத்தொடு பொருந்தியத் தொழில்கடம்



மைப் பொருந்தல்போ லுறினுந்தொ டக்கிலத
சங்கமாய்ப் புகலுவிர் விசேஷமாயே, யிரிவிலா
துறுமென்று ரைத்தபடி யேயறிநு ரியல்விசே
ஷங்களியாவு மெமதிடத் திலகலென் றெணிய
நுப வித்தலா லியாநிரு விசேஷனுமே. 105

துவிதமென்ப திரண்டிரண்ட தற்றதத்து
விதமாந் துவிதசக மிலகலினத் துவிதமென்ப
தெவிதம், புவியின்மாஞ் செடிகண்முத லானதெ
லா முதித்துப் பூமியிலே யிருந்துபுவி யாகவழிந்
திடல்போ, லவிரவத்தை களிற்றோன்றுஞ் சகமநீ
யுஞ் சாட்சி யானநமி லுதித்திருந்தே யழிந்துவிட
லாலே, தவறிலறி வாந்தனைப்போற் பின்னை
யொருவஸ்துத் தானிலதா தலினுமே யத்தொய்த
னுரும். 106

உண்மையறி வாநந்த நமையன்றிமற்ற வுரு
மைந்தேழ் தத்துவமா முலகுநினைவதனி, லுண்
மையெனத் தோற்றினதந் நினைவுபொய்யான தனு
லுள்ளின்மெய்போ லிலகுலகும் பொய்யான தா
லுந், தன்மையுல கதுநான்கு வபாவமுறவாலுஞ்

சசாதிமுதற் றிரிபேதந் தமக்கிலதினாலு, முன்மைசுகச் சிற்பிரம மன்றிமுப்பத்தைந்து மொருக்காலு மிலதாற்சர் வாபாவனுமே. 107

காலமொடு தேசவஸ்து திக்குவந்நங் கருதுகின்ற வாச்சிரம மிவைகடம்மி, லேலமொன்றிலுள்ளதுமற் றொன்றிலில்லை யென்னுமிவை யேமுதலா வியம்பாநின்ற, சீலமிலப் பரிச்சேத மற்றேபத்துத் திக்கினுமற் றெங்குமடி முடியுமற்றுச், சாலவுமே சர்வபரி பூரணமாகத் தங்கலினுஞ் சர்வதோ முகனென்றோர்வாய். 108

சுயம்பிரகாச வின்பத் தோன்றலே துரியவாழ்வே, வயம்பெறு நினது நாம வளத்தினைமிகத்தொ டுத்துத், தயங்குமிம் மாலை தன்னைத்தமியனேன் பிழைத்தற் கேகின், புயர்தனிலணிந்தெ நாளும் புலையனேன் றனையுங் காவாய்.

இலக்ஷணாவிர்த்தி முற்றுப் பெற்றது.
பாயிர முள்படச் செய்யுள் 115.

ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிகர்
திருவடி வாழ்க.
சர்வஞ் சிந்மயம்.

சற் குருப்யோ நம:

ஸ்ரீ நிஜ குண யோகீசுவரர்
கர்நட பாஷையில் அருளிச் செய்த
விவேக சிந்தாமணியில்
(வேதாந்தப் பரிச்சேதம்)

# வேதாந்த சூடாமணி.

இது

நல்லாற்றூர் (துறை மங்கலம்)
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளால்
செய்யுளில் மொழி பெயர்த் தருளப்பட்டு

திருப் பூவண மடாதிபதி
ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய
சுவாமிகளால்
பதிப்பிக்கப் பெற்றது.

## சிறப்புப் பாயிரம்

அருமறையின் பொருடெரித்த விவேகசிந்தா மணியதனு ளுறைவே தாந்தப், பொருவினைமுந் நீர்வரைப்பி னுலகறியச் செந்தமிழாற் புனைதல் செய்தான், பெருகுசுவை நறவொழுகு செஞ் சொன்மல ராற்புனைபாப் பெருந்தண் மாலைக், கருமிடற்று வானவர்க்கே சாத்துசிவப் பிரகாசன் கவிஞர் வேந்தே.

சற் குருப்யோ நம:

# வேதாந்த சூடாமணி.

## பாயிரம்

தருணமா துமைமுகத் தாம ரைக்கெழு
மருணனு மெனவுதித் தடியர் பாற்புரி
கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்
சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம். 1

சீர்கொண்ட வருமறையின் முடிமணியைத் தெய்வசிகாமணியை யடியவர்தங் கண்மணியை மாயைப், பேர்கொண்ட விருளிரிக்குந் திருமணி யை முக்கட் பெருமணியை யகத்தினு விளக்காக விருத்தி, யேர்கொண்ட விவேகசிந்தா மணியெனு நூலதனு ளெடுத்தியம்பும் வேதாந்தப் பரிச்சேதப் பொருளை, நேர்கொண்ட தமிழ் விருத்த யாப்பதனாற் றெரிய நிகழ்த்துவன்வே தாந்தசூடாமணியென் றன்றே. 2

பாயிரம் முற்றிற்று.

## நூல்.

வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாய
மீமாஞ்சை யொடுமிருதி புராணமுமீ ரேழா, வோ
தலுறும் வித்தைகளா மவற்றுண்மீ மாஞ்சை
யுயர்ந்ததா யைந்நான்கத் தியாயமா யருத்த, பேத
முற விருகூறா மவற்றுண்முதற் கூறே பிறங்கு
மருட் சைமினிசூத் திரரூப மாகிப், போதமீ ரா
றத்தி யாயமாய்க் கருமப் பொருளுணர்த்திப்
பூருவமீ மாஞ்சையெனப் படுமால். 1

சாற்றியவச் சைமினிசூத் திரத்திற்கு மிக்க
சாபரமென் றொருபாடி யம்புரியப் பட்ட, தேற்ற
மிகு மம்மீமாஞ் சைக்குமதம் பாட்ட மென
வொன்று பட்டாசா ரியனால்வந் தன்று, போற்று
மவன் சீடனா கியபிரபா கரனாற் புகழ்பிரபா கரமெ
னவோர் மதாந்தரகன் கமைய, வாற்றியவச் சாபர
பா டியமதற்கு விளங்க வாக்கப்பட் டேகமெலா
மறிந்திடவின் றதுவே. 2

271



உரைத்தவிரண் டாங்கூறு பிரமமுறைப்
பதனா லுத்தரமீ மாஞ்சையெனப் பட்டருள்கூர்
வியாதன், றெரித்தசூத் திரவடிவ மாகியிரு நான்
கத் தியாயமா மவற்றுண்முத னான்கத்தி யாயம்,
விரித்தலுறு தேவதா காண்டமெனப் பட்டு விளங்
குறுதெய் வதவிலக்க ணம்பலபத் திரனா, லினைத்
துரைசெய் யப்படுமே னான்கத்தி யாய நிகழ்பிரம
காண்டமென வேநிகழ்த்தப் படுமால். 3

அப்பிரம காண்டத்துட் சிவமொடுயி ரயிக்க
மறைதலாற் சங்கரா சாரியனாங் குருவா, லொப்ப
ரிய பாடியமொன் றுரைக்கப்பட் டதுபின்
னுரைத்ததற்கு விவரணா சாரியனென் பவனாற்,
செப்பரிய விவரணமாக் குறப்பட்ட டதுவே தெரி
யின்வே தாந்தநூ லென்றுரைக்கப் படுமா, லிப்
பெரிய வேதாந்த நூற்பொருளி னகல மெங்ஙன
மென் றிடினுரைத்து மியம்பியநூன் முறையே. 4

வாய்த்தநூன் முகத்துரைக்கு மங்களா
சரணை வாழ்த்துவணக் கொடுவத்து நிர்த்தேச

மெனமூன், றுத்தபதம் பதப்பொருளே வாக்கிய
யோ சனையே யறிவிளு விடையிவையைத் துரை
யினிலக் கணமாங், கோத்துரைசெய் விசேடவிசே
டியங்கருத்தா கருமங்கொள்கிரியை யிவையைந்தந்
நுவயவிலக் கணமாஞ், சாற்றுமநு பந்தசதுட் டயமா
நூற்கு விடயஞ் சம்பந்தம் பயநினகா ரிகளென
கான் கறியே. 5

விடயமது சிவசீவர் தமதேகத் துவமாம் விம
லனொடு நூற்கறையப் படலறையுந் தன்மை,
யடைதலுறு சம்பந்தம் பயன்றயமொ லாநீத் தாநந்
தப் பதம்பெறுதல் சாதநநான் கினையு, முடையவ
னே யதிகாரி யென்றறைவ ரறிஞ ருரைத்தசா
தநசதுட் டயநித்த வநித்தப், படுபொருளின்
விவேகமிக பரபோக விராகம் பழிப்பரிய சமைமு
மூட் சுத்வமெனப் படுமால். 6

நித்தியமாங் மாவேபொய் விடயமெலா மெ
னத்தேர் நிலைதருநித் தியாநித்திய வத்துவிவே
கம்பின், மெத்திவரு மிகமொடமுத் தாத்தில்வரு



போக விராகமிம்மை மறுமையுள விடயநுகர் வினை
த்தும், பொய்த்தழிபு மிடும்பைமய மெனவிடுத லா
கும் புகழ்சமைமையே முதலாய சட்குணங்கள் பெறு
தல், வைத்தசமை யியல்பாய முத்திவிருப் பதுவே
வயங்குமுமூட் சுத்துவமென் றறிந்திடுக மதித்தே.

சமைதமையே திதிக்கையுப ரதிசிரத்தை
சமாதி சமைமுதலா மறுகுணங்க ளுட்காண மடக்
கல், சமைதமைதான் புறக்காண மடக்குதல்கா
மாதி தணித்திடுகை திதிக்கைகரு மங்களினைத்
தினையுஞ், சுமையெனவே விடுதலுப ரதிசுருதி
குருவைத் துணிவிளு னம்புமதே சிரத்தைகுரு
மொழிகேஞ், சமைவுறவே திட்பமுறல் சமாதியிச்
சா தநஞ்சே ரதிகாரி செயுங்குருசே வையினையெ
டுத் தியம்பில். 8

ஆத்தமுட னங்கமே தாநஞ்சற் பாவ மாம
வற்றுட் குருபானுக் கநுகூல விருத்தி, யாத்த
மூயர் குருபான்குற் றேவலே யங்க மருட்குரவர்க்
குரியமனை நிலமுதலா மவற்றைக், காத்தலனு

ஞானமாஞ் சற்குருவே மெய்யாக் கண்டசிவ மென
னம்பு மதுவேசற் பாவ, மேத்தகரு மம்பத்தி மிகு
ஞான காண்ட மெனுமிவற்றான் மூவதிகா ரிகள்
வேறு முளரால். 9

உடம்பினையும் வருகும்பந் தனையுமியா
னெனவெதன் றுளன்கரும காண்டியெல்லாக் கிரி
யையுமீ சற்கே, திடம்பெறநின் றாக்குமவ னே
பத்தி காண்டி செயுங்கரும மனைத்தினுக்குங் கரி
தானென் றிருப்பான், மடந்தவிரு நன்ஞான
காண்டியென லாகு மற்றுமுள ரைவரொரு வர்க்
கொருவ ருயர்வா, யடைந்தவதி காரிகளங் கவர்
கருமி முமுட்சோ டறையுமப் பியாசியநு பவியு
டனு ளருடன். 10

மூடமொடு தன்சாதி கருமமே பற்றி முத்
தனு மவனூறு பிறப்பினிலொண் கருமி, நீடுலக
மின்மையென நினைந்துபுறக் கருமம் நீட்டனுய்
முப்பிறப்பின் முத்தனு மவனே, நாடரிய முமுட்
சுலகங் கனவெனக்கண் டுள்ள நற்கருமஞ் சேர்ந்து



பிறப் பிரண்டுளனப் பியாசி, வீடுலக விவகார
நினையாமல் விவேக மேவியோர் பிறப்பினுன் முத்
தனது பவியே. 11

உலகநிலை தோன்றுமற் றன்றிசழ்ஞா னத்தா
லுண்மைமுத்த னுமவனே யாருடன் மற்று, மூல
கமுதல் யாதெனத்தேர் வொடுகுருவை யடைந்து
முடம்பாதி பொய்யெனக்கண் டருட்குருவை
யடைந்து, மூலகிலொரு குரவன்றன் மகற்குபதே
சஞ்செய் துறக்கேட்டு முயர்தருஞா னிகளாகி
முத்தி, யுலகுதொழு விவேகமொடு விரத்திதெய்வ
கதியா லுற்றிடுவோர் மூவாதி காரிகளா குவரால்.

சாதகர்க ளாஞ்சீடர் பேதத்தாற் குரவர் தா
மும்போ தககுருவே முதலாக விருநாற், பேத
மடை குவரவருட் போதகன்முன் னூலிற் பெரும்
பொருள்கூ றிடுபவன்றத் துவந்திசழ்த்து பவனே,
வேதகனல் வசியாதி யாலிம்மை யின்பம் வெர்து
வாங் குதவுமவ னிசிதகுரு வறத்தைப், போதகன்

செய் திருமையினு மின்பமருள் பவனே புகழ்தரு
கா மியகுருவென் றறைகுவர்மு தறிஞர். 13

சூசகனும் விவேகத்தாற் சமைமுதலாங்
குணங்க டொகுப்பவன்பொய் விடயமென வாக்ம
விருப் பருள்வோன், வாசகனுஞ் சிவசீவ ரயிக்கிய
ஞா னத்தை வழங்குமவன் காரகனை யந்தவிர்த்து
நிலைத்த, வாசகனு முத்தியருள் பவன்விகித குரு
வா மதிகாரி யாவார்க ளெனமுன்னர்க் கூறு, நேச
முறு சீடர்தம்மு ளொருவன்முத் தாப நெருப்பி
னால் வெந்துசிந்தா குலமுடைய னாகி. 14

நானுரிப் பவமெனக்கு வந்தவா றென்கொ
னசிப்பதெவ ராலெனவாய்ந் தலர்காங்கொண்
டேகி, யானுநற் கல்வியறி வடக்கமவை ராக மாதி
யாங் குணமுடைச்சற் குருவையடைந் தெதிர்
மண், ஞானரைப் பணிந்தெழுந்தன் பாற்கரங்கள்
குவித்தே யுறவழுத்தி யருட்குருவே யென்பாசத்
தொழிவு, தானுமெத் திறத்தினு வெனவினவல்
சீடன் றனதுவிதி வத்துபசத் தத்துவமா மன்றே.



அனையவன ததிகாரந் தெரிந்தருளா ளோக்கி
யஞ்சலோம் பென்றபய காஞ்சிரத்தி லிருத்திப்,
புனையவருஞ் சுருதியுத்தி யாலவன தநாத்ம புத்தி
யினை யொழித்துத்தா தாத்மியவாக் கியத்தா,
னினையலரு மொருபிரம நீயேயென் றுள்ள நிலை
யையுணர்த் துதல்தூல னுபதேச மாகு, மினைய
வுப தேசமுறை யுத்தேசத் துடனே யிலக்கணஞ்
சோ தனையெனுமூன் றினையுமுடைத் தாமால். 16

அறியவுணர்த் துறுபொருளை நாமமாத் திரத்தா
லறைந்திடுத லுத்தேச மாங்களகம் பளமாங்,குறியு
டைய தாமெனல்போ லப்பொருளிற் சிறந்த குறி
யுரைத்த லிலக்கணமவ் விலக்கியமாம் பொருளிற்,
செறிவுறுமவ் விலக்கணமுண் டோவிலையோ
வென்னத் தெரிந்திடுதல் பரீட்சையோர் பொரு
ளறிந்து பெறற்குப், பொறியுறல்செய் காட்சியா
மளவைமுத லாகப் பொருந்துபிர மாணங்க ளெட்
டுளவா மன்றே. 17

18

கடமுதலா மவற்றினது காண்கையது தானே
காட்சிபுகை யாலங்கி ஞானமது மானந், திடமருவு
மவ்வநுமா னம்பதினை யேது திட்டாந்த மெனு
மங்க முடைத்தவற்றுட் பதினை, யிடமலைவெவ்
வழலுடைத்தென் பதுபுகையுண் மையினா லெனு
லேது மடைப்பளிபோ லென்பதுதிட் டாந்த,
முடைமையுண ராத்தனுரை யானதிதீ ராதி யுரு
கனியா திகளுண்மை ஞானமா கமமாம். 18

பகற்பொழுதுண் ணானொருவ னிளையாமை
கண்டு பரிந்திரவுண் கற்பித்தல் காணருத்தா
பத்தி, யகத்தினிலை யுறுதேவ தத்தனெனி
லிருப்ப னவன்வேறோ ரிடத்திலெனத் தெரிந்
திடுத றன்னைத், தகப்பெரியர் கேள்வியருத் தா
பத்தி யென்பர் தரும்பசுவோ டொக்குமரை
யெனுமொழிகேட் டிருந்தோன், புசப்படரும்
வனத்திலதன் விடயஞா னந்தான் பொருந்துதலே
யுவமானப் பிரமாண மாகும். 19

இந்நிலனிற் கடமில்லை யென்பதனாற்
றோன்று மின்மையுணர் வபாவமா மாயிரமா கிய



வெண், டன்னிலொரு நூறெனுமெண் ணுண்டெ
னுஞா னந்தான் சம்பவமா மிம்மாத்தி னியக்கனுள
னென்னுஞ், சொன்னிகழ்வில் வருமியக்க விடய
வுணர் வதனைச் சொற்றிடுவ ரறிஞரை திகமாகு
மளவை, யென்னவிவண் டொகுத்துரைத்த காட்
சிமுத லாய வெண்வகையிற் சமயர்கொள வின்ன
வெனவுரைப்பாம். 20

புகலுகா யதனுக்குக் காட்சியொன்றே சைந
புத்தவைசே டியர்கடமக் கிரண்டநுமா னத்தோ,
டுகலருஞ்சாங் கியர்க்குமூன் றுரையொடுநான் குவ
மை யொடுநியாயர்க் கருத்தா பத்தியொடைந்
தாகு, மிகுபிரபா கரற்காறு மபாவமொடு பாட்ட
வேதாந்தி கட்காகு மெனவறிக தெரிவுற், றிகலரு
மோண் புராணிகர்க டமக்களவை யெட்டா மென்
றுரைப்பர் சம்பவவை திகங்களுட னன்றே. 21

## திருக்கு விவேகம்.

திருந்தியவே தாந்தநூ லியம்புறுவ திருக்
குத் திருசியமென் றிருபொருளங் கவற்றின்முதற்
றிருக்கில், வளர்ந்திடுவ சுவகதந்தன் சாதிவிசா

திகளா மற்றவைமூன் றினுக்குமுதா ரணமுறையே மொழியில், விரிந்தநிழ றருசெம்பூம் பணைமா மொன் றிற்கு ளிமிறினங்கள் புக்குமுகத் தழுது பெருகுறுதே, னருந்துாறு மலர்முதலா யினவும் வே றுள்ள வணிமாமுங் கன்முதலா யினவும்போ லாமால். 22

நிரவயவ மாதலினு னுஞ்சத்து வேறு நிகழா மை யானுமிறை தனக்குமுத னடுவின், றொரு வுறுக விவ்வுலக காரணமா மாயை யுண்மையினு னிறுதியதி லென்பதென்கொ லென்னில், வரைவு தரு சித்திரிகன் சித்திரசத் தியைப்போன் மாயை யுஞ்சக் மாத்திரமாம் பிரமத்தின் வேறாய்த், தெரி வதிலா மையினென்றுஞ் சச்சிதாநந்த சிவத்தி னுக்கு விசாதியில்லை யென்றுணர்க தெரிந்தே. 23

சுருதியினு னேகமே வாத்துவித மென்னுஞ் சொற்கிடையு னேகமெனுஞ் சொல்லதனுக் கயிக்க, மரிதினுணை ரேவவெனு மிடைச்சொற்குத் தேற்ற மத்துவித மெனுமொழிக்குத் துவிதவிலக்



காகக், கருதுபொருள் வருதலினு லிம்முறையே மாயா கற்பனைகள் கடந்துநிர வயமாகி யென்றுந், திரிதலில்சிந் மயமாகு மொருபிரமந் தனக்குத் தெரித்தசுவ கதமுதலா யினமூன்று மில்லையே. 24

அத்தியா ரோபமப வாதமென விரண்டா யறைகுவர்கற் பிதமத்தி யாரோப முள்ள, சுத்திநூ டிலாதவிர சதம்விளைத்தல் போலச் சொல்பிரம சத்தினில்லா வுலகதுகற் பித்த, லெய்த்திதுதான் வெள்ளியதன் றிப்பியெனல் போலோர்ந் திறை மெய்பொய் யுலகமெனத் தெளிதலப வாத, மெய்த்தபொரு ளறியுமிலக் கணமூன்று மவை தாம் விளங்கதத் வியாவிருத்தி தடத்தமொடு சொரூபம். 25

ஆகமுத லனநேதி யதுசெய்துநின்ற வாருயிரை யறிவித்த லதத்வியா விருத்தி, சாகைநுனி மதி யுளதென் றுணர்த்தலிற்பூ தாதி சகமாய காரணங் கொண் டறிவுணர்த்தல் தடத்த, மாகனலி விளங் குகதிர்ச் சொருபனெனல் போலாங் மாவினிச

சொருபமிது வெனவுணர்த்தல் சொரூப, நீகடவு சொருபநிசஞ் சச்சிதா னந்த நித்தியம்பூ ரணமாக நீநினைந்து கொள்ளே. 26

மதித்தன்மதி யாமைநன வாதிகளிற் றனக் கோர் வாதையிலா துண்டெனல்சத் தவத்தையை னைத் தினுமே, யுதித்தவிட யங்களைநின் றறிந்திடு தல் சித்தா முவப்பினுக்கு விடயமாந் தன்மையா னந்தந், திதித்தசதோ திதநித்த மனைத்துஞ்சா தக மாந் திறத்தினா லனைத்தினுஞ்சம் பந்தநிறை வெனவே, விதித்திடுக வுயிர்சச்சி தானந்த மய மேல் விளங்கியதி லவற்றுளா னந்தமெங்கு மெனி னே. 27

வெம்மையொளி யுருவாய வழல்விளக்கி னொ ளியே விளங்கிடும் புனலிடத்தின் வெம்மையே விரியும், வெம்மையொளி யிரண்டுமெழும் விறகி னிலவ் வகைபோல் விமலசத்தொன் றேதிகழுங் கன்முதலா மவற்றின், மெய்ம்மைதவிர் புத்தியது தமோகுணத்தின் மூட விருத்தியினு மிராசதத்



தின் கோரவிருத் தியினு, மெய்ம்மையசச் சித்தா குஞ் சத்துவத்திற் சாந்த விருத்தியினிற் சச்சிதா னந்தங்க டோன்றும். 28

ஆதலினா லானந்த மயமாமாங் மாவவ் வைந்தி னுக்கு முபாதியுள வவைமுறையே மொழியிற், பேதமுறுஞ் சத்துமூன் றும்விவகா ரிகம்பின் பிராதிபா சிகம்பார மார்த்திகசத் தெனவே, மூது ணர்விற் சுழுத்தியிற்றோன் றுதுநன வுற்று முத்தி யுறு மளவுமுறுங் கடாதிமுத லதுவாம், போதுகன வினிற்றோன்றி யழிவதிடை யதுவாம் பொன்றுத பிரமசத்தே யிறுதியதா மன்றே. 29

சீவனொடு சன்கூடத் தன்பிரம மென்னச் சித்துநான் காங்குடநீர் கதுவுறுவெண் மீன்வான், றாவுபனி நீர்விம்ப வறுமிதா காசஞ் சொல்கடா வச்சிந்நா காசமொடு மாவான், மேவுமிவை யவற்றி னுக்குத் திட்டாந்த முறையாம் விடயமொடு பிர மம்வா சனைமுக்கி யம்பி, னேவுநிச வாங்மாவோ டத்துவிதம் வித்தை யெனுமிவற்றின் பெயரா லெண் வகைப்படுமா னந்தம். 30

மாதுமுதல் விடயவூ தியங்கடமிற் றோன்றி
வால்விடய வாநந்தங் கண்படையிற் றோன்ற,
லோதுபிர மாநந்தந் துயிலொழிவிற் றோற்ற
முடையதுதான் வாசனா நந்தங்கே டின்ப, மாத
விலா னொதுமன்மதி தோன்றுதல்முக் கியமா
மாநந்த மனோலயயோ கத்தினில்வந் துதித்த,
லேதமறு நிசாநந்தம் பிரியவிட யத்து ளியான்
பிரிய னெனத்தோன் றுதலாத்மா நந்தம். 31.

விரியுமூல கனைத்தும்பொய் மெய்ம்மைதா
னென்னும் விவேகத்திற் றோன்றுவதே யத்து
விதா நந்த, மரியமறை முடிவாகும் வாக்கியஞா
னத்தா லாதலது வித்தியா னந்தமென வறிக, வுரி
யனமுன் னின்மையொடு பின்னின்மை யன்றி
யொன்றொன்ற காமையென்ற மின்மையென
னான்காய்த், திரியுமபா வங்களிவை நித்தியத்துட்
புகாத திறத்தனவாம் பூரணத்து முறுதனமூன்
றாகும். 32



உரைத்தவைதா மியாவையெனி னொருகா
லத் துண்டின் றொருகாலத் தெனுங்கால பரிச்
சேத முடனே, தெரித்தவொரு தேயத்துண்
டொருதேயத் திலையென் றேயபரிச் சேதமு
மொன் றுமாகா தென்னுங், கருத்தில்வரு வத்து
பரிச் சேதமுமா மென்னக் கருதிடுக வினிச்சித்
தின் விரிவாகு மெனமுன், விரித்திடுமச் சீவாதி
கட்குநா மாதி விவகார கற்பனையீண் டெடுத்து
மொழி குதுமால். 33

சாற்றரிய சீவபே தங்கண்முறை விசுவன்
றைசதன்பின் பிராஞ்ஞெனனப் பகர்ந்திடுவ ரவ
ருள், வேற்றுமைசெய் தூலவுடல் வியட்டியபி
மானி வியாவகா ரிகன்புத்தி கதுவுறுசை தந்யன்,
மாற்றரிய சிதாபாசன் விட்சேப ரூபன் வருபிர
மாத் திருநவல்கத் திருவொடுபோத் திருவே,
தோற்றியிடும் விஞ்ஞான மயன்குடும்பி சரீரி துவம்
பதமுக் கியன்முதலா யினவிசுவ நாமம். 34

பெற்றவொரு சூக்குமமெய் வியட்டியபி மாகி
பிராதிபா சிகசீவன் சொற்பநகற் பிதனென், மற்
றவைதீரன் முதலாய தைசதன்றன் பெயராய்
வழங்குறுவர் காரணமெய் வியட்டியபி மாகி, யுற்று
வரு மவித்யோ பகிதன்கா ரியமா முபாதிக
னென் பனமுதலாம் பிராக்ஞா மங்கள், பற்றி
வரு சீவாக்மா வந்தராக் மாமேற் பரமாக்மா வெனப்
படுமோங் மாவிதமூன் றாகும். 35

காய்ந்துள விரும்பு போலுடம் பாதி கலந்
துறு குடும்பமென் வழக்கிற், சார்ந்துளன் சீவாந்
மாவெனப் படுவான் றமலை யிலையினீர் போலத்,
தோய்ந்துள குடும்பப் பெருவிவ காரந் தோய்வில
னந்தராங் மாவாம், போந்தல கிற்குப் பரிதிபோற்
சான்றாய்ப் பொருந்தினேன் றன்பர மாங்மா. 36

நீர்விழுந் தொருவெவ் கதிர்தடு மாறி நின்ற
தென் றுரைப்பது போலுங், கார்விரைந் தோட
வோடுகின் றதுதண் கலைமதி யென்பது போலு,
மோர்வருந் திரிவிற் போதவாங் மாவிற் குடன்முத



லாகிய வுபாதிப், பேர்வருஞ் சீவ பாவனை யுலகப்
பெருவிவ காரமென் றறியே. 37

அருவிராட் புருட னிரணிய கர்ப்ப னந்தரி
யாமியென் றீசன், றிரிவித மவருட் டுலவா கத்
துச் சமட்டியா கியவபி மாநி, விரிவுறும் வைசுவா
நரனெனன் முதலா விராட்புரு டன்பெய ராகு,
மருவுறு மிலிங்க மெனுமுடற் சமட்டி மாநிமாப்
பிராணனே யன்றி. 38

சூத்திராத் மிகனென் பெயர்முத லாகச்
சொற்றன ரிரணிய கர்ப்பற், கேத்துகா ரணமா
மூடம்புறு சமட்டி யெனுமபி மாநியவ் வியத்தன்,
வாய்த்தகா ரணமா முபாதிக னகந்த மயன்பா தே
வதை பரம, ஞத்ததற் பதமுக் கியார்த்தனென்
பெயர்மு னந்தரி யாமிபெற் றிடுமே. 39

சித்திர படமோர் பொருளொடுங் கூடாத்
திகழ்வினிற் றௌதமே யெனவு, செய்த்தகூழ்
வருடக் கடிதமே யெனவு நீனிறத் திலாஞ்சித
மெனவும், பத்தியோ வியஞ்சேர்ந் திரஞ்சித

மெனவும் படுதல்போற் பிரமமு மாயை, வைத்த
கா ரியங்கள் கடந்துறு நிலையில் வயங்குஞ்சித்
தெனும்பெயர் புனைந்தே. 40

அகிலகா ரணமா மாயையை மருவி யந்தரி
யாமியா மாயை, சகலகா ரியமாஞ் சூக்கும வுடம்பு
சார்ந்துபொன் கர்ப்பனென் றாகி, விகலமி றாலவ்
வுடம்பினை மேவி விராட்டென நிற்குமென் றறி
வாய், திகழுறு பிரமஞ் சித்திர படமேற் சித்திர
மியாதென வினவில். 41

விரிஞ்சனே முதலாஞ் சேதன மோடு வெற்
பெழு வாயசே தனமாய்ப், பரந்துள வுலகுஞ் சித்
திர மென்பர் பரம்பொரு ளாமொரு பிரமத்
திருஞ்சடா சடமா முலகது தோற்ற மெவ்வண
மெனிற்படந் தன்னில், வரைந்தபன் னிறமாய்க்
குளிர்முதன் மாற்ற வல்லன வலதுகிற் போலி. 42

ஓர்வடி வாகிக் குளிர்முதன் மாற்று முண்
மையாஞ் சித்திர படம்போன், றூர்வுற வெழுதுங்
கிரிமுத லாய வதனொடொப் புறுநிலா வாபோற்



நேர்வரும் பிரமத் தெழுந்துபற் பலவாஞ் சீவர்கள்
சித்தொடொய் யாகப், பார்முத லொவ்வாச் சடங்
களா தலினாற் பாத்திலாஞ் சடாசட வுலகம். 43

இத்திறத் தீசன் முக்கிய குணங்க ளொரு
மறி தன்முத லனவாங், கத்திருத் துவமோ டகந்
திருத் துவம்பி னந்நிதா கத்திருத் துவமே, யத்
தன்மெய்ப் பிரபுத் துவவலி யாக்க லளித்தல்போக்
குதனிய மநந்தா, னெய்த்திட லகற்று மநுப்பிர
வேச மென்பன வீசனைந் தொழிலே. 44

நீங்கிய விகாரப் பிரமமா மீச னிகழ்த்துமோ
தொழில்பல வென்னிற், பூங்கதி ரிச்சை யின்றி
யே வாரி பொழிமழைக் கதிரினாற் பொழியா,
வாங்கதி னிழலாய்ப் பொருந்தியந் நிழலை யலர்முகி
லான்மறைத் தளித்தே, தாங்கிம காத்தால் வெங்
கதி ரானீர் தொலைத்ததைத் தன்னொடாக் குதல்
போல். 45

போற்றிறை மாயா சத்தியோ டொன்றிப்
பொலிந்தசிற் பிரதான மதனாம், சாற்றரு நிமித்த

காரண னாகித் தருஞ்சடப் பிரதாந மதனா, லாற்று
பா தாந காரண னெனநின் றாக்கிய புத்தியா திக
ளிற், றோற்றுபு சீவ ரூபமாய் வினையாற் சொற்ற
போத் திருவென நின்றே. 46

நியமசத் தியினற் போகபோத் திருவை நிய
மஞ்செய் துருத்திர வுருவான், மயமுறு மாயா
காரியஞ் சிதைத்து வந்தரு ளாரிய வுருவா, லயர்
வுறு சீவன் றன்னையே தன்னோ டயிக்கமாக் குவ
னென வறிக, வுயர்வுறு சமட்டி வியட்டியென்
பனவா லுயிரிறை கட்குறும் பேதம். 47

மிகுமரப் பன்மை தண்டலை யெனல்போன்
மிகுமுயி ரெலாமுனா னெனுமோர், தகுமபி மாந
மிறைசமட் டியதாந் தனித்தனி மரம்பெயர்
கொளல்போற், பகுமுட றோறும் வேறுவே றாகப்
படுமபி மாநமோர்ந் துரைப்பிற், றொகுமுயிர்
வியட்டி யுருவமென் குவர்மேற் றொம்பத விலக்
கிய முரைப்பாம். 48



சீவனென் றிடுமூ வகையதிட் டாநன் சேதந
னந்தரி யாமி, யாவலி னநுசந் தாத்திருச் சுயஞ்
சத் தார்த்தனோ டவச்சிந்நன் சீவன், தாவரும் பார
மார்த்திகன் றுரியன் சான்றினன் பிரத்திகாந்
மாவா, லேவமி றொம்ப தத்திலக் கியார்த்த
னென்பகூ டத்தநா மங்கள். 49

ஈசனென் றிடுமூ வகையதிட் டாந னியம்
பரு மொருபரப் பிரமம், பாசமில் பாதத் துவம்பர
மாந்மாப் படியிலா விசுத்தசித் தன்றிப், பேசுதற்
பதலக் கியார்த்தனென் பனமுற் பெறுபரி யாயநா
மங்க, டேசுறு பிரமந் தனக்கென வுரைப்பர் திருந்
துநூ றெரிதரும் புலவர். 50

வடிவொடு பெயராற் குடமுத லாக மண்பல
வகைப்படு மதுபோற், கடிபசும் பொன்னே செய்
கையாற் பல்வாங் சுடரிழை யுருவுகொள் வது
போற், படியறு சித்தே முன்சொல்சீ வாதி பலவு
மா மெனமுத லாக, விடலரு மறிஞர் நூல்பல
திருக்கு விவேகமென் றியம்புறு மன்றே. 51

## திருசிய விவேகம்.

இத்துவினை யநாதிபடைந் ததைமுழுது
மறையாம லிந்து தன்னு, லந்திறனை யொளிர்வித்
துக் கொள்களங்க மெனவெனையா னறியே
னென்னு, முந்துலக விவகாரந் தனிலுயிரை
யடைந்ததனை மூடா தென்று, மந்தவுயி ராலறி
யப் பட்டுமென றம்பிக்கு மந்தி ரம்போல். 52

விளங்குறுமாக் மாவுருவ மல்லாம லாங்மாவின்
வேறாய்த் தோன்றா, துளங்கொள்ளிய தாதிகா
ரியங்கடமைத் தோன்றாம லொடுக்கி நின்றுங்,
துளங்கலக டிதகடனை யெனுஞ்சமர்த்தை யாகியு
மே தோன்றா நின்ற, வளங்கடரு காரணமா யது
வாகுந் திரிசியமா மாயா சத்தி. 53

அனையதொரு மாயையிலக் கணமசத்துச்
சடந்துக்க மநித்தங் கண்ட, மெனுமிவையுண்
முயற்கோடு முதலசத்துச் சடவுருக்கல் லெழு
வாய் புத்தி, தனையடையுங் கோரமொடு மூட
விருத் திகடுக்கந் தபுமெய் யாதி, முனமுனைசெய்
யநித்தங்கண் டிதங்கால பரிச்சேத முதல வாகும்.



பிங்கமொட சத்துச்சா வயமுமெதிர் மறையு
மவை பிரிந்து தம்மின், மன்னியவு மொழிந்தநிர்
வாச் சியமாகு நவிதமம் மாயை யெய்து, முன்ன
லருஞ் சுருதிசம் பந்தமுத்தி சம்பந்த முலக பந்த,
மென்னவரு ஞானங்கண் முறையேயம் மாயைபடு
மியல்பு கூறில். 55

விண்ணின்மல ரனத்துச்ச மேயெனவு
மிப்பிவரு வெள்ளி போல, வெண்ணுமநிர் வாச்
சியமா மெனவுமுயிர் போனித்த மெனவு நிற்கு,
முண்ணிலவு தமமாயை மோகமூட னவித்தை
பொய் யுருவி யென்றே, நண்ணுமிவை மாயாடஞ்
சகமாகு மெனவறிஞர் நவில்வ ரன்றே. 56

சீவசே தநமறைத்துத் தமமயலா கியவ்வுல
கத் திறத்திற் கெல்லா, மேவுகா ரணமாகி மாயை
விப ரிதஞானம் விளைத்து மோக, மோவவுணர்
வழித்தவித்தை சத்தின்வே றாகிப்பொய் யுருவி
யாகும், வீவிலா மாயையதற் கிருதருமஞ் சங்
கோச விகாச மென்றாம். 57

விரிந்தபட மோவியங்கள் பலதிகழ்த்திக்
குவித்தொடுக்கும் விதமே போல, வரந்தைதரு
மாயையுந்தன் விகாசதரு மத்திறை லகிலங் காட்
டிப், பரந்தவைகள் சங்கோச தருமத்தா லடக்கு
மெனப் பகர்வர் மாயைக், கிருந்தகுண மிரண்டுள
வில் சுதந்தரமுஞ் சுதந்தரமு மென்ன வன்றே. 58

பொய்யாகிச் சத்துருவப் பொருளின்வே
றாகியொரு பொருளாய்த் தோற்றல், செய்யாமை
யாலுளதில் சுதந்தரஞ்சான் றுயவொரு சேத
னன்பா, லுய்யாத சீவாதி யாக்குதலாற் சுதந்தரமு
முளது மாயை, மெய்யான தலதென்றல் விசும்
புலர்போ வில்லையென விளம்ப லன்றே. 59

புலமில்கந விடைக்கரிபோற் றோன்றிவிசா
ரந்தோன்றப் பொன்றும் பொய்யா, நிலவுதல்செய்
சுத்தசத் துவவடிவ மாயையொடு நிகழ்த்து கின்ற,
மலினசத் துவவடிவ வவித்தைதமப் பிரதாந வடிவ
மாகு, நலமில்பிர கிருதியென விருத்திமூன்
றுடைத்துமுன நவின்ற மாயை. 60



மாவையவரு சுழுத்திலயங் களினத்தி யாச
லிக்க மாயிற் றன்மை, யாயபிர மத்தினை வொடு
படைப்பி னிதுபேத வவத்தை யெய்து, மேய
வதிற் பிரமசை தந்நியம்விம் பித்திதுவே விளங்கு
ஞானத், தூயசைதந் நியவீச னற்பதியென் றிட
நிற்குந் துணிவு தன்னால். 61

அப்பாற் குபாதி யாகி யமோககா ரணியா
மாயை, பொய்ப்புற மவித்தை யெண்ணிற் போத்
திருப் பசுவென் றோது, மொப்பருஞ் சீவர்க் கெல்
லா முபாதியாய் மோகஞ் செய்யு, மெய்ப்புறு
பகுதி பாச மெனக்குணச் சமமாய் நின்று. 62

அவித்தையின் விம்பித் துள்ள வாருயிர்
நுகர்ச்சிக் காகத், துவக்குறு காரி யங்க டோற்
றிட வெதிர்கு றித்த, வுவப்புறு மீச ளேக்க மாத்
திரத் துற்ற லர்ந்து, பவப்படு கால மாகி யது
கொடு பரிணா மித்து. 63

இருமக தத்து வந்தா னெனநிற்கு மதுதா
னீர்பெய், தரும்விதை முளையா மன்முன் போலி

ரா தமர்தல் போலக், கருவெனும் பகுதி யோடாங்
காரமு மாகா மற்பொய், யுரமுறு நிருவி கற்ப வரு
கடு வவத்தை யாகும். 64

கொன்மக தத்து வந்தான் குணபேத முரூப்
பொய் ஞான, மன்சவி கற்ப மாக வருமுத லத்தி
யாச, மென்முத லாங்கா ரந்தோன் றிடுங்குண
சத்து வந்தான், பின்வரு மிராச தஞ்சொற் பெருந்
தமோ குணமென் றாகும். 65

உரைப்பருஞ் சத்து வாதி யுருவங்கள் பிரகா
சம்பின், புரைப்பிர விருத்தி மோக மென்குவர்
புகல்கு ணங்க, ணிரைப்பெயர் தான்வை காரி
கெழுந்தை சதம்பூ தாதி, விரிப்பருங் குணங்கண்
மூன்றுந் தருவமேல் விளம்ப லுற்றாம். 66

சத்துவ குணத்திற் றோன்றுந் தயங்குமுட்
கரண நான்கும், புத்தியிந் தியங்க ளைந்தும் போந்
துதித் திடுமி ராச, தத்தில்வாக் காதி யைந்துந்
தரும்பிரா ணாதி யைந்து, மத்தமோ குணத்திற்
றோன்று மகல்விசும் பாதி பூதம். 67



அப்பெரும் பூதம் பஞ்சீ கரித்துல காகி நிற்
குஞ், செப்பிய கரண நான்கின் செயல்களா
நினைத்த லந்தப், பொய்ப்பொரு டுணிதன் மாநம்
புரிதல்சிந் தித்த றிங்க, டிப்பிய நான்மு கன்சேத்
திரிபுராந் தகன்றே வன்றே. 68

இக்கர ணங்க டாந மிதயஞா னேந்தி யங்
கட், குய்க்குறுந் தொழிலாங் கேட்ட லூறல்
காண்ட லுண்டன் மோத்த, றிக்குமா ருதமே
னன்மித் திரனுயர் வருண னோடு, தக்கசு வநியாந்
தெய்வந் தாநங்கா தாதி யாமே. 69

புத்தியிந் திரியங்க டாமுணரும் விடயம் புற
மெனவே யுன்றுமுணர்ந் திடுஞ்செவிகள் புதைப்
பி, னுய்த்தபிரா ணதியொலி கேட்கையங்கா
திகளை யுண்ணும்போ தழல்குளிர்ச்சி யறிதல்விழி
மூடின், மெத்தமக விருளறித லுட்காரா திக
ளின் விளங்குசுவை கந்தமறிந் திடன்முறைதே
யாகும், வைத்தகரு மேந்திரியத் தொழிலுரைத்ய

னடத்தல் வழங்கல்விட லாநந்தித் திடுதலென
வறியே. 70

அங்கிமக பதியிரவி யுடன்மிருத்து பிரசா
பதிதெய்வம் வாய்முதலாங் கோளகைக் டாந,
மிங்கிவையு ளுட்காரண மிருவகையிந் திரிய மென்
னவரு பதினான்கு மத்தியாந் மிகமார், தங்குமிவற்
றுறுவிடய மாதிபௌ திகமாந் தருமதிதே வதை
யாதி தெய்வீக மாமிப், புங்கவரே யிந்திரியம்
விராட்புருடற் கதுமெய் பொன்கர்ப்பர்க் கது
மறைப்பா மந்தரியா மிக்கே. 71

நின்றிதயந் தனையடைந்து பிராணனுச வாச
நிசுவாச மியற்றுமபா னன்குதத்தி னுற்றுச், சென்
றொழிய மலசலங்க ளொழித்தலுறுஞ் சமானன்
சேர்ந்துந்தி யந்நரச முறுப்பனைத்தும் பகுக்கு,
மென்றுமுதா னன்களமுற் றுற்காரம் புரியு மிருக்
தங்க மெங்கும்வியா னன்பரிக்கு முடம்பைக், குன்
றுதலி னாகன்சோம் பாவித்தல் விளக்குங் கூர்ம
னால் விக்கலொடு தேக்குனவா மன்றே. 72



றும்மலுட னிருமல்வருங் கிரிகரனா னகுதல்
சொல்லுதலாந் தேவதத்த னாற்சோக ராக, மிம்
மைதருந் தநஞ்சயனத் தநஞ்சயனும் வாயு விறந்த
வைந்து நாள்காறு மிருந்தானனி வீங்கி, மெய்ம்
முழுதும் வெடித்திடச்செய் தகலுநா காதி விளம்
புபுற வாயுக்க டாங்கருமேந் தியங்க, டம்மைமிக
வியக்கலுறும் பிராணாதி வாயுத் தாமியக்கும் விடா
மன்ஞா நேந்திரியங் களையே. 73

சாற்றின்வை ரம்பன்முக் கியன்பிரபஞ் சந
னந் தரியாமி யொடுமெகாப் பிராணனெனும் பெயர்
கொள், காற்றிவைகள் சீவசம் பந்தமா யேயுட்
கரணங்க ளியக்கியிடு மண்முதலைந் திற்கும், பாற்
றிகழும் வியாபாரம் பொறைபிண்டீ கரணம் பாக
மொடு விரகமிடங் கொடையாகுந் தரும, மாற்ற
லுறு திண்மைநெகிழ் வழற்சிபரி வெளியா மய
னொடரி யரனீசன் சதாசிவன்றே வதைகள். 74

கந்தமுத லாயினவே குணங்களவை தம்முட்
ககநத்திற் கொலியொன்றே வளிக்கிரண்டே யுட

னே, யந்தழலுக் கொளியொடுமூன் றறக்கிரது
மொடுநான் கைக்துமனை மொடுபுவிக்கென் றறிக
திரி புடிதான், மூர்துஞா திருஞாந ஞேயமா மவற்
றுண் மூலவகங் காரஞ்சேர் சீவசை தர்ய, நந்து
ஞா திருமநத்திற் கதுவறிவு ஞாந நவின்றபெனை
திகவிடய ஞேயமென வறியே. 75

ஈங்குமந மிருபத்து நான்காவ தாகு மிருபத்
தைதக் தாவதுதான் மூலவகங் கார, மாங்கதனை
யடைதலுறுஞ் சிதாபாச சீவ னறையுமிரு பத்
தாறு மவன்மாயை மருவு, மோங்கொளியா மீச
னிரு பத்தேழா மவனவ் வுயிர்முதலாந் துரியனிரு
பத்தெட்டா மவனே, நீங்கலரு மீசனதிட் டாத்
திருவாம் பிரம நிகழ்த்திவிரு பத்தொன்ப தாவது
வா மன்றே. 76

தெரித்தகா ரியத்தோற்ற மிருவகையாங்
கிரம சிருட்டியுக பற்சிருட்டி யெனமூலப் பகுதி,
விரித்தமக தத்வமக மூந்தன்மாத் திரையாம்
விளங்குசத்தப் பிரகிருதி யாற்பஞ்ச பூத, முறைத்



தவற்றூற் பிரமாண்ட பிண்டமுத லாய வுலகுதயந்
தான்கிரம சிருட்டிநிறை கடலான், மருத்துவசத்
தலையாதி போற்சிவத்தின் மாயா மயநாம வுருவ
நிகழ் வாமுகபற் சிருட்டி. 77

கருதிசித்த மாதலினு விவையுடம்பா டாகுக்
தூயபரப் பிரமமாம் விகாரமிலா விறையாற், றருத
லெங்ஙன் காரியங்கள் சடப்பகுதி யென்னிற்
றுனிலாக் கதிர்ச்சிலையி லிச்சையிலா தெழுந்த,
பருதியினு லழல்வரல்போற் பரசிவனுன் மூலப்
பகுதியிடை மகதாதி காரியங்கள் வாற்குக், கரு
தின்மூர னிலையாகு மெனப்புகல்வ ரறிஞர் காரி
யங்க டோற்றுதனுல் வகையவையீண் டுரைப்பாம்.

விருத்திபரி ணமமா ரம்பம்விவர்த் தமதாம்
விரிந்தபடங் குடில்பாவம் பாறயிர கார முறைத்த
லுறு தந்துபட நியாயம்வண் பழுதை யுரகவுரு
முறையவற்றின் றிட்டாந்த மாகும், வருத்துகயிற்
றரவங்கந் தருவநகர் குற்றி மகன்கவிர் திரசாலஞ்
சத்திகர சதந், தெரித்தவிவை முதலனவாந் திரி

தலின்மெய்ப் பொருளிற் றிரிந்திடுபொய்ப் பொருளதுகற் பிதமாதற் குவமை. 79

பொய்ப்பொருள்கற் பிதமாயிற் றவிகாரி யாகப் பொருந்துமுயி ரிடத்தேன்முன் பிராந்தி யார்க் கென்னி, லொப்பில்சதி பதிரதிமா லுருவச் சொப் பனந்தா னொருமுனிவன் பாலுதிப்பி னதனா லங் கவனுக், கெப்பழுது மிலாததுபோற் சான்றா மான் மாவி லிலங்குகுண வருவமாம் பகுதியினான் மருளா, மெய்ப்பரிய ஞாதிருவும் பிராந்திஞா னமும் பொய் விடயஞே யமும்வரினு மவற்கிடையூ றிலையே. 80

இறைவனாற் றோன்றியமா யாமயமா முலக மிருந்தபடி யிருக்குந்தன் வடிவினா லதனுண், மறைவிலாச் சீவபுத்தி விருத்திகற் பிதமா மற் றொருபோக் கியவடிவ மேவிருப்பு விடயம், வெறு விதாம் வெறுப்புவிட யத்தினொடு நொதுமல் விட யமெனப் பலவிதமா மவையாவை யென்னின், முறையின்வழி தாதிபுவி யெழுவாய்வீழ் துரும்பு



ழுதலனவா மெனமொழிவர் முற்றுமுணர்ந் துடையோர். 81

ஈசனிரு மிதமான வேகாகா ரமும்பி னெய் துமுயிர்க் கற்பிதமாம் பலவாகா ரமுமோர், தேச விட யத்துறுதற் கெவ்வாறிங் கென்னிற் றிட் டாந்த மீசனிரு மிதமணியா திகடாம், பேசி லொரு தகையாய்ப்போத் திருப்புத்தி தன்கற் பிதநாநா விதத்தினா லவைதமைபெற் றோனுக், காசைவிட யமதாகிப் பெறற்குவெறுப் பாகி யரிய அற விக்குபேட் சாவிடய மாமே. 82

அப்பொருடான் விளங்கித்தோன் றுறுவதற் கின்னு மறைதுமொரு திட்டாந்தந் தோன்றிய வோர் மாது, மெய்ப்பரிசோர் திறமாகப் போத் திருக்கள் புத்தி விருத்திகற் பிதத்தினாற் றந்தைக்கு மகளாய்த், தப்பில்கொழு நற்குக்கா தலியாகி மகற்குத் தாயாகி மாதுலற்கு மருகியா யிருப்ப, விப்பரிசு விடயமெலா மிறைவனிரு

மிதமு மிலங்குயிர்க்கற் பிதமுமா மிருதிறத்தற் றிடுமே. 83

அண்ணனிரு மிதப்பிரபஞ் சந்தான்வா றிப்ப தல்லாமை யானுநா லாசிரிய வடிவாய், நண்ணை லரு முத்திசா தநமாயுந் தன்று னழுவவொண்ணு மையினுனு மனையதுதா னிற்க, வெண்ணரிய சீவ கற் பிதமாய வதுதா னிருபிரபஞ் சங்கள்சாத் திரத்தொடசாத் திரமாங், கண்ணுமசாத் திரப்பிர பஞ் சங்கொலிரு திறனுங் கழறிற்றீ விரமந்த மெனவவையீண் டுரைப்பாம். 84

சீவபர விசாரணையே யுரைத்தலரி தாஞ்சாத் திரப்பிரபஞ் சங்காமா திகளேதீ விரமாங், காவ லுறுஞ் சாதிகரு மாதிகமொ டேதன் கருதுமநக் கற்பிதமே மந்தமசாத் திரத்தின், மேவுறுமவ் விரு திறனு மாருயிர்மெய்க் காட்சி விரோதிகளா தலின்ஞாநம் பயிறற்கு முன்ன, மோவுவசாத் திரப்பிரபஞ் சந்தான்மெய்ஞ் ஞாந வுதவியா யாங் மக்காட் சிப்பின்விடு வதுவாம். 85



தீவிரமந் தங்களுயிர்க் காட்சியுற்ற பின்னுந் திகழ்முத்தி பெறற்பொருட்டு விடுவனவென் றறிக, பாவமுறு மவச்சின்னோ பாதிபதி விம்போ பாதியுட னத்தியா சோபாதி யெனவே, மேவு முபா திகளொருமூன் றுளவவற்றை முறையே விளம்பிடியிற் சுழுத்தியுரு வாமவித்தை தானே, யாவரண வவச்சின்னோ பாதியாம் பிரத்திய காக்மா வுக் கதனதுகா ரியமாம்புத் தியினில். 86

பற்றியவாக் மாப்பதிவிம் பித்திடுத ரூனே யதிவிம்போ பாதியாம் புத்திகத மாய, முற்றுசுக துக்கங்க ளுயிர்நுகர்தல் போல முயலுதலே யத்தி யா சோபாதி யாகு, முற்றவத்தி யாசவிலக் கண மாம்வே றொன்றி லொன்றினது புத்தியிப்பி வெள்ளியது போல, மற்றதுநால் வகைப்படுமான் மித்தையுட னிதர மற்றிதரே தாஞ்சத்தி யங்க னினு லன்றே. 87

நெருப்பினொடு புணர்ச்சியாற் புனற்கழற்சி யால்போ னித்தமுறு மாங்மசங் கிதியதனின்

முறையே, சரிப்பினொடு காண்டலினை வுறலறி
தல் வரலாற் றருந்தூல மெய்யித்தி யாத்தியா சங்
தா, னிருப்பருமிந் தியங்களே யிதராத்தி யாச
மிதரேத ராத்தியா சங்கரண மாகுந், தரிப்பரிய
மூலவகங் காரமது தானே சத்தியாத் தியாச
மெனச் சாற்றுவர்தக் கவரே. 88

ஆங்கார மாங்மாவிற் குநாவெனலாற் கயிற்றி
னரவமென நிருபாதி காத்தியா சந்தா, னாங்கார
வியலாங்மா விற்குநான் கருத்தா வாமெனலாற்
சிவப்புவலம் போற்சோபா திகமா, மீங்காகுங் கர
ணதரு மாங்மாவிற் கிச்சை யினேனென் றிருத்
தலினா லலைபுனலிற் புக்க, வீர்ங்கதிரின் விம்ப
மெனத் தத்தருமாத் தியாச மெனவுரைப்பர் நான்
குடும்ப வானெனநிற் கையினால். 89

மைந்தர்முத லாயினா ருடனாங்மா விற்கு
மண்ணுலகிற் பவீறியத்தர் விவகார மெனவே,
யந்தமுறு சம்பந்த மாத்திராத் தியாச மாமென்ப
சிவ்வத்தி யாசங்க டம்மா, னந்துநிரு விகாரியான்



மாவென்றல் பெற்று நவிறருமைந் தவத்தையுள
வவையாவை யென்னிற், றொந்தமுறு நனவொடு
சொப் பநஞ்சுழுத்தி துரியந் துரியாதீ தந்தானா
மவற்றியல்பு மொழிவாம். 90

பெருந்தூல வைம்பூத மீரைந்திந் திரியம்
பிராணபஞ் சகமொடுநாற் கரணமிவை யுருவா,
மருந்தூல சரீரத்திற் சாத்துவித குணமோ டகர
வெழுத் தரிதெய்வம் விழியிடமே யாக, விருந்தாக
விதயமல ரட்டதள கதியில் விசுவசீ வனும்விராட்
டிறையுமொருங் கடைந்து, வருந்தாவில் விடயங்
கள் கரணமனைத் தானா மருவிநுகர்ந் திடுதல்சா
கரணமா மன்றே. 91

பஞ்சபூ தமுஞ்சித்த புத்தியுநின் றொழிந்த
பதினேழின் மயமாஞ்சூக் குமதநுவி னின்றும்,
விஞ்சுரசோ குணமுகர மெழுத்ததிதெய் வந்தான்
விரிஞ்சனிடங் களமாக கல்விதய மென்னுங்,
கஞ்சமலர்க் கர்நிகா கதியாற்றை சதனுங் கநக

கர்ப் பனுமருவி கவின்வா தனையை, நெஞ்ச
மெனுங் கரணத்தா லநுபவிக்கை தானே நிகழ்ந்
திடுஞ்சொப் பனமென்று நிகழ்த்துவர்மூ தறிஞர்.

மேய்ந்துதிரி பார்ப்படக்கி யுறங்களகு போல
விரிந்தகா ரியங்களையுட் கொண்டுவா தனையோ,
டாய்ந்தவாங் மாசிரயத் தவத்தையற விருக்கு
மரும்பகுதி மயமாங்கா ரணவுடம்பிற் றமமே,
யேய்ந்தகுண மகாவெழுத் தான்றெய்வ மிதய
மிடமாகக் கமலமலர்ப் பொகுட்டுநடுக் கதியா,
லோர்ந்தபிராஞ் ஞனும்பானு மாய்ப்பிரமா னந்த
முறுமாயா விருத்தியெனு நுண்காரணந் தன்னால்.

அநுபவித்தல் சுழுத்தியா மிந்நவா
திகண்மூ வவத்தையொடு முத்தாம முப்புரமுத்
தாநம், பினுமுத்தே யங்களெனும் பரியாய நாமம்
பெறுமுறைத்த சாக்கிரத்தே யக்கமல மழித்து,
மநவழக்கந் தவிர்ந்துபரந் தனைச்சிந்தித் திடவே
வருந்துரிய மப்பரமாக் மாவிர்மந மடங்கள், முனை



முறைத்தல் செய்துரியா தீதமெனப் புகல்வர்
மொழிந்தவற்றுட் டாவாங்கள் பெறுதலிருட்
சுழுத்தி. 94

விலங்குமுத லனபெறுவ சுழுத்தியொடு
கநவால் விண்ணவர்க்கு நநவுநார்க் கம்மூன்று
மாகுங், கலங்கலறு மருளர்க்குத் துரியமகா யோகி
கட்குவரு வதுதுரியா தீதமுதன் மூன்று, மலங்க
லுறு மநுடர்க்குத் தம்மிற்றமே தோன்றி வரும்
பந்த மாமேனை யிரண்டுமியோ கத்தா, விலங்கு
முத்தி சாதநமா மவையொன்றி லேயொன் றிலா
மையாற் காலதே சங்கணிய மம்பொய். 95

சொற்றவவத் தைகளிலது சூதனு யறியுந்
துரியனே யுளனாவு கநவிலறி வுண்மை, யெற்றனை
மச் சுழுத்தியினிற் பெறலுரைப்பி னெழுந்து பிறி
தொன்று மறியாது சுகத்துறங்கி னேனென்,
றுற்றவிரு நினைவுமது பவஞ்சுழுத்தி யதனி லூற்
துவரா வெனுமருத்தா பத்தியினற் பொருள்கண்,

மூற்றுமடக் கிருள்விழிகாண் குதலெனக்கா ரியங்கண் முழுதையுமுட் கொண்டபே ரவித்தையிரு ளினையும். 96

அந்தவவித் தையினதுருக் குமவிருத்தி தன்னி லலையுமரத் திலையிடையின் வெண்ணி லாத் துளிபோல், வந்திலகி யடங்குநிசா நந்தக் கூற் றினையும் வருகாரணந் தராபேட்சை யின்றி யே யான்மா, முந்துரைசெய் சுழுத்தியினி லநுப விக்கை யாலே மொழிந்ததனி லறிவுளதா மேது மறி யாம, னந்துசுகத் துறங்கினே னெனற்கேது விடய ஞாநமிலா மையுங்குடும்ப நிவிர்த்தியுமா முறையே. 97

மன்றசுழுத் தியிலதற்குக் கரியாமா நந்த மயவுயிருண் டெனிலொருவ ராகிலுமாண் டறிந் தே, னென்றலில தேதுகா ரணமெனிலோர் பொருளை யெடுப்பநீர் மூழ்கினோ னுண்டுளதென் பதுமேற், சென்றலது புகலவொணா ததுபோலக் கருமச் செயலினா லெழுந்ததுணை யாங்காரணங்



கூடி, னன்றியதி லறிந்தபொருள் கூறொணா தாகு மாதலினா லுயிர்ச்சச்சி தாநந்த வொளியாம். 98

அந்நமொடு பிராணன்மநம் விஞ்ஞாந மிக்க வாநந்த மயமாமைங் கோசமுள வவைதாஞ், சொன்னமுறை சுக்கிலசோ ணிதத்தாகி நின்ற தூலவுடம் பந்நமய கோசஞ்சூக் குமமெய், மன்ன லூறும் பிராணனும்வாக் காதியுமே பிராண மய கோச மநமுஞா நேந்தியமும் புணரிற், பன்னு மநோ மயகோசத் தூரியன்சிற் சாயை பதிதலொடு லோகாந்த குந்தமே போன்று. 99

இருந்தவாங் காரமுஞா நேந்தியமுங் கூடி யிசைதலுறும் விஞ்ஞாந மயகோச மாகும், பொருந்துகா ரணதேக ரூபாவித் தையுந்தாம் புகல்விடய தரிசநசா மிப்பியசை யோகந், தரும் பிரிய மோதமொடு பிரமோத மென்னத் தக்க வையு மாநந்த மயகோச நானென், றாங்கைதரு விஞ்ஞாந மயகோச வடிவா மாங்காரந் தனையான்மா வென்பாறி விழந்தோர். 100

நீலகுண விசேடமொடுற் பலவிசே டியந்தா னிகழ்தாவேத் தியமாதல் போலிளைத்தே னெனிநீ னுன், றாலதநு வொடுங்கேட்ப னுனெனினிக் தியத்துஞ் சூழ்வனு னெனிற்கரண முடனும்வேத் தியமாய்ச்,சாலவுயிர் துரியனிற் கையினுலாங் காரந் தானுர்மா வன்றாகி லசேதநவாங் காரஞ்; சீலமுறு புறவிடய மறிவதே னெனிலூ சிக்கலின்முன் னூசிசேட் டித்திடுதல் போலும். 101

வெயிலினிடைக் காட்டுபடி மக்கலமுண் மனையை விளக்குதல்போ லுந்துரியன் றனதிருஞ் சந் நிதிபு, மியலுறுதற் சைதந்யப் பதிவிம்பந் தன் பா லெய்தலும்பெற் றிடுதலினு லச்சடவாங் காரம், பயில்விடய வுணர்வினொடு நநவுகந வுழன்று பகர் சுழுத்தி தனிலடங்கு மவ்வழக்க முறைப்பிற், செயிர்தருமாங் காரமடங் குறுசுழுத்தி தன்னிற் செறியவித்தை யுட்சுவருந் துயிற்கதவு மன்றி.

நடுக்கமறுந் தீபமாந் தனைத்தானே விளக்க லவில்பிரத்ய காத்மாவின் சோதியாம் பின்னர்த்,



தொடக்கிவரு காலகரு மாதிசமீ ரணனுற் றுயிற் கதவந் திறந்திடவவ் வவித்தையது தன்னி, னடுக் குமுத லவத்தைமக தத்துவமாந் தெற்றி யடுத் திருந்தாங் காரமெனும் வெண்பளிங்கு மணிதான், படைத்தலருந் துரியசுடர்ப் பதிவிம்பம் பதியப் பட்டுமுனம் போர்சீவ னென்னவே நின்று. 103

சொற்பநமா நடுமனையை விளக்கியே பொறி யாஞ் சுருங்கையினிற் போந்துநந வெனுமுன்றில் விளக்கு, முற்பகருங் காலகரு மாதிசமீ ரணனுன் மூட லுமத் துயிற்கதவங் காரியவாங் கார, நற்படிக மணியவித்தை தனிலடங்கச் சென்று நநவுகந வெனுமுன்றி னடுமனைக ளிருளுந், தற்படிக மணிகதுவு மறிவொளிதன் முதலாந் தனித்துரிய விளக்கையடைந் தேகமா மன்றே. 104

இத்திரமிங் ககமினது பாவாபா வங்க ளிலஞ் ஞாநந வாதிகளி னவிகார மாகி, யுய்த்துணரு முயிர் வேறொன் றிருத்தலினு லென்று முரைத்தவக மாத்மாவன் றெனவறிக புறம்பு வைத்தவிட யங்க

டனக் காங்மாவாய்ப் பரமாங் மாவிற்கு வேத்தியமா
தலிற்சடா சடமா, யத்தமதின் முன்பின்போ
லொளியலதா மகந்தைக் காகஞ்சிற் சாயையாக்
மாவுடனும் புணர்ச்சி. 105

வெப்பினே னெனலாற் சிற்பதிவிம் பங்
தான் மேவுமாங் காரசம் பந்தத்தா றால,
மெய்ப்படிவ வெம்மைமுத லனவறிதல் கரும
விளைவாகிக் கருமசமா நானறிந்தே னெனலாற்,
றப்பரிய சிற்சாயை யுடனவ்வாங் கார சம்பந்தஞ்
சிருட்டிமுதன் முத்தியள வாகிப், பொய்ப்பரிய
வியல்பாகு நான்கருத்த னெனலாற் புணர்ச்சியி
லாங் மாவினுட னியைதின்சம் பந்தம். 106

இசைப்பிலது பிராந்திசெங் நியமாகு மென்னு
மிவைமுழுதுஞ் செப்புதிரி சியவிவே கந்தான்,
மிசைப்புகல்வ வஞ்ஞாந மாவரண மிக்க விட்சே
பம் பரோட்சமப ரோட்சஞா நம்பின், வசைப்படித
லறுஞ்சோக நிவிர்த்திபதின் மீது வருநிரங் குச
திருத்தி யெனுமவத்தை யேழுந், திசைப்புறத



லுறுஞ்சீவர்க் காவனவா மிவற்றின் றிறமனைத்து
முறைபிறழா தினியெடுத்து மொழிவாம். 107

திருசிய விவேகம் முற்றிற்று.

---

புன்னெறிகொள் குடும்பியாய் வசியறுமோரி
சித்துப் போலியாஞ் சீவனுயர் சுருதிவிசா ரத்
தின், முன்னமொரு தன்சொருப மாகியபே
ரொளியா முதற்றுரிய நிலையறியா திருந்திடலஞ்
ஞாநம், பின்னொருகா லுயிரியல்பு கூறுமிடத்
தின்று பிரத்யகாங் மாத்தோன்று தெனுங்கலக்க
மிரண்டும், பன்னியவஞ் ஞாநகா ரியமாகு மென
னப் பகர்தருமா வாணமென்பர் பலகலைகற்
றுணர்ந்தோர். 108

கருத்தனுமொண் கருமபல போத்திருவுந்
தானுய்க் கருதியுடம் பபிமாநி யாஞ்சீவன் றனே,
யுரைத்தலரும் விட்சேபஞ் சுருதிகுரு வுண்மை
யுரையாலுண் டியொனவே யறிதலசத் தென்னு,
நிரைத்தமுத லாவரண நிவர்த்தகமாம் பரோட்ச

சீபிரம மெனும்வேத மொழிவிசா ரத்தால், வாத்
தூரியன் றனெனவே யறிந்திடுத லபாரா வரண
நிவர்த் தகமாகு மபரோட்ச ஞானம். 109

தூரியநிலை யடைந்ததற்பி னன்கருத்த னன்
போத் திருவென்னுஞ் சீவவுருத் துக்கமகன்
றிடுத, லரியதெனு மச்சோக நிவிர்த்தியாஞ் செய்
தே யடைதலுறும் பலனனைத்து மடைந்தன
மென் றமைதல், பரிவினிரங் குசதிருத்தி யிரண்டு
மப ரோட்ச பலமாகு மறிவுருவா மாத்மாவிற் கென்
றுந், தெரியுமப ரோட்சமுள தாதலினு லவற்குச்
சேர்தலெவ்வா றஞ்ஞாந முதலனவிங் கென்னில்.

கடந்துநதி பதின்மர்தமை யெண்ணுங்கா
லொருவன் கண்டுநவ புருடரைப்பத் தாமவன்று
னெனவே, யடைந்தறியா திருத்தலே யஞ்ஞாநம்
மத்தா மவனிலைகா ணப்படா னென்னுமிரு
பிராந்தி, யிடும்பைதரு மாவரண நதியுளவ னிறந்
தா னெனுந்துக்கம் விட்சேபம் வேறுரியன்
மொழியாற் கிடந்ததொரு துறக்கமென வுளனெ



னவே யறிதல் கிளர்ந்தவவ னிலையென்ற லொடு
பகைத்தல் பரோட்சம். 111

சங்கநவ புருடரொடு முறையெண்ணி நீயே
தசமனெனத் தனைத்தானே யிருந்தபடி யடுத்த,
லிங்குவரு தசமன்கா ணப்படா னெனலோ டிகலு
மப ரோட்சயா நதியுளிறந் தனனென், றங்குவரு
துயரகறல் சோகநிவிர்த் தியதா மடைந்துதன
தியனிலையிற் சுகித்திருத்த றனே, துங்கநிரங்
குசதிருத்தி யென்றறிக வினிமேற் றொல்வேத
வாக்கியமாம் விசாரமெடுத் துரைப்பாம். 112

விரிந்தவிதி நிடேதஞ்சித் தார்த்தபோ தக
மாய் வேதவாக் கியமூன்று திறனுகு மவற்றுள்,
வருந்திமக முதலனசெய் கென்றல்விதி விடுக
மதுபானா திகளென்கை நிடேதம்விதி யின்றித்,
திருந்துசிவ வுயிரயிக்கப் பொருடனையே தெருட்
டல் சித்தார்த்த போதகவாக் கியமாகு மென்பர்,
பொருந்துமறை நான்கினுநான் குளவாஞ்சித்
தார்த்த போதகமா கியமகா வாக்கியங்க ளன்றே.

உரைத்தவையுட் சிறந்தன்று சாமமறை
புகலு மோங்குதத்வ மசிமகா வாக்கியமங் கதற்
குப், பாத்தலுறு தற்பதக்தொம் பதத்தொடசி
ப்தமாய்ப் பதமூன்றுஞ் சிவமுயிரங் கவற்றயிக்க
முறையே, யருத்தமென லாம்பதமே பதார்த்த
மொடு வாக்கி யார்த்தங்க டமக்குச்சம் பந்தமுறை
மூன்றும், விரிக்கிலவை தாஞ்சமா னாதிகா ணம்
பின் விசேடவிசே டியமிலக் கியமொடிலக் கண
மாம். 114

அறைதலுறு பதங்கடமக் கிருபொருளிங்
குளவா மவைவாச்சி யார்த்தமிலக் கியார்த்தமென
வவற்றுண், முறைமைதரு விராட்புருடன் முத
லாகி நின்ற மூவுருவ வீசனுமப் பிரமமுமொன்
றாகிப், பிறிதலற நிற்புழிதற் பதத்திற்கெய் துறுவ
பெயர்வாச்சி யார்த்தமுக்கி யார்த்தமபி தார்த்த.
நெறிகொள்விசு வாதிகளுந் துரியனுமொன் றாகி
நிற்புழிதொம் பதத்திற்கு வருமம்மூ வகையும். 115

தற்பதத் தினுக்குவிராட் புருடாதி யகன்ற
தனிநிருபா திகப்பிரம மேயிலக்கி யார்த்தஞ்,



சொற்பரவுஞ் சோதிதற் பதார்த்தமென நிற்குந்
தொம்பதத்திற் குற்றவிசு வாதிகளின் வேறும்,
பொற்பினிரு பாதிகமாந் துரியனிலக்கி யார்த்தம்
பொருந்துறுசோ திததொம்ப தார்த்தமென லா
லும், விற்பாவு மிலக்கணைவிட் டதுவும்விடா தது
வும் விட்டுவிடா ததுவுமென மூவகையா மன்றே.

கங்கையினி லிடைச்சேரி மருவலுறுஞ்
சொல்லுங் கவன்குந்த மொடுசோயந் தேவதத்த
னென்னு, மிங்கிவைக ளுதாரணமா மவற்றினுக்
குக் கங்கை யெனுமொழிநீர் வடிவாந்தன் முக்கி
யார்த் தத்தைத், தங்குமிடைச் சேரிதனக் கிட
மாகா மையினாற் றணந்துகரை காட்டுந்தன் முக்கி
யார்த் தத்தைத், துங்கமுறு குந்தமொழி விடா
மற்குந் தத்தைச் சுமப்பவனைக் காட்டுமென
வுணர்ந்திடுக துணிந்தே. 117

முன்னமொழி தருஞ்சோயந் தேவதத்த
னென்னு மொழியுண்முத லவனென்னு மொழி
யிறந்த காலந், தன்னில்வரு தேசவயோ விசிட்ட

னாங் தேவ தத்தனைக்காட் டிடுமிவனென் மொழி
நிகழ்கா லத்தி, லுன்னவரு மவையுடைய தேவ
தத்தன் றன்னை யுணர்த்திடுமிவ் விருத்ததரு மப்
பொருள்க ளிரண்டு, மன்னுதல்செ யயிக்கமுறா
மையினாலப் பொருட்கண் வருவிருத்த தருமங்க
ளனைத்தினையும் விட்டே. 118

விருத்தமறுந் தருமமாந் தேவதத்தன் றனை
யே விடாதுகொளி னவனிவனே யிவனவனே
யென்னுந், தெரித்தலரி தாயதா தாங்மியங்கூ டு
மாற் றேரினிதை விட்டுவிடா விலக்கணையி னொடு
தா, னருத்தவிலக் கணைபாகத் தியாகவிலக் கணை
யென் றுரைதலினா லிதுவேதத் துவமசிவாக்
கியத்திற், குரைத்திடுவ ருதாரணமா யுரியதென
வுண்மை யுணர்ந்துடையோ ரஃதெவ்வா றெனின்
முறையே யுரைப்பாம். 119

தற்பதம்வாச் சியார்த்தமா யெலாமறிதன்
முதலாஞ் சற்குணங்கொள் பரோட்சனாஞ் சிவன்
றனையே யுணர்த்து, முற்பகருந் துவம்பதமுக் கிய



மாய்ச்சிற் றுணர்வு முதலாய வீனகுண விசிட்ட
வப ரோட்ச, கற்பிதசீ வனையுணர்த்து மிம்முரண்
கொள் பொருட்கே கத்துவங்கூ டாமையினவ்
விருபொருளு மடையும், பற்பலவாம் பரோட்ச
முட னபரோட்ச மாகும் பகைத்ததரு மத்திறங்க
ளனைத்தினையும் விட்டே. 120

இகலிலா வறிவுமாத் திரமாகி நின்ற விலக்
கியமாம் பிரமகூ டத்தவுயிர் கொள்ளிற், புகரிலா
வதுவிதுவே யிதுவதுவே யென்னப் பொருந்துதா
தாங்மியம்வந் துறுமெனவே யறிக, பகவிலா வசி
பதமிவ் விலக்கியார்த் தத்திற் பரோட்சவப ரோட்
சங்கள் மாயாகற் பிதமென், றகவிலா துணர்த்தி
யுறு பலமாமிம் முறையா லொன்றாகு மறிவேயுண்
டெனல்வாக்கி யார்த்தம். 121

தூயதத்வ மசிமகா வாக்கியத்தி னாலே துரி
யபாற் குளதேகத் துவமென்மை கடாதி, யாய
வுபா திகளகற்றி விசும்பொன்றே யெனவு மகற்றி
மறு டத்தன்மை யிராமனைநீ தானே, மாயவன்கா

னெனவுங்கன் னனைவேடு கழித்து மகன்குந்திக்
கெனவுமொரு தசமனைமாய் துயரம், போயகல
வொழித்துநீ யேதசம னெனவும் புகலுதல்போற்
சுபாவசித்த மாகுவதே யன்றி. 122.

ஒருமலர்க்குத் துறக்கமெனல் போன்முத்தி
விருப்ப முதவருத்த வாதமெழிற் பதுமையைத்
தே வெனல்போ, லிருமைதரு முபாசநா பரம
னுடன் றன்னை யிந்திரனென் பதுபோலத் துதி
பரமா னினையே, யருமாசென் பதுபோல வுபசாரி
கந்தா னக்கினிமா ணவகனெனும் வாக்கியமே
போல, வுரிமைதரு சுகுணசா திரிசமித்து கோவி
னுடம்பென்கை போற்சாதி வியக்தியா மன்றே.

கடத்தொடுமெட் கநியமென் வாக்கியமே
போலக் காரியகா ரணநீலோற் பலமெனும்வாக்
கியம்போல், விடுப்பில்குண குணிதயிர்பாற் கபேத
மெனல் போல விகாரமே வாரிகணங் கட்கேக
மெனல்போ, லடுத்தங்வம்சாம் சிகம்விம்பப் பதி
விம்பங் களினுக் கயிக்கமெனல் போல்விம்பப் பதி



விம்ப வாத, மெடுத்துணரி லெனவிங்ஙன் பேதபா
மாக விசைப்பனவெ லாம்சுருதி விரோதமென
வறியே. 124

அவ்வகிலங் கட்கெலாம் பொய்ம்மையே
புகலு மரியதாம் வேதாந்த பக்கமதி லினைய,
வெவ்வமறு சுருதிவிசா ரத்தினா லுண்மை யெனா
முத்தி கூடுமென லெவ்வாறிங் கென்னி, லவ்விய
மென் சொற்பதமா தனைவினான் மெய்ம்மை
யாயவீ ரியவொழிவுங் கற்பிதமாம் வடிவிற், செவ்
வியவொண் கடவுள்வழி பாட்டினா லிட்டஞ் சேர்
தலும்போ னாலுணர்வான் முத்தியுஞ்சித் திக்கும்.

அருமையெனா முத்திவிலக் காகமுன் றள
வா மஞ்ஞான மையம்விப ரீதமென வவற்றுட்,
பிரமமல னாமென்கை யஞ்ஞான னானப் பிரமமோ
வலனோவென் றிடலையஞ் சுருதி, வருமினிய வுத்
திகளா னன்பரமா யினுமுன் வளர்சீவ பாவமுண்
டென் குதல்விபரீ தந்தான், றருமுறையி லஞ்ஞா

நாதிகட்குமுரா ணாகுஞ் சவணமொடு மநநநிதித்
தியாசநங்க ளன்றே. 126

சூதகா திகளினிடைச் சுருதிவிசா ரத்தாற்
றுணிவுதோன் றுதலெனவே சிவமொடுயி ரயிக்க,
மோதுமா ரணமொழியின் றாற்பரியங் கேட்கை
யுயர்சவணங் கேட்டபொரு ளுத்தியிற்சிந் தித்த,
நீதின்மா மநநமவற் றூற்றுணிந்த பொருளிற் சித்
தமசை வறவிருத்த னிதித்தியா சநந்தான்,
மேதையா கியசவண ஞாநத்தா லான்மா மெய்ம்மை
யா முக்கியத்தாற் சவணமங்கி யெனலாம். 127

ஏனையவோ ரிரண்டுமதன் றுணையெனலா
லங்க மெனலாகு மஃதெவ்வா றெனிற்பொருள்க
டிகழ்த்து, மானதோர் சுடரசைவிற் கருமவலி
யின்றா மாதலினால் வளிதடுக்குந் திரையெனலா
மநந, மேனிமிர்வான் றிரிதூண்டி யொளிர்வித்தல்
போலும் விளம்புநிதித் தியாசநமென் றறிந்திடுக
தெரிந்து, மோனையா மெனவுரைத்த சிரவணத்
திற் குள்ள முறையிலறு வகையிலிங்க தாற்பரிய
மூலாப்பாம். 128



அவைகளுபக் கிரமமுப சங்கார முடனே யப்
பியா சம்பினபூர் வதைபலமொ டுற்ற, கவிலருத்த
வாதமுப பத்தியென லாகு மற்சிருட்டி முன்சக
மெய்ப் பரமாயிற் றென்றுஞ், சிவமதற்குச் சுவக
தா திகளிலையென் றகண்டஞ் செப்புமதே யுமக்
கிரமஞ் சகஞ்சிவத்தின் மாய்த்துப், பலமகலத்
துரியற்குப் பிரமமுட னயிக்கம் பகர்ந்தத்து விதங்
கூற லுபசங்கா ரந்தான். 129

கூறுமிவை யிரண்டுமோ ரிலிங்கமென வறை
வர் கூடத்த னேபிரம மெனமறித்து மறித்துந்,
தேறவுரைத் திடலப்பி யாசமாந் துரியன் றிகழ்
பிரமா ணுதீத மென்கையபூர் வதையாம், பாநீ
லுயி ரொன்றறித லெலாமறித லென்கை பலம்
பிரத்திய காங்மவுரு வாம்பிரமந் தனக்கு, மாறரிய
வைந்தொழிற்கர்த் திருத்துவஞ்செப் புறுதல் வயன்
கருத்த வாதமென மதித்திடுக தெரிந்தே. 130

கடத்தினுக்கு மண்ணினையு நூற்குலண்டு
தனையுங் காரணமென் பதுபோலப் பிரமமே முன்
னம், படைத்தசகத் காரணமென் பதுவேதிட்
டாந்தம் யுத்தி தர்க்கமது மானமிவை மூன்று,
மடுத்துவரு மனுசக காரிகளா மவற்று ளாருயிர்க
ளநேகம்வியா பகமெனவே கூறுங், தடுப்பரிய
சாங்கியமே முதலாய மதத்துட் சாற்றுமுயி ரெலா
மூடம்பு தொறும்புணர்ச்சி யுறலால். 131

இந்தவுடம் பிவற்கேயாம் போகசா தனமற்
றேனோர்க்கன் றெனப்போகத் திதிபுகலொ
ணாதாம், வந்தவுடம் பெத்திறத்து மிவன்வினை
யான் வரலான் மற்றிவற்கே யெனின்வினையு
மெவர்க்குமிலை யோதான், முந்தையுடம் பபிமானத்
தாற்செய்வினை யிவற்கே முற்றுமெனி னவ்வபி
மான முமுந்தை யுடல்சே, ரந்தவுயி ரனைத்திற்கு
மிலையோதா னிவ்வா றாணவத்தை நீக்கலரி தநாதி
யுயி ரெனலால். 132

செப்பரிய வேகான்ம பக்கத்திற் போகத் திதி
யிலையென் றநேகான்ம பக்கமது கொளினு, மிப்



பரிசு மிகுபோகத் திதிகூடா தாயிற் றிச்சங்கை
யிருமதத்து மொக்குமே யென்னிற், பற்பலவி
லேகான்ம பக்கமதில் விம்பப் பதிவிம்ப நியாயத்
தாற் காணவசை வாதி, மெய்ப்பரிய பலதிறத்தா
லெண்ணிசழ்ந்த போக விளைவுகூ டுதலெளிதென்
குதலுத்தி யாமால். 133

தருக்கவனு மானவிலக் கணங்கடா மிசிரா
சாரியர்கண் முதலானோர் கண்டனா திகளில்,
விரித்தமைத லாலிதுதான் சுவானுபவ நூலாய்
விளங்குதலா லீண்டுரைப்பிற் பெருகுமெனும்
பயத்தா, லுரைக்கிலமந் திரயோகம் பரிசயோ
கம்பி னுயர்பாவ யோகமுட னபாவயோ கந்தான்,
றெரித்தமகா யோகமெனு மிவைகளோ ரைந்துந்
திகழ்கின்ற நிதித்தியா சனவடிவ மாமால். 134

ஓங்காரா திகளனுசந் தானத்தாற் பாத்தி லுள்
ளமடங் குதலேமந் திரயோக மதனோ, டங்காகு
மாபவன மொன்றாய்மூ லத்தி னிருஞ்சுழினை வழிச்
சென்று சென்னிநடு விருந்த, தேங்கான்ம வொளி

வின்மனோ லயமாதல் பரிசஞ் சிரோத்திரக்கஞ் செவி திசைக ளிருசுடர்கள் விழிதீ, பாக்காய முகமுந்தி விசும்புநிலம் பதமாம் பரமனுரு வாயவிராட் புருட வடி வெனினும். 135

அன்றியனை வுறுபெருந்தோட் படைபணியோ டுற்ற வண்ணல்வடி வெனினுநினைந் தவயவங்க டம்மி, லொன்றொன்றை விடுத்துநின்ற வவயவி மாத்திரமா முண்மையாம் பிரமத்தின் மநமடங் கல் பாவஞ், சென்றளவு காணமுறா வொருபிரமந் தன்னிற் சிந்தையடங் குதலபா வம்படைப்பி லொழிவிற், றன்றெரித றெரியாமை யிடத்தி னோர் பரிசாய்த் தன்வடிவாம் பிரமத்தின் மநமி றன்மா யோகம். 136

பகர்ந்தவுயி ருண்மைவிலக் காகவரும் பூதப் பிரதிபந்தம் வர்த்தமா நப்பிரதிபந் தம்பி, னிகழ்ந்த வா காமியப் பிரதிபந்தமென முத்தி நேயமொடு திறந்துகுரு பானையறிந் தடைந்து, மகிழ்ந்துசவ ணாதிகமுற் றிடினுமுன் னுகர்ந்த வநிதாதி விடய



சுக வாதனையாற் றிகழும், புகுந்துமந நிலைகலக்கி யுயிருண்மை யுறாமற் போக்கியிட றனைபூதப் பிரதி பந்த மென்பர். 137

மடிவிடயா சத்தியபி மாநமொடு குதர்க்க மறுகுறுசிற் றினஞ்சேர்தல் சபலத்து வாதி, யடைதலின்மெய் தெரிந்துமுயி ருண்மையுறா தழித்தலதுவாகும் வர்த்தமா நப்பிரதிபந் தங்காண், விடலரிய சநாமினுஞ் சிலவடைந்தா லன்றி விடா துபிர மாதியுல கிச்சையெனுந் தோட, மொடு மருவி மறைப்பொருளை யுணர்ந்திடினு மாந்ம வுண்மையுறா தழித்தலா காமியப்பிரதி பந்தம். 138

பந்தமவை மூன்றினையுங் கடந்திடுவான் பயில்வ பகர்ஞாநம் வைராக முபரதியா மவற்றின், வந்தனுரு மிலக்கணங்கா ரணமொடுதான் சொரூப மருவகா ரியமெனவே தனித்தனிஞா நக்கு, முந்துசவ ணாதிகமே காரணமாந் மாவுமூல வகங் காரமும்வே ரூக்குதலே சொரூபம், நந்துமகங் கார

கத மயற்குத்தான் கரியாய் நணுகுதலே காரிய
மென் றறைகுவர்மூ தறிஞர். 139

வேண்டும்வை ராக்கியத்திற் குற்றவதி தாதி
விடயத்தி னிலையாமை முதலாய குற்றங், காண்ட
லது காரணமெத் திறத்தானு மதனைக் கழன்றிடு
தல் சொருபம்பின் புறுமைகா ரியமா, மாண்டவுப
ரதிக்கியமா திகளேகா ரணஞ்சூழ் மநமொடுங்கல்
சொருபமாம் புறக்கருமந் தன்னின், மீண்டுபுகு
மயலறுதல் காரியமென் றிசைப்பர் விளம்பலுறு
ஞாநாதி கட்கவதி மொழிவாம். 140

தக்கதே காத்மபா வம்போலப் பிரமந் தா
னென்னுந் திண்மைஞா நத்தினுக்கா மவதி, மிக்க
பிர மாதிபதந் துரும்பெனவே நினைத்தல் விளம்
பும்வை ராக்கியத்திற் கவதிசுழுத் தியன்போற்,
றொக்ககரு மங்களனைத் தினையுநினை யாமை
தோன்றுமுப ரதிக்கவதி யாகுமிவை மூன்றும்,
புக்கொருவ னடைந்திடுமே லதுமுன்னம் விடாது
புரிந்தமா தவத்தின்வலி யென்றறிக தெரிந்தே.



குறையகலும் வைராக்கிய முபரதியா மிரண்
டுங் கூடிஞா நங்கூடா தாயின்முத்தி யரிதா, முறு
மினிய மிசையுலக பதங்கிடைக்கு ஞாந மொன்று
மடைந் தவையிரண்டு மிலையாயி னிற்ப, முறியுமா
நெடும்பனையோன் விழநினைவின் றியினு முறிய
விழல் போலவே தேகாந்த மதனிற், பெறுவனுயர்
முத்தியினை யுடற்கமைந்த வினையாற் பிறந்திடுந்
துக் கா நுபவ முளதாத றிண்ணம். 142

சாற்றரிய சுபேச்சைவிசா ரணைதநுமா நசிசத்
வாபத்தி யசம்சத்தி பதார்த்தாபா வனையே, மேற்
றுரிய காமியெனு மிவற்றினைமூ தறிஞர் விளங்கு
சுத்த ஞாநபூ மிகையென்ப ரவற்றுட், டோற்றிடு
நான் மூடனா யிருந்தகா ரணமென் சுருதிகுரு
வாலறிவ லெனநினைதல் சுபேச்சை, மாற்றரிய
சுருதிகுரு வாற்சிறிது தோன்றும் வைராக்கத் துறு
தல்சதா சாரம்விசா ரணையே. 143

மருவலுறு சுபேச்சைவிசா ரணைவலியால்
விடய வலியறுத லூன்றநுமா நசியவற்றின் பயில்

வால், விரவுநந வாயவுல கினைக்கநவென் றெண்ணி
மெய்த்தவாங் மாவுண்மை கருதல்சத்வா பத்தி
பாவலூறு முலகுதோன் றுதுசுழுத் தியன்போற்
பகாறிவு மாத்திரையாய் நிற்றலசம் சத்தி, யொரு
விவா சனையனைத்து மிகுதுயிலோன் போல வுயி
ரானந் தத்தொடுங்கல் பதார்த்தாபா வனையாம். 144

உண்டிலையென் றுமலகங் கிருதிநிரங் கிருதி
யுருமலறி வுருவாய வத்துவித பதத்திற், கண்ட
தொரு வறுங்குடம்போ லுட்புறஞ்சூ நியமாங்
கதிதுரிய காமியா முபாதியை யடைந்து, கொண்
டிலக லூறுதிரிசி யாநுவித் தம்பின் கூறலுறு
சத்தாநு வித்தநிரு விகற்ப, மெண்டருசட் சமாதி
களாம் புறமொடக மென்னு மிருபேத மடைந்த
வற்றை முறையினிவண் மொழிவாம். 145

கடாதிவிட யத்தினிலொன் றினைக்குறித்து
நாம கற்பனையோ டுருவமெனு மாயையதன் றிறத்
தைத், தடாதுவிடுத் தத்திபா திப்பிரிய மென்
னுஞ் சச்சிதா நந்தமாம் பிரமத்தின் றிறத்தை,



விடாதநுசந் தானஞ்செய் திடுதலே புறத்து மெய்த்
திரிசி யாநுவித் தப்பெயர்கொள் கின்ற, கெடாத
தொரு சவிகற்ப சமாதியென லாகுங் கிளர்ந்த
புறச் சத்தாநு வித்தமது கிளப்பில். 146

சச்சிதா நந்தவுரு வாகுவதே பிரமந் தானெ
னவே தியானித்த லதுவாகு மென்க, விச்சமா
திகன்பயின்ற வலியினாற் றேன்று மிரும்பிரமா
நந்தநிலை தனின்மனஞ்சென் றொடுங்கி, நிச்சலமா
யலையில்கடல் போலிருத்தல் புறத்து நிருவிகற்ப
சமாதியா மனோகதகா மாதிக், கச்சமறு கரிதா
னென் றெண்ணுதலுட் டிரிசி யாநுவித் தப்பெ
யர்கொள் சவிகற்ப சமாதி. 147

சங்கமறு சச்சிதா நந்தவொளி யுருவந் தா
னெனச்சிந் தித்திடலுட் சத்தாநு வித்தம், பொங்
குறுதன் னநுபூதி ரசந்தோன்று மதனாற் புகன்ற
திரிசியஞ்சத்த மெனுமிரண்டு மகன்றே, யிங்க
சைவி தீபமெனப் பந்தமற விருத்த லிலங்குறு
மூண் ணிருவிகற்ப சமாதியிவ்வா றுனுர், தங்க

னுற வொழுகுமியோ கிக்குமக மெங்குஞ் சரிக்கு
மாண் டாண்டெலாஞ்ச மாதியென லாகும். 148

தக்கமா ஞானபல நான்கு துக்கா பாவஞ் சர்வ
கா மாப்தியொடு கிருதகிருத் தியமே, தொக்க
பிராப் தப்பிராப் பியங்களென வவற்றுட் சொல்
லிய துக் காபாவ மிகபரத்தா லிரண்டாம், பொய்க்
குமோர் தூலவுடம் பொழிவெழிநீ நாற்றம் புகு
பிணிகண் முதலனவுஞ் சூக்குமதே கத்து, மிக்க
கா மாதியுங்கா ரணத்தினிலவ் வாதி வியாதிகட்கு
வித்தாம்வா சனையுமிகத் திடும்பை. 149

மித்தையெனு மாயாகா ரியவுடம்பா திகளின்
வேறாய துரியஞா நத்தின்மே லாக, வைத்த
வொரு போக்கியபோத் திருக்களிலா மையினால்
வரஞானிக் கவ்விடும்பை மூன்றுமிலா திருத்தல்,
பொய்த்தவிக லோகதுக்கா பாவமென லாகும்
புண்ணியம்வந் தென்றுபோம் பாவமென நின்ற,
சித்தமுறு சிந்தனையே பரலோக துக்கந் தெரியி
னெனப் புகன்றிடுவர் திருக்கறுநல் லறிஞர். 150



ஞானநிலை யடைதலுந்தா மரையிலைநீர் போல
ஞானியிரு வினையுமுறா மையினாலிந் தநத்திற்,
றீநணுகு மழலில்விற கிலாததுபோற் கருமச்
செயலிலவ னாமவனி லஃதிரா மையினான், மானழு
லுண் வசத்திலுறா ததுபோல ஞான மயனைவினை
யாவுமுறா மையினாலச் சிந்தை, தானவனி லெழா
திருத்த றனையுரைப்பர் மேலோர் தக்கபர லோக
துக்கா பாவமென வன்றே. 151

எல்லாவாழ் வினையுமுறுஞ் சார்வமென மாதி
யிரணியகர்ப் பாந்தமாய் மேன்மேல்வேண் டுற்ற,
நல்லாநந் தங்களெலாம் பற்றிலா வறிஞ னணுகுத
லான் ஞானங்கொண் டறிசிவத்தின் கூறாய்த்,
தொல்லாநந் தங்களெலா நிற்கையினா லவற்குத்
தோமிலகண் டாநந்தச் சித்திதோன் றுதலே,
பொல்லாத வினைப்பகையைக் கடந்தபெருந் தவர்
கள் புகன்றிடுவர் சர்வகா மாப்தியென வன்றே.

தத்துவஞா நத்திற்கு முன்னமிங் கடையத்
தக்கவிட்டம் பெறவனிட்ட வொழிவிற்கு

வேண்டி, வைத்தவுழ வாதிகளுந் துறக்கமுதல்
பெறற்கு மகமுதலா யினவுமுத்தி சாதநமா ஞாந,
சித்தியுற மிகுசவண நிகழுமறி ஞர்க்குச் செம்
லைவாந் தத்துவஞா நத்தின்பின் குடும்பப், புத்தி
யொடு பலபோகத் திச்சையிலா மையினாற் புகன்
றவுழ வாதிதொழில் யாவுமிலை யாமால். 153

வந்துசிறு சாளரத்திற் றோன்றுபர மாணு
வான்கதிரின் மிகுமொளியிற் றோன்றிடா வா
போ, லந்தனுறு சிற்றறிஞன் விடயமாங் கரும
ஞாநியிடைத் தோன்றாமை யாலியற்றத் தக்க,
மூந்துமக முதலனவிங் கிலைபிரமா நந்த முதலுண்
மை யெய்தலாற் சவணாதி யெல்லாஞ், சிந்தையுற
வியற்றுமள வாகுமதா விதுவே செப்பியவக் கிருத
கிருத் தியத்துவமென் றறியே. 154

முற்றலுறு விசிட்டபுண் ணியபரிபா கந்தான்
முத்திவிருப் பரியகுரு வழிபாடு பெருநூல், வெற்
றிதரு சவணாதி யறிவறியா மைகளின் விவேக
மிகு மஞ்ஞாந வழியொடுதன் னுண்மை, பெற்ற



சமு சாரதுக்க நிவிர்த்திநிசா நந்தப் பேறெய்த
லேபிராப் தப்பிராப் பியமாம், பற்றுமுயர் முத்தி
வகை யிரண்டாகு மவைதாம் பகர்சீவன் முத்தி
யொடு விதேககை வல்யம். 155

அறிவுடையார்க் ககமாந்மா வொடுவருசம்
பந்த மகறலினாற் பிறருடல்போற் றம்முடலந்
தனிலு, முறுநிதரு மபிமாந மின்மையே யாகி
யுண்ணுமநு பவவொப்பால் வருபிரா ரத்த, வறுநு
கர்வுண் டாஞ்சுழுத்தி யின்வலியே போல மங்
தாறு சந்தாந மாதலிற்றே காதி, செறியபிமா நங்க
ழன்றுங் கடமுதித்துஞ் சுழலுந் திகிரிபோல் வாத
னையா லுறல்சீவன் முத்தி. 156

பரமமா ஞாநந்தோன் றுதலுமே கதிர்முன்
பாயிருள்போ லஞ்ஞாநத் துடனதன்கா ரியமாம்,
பூமுதலா யினவனைத்து மகன்றிடுத றானே புகல
ரிய விதேககை வல்லியமென் றிசைப்ப, ருமுறு
மிங் கிதுவாகச் சீவன்முத்தி யுளதென் றுரைப்ப
தெவ்வா றெனிற்கயிற்றி னரவமயக் கொழிந்தும்,

வருமதன்கா ரியமாகும் பயகம்ப மாதி மருவுதல்
போன் ஞானத்தா லஞ்ஞானங் கெடினும். 157

அதனதுகா ரியமாகு முடம்பாதி நிற்கு மத
னாலும் பிரமஞா னந்தோன் றும் பொழுதே, சிதை
தருமஞ் ஞானமுட னுடம்பொழியு மாயிற் றிகழ்
பிரம வித்தியா சம்பிரதா யந்தான், கதியொழியு
மதனாலும் பரசிவனாற் பிரமன் கமலனா லுயர்பிர
சா பதியவனான் மநுவாம், புதமநுவான் மநுட
ருணர்ந் தனனெனவே முறைமை புகல்சுருதி
விரோதமா மதனாலு மன்றே. 158

செஞ்ஞானிக் குரித்தாகுஞ் சீவன் முத்தி சித்
தித்தற் குற்றபிரா ரத்தவா தனையோ, டஞ்ஞான
லேசசற் பாவவுடம் பாட்டா லாகவிலை யுஞ்சீடர்க்
குபதேசா திகமு, மெஞ்ஞான் றுங் கிடைத்திடுமோ
லச்சீவன் முத்தற் கிரிதருஞ்சஞ் சிதமங்கி புகுமுளி
புற் போல, மெய்ஞ்ஞானத் தார்பிரா ரத்தநுகர்ந்
தொழியு மேல்வினைகூ டாதநதி காரியா தலி
னால். 159



பெற்றவுயர் ஞானத்தா லொழிந்தவினை தா
னே பிராரப்த போகத்தை யளிக்குமெனி லது
மே, லுற்றவுட லுற்பத்தி தனையுமியற் றுறுமென்
றுரைப்பில்வறு விதைநுகர்ச்சிக் கன்றியே முளைக்
கு, மற்றதுதான் காரணமன் றதுபோல ஞானி
வருகரும நுகர்ச்சியினா லேயொழிவ தாகி, யற்ற
முறு பிறவிமேல் விளைத்திடுதற் கேது வாகா
தென் றியம்புறுவ ரறிவறிதக் கவரே. 160

அறைந்தநுகர் வினையதுதான் லோகயாத்
திரைக ளதிகரித் துறுநாற்கே யோருடம்பு தன்
னிற், செறிந்துநுகர் வாமவற்றி னதிகிருத ராகிச்
சிறந்தமா புருடற்குத் தசசங்கை யுடம்பி, லுறைந்
தலது தீர்ந்திடா தெனினுமறைப் பின்றி யுறுத
லா லொருவனுக்கிங் கிளைமைமுதற் பேதம், பிறந்
திடினு மவனுக்கோ ருடம்பேயாய் நின்ற பெற்றி
போ லாகுமென வுணர்ந்திடுக தெரிந்தே. 161

விடயங்க ளனைத்தினுக்கும் பொய்ம்மைசா
திக்கு மெய்ஞ்ஞானந் தனக்குமவைக் குண்மைசா

திக்கு, முடலினாகர் வினைக்குமொன் றற்கொன்று
விரோத முண்மையினான் ஞானிக்கு நுகர்வெங்ங
னென்னிற், கெடுகவு முதலவற்றுண் மைதுனா
திகளாங் கேடினாகர் வாதல்போற் பிராரப்த
போக, விடயங்க ளுண்மையா யலதாகா தென்
னும் விதியின்மை யானாகர்வு முணர்வுமா
னவால். 162

வந்தமய லொழிந்தளவே யிப்பியிடை வெள்
ளி மாய்தல்போ லறிவினா லஞ்ஞானங் கெடவும்,
மிந்தவுல கதுதோற்ற மேயிலா மையினா லெங்ஙன
மாம் வினைப்போக நுகர்ச்சியெனி லிப்பி, தந்தவிர
சதநிருபா திகப்பிரமை யாகுந் தன்மையா லுணர்ந்
தளவில் வெள்ளியுரு வொழியும், பந்தமுறு மிது
சோபா திகமாகு மதனாற் பகர்ந்ததுபோ லன்று
மற் றெங்ஙனெனி லுரைப்பாம். 163

தடத்தினுயர் கரையமர்வோ னத்தடத்துப்
புனலிற் றனதோ முகமாக விருப்பதுபொய்
யென்று, படைத்ததெனி வுளமொடிருப் பினு



மதோ முகமாம் படிவந்தோன் றுதல்போல மூல
வகங் கார, மடுத்துவரு சீவபா வாதிகமோ மித்தை
யறிதுரியன் றனெனவே யுணரினுஞ்சீ வாதித்,
தொடுத்தவுல குறுதலினாற் சீவன்முத்தன் றனக்
குத் துய்க்கும்வினைப் போகவிவ காரமுடம்
பாடாம். 164

சீவன்முத்தற் குரியனவா மைத்திரியே
கருணை திகழ்முதிதை யுபேட்சையெனுஞ் சற்கு
ணங்க ளவற்றுண், மேவுறுசற் புருடரொடு நட்பு
மைத் திரியா மெலிதருதுக் கிகளிடத்தி னிரக்க
மே கருணை, யோவறுநற் புண்ணியர்பால் விருப்ப
மே முதிதை யுவப்புவெறுப் பிரண்டுமிலா தலகி
லவ மியற்றும், பாவிகளை விடுதலே யுபேட்சை
யென வறிகப் பயனைந்தச் சீவன்முத்தற் குளவவை
யீண் டுரைப்பாம். 165

ஞானரக்கை தவஞ்சகல சம்வாத முடனே
கவிறுக்க வொடுக்கமொடு சுகாவிற்பா வந்தா,

ஞனவற்றன் மருவும்வா சனையழிவு மநத்தி
னடக்கங்க ளாற்புத்தி நிருமலமா யிருத்தன், ஞாந
ரக்ஷை மநம்பொறிகட் கொருமையே தவமா ஞாநி
யென வுலகமெலாம் வழிபடல்சம் வாத, மானமநக்
கிலேசமற லேதுக்க வொடுக்க மவற்றினாற் பந்த
மறல் சுகாவிற்பா வந்தான். 166

குறிகளோர் பத்துளவாம் ஞாநமயற் கலை
தாங் குரோதமின்மை வைராக்கியம் பொறிபுலன்க
ளடக்க, லறமுதவு சமைதமையே சநப்பிரியத்
துவமோ டலோபமொடு கொடையபய நிருமத
மென் றறிக, நெறிமருவு சீடரொடு பத்தருதா
சீனர் நிலையில்பா விகளென்னு நால்வகையோ
ரிடத்து, முறையினநுக் கிரகம்வந் தருமருள்
கொள் சீவந் முத்தனா லென்பரவை முறையி
னெடுத் துரைப்பாம். 167

தெரிவரிய சீவந்முத்தன் றனைநம்பு மதனாற்
சீடற்கு முத்தியுமன் பொடுவழிபா டதனைப்,
புரியுமுயர் பத்தற்கு நல்வினையு மவன்றன் புநித



முறு சரிதமது கண்டவதா நசீர்க், குரியபுண்
ணியவிருப்பு மவன்றன்வடி வினைக்கண் ணுறு
தன்முத லானவற்றாற் பாவிகட்குப் பாவ, விரிவு
முறு மென்பர்தருக் காதியா லாத லெங்ஙனே
னின் முத்தனாற் பிரமோப தேசம். 168

மறைப்பகலு மொருபிரம சொருபமா தவி
ஞன் மகிழ்ச்சிவெறுப் பிலாவீசற் கநுக்கிரகஞ்
செயவு, மொறுப்புறவும் வரும்வினையி னோராலத்
தொழில்களுறுதல்போற் சாதகர்தம் பக்குவமே
தத்தாற், சிறப்புறுநல் லுபதேசா திகண்ஞாநிக்
கெய்துஞ் செப்பியவிவ் விலக்கணமொ டிராதுபல
முறையாற், றறப்பிலருட் சீவந்முத்த ரிருப்ப
தென்கொ லென்னிற் றுணிவுதோன் றறமுதநூ
றொகுத்தபரி சுரைப்பாம். 169

வந்தணையும் பிராரப்த வாசனைதீ விரமே
மத்தியமந் தஞ்சுத்த மெனவொருநான் காகும்,
பந்தமறு ஞாநியா யினும்போகத் தழுந்திப் பசுப்
போலத் தன்மகிழ்ச்சி மாத்திரமா யிருத்தன், முந்

துறைசெய் தீவிரம்போ கச்சிறப்புற் றிடினு
மொழியாங்ம தற்பரனாய் விநோதமே புரிந்து,
மைந்தரென விருத்தன்மத் தியம்போக மனைத்து
மாற்றிமிது நம்போலா நந்தமுறன் மந்தம். 170

உலகவழக் ககன்றுசிரு பாதிகாங் மாவி லுற்ற
தற் பரனாகிப் பரமுத்த னெனவே, யிலகுசுகத்
துடனிருத்தல் சுத்தவா சனையா மென்பரிந்நால்
வகையாகுங் கருமவா சனையாற், றலைமைகொண்
முத் தர்கள்வேறு வேறாய வொழுக்கஞ் சாரினுஞ்
செந் நெறிகோண நெறிபெருமா நதிக, ளலைகட
லிற் புகுதல்போன் முடிவினின்மெய்ப் பரமா யமர்
தருநன் முத்திசுக மொருபரிசென் றறியே. 171

இச்சையுட னநிச்சைபிற ரிச்சையெனு
மிவற்றா லியம்பலுறு பிராரப்த மூன்றுவகைப்
படுமா, லச்சுரர்க ளானும்விலக் குதற்கரிய வாகு
மபத்தியஞ்செய் திடறனக்கே கேடனவிங்
கறிந்து, வைச்சுமது புரிவித்த விச்சைசெய்யே
னெனினு மன்னவர்தம் மாணைபோற் செய்வித்த



லநிச்சை, யிச்சையநிச் சைகளின்றி யிருந்துமய
லோரா லின்பதுன்ப நுகர்வித்தல் பிறரிச்சை
வினையாம். 172

இப்பரிசு மூவகையாம் பிராரப்த விளைவா
லெண்ணில்பல வொழுக்கமாஞ் சீவர்முத்தற் கிந்த,
மெய்ப்பொருளை வசிட்டனா ரதன்றருவா சன்சீர்
வியாதனொடு சுகன்வாம தேவனருட் சநக, னப்
பரிய பாதனெழிற் கௌதமனே முதலா யுளர்
வருத்த நாபேத முணர்த்தலுறு மிங்ஙன், றப்பு
தவு பிராரப்தங் கொளினன்ஞா நிக்குஞ் சுத்தனுக்
கும் வேறுபா டெங்ஙனெனின் மொழிவாம். 173

மண்ணுலகில் விராத்திரியர் சோத்திரியர்
தமக்கு மறையொழித லோதலா லன்றியுணன்
முதலா, யெண்ணவருஞ் செயலான்வே றிலாமை
யது போல விதயபந்த முறலொழித லாலன்றிப்
போக, முண்ணுநிலை யதனாலஞ் ஞாநமுடை
யோர்க்கு முணர்வுமய மாய்நின்ற சீவர்முத்தர்
தமக்கு, நண்ணிவரும் வேறுபா டிலையெனவே

நவில்வர் ஞானநூல் பலவுணர்ந்த நல்லுணர்வி னவரே. 174

தத்துவஞா னத்தினாற் பிரமமடைந் திடுமேற் றறுகண்வரிப் புலிகண்டோன் போற்சீவத் துவத்தை, யத்தலையே யழித்திடுமா தலினாலச் சீவ னழிவுதனக் குடன்படுமோ வெனிற்கடவுட் டன்மைக், குய்த்தவா தாவினாற் கங்கைமுத லவற்று ளொழிப்பதனுக் கிசைவர்நாத் துவமதுபோ லென்றும், பொய்த்தலிலாத் துரியவடி வாம்பிரமத் துவத்திற் பொருந்தத்தன் கேட்டினுக்கிங் குடம்படுஞ்சீ வன்றான். 175

வாதரா யணன்முதலோர் போற்சாப முடையனே மற்றருள்செய் வலியுடையோன் றத்துவஞா னத்தோ, னேதிலா னலனெனிலவ் வலிதவத்தின் பலமா மிலங்குதத் துவஞான பலமன்றா மாயின், மாதவமே ஞானத்திற் கேதுவெனுஞ் சுருதி வழக்கினாற் றவமிலர்க்குத் தத்துவஞா னந்தா, னேதெனிலாஞ் சாபாதிக் குச்சாகா மியமே யேதுநிட்கா மியதவஞா னத்தினுக்கென் றறியே. 176



வேதவியா சாதிகட்கு ஞானம்வலி யிரண்டு மேவுமே யெனிலவர்கட் கிருதவமு முளவா, மாதலினா லவ்விரண்டு மாகுமொரோர் தவமே யாயினெவ்வொன் றேயடையு மதனான்மா றின்றா, மேதையாஞ் சாபாதி வலியிலர்க ளாகி விதியிறத் துவஞானி களைக்கிரியா நிட்ட, ரோதுவார் நிந்தை யெனி லவர்தமக்கும் விடயத் துழல்பவரா னிந்தையா தலிற்குறைவின் றாமால். 177

உலகிறந்த சீவன்முத்த னுகர்வினைவா சனையா லுண்பொருள்கள் பலநவர்ந்து மௌனமே யுற்றும், பலதிறங்கண் மொழிந்துமுப தேசநெறி புரிந்தும் பரிதபித்து மகிழ்ந்துமித வேடங்கள் புனைந்துங், கலைதுறந்து முடையுடுத்துங் கல்வி பல பயின்றுங் கல்லாது மாதர்முயக் கிடையுற்று மிவ்வா, றலகிறந்த நடையுறினு மருள்விளையாட் டென்றே யவன்றனைநம் புகவைய மொருசிறிது முறாமல். 178

என்றுமெவ் விடத்தினுமோ ருடம்புமுறா தொன்றா யிருந்தசச்சி தானந்த சிவசொருப மாத.

னன்றிதரு விதேககை வல்லியமென் றிசைப்பர் கவின்றவிதை யெய்துமா றெவ்வாற்றா னென்னிற், பொன்றலினித் தியகருமா னுட்டானந் தன்னாற் புண்ணியமப் புண்ணியத்தாற் பாவவொழி வதனாற், குன்றலறு சித்தசுத்தி யதனாற்பொய்க் குடும்பக் குற்றநிகழ் வதனான்மெய்த் துறவுதற வதனால். 179

முத்திவிருப் பதனானே புறக்கரும வொடுக்க மொழிந்ததனால் யோகநிலை முயற்சியது தன்னாற், பொய்த்தலறு துரியவிழை வத்துரிய விழைவாற் புகலருமா வாக்கியவா ராய்ச்சியத னானே, யத்துவித ஞாநமத னாலவிச்சை நாச மதனாற்பொய்த் துவிதமயக் கழிதலத னானே, மெத்துசுக துக்க நினை வொழிவதனால் விருப்பு வெறுப்பறுத லதனா லொண் விதிவிலக்கோய் வதனால். 180

வினையிரண்டு மகறலத னாற்றேக பாவ விச்சிந்தி யதனானே பாசமெலா மொழிதல், பினையறைந்த வதனானே பராபரமாய் முடிவாய்ப்



பெயர்சாதி குறிபெறா தொன்றாகி வாக்கு, மநமிறந்து நித்தியா நந்தமய மாகி மறிவிலா விதேககை வல்லியம்வந் தெய்து, மெனவறிந்து துணிந்திடுக சுருதிகுரு பரனா லின்பவீ டடையுநெறி விரும் புறுமுத் தமரே. 181

வேதமுத லாகியநூ லனைத்தினுஞ்சொல் பொருளை விளங்கியிடக் கரதலா மலகமெனக் காட்டிப், போதமய மாகியபே ராநந்தத் தழுத்தும் பொருவிகந்த விந்நூலை முத்திபெறற் குரிய, சாதநநான் கினையுமடைந் தெவரானு மென்றுந் தடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி, யாதரவி னருட்குரவன் றனைத்தேடி யுருகு மன்புடையோர் தமைக்காணி னளித்திடுக வுவந்தே.

வேதாந்த சூடாமணி முற்றுப் பெற்றது.

பாயிர முன்படச் செய்யுள் 184.

சர்வஞ் சிந்மயம்.

---

# வைராக்ய டிண்டிமம்.

காம: க்ரோதஸ்ச லோபஸ்ச
தேஹே திஷ்டந்தி தஸ்கரா:
ஜ்ஞாநரத்நாபஹாராய
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 1

ஜந்மதுக்கம் ஜராதுக்கம்
ஜாயாதுக்கம் புந:புந:
ஸம்ஸாரஸாகரம் துக்கம்
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 2

மாதா நாஸ்தி பிதா நாஸ்தி
நாஸ்தி பந்து ஸஹோதர:-
அர்த்தம் நாஸ்தி க்ருஹம் நாஸ்தி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 3

ஆஸயா பத்யதே லோகே
கர்மணா பஹுசிந்தயா
ஆயுக்ஷீணம் நஜாநாதி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 4

---



ஸத்குருப்யோ நம:

நன்னிலம்

தாண்டவராய சுவாமிகள்

அருளிச் செய்த

# கைவல்ய நவநீதம்.

இது

திருப்பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.

சற் குருப்யோ நம:

# கைவல்ய நவநீதம்.

## பாயிரம்.

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளம், தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும், எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம், நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. 1

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனாய் மாலாய், ஆன்றவீ சனுமாய்த் தானே யநந்தமூர்த் தியுமாய் நிற்கும், பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனாய் நாளும், தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே. 2

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பால், கவருடைப் புவந மெல்லாங் கற்பித மென்ற றிந்து, சுவரிடை வெளிபோல் யானென் சொரூபசு பாவ மானேன், அவருடைப் பதும பாத மநுதினம் பணிகின் றேனே. 3

என்னுடை மனது புத்தி யிந்திய சரீர மெல்லாம், என்னுடை யறிவி னாலே யிரவிமுன் னிம



மே யாக்கி, என்னுடை நீயு நானு மேகமென்
றைக்கியஞ் செய்ய, என்னுடைக் குருவாய்த்
தோன்று மீசனை யிறைஞ்சி னேனே. 4

அந்தமு நடுவு மின்றி யாதியு மின்றி வான்
போல், சந்தத மொளிரு ஞான சற்குரு பாதம்
போற்றிப், பந்தமும் வீடுங் காட்டப் பார்த்தநூல்
பார்க்க மாட்டா, மந்தரு முணரு மாறு வத்துதத்
துவஞ்சொல் வேனே. 5

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடன்
மொண்டு முன்னூற், குடங்களி னிறைத்து வைத்
தார் குரவர்க ளெல்லாங் காய்ச்சிக், கடைந்தெடுத்
தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை, அடைந்
தவர் விடய மண்டிண் றலைவரோ பசியி லாரே. 6

முத்தனை வேங்க டேச முகுந்தனை யெனை
யாட் கொண்ட, கர்த்தனை வணங்கிச் சொல்லுங்
கைவல்ய நவநீ தத்தைத், தத்துவ விளக்க மென்
றுஞ் சந்தேகந் தெளித லென்றும், வைத்திரு
படல மாக வகுத்துரை செய்கின் றேனே. 7

பாயிர முற்றிற்று.



# 1. தத்துவ விளக்கப் படலம்.

நித்திய வநித்தி யங்க ணிண்ணயந் தெரிவி
வேகம், மத்திய விகப ரங்கள் வருபோகங் களினி
ராசை, சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென்
றாறு கூட்டம் முத்தியை விரும்பு மிச்சை மொழி
வர்சா தநமிந் நான்கே. 1

சமந்தமம் விடல்ச கித்தல் சமாதானஞ் சிரத்
தை யாறும், சமமகக் கரண தண்டந் தமம்புறக்
கரண தண்டம், அமர்தரு கருமம் பற்று தறுத்த
லே விடலென் றாகும், மமர்செயுங் காம மாதி வரி
னடக் குதல்ச கித்தல். 2

சிரவணப் பொருளைத் தானே சிந்தஞ்சிந்
திக்கு மாறு, சாதமா வைக்கு மித்தைச் சமாதான
மென்பர் மேலோர், பரமசற் குருநூ லன்பு பற்ற
லே சிரத்தை யாகும், வாமிகு சமாதி யாறு வகை
யின்சொற் பொருளி தாமே. 3

சாதந மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி
வில்லை, யாதலா விந்த நான்கு மடைந்தவர்க் கறி
வுண் டாகும், நூதந விவேகி யுள்ள நுழையாது
நுழையு மாகில், பூதசங் மங்கள் கோடி புகிதனும்
புருட னாமே. 4

இவனதி காரி யானோ னிந்திரி யங்க ளா
லும், புவநதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க
ளாலும், தவசமூன் றடைந்து வெய்யிற் சகித்தி
டாப் புழுப்போல் வெம்பிப், பவமறு ஞாந தீர்த்
தம் படிந்திடப் பதறி னானே. 5

ஆனபின் மனைவி மக்க ளர்த்தவே டணை
கண் மூன்றில், கானவர் வலையிற் பட்டுக் கை
தப்பி யோடு மான்போல், போனவன் வெறுங்கை
யோடே போகாத வண்ணஞ் சென்று, ஞாநசற்
குருவைக் கண்டு நன்றாக வணங்கி னானே. 6

வணங்கிநின் றழுது சொல்வான் மாயவாழ்
வெனுஞ்சோ கத்தால், உணங்கினே னைய னே
யென் னுள்ளமே குளிரும் வண்ணம், பிணங்கிய



கோச பாசப் பின்னலைச் சிந்த மாக்கி, இணங்கிய
குருவே யென்னை யிரட்சித்தல் வேண்டு மென்
றான். 7

அன்னதன் சிசுவை யைய னாமைமீன் பற
வை போலத், தன்னகங் கருதி நோக்கித் தடவிச்
சந் நிதியி ருத்தி, உன்னது பிறவி மாற்று முபாய
மொன் றுண்டு சொல்வேன், சொன்னது கேட்பா
யாகிற் றொடர்பவந் தொலையு மென்றான். 8

தொடர்பவந் தொலையு மென்று சொன்ன
தைக் கேட்ட போதே, தடமடு மூழ்கி னான்போற்
சரீரமுங் குளிர்ந்துள் ளாறி, அடருமன் பொழுகு
மாபோ லாநந்த பாஷ்பங் காட்டி, மடன்மலர்ப்
பாத மீண்டும் வணங்கிநின் றீது சொல்வான். 9

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனா
னாலுஞ் சுவாமி, நின்னது கருணை யாலே நீரொனை
யான லாமே, உன்னது பிறவி மாற்று முபாயம்.

மொன் றுண்டென் றீரே, இன்னதென் றதைநீர் காட்டி யீடேற்றல் வேண்டு மென்றான். 10

அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின், குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின் சொன்கை போலத், தொடங்கிய குருவு மாங்ம சொரூபமே மருவ வேண்டி, உடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோது வாரே. 11

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து, தீராத சுழற்காற் றற்ற செத்தை போற் சுற்றிச் சுற்றிப், போராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம், ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே. 12

தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங் கண் டானேல், பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன், உன்னைநீ யறிந்தா யாகி லுனக்கொரு கேடு மில்லை, என்னைநீ கேட்டகை யாலே யீதுப தேசித் தேனே. 13



என்னைத்தான் சடனு வுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா, தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ, பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந் துழலு வானேன், நின்னைத்தா னம்பி னேற்கு நிண்ணய மருளு வீரே. 14

இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வான் யாவன், அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ னாகு மென்றார், சொன்னபின் றேகி யாரித் தூலமல் லாம லென்றான், பின்னது கேட்ட வையர் பிழையு நகையுங் கொண்டார். 15

தேகமல் லாமல் வேறே தேகியார் காணே னென்றாய், மோகமாங் கநவில் வந்து முளைத்தவ னவனீ சொல்வாய், சோகமாங் கநவு தோன்றாச் சுழுத்திகண் டவனார் சொல்வாய், ஆகநீ நநவி லெண்ணு மறிவுதா னேது சொல்வாய். 16

கநவுகண் டதுநான் கண்ட நநவுள நினைவு நீங்கிக், கநவுகண் டதுஞ்சு ழுத்தி கண்டதும்

வேறொன் றேபோல், திமரு பவிப்ப தொக்குந்
தெரியவு மில்லை சற்றே, மாதினி லுதிக்கும்
பின்னை மறைக்கும தருளு வீரே. 17

தூலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை
காட்டு வார்போல், ஆலத்தி னுடுக்கள் காட்டி
யருந்ததி காட்டு வார்போல், தூலத்தை முன்பு
காட்டிச் சூக்கும சொரூப மான, மூலத்தைப்
பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே. 18

அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ்
சொல்லும், உத்தியாற் பந்தம் வீடென் றுரைக்
கும்வே தாந்த மெல்லாம், மித்தையா மாரோ பத்
தாற் பந்தமா மபவா தத்தான், முத்தியா மிவ்வி
ரண்டின் முந்தியா ரோபங் கேளாய். 19

ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ வெல்
லாம், ஓரோர்வத் துவினில் வேறே யோரோர்வத்
துவினை யோர்தல், நாருடு பணியாய்த் தோன்ற
லாளுகித் தறியிற் றோன்றல், நீருடு கானற்
றோன்ற லிறந்தலம் வெளியிற் றோன்றல். 20



இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு
மின்றி, ஒப்பமா யிரண்டற் றொன்றா யுணர்வொளி
நிறைவாய் நிற்கும், அப்பிர மத்திற் றோன்று மைம்
பூத விகார மெல்லாம், செப்புகற் பனையி னாலே
செனித்தவென் றறிந்து கொள்ளே. 21

அதுதானெப் படியென் றக்கா லநாதியாஞ்
சீவ ரெல்லாம், பொதுவான சுழுத்தி போலப்
பொருந்துமவ் வியத்தந் தன்னில், இதுகால
தத்து வப்பே ரீசனுட் பார்வை யாலே, முதமூல
சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே. 22

உத்தம வெளுப்புச் செம்மை யுரைத்திடு
கறுப்பு மாகும், சத்துவ குணத்தி னோடு ரசோ
குணந் தமோகு ணந்தான், சுத்தமோ டழுக்கி
ருட்டாச் சொல்லுமுக் குணமு மூன்றாய், ஒத்
துள வேனுந் தம்முளொருகுண மதிக மாமே. 23

ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறாச்
சொல்வர், மருவுமவ் வியத்தந் தானே மகதத்வ
மாகு மந்த, அருண்மக தத்து வந்தா னகங்கார

மாகு மென்றும், கருவகங் கார மூன்றாக் காட்டிய
குணமா மென்றும். 24

இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்
சிற் சாயை தோன்றும், முக்குணங் களினுந்
தூய்தா முதற்குண மாயை யாகும், அக்குணப்
பிரமச் சாயை யந்தரி யாமி மாயை, எக்குணங்
களும்பற் றாதோ னிமித்தகா ரணனு மீசன். 25

ஈசனுக் கிதுசு ழுத்தி யிதுவேகா ரணச
ரீரம், கோசமா னந்த மாகுங் குணமிரா சதம வித்
தை, தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவ
கோடி, நாசமா முயிர்க்கப் போது நாமமும்
பிராஞ்ஞ னுமே. 26

அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா னந்த
கோசம், சுழுத்திகா ரணச ரீரஞ் சொன்னதிம்
மட்டு மோக, முழுக்குணத் திரண்டால் வந்த
மூலவா ரோபஞ் சொன்னோம், வழுத்துசூக் குமவா
ரோப வழியுநீ மொழியக் கேளாய். 27



ஏமமா யாவி கோத வீசனு மருளி னாலே,
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண்
டாகத், தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து
தோன்றும், வீமமா மூட லென்றும் விவிதமாந்
தோற்ற மென்றும். 28

தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய
விண்ணும் விண்ணிற், காற்றதாங் காற்றிற் றீயாங்
கனலினீர் நீரின் மண்ணும், போற்றுமிவ் வைந்து
நொய்ய பூதங்க ளென்று பேராம், சாற்றுமற்
றிவற்றிற் போக சாதன தநுவுண் டாகும். 29

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து
நிற்கும், கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர்
கருவி யாகும், ஓதிய பின்னை யைந்து முளம்புத்தி
யிரண்டா னாக, சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப்
பிரிவி னாலே. 30

இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ
றைந்து மைந்தும், பிராணவா யுக்க ளென்றும்
பெருந்தொழிற் கருவி யென்றும், பாவிய பெயரச

மிந்தப் பதினேழு மிலிங்க தேகம், சுராசுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம். 31

இவ்வுடன் மருவுஞ் சீவ னிலங்குதை சத னென் றுவன், இவ்வுடன் மருவு மீச னிரணிய கருப்ப னுவன், இவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்க சூக் குமச ரீரம், இவ்வுடற் கோச மூன்று மிதுக னா வவத்தை யாமே. 32

சூக்கும சடமிம் மட்டுஞ் சொல்லினோ மிப் பாற் றூலம், ஆக்குமா ரோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய், தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தநுவும்போ கமுமுண் டாகக், காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் றானே. 33

ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நன் னான் காக்கி, நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட, வந்தன தூல பூத மகாபூத மவற்றி னின்றுந், தந்தன நான்காந் தூல தநு வண்ட புவன போகம். 34



தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னாகும், தூலமே மருவு மீசன் சொலும்விராட் புருட னாகும், தூலமே யன்ன கோசந் துன்னுஞ் சாக் கிர வவத்தை, தூலகற் பனையீ தென்று தொகுத்தது மனத்திற் கொள்வாய். 35

சீரிய வீச னார்க்குஞ் சீவர்க்கு முபாதி யொன் றேல், ஆரிய குருவே பேத மறிவதெப் படியென் றக்கால், காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன், வீரிய மிகுச மட்டி வியட்டியாற் பேத மாமே. 36

மரங்கள்போல் வியட்டி பேதம் வனமெனல் சமட்டி பேதம், சரங்கடா வரங்கள் பேதத் தனி யுடல் வியட்டி யென்பார், பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பதே சமட்டி யென்பார், இரங்கிய பலசீ வர்க்கு மீசர்க்கும் பேத மீதே. 37

கற்பனை வந்த வாறு காட்டினேன் காண்ப வெல்லாஞ், சொற்பனம் போலு மென்றே துணிந் தவன் ஞானி யாவான், செற்புதை மழைக்கா லம்

போய்த் தெளிந்தவா காசம் போல, அற்புத
முத்தி சேரு மபவாத வழியுங் கேளாய். 38

அரவன்று கயிறென் றாற்போ லாளன்று தறி
யென் றாற்போல், குரவன்சொல் லுபதே சத்தாற்
கூறுநூ லொளியைக் கொண்டு, புரமன்று புவன
மன்று பூதங்க ளன்று ஞானத், திரமென்னும் பிரம
மென்று தெளிவதே யபவா தங்காண். 39

படமுநூ லும்பொற் செய்த பணியும்பொன்
னும்போற் பார்க்கில், கடமுமண் ணும்போ
லொன்றாம் காரிய கார ணங்கள், உடன்முதற்
சுபாவ மீறா வொன்றிலொன் றுதித்த வாறே,
அடைவினி லொடுக்கிக் காண்ப தபவாத வுபாய
மாமே. 40

தூடணை தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி
செய்யும், ஏடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டுசத்
தியென் றீரே, மூடலாஞ் சத்தி செய்யு மோக
முஞ் சொல்லு மையா, கேடறக் குருவே யென்
னக் கிருபையோ டருள்செய் வாரே. 41



தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்
தாங் கண்ட, ஞானிக டமையு மன்றி நாஸ்திக பாதி
யென்னும், ஊனிடை யுயிர்க ளுள்ளத் துணர்
விழி குருடாம் வண்ணம், வானிலந் திசைகண்
மூடி மறைச்சி யிருள்போன் மூடும். 42

பூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகா
ரங் கட்கும், ஆன்றகூ டஸ்த னுக்கு மகத்துள
விகாரங் கட்கும், தோன்றிய பேதஞ் சற்றுந்
தோன்றாமன் மறைத்து மூடும், ஊன்றிய பவவி
யாதி யுண்டாக்கு முபாதி யீதே. 43

ஆதார மறைந்து போனா லாரோப மெங்கே
தோன்றும், ஆதார மறையா தாகி லாரோப மிலை
யே யென்றால், ஆதாரஞ் சமம்வி சேட மாமென
விரண்டு கூறும், ஆதாரஞ் சமமா மெங்கு மாரோ
பம் விசேட மாமே. 44

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந்தான்
மறைந்தி டாது, மிகவிது கயிறா மென்னும் விசே
டந்தான் மறைந்து போகும், அகமெனுஞ் சமானந்

தன்னை யஞ்ஞான மறைத்தி டாது, பகர்விசே டம
தாஞ் சிவம் பரமெனு மதனை மூடும். 45

கேவல நிலைதோன் றாமற் கெடுத்தது பஞ்ச
கோசஞ், சீடனும் சகத்து மாகிச் செனித்தவிட்
சேப மன்றோ, ஆவர ணந்தா னேபா ழகர்த்த
மென் றுரைத்த தேதோ, மேவருங் குருவே
யென்று வினவிடின் மகனே கேளாய். 46

தோற்றமாஞ் சத்தி தானுந் துன்பமாம் பவ
மா னாலும், ஆற்றலான் முத்தி சேர்வார்க் கநுகூல
மாகுங் காணீ, ஊற்றமாம் பகற்கா லம்போ லுப
கா ரிசியா லுண்டோ, மாற்றமென் னுரைப்பேன்
மைந்தா மறைப்பது மிகப்பொல் லாதே. 47

சுழுத்தியிற் பிரள யத்திற் றோற்றமாஞ் சகங்
கண் மாண்டும், அழுத்திய பவம்போய் முத்தி
யடைந்தவ ரொருவ ருண்டோ, முழுத்தவிட்
சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும், கொழுத்
த்வர வாண முத்தி கூடாமற் கெடுத்த கேடே. 48



சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய
தோற்ற மான, சத்தியும் பொய்யே யென்றாற்
சத்திசா தநமா வந்த, முத்தியும் பொய்யா மென்
னின் மோகவித் திரைவி லங்கால், நித்திரை
தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே. 49

இம்பரி னஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்
பா லெய்யும், அம்பினை யம்பாற் பற்று மழுக்கினை
யழுக்கான் மாய்ப்பர், வம்பியன் மாயை தன்னை
மாயையான் மாய்ப்பர் பின்னைத், தம்பமா மதுவுங்
கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே. 50

இந்தமா யையினாற் சீவர்க் கேழவத் தைக
ளுண் டாகும், அந்தவே ழவத்தை தம்மை யடை
வினின் மொழியக் கேளாய், முந்தவஞ் ஞாந
மூடன் முளைத்தல்கா ணாத ஞானம், சந்தங்
கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மை யாதல். 51

பிரமமாந் தனைம றந்த பேதைமை யேயஞ்
ஞாநம், பரனிலை காணே னென்று பகர்தலா வரண
மூடல், நானொரு கருத்தாச் சீவ னென்னென்

முளைத்த ரோற்றம், குரவன்வாக் கியத்தாற றன
னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம். 52

தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக
மும்போய், அத்துவி தந்தா னாத லபரோட்ச ஞான
மாகும், கர்த்தனாஞ் சீவ பேதங் கழிவதே துக்கம்
போகல், முத்தனா யெல்லாஞ் செய்து முடிந்ததா
நந்த மாமே. 53

இதுநினக் கறியும் வண்ண மிப்படி யொரு
திட் டாந்தம், புதுமையாங் கதைகேள் பத்துப்
புருடரோ ராற்றை நீந்தி, உதகதீ ரத்தி லேறி
யொருவனொன் பதுபே ரெண்ணி, அதனொடு தச
மன் றானென் றறியாமன் மயங்கி நின்றான். 54

அறியாத மயலஞ் ஞான மவனிலை காணே
மென்றல், பிறியாவா வரண மாகும் பீழைகொண்
டழல்விட் சேபம், நெறியாளன் றசம னுண்டு
நிற்கின்றா னென்ற சொல்லைக், குறியாக
வெண்ணி நெஞ்சிற் கொள்வது பரோட்ச ஞானம்.



புண்ணிய பதிகன் பின்னும் புருடரோன்
பதின்மர் தம்மை, எண்ணுநீ தசம னாவை யென்
னவே தன்னைக் காணல், கண்ணினிற் கண்ட
ஞானங் கரைதல்போ வதுநோய் போதல், திண்
ணிய மநதி லையந் தெளிதலா நந்த மாமே. 56

தசபுமான் றனைக்கண் டாற்போற் சற்குரு
மூர்த்தி யேயென், நிசவடி வினையான் காண நீ
காட்டல் வேண்டு மென்றான், சுசிபெறு மிலட்சி
யார்த்தந் துவம்பதந் தற்ப தங்கட், கசிபத வைக்
கியஞ் செய்யு மதுசெயு முண்மை கேளாய். 57

விண்ணொன்றை மகாவிண் ணென்று மேக
விண் ணென்றும் பாரின், மண்ணொன்று கடவிண்
ணென்று மருவிய சலவிண் ணென்றும், எண்
ணுங்கற் பனைபோ லொன்றே யெங்குமாம் பிரம
மீசன், நண்ணுங்கூ டஸ்தன் சீவ னாங்குசை
தன்ய மாமே. 58

பூச்சிய வீசன் சீவங் புகல்பத மிரண்டி னுக்
கும், வாச்சியம் லட்சி யந்தான் மலமிலாப் பிரம

மாத்மா, காச்சிய பாலி னெய்போற் கலந்தொன்
றுங் கடைந்தெடுக்கும், ஆச்சிய மென்ன வுன்னை
யறிந்துநீ பிரிந்து கொள்ளே. 59

பிரிவதெப் படியென் றக்காற் பிணமாகு
முடலு னென்னும், அறிவினைக் கொல்லல்
வேண்டு மைம்பூத விகார மன்றோ, வெறியதோர்
துருத்தி மூக்கின் விடுவது போலுன் மூக்கால்,
எறிபிரா ணனுநீ யல்லை யிராசத குணவி காரம். 60

காரணமா மநது புத்தி கருத்தாவா மவையாத்
மாவோ, தாமுள விரண்டு கோசஞ் சத்துவ
குணவி காரம், வரமறு துயிலா னந்த மயனையு
நானென் றோதே, விரவிய தமவஞ் ஞான விருத்தி
யின் விகார மாமே. 61

சத்தொடு சித்தா னந்தஞ் சமந்திரஞ் சாட்சி
யேகம், நித்தியம் வியாபி யாத்மா நீயது வாவ
றிந்து, பொத்தொடு சடத்துக் காதி பொருந்துபே
தங்க ளான, குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு
வெளியி லாவாய். 62

373



பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற
பொழுது பாழே, விஞ்சிய ததுவல் லாமல் வே
றொன்றுந் தெரியக் காணேன், அஞ்சன விருளை
யோரா னகமென வநுப விப்பேன், வஞ்சமில்
குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார்.

முன்புக றசமன் புத்தி மோகத்தா லெண்ணி
யெண்ணி, ஒன்பது பேரைக் கண்ட வொருவனுந்
தனைக்கா ணாத, பின்பவ னிடையிற் கண்ட பெரி
யபா ழவனே பாராய், அன்புள மகனே காண்ப
தடங்கலுங் காண்பா னீயே. 64

தூலசூட் சுமவஞ் ஞானந் தோன்றுமூன்
றவத்தை தாமும், காலமோர் மூன்றுஞ் சன்மக்
கடலெழுங் கல்லோ லங்கள், போலவே வந்து
வந்து போனவெத் தனையென் பேறுன், ஆலமர்
கடவு ளானை யவைக்கெலாஞ் சாட்சி நீயே. 65

எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண்
டறிவே னென்று, சொல்லாதே சுயமாஞ் சோதிச்

சுடருக்குச் சுடர்வே றுண்டோ, பல்லார்முன்
றசமன் றன்னைப் பார்ப்பதுந் தனைக்கொண் டே
தான், அல்லாமற் பதினென் ருனு மவனிடத்
துண்டோ பாராய். 66.

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்
டென் றெண்ணும், அறிவற்ற குதர்க்க மூடர்க்
கநவஸ்தை பலமாய்த் தீரும், அறிபடும் பொருணீ
யல்லை யறிபடாப் பொருணீ யல்லை, அறிபொரு
ளாகு முன்னை யநுபவித் தறிவாய் நீயே. 67

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யாரமெல்
லாம், மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ
மன்றோ, அதுவிது வெனுஞ்ச டங்க ளறிவாக
வறிவைத் தந்தே, அதுவிது விரண்டு மாகா வகம்
பொரு ளறிவாய் நீயே. 68

இந்தநீ துவம்ப தத்தி னிலட்சியப் பொருளா
மென்றும், பந்தமில் பிரம மேதற் பதந்தனி
லிலட்சி யார்த்தம், அந்தமாஞ் சீவ னீச னவர்



களே வாச்சி யார்த்தம், சந்ததம் பேத மாவார்
தமக்கயிக் கியங்கூ டாதே. 69

பேதமா னதுவுங் கேளாய் பெயராலு மிடங்க
ளாலும், ஓதரு முபாதி யாலு முடலாலு முணர்வி
னாலும், பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று
நிற்பர், ஆதலா லிவர்க்கெந் நாளு மைக்கியமென்
பதுகூ டாதே. 70

வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப்
பொருள்சே ராமல், இடாகிற் பொருளாம்
வண்ண மிலக்கணை யுரையாற் கொள்வார், திட
மான வதுவு மூன்றாச் செப்புவார் விட்ட தென்
றும், விடவிலா தென்றும் விட்டு விடாததென்
றும்பே ராமே. 71

சங்கையிற் கோஷ மென்றங் கறப்புச்சேப்
போடு தென்றும், தங்கிய ஸோயந் தேவ தத்த
னென் றஞ்சொல் வார்கள், இங்குதா ரணங்க
ளாக்கி யிந்தமூன் றுரைக ளாலே, துங்கநூல்
விரோத மான சொல்லெலாம் பொருளாந் தானே.

பன்னிய ஸோய மென்னும் பதங்களின்
வாச்சி யார்த்தம், அந்நிய தேசங் கால மவனிவ
னென்ப வெல்லாம், சொன்னவிவ் விரோதம்
விட்டுத் தொடரிலக் கியம்வி டாமல், உன்னிடிற்
றேவ தத்த னொருவனை வெளியாக் காட்டும். 73

தத்துவ மெனும்ப தங்கள் பிரமமாய்ச் சாட்சி
யான, வத்துவை விடாமற் பேத வாச்சியார்த்
தத்தை விட்டு, நித்தமு மதுநீ யாகு நீயது வாகு
மென்னும், அத்தமு மகண்ட மென்றே யசிபத
வைக்கியங் காட்டும். 74

கடநீரின் மேக நீரிற் கண்டவா னிரண்டும்
பொய்யே, குடவானும் பெரிய வானுங் கூடி
யொன் றேமெய்ப் போதும், இடமான பிரமஞ்
சாட்சி யிரண்டுமெய்ப் போது மேகம், இடமாகச்
சுவாநு பூதி சிவோகமென் றிருந்தி டாயே. 75

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழி
தப் பாமல், பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந்



தள்ளி யுள்ளில், கொஞ்சமா மிருப்பும் விட்டுக்
கூடஸ்தன் பிரம மென்னும், நெஞ்சமு நழுவி
யொன் றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான். 76

அநுபவா நந்த வெள்ளத் தழுந்தியே
யகண்ட. மாகித், தநுகர ணங்க ளாதி சகலமு
மிறந்து சித்தாய், மாநுபூ ரணமாய்த் தேக மான
சற் குருவுங் காண, நனவினிற் சுழுத்தி யாகி
நன்மகன் சுபாவ மானான். 77

அளிமக னெடும்போ திவ்வா றனபின் மாதா
மெள்ள, வெளியில்வந் திடவு ணர்ந்தான் விமல
தே சிகனைக் கண்டான், துளிவிழி சொரியப்
பாதந் தொழுதவீழ்ந் தெழுந்து சூழ்ந்தான், குளிர்
முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்
வான். 78

ஐயனே யெனதுள் ளேநின் றநந்தசந் மங்க
ளாண்ட, மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த
குருவே போற்றி, உய்யவே முத்தி நல்கு முதவிக்

கோ ருதவி காயேன், செய்யுமா றென்றுங் கா
ணேன் றிருவடி போற்றி போற்றி. 79

சிட்டனிவ் வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து
நோக்கிக், கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ
டருளிச் செய்வார், திட்டமாந் தடைகண் மூன்
றுந் தொடராமற் சொரூப ஞான, நிட்டனா யிருக்கி
னீதே நீசெயு முதவி யாமே. 80

நீநானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரண
மா யென்றும், தானாகத் தெளிந்த ஞான நழுவுமோ
குருவே யென்றான், தானாகும் பிரம ரூபஞ் சற்
குரு நூலாற் றோன்றும், ஆனாலுந் தடைக ளுண்
டே லநுபவ முறைத்தி டாதே. 81

தடையெவை யெனிலஞ் ஞான சந்தேக
விபரீ தங்கள், படர்செயு மித்த மூன்றும் பலசந்
மப் பழக்கத் தாலே, உடனுடன் வரும்வர் தக்கா
லுயர்ஞானங் கெடுமி வற்றைத், திடமுடன் கெடுப்
பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே. 82



அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட்
டாது, மக்கின ஞானத் தாலே வந்தபந் தமும்வே
வாது, சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்த
றெளித லாலே, விக்கின மடஞ்சந் தேகம் விபரீ
தம் போக்கு வாயே. 83

பிரம்பா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ்
ஞானம், குரவன்வாக் கியநம் பாமற் குழம்புவ தாஞ்
சந் தேகம், திரமறு சகமெய் யென்றுந் தேகநா
னென்று முள்ளே, விரவிய மோகந் தானே
விபரீத மென்பர் மேலோர். 84

தத்துவ வநுபோ கந்தான் சாதித்தல்
கேட்ட லென்பார், ஒத்துள பொருளுந கத்தா
லுசாவல்சிந் தித்த லென்பார், சித்தமே காந்த
மான தெரிசநந் தெளித லென்பார், நித்தமிப்
படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே. 85

எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு
முன்பால், அத்தனை நாளும் வேண்டு மப்பாலோர்
செயலும் வேண்டா, நித்தமும் வெளிபோற் பற்று

ஞேயமாத் திரமாய்ச் சீவன், முத்தரா னவர்வி தேக
முத்திபெற் றிருப்பா ரென்றும். 86

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர்
கேளாய், வானிகர் பிரம வித்து வான்வரி யான்வ
ரிட்டன், ஆனவர் நாம மாகு மவர்களிற் பிரம
வித்தின், தானமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ்
சொல்வேன். 87

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர்
தெளியு முன்னம், வாரமா யிருந்த தங்கள் வருண
மாச் சிரமஞ் சொன்ன, பாரகா ரியமா னாலும்
பலர்க்குப கார மாக, நேரதாச் செய்வர் தீர்ந்த
நிலைவிடார் சீவன் முத்தர். 88

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ
மனத்திற் பற்றார், தாமரை யிலைத்தண் ணீர்போற்
சகத்தொடுங் கூடி வாழ்வார், பாமர ரெனக்காண்
பிப்பார் பண்டிதத் திறமை காட்டார், ஊமரு
மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர். 89



பேதகர் மத்தால் வந்த பிராரத்த நானா
வாகும், ஆதலால் விவகா ரங்க ளவரவர்க் காய
வாகும், மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிபஞ்
செயினுஞ் செய்வார், பூதலம் புரப்பா ரையம்
புகுந்துண்பார் சீவன் முத்தர். 90

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினை
யார் கண்முன், நின்றது புசிப்பார் வெய்யி னில
வாய்வின் விழுது வீழ்ந்து, பொன்றின சவம்
வாழ்ந் தாலும் புதுமையா வொன்றும் பாரார்,
நன்றுதீ தென்னார் சாட்சி நடுவான சீவன் முத்தர்.

பின்னைமூ வரிலி ரண்டு பேர்களுஞ் சமாதி
யோகம், தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார
நிமித்தந் தானாய், உன்னுவோ னவன்வேற்
றோரா லுணர்பவன் வரியா னாகும், அந்நியர் தம்
மாற் றன்னை லறியாதோன் வரிட்ட னாமே. 92

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னாலு
முத்தி, சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப்
பலனே தென்றால், பெரிதான திருஷ்ட துக்கம்

பிரமவித் தநுப விப்பன், வரியானும் வரனு
மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார். 93

பிரமஞா நிகளுங் கர்மப் பேதையர் போலே
வாழ்ந்தால், திரமுறு மஞ்ஞா நம்போய்ச் செகியாத
வழியே தென்றால், பாவமா காச மொன்றிற் பற்
றாது மற்றை நாலும், விரவின தோடுங் கூடும்
விதமிரு வோரு மாவார். 94

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய
னெடுமா லான, மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ்
செய்து சன்ம, பாவந மாறு மென்று பழமறை
முழங்கு மிப்பால், மேவருஞ் சீவர் முத்தர் விதேக
முத் தியுநீ கேளாய். 95

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம விவித
வித்தாம், சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு
வெண்ணீ றாக்கும், கிஞ்சிதா காமி யந்தான் கிட்
டாமல் விட்டுப் போகும், விஞ்சின பிராரத் தத்
தின் வினையது பவித்துத் தீரும். 96



பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்கு
நாட் செய்யுங் கர்மம், மறுமையிற் றொடர்ந்தி
டாமல் மாண்டுபோம் வழியே தென்றால், சிறியவ
ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்,
அறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள்
வாரே. 97

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா
முடனீ றாகும், பெரியதூ லமுங்கா லத்தாற் பிண
மாகி விழுமங் கோம், உரியசூக் குமச ரீர முலை
யிரும் புண்ட நீர்போல், துரியமாய் விபுவாய் நின்ற
சொரூபத்தி லிறந்து போமே. 98

கடமெனு முபாதி போனாற் ககனமொன்
றானாற் போல, வுடலெனு முபாதி போன வுத்
தாஞ் சீவர் முத்தர், அடிமுடி நடுவு மின்றி யகம்
புற மின்றி நின்ற, படிநிகழ் விதேக முத்திப்
பதமடைந் திருப்ப ரென்றும். 99

சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெளி
யிருக்க மண்ணைக், கெல்லிய பின்பு தோன்றுங்

இனைற்றிரு காசம் போலே, ஒல்லையாம் பிரம
நூலா லூற்றது போலே தோன்றும், எல்லையி
றுமெய்ப் போத மேகமென் றிருந்து வாழ்வாய். 100

கானனீர் இளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க
ணாவூர், வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயய
லின் கோடு, பீநமாந் தறிபு மானிற் பிரபஞ்ச
மெல்லாம் பொய்யே, ஞானமெய் மகனே யுன்னை
நம்மானை மறந்திடாதே. 101

1. தத்துவ விளக்கப் படலம்

முற்றுப் பெற்றது.

## 2. சந்தேகந் தெளிதற் படலம்.

நார்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய
கம்பம், உரமுறக் குத்திக் குத்தி யுறைப்பிக்கு
முபாயம் போலே, பரமசிற் சொரூபர் தன்னிற்
பற்றிய மனோவி ருத்தி, திரநிலை பெறச்சந் தேகந்
தெளிதலை மொழிகின் றேனே. 1

நற்கருத் துடையோ னாகி ஞானவா னாகி நின்
றோன், மர்க்கட நியாயம் போலே மகாபூத விகாரந்
தொட்டு, நிர்க்குண விதேக முத்தி நிலைபரி
யந்தஞ் சொன்ன, சற்குரு வினைவி டாமற் சந்தத
மநுச ரித்தான். 2

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல்
விடாம லன்பாம், மைந்தனை நோக்கிச் சாட்சி
மாத்திர மாய்நின் றாயோ, சிந்தையி லைய மெல்
லாந் தீர்ந்தவோ தெளிவி னுன்னே, அந்தரங்
கலந்த துண்டோ வநுபவ முரைசெய் வாயே. 3

எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி
யெந்தாய், சநகவன் காட்டின் மோகத் தமத்தெழு
பேதப் பேய்கள், உனதரு ளுதய வெற்பி லுப
தேச வருக்கன் றோன்றி, மநவிழி தெரிய ஞாந
வான்கதிர் பார்த்தா லுண்டோ. 4

மந்திர மூர்த்தி தன்னான் மாற்றிய பேய்போ
னாலும், எந்திர மெழுதிக் கட்டி யினிவாரா வகை
செய் வார்போல், மூர்த்தியு னுபதே சத்தான்
மோகம்போ னாலு மையா, புந்திநின் றுறைக்க
வின்னம் புகலும்விண் ணப்ப முண்டே. 5

ஆகமப் பிரமா ணத்தா லறியென் றும் வாக்
குக் கெட்டா, ஏகமாம் பிரம மென்று மிதயத்தா
லுணர்வா யென்றும், சோகமா மநத்திற் கெட்
டாச் சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர், மோக
மா மிரண்டு சங்கை முளைத்தன பறித்தி டீரே. 6

மற்றைமுப் பிரமா ணத்தால் வத்துநின்
னையங்கூ டாதே, உற்றதோர் விடயம் பூத முபாய
மன் றாத லாலே, குற்றமாங் குணவி சேடங்



கூடாம லிருக்கை யாலே, இற்றது வாக்குக்
கெட்டா தென்பது மறிவாய் நீயே. 7

வாக்கியந் தனக்கெட் டாது வத்துவென்
றுரைத்த வேதம், வாக்கிய விருத்தி யாலவ் வத்து
வைக் காட்டிற் றன்றோ, வாக்கியங் களிலே மாந
மாவதே தென்றா யாகில், வாக்கிய மிரண்டு மெய்
யே மறைகள் பொய் யாது கேளாய். 8

தன்பதி யல்லாப் போர்க டமையல்ல னல்ல
னென்றான், அன்பனைக் கேட்ட கோ மகன்
வெட்கி மௌந மானான், என்பது போல நீக்கி
யிதன்றிதன் றெனச்சே டித்த, பின்பரப் பிரமந்
தன்னைப் பேசாமற் காட்டும் வேதம். 9

முந்திய சங்கை தீர மொழிந்ததை யறிந்து
கொள்வாய், பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரங்
கேளாய், இந்தியங் களுக்கி ராச னிதயமா மதி
னெண் ணங்கள், புந்தியு மாமு மென்றே புறத்
தகத் தலாவி யாகும். 10

உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு
முகங்கண் டாற்போல், சின்மய வடிவின் சாயை
சித்துப்போற் புத்தி தோன்றும், நின்மனோ
விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும், தன்மனன்
மகனே யித்தைத் தானன்றோ ஞான மென்பார். 11

உருக்கிய தாமிர நாநா வுருவங்க ளானாற்
போல, விருத்திகள் கடப டாதி விடயமாய்ப்
பரிண மிக்கும், அருப்பல விடய மெல்லா மாபா
சன் றேற்று விக்கும், இருட்டினில் விளக்குங்
கண்ணு மில்லாமற் பொருள்கா ணாதே. 12

எரிகின்ற விளக்காற் கண்ணு விருட்பொருள்
காணல் வேண்டும், தெரிகின்ற பரிதி காணச்
சென்றிடிற் கண்ணே போதும், விரிகின்ற சகத்
தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும், புரி
கின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்
காண் போர்க்கே. 13

விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மக
மென் பார்கள், கருத்தெழு விருத்தி வேண்டுங்



கணக்கினன் மனத்திற் கெட்டும், வருத்திய பலமா
மிந்த மனத்திற்கெட் டாது கண்டாய், அருத்தமிப்
படியென் றைய மகன்றநீ தெளிந்தி டாயே. 14

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன
வழிகளறிந் தேனினியோர் வசநங் கேளீர், சஞ்
சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந் ததாகார
மாவதன்றோ சமாதி யோகம், உஞ்சலையொத்
தலைவதுதன் சுபாவ மாகி யொருகணத்திற் பல
வுலகா யுதிக்கு மிந்த, நெஞ்சகம்வத் துவிலசையா
நிவாத தீப நிலையடைவ தெப்படியோ நீர்சொல்
வீரே. 15

கருதுமனோ குணமூன்று மூன்றி லொன்று
கதித்தெழுந்தால் மற்றிரண்டுங் கார்து நிற்கும்,
தருமமிகுஞ் சத்துவமே லான போது சன்மார்க்க
மானதெய்வ சம்பத் துண்டாம், மருவுரசோ குண
மாகி லுலக தேக வாதனையாஞ் சாத்திரவா தனையு
மாகும், அருமகனே தமோகுணமே லான போதி
லசுரசம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே. 16

மநதுசத்து வசொரூப மற்றி ரண்டும் வந்து
கலந் தனவவற்றை மாற்றி னுற்போம், தனதுசங்
மார்க்கத்தைவிடா திருந்த போது தமோகுண
மும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக், கன
பரிணு மஞ்சலநம் போம்போ னக்காற் களங்க
மற்று நின்றவா காசம் போலும், நினதுளமப் படி
யாமப் பிரமத் தொன்றாய் நிருவிகற்ப சமாதியிலே
நிற்குந் தானே. 17

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர்
களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது, விளங்கிய
தன் மயமாகி யபேத மாகி விகற்பமின்றி நிருவி
கற்ப மானாற் போல, அனந்தறியப் படாவிபுவாய்ச்
சத்தாய்ச் சித்தா யாநந்த மாம்பிரமத் தைக்கிய
மாவ, உளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே
யுலைவெங்கே யென்றுசங்கை யொழித்தி டாயே.

ஏகமாய் மநமிறந்தாற் சீவன் முத்த ரிருக்கு
மட்டும் பிராரத்த மெதினு லுண்பார், போகமா
னதுபுசித்துத் தொலைப்ப தன்றோ புசிப்ப தென்



றான் மநந்தானும் போன தன்றே, சோகமா மந
மிறந்தாற் போக மில்லை தோன்றுமெனின் முத்த
ரென்று சொலக்கூ டாதே, மோகமா மிதுதெளி
யக் குருவே நன்றா மொழிந்தருள்வாய் தெளிந்த
தன்றோ முத்தி தானே. 19

மநநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும்
வகுத்துரைப்பா ரிருவகையா வருயி வற்றில் வினை
வாத சீவன்முத்த ரிடத்தி லொன்றும் விதேக
முத்த ரிடத்திலொன்று மேவுங் கண்டாய், தன
தான சத்துவமாய் மாஞ்சே ஷித்துத் தமசராச
சுகணசித்தல் சொரூப நாசம், அநகாசத் துவந்
தானு மிலிங்க தேக மடங்கும்போ தடங்குதலே
யரூப நாசம். 20

சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகுந் துக
ளிருள்போ னுண்மநமென் சொல்லும் போம்
போம், வர்த்தமா நத்தில்வந்த வுணவை யுண்பார்
வருவதும்போ வதுநினைத்து மகிழார் வாடார்,
கர்த்தரா மகர்த்தையைவிட் டகர்த்த ராகிக் கரண

விருத் திகளவத்தை காண்பா ராகி, மூத்தார
விருக்கலுமாம் புசிப்புங் கூடு முட்டிலையென் றறிந்
து சங்கை மோசிப் பாயே. 21

விவகார வேளையெலாஞ் சமாதி யென்றால்
விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டால்,
அவதான நழுவுமன்றோ வென்று யாகி லதற்கொரு
திட் டாந்தங்கே ளாசை கொண்டு, நவமாகப் பர
புருடன் றன்னைக் கூடி நயந்தசுக மநுபவித்த
காரி நெஞ்சந், தவமாக மனைத்தொழில்கள் செய்
யும் போதுந் தழுவியது பவித்தசுகந் தனைவி
டாதே. 22

தேகத்த னலனாகி யகர்த்த னாகிச் சீவனின்
றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன், போகத்தை
யுண்பனென்றாற் கருத்தா வாமே பூரணமா மகர்த்
தனுக்குப் போக முண்டோ, சோகத்தை யறுத்த
ருளுங் குருவே யிந்தத் துகளறுக்க வேண்டு
மென்று சொன்னா யாகில், மாகர்த்தன் மாபோகி
மாத்தி யாகி வகைமூன்றா யவிருக்கு மகிமை
கேளாய். 23



செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங்
காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்கு
மாபோல், செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு
மென்முன் செடமான வுலகமெலாஞ் சேட்டை
செய்யும், மெய்கலந்த விந்திரிய விகார ரூப விவ
கார விருத்திக்கும் விருத்தி தானா, மெய்கலந்த
சமாதிக்குஞ் சாட்சி யோனான் வெயில்போலென்
றுரைத்தவனே விபுமா கர்த்தன். 24

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்த
மபத்தியம்பத் தியமெனவூ ணாய்ந்தி டாமல்,
பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்
போற் போகங்கள் புசிப்பவன்மா போகி யாகும்,
சிறிதுபெரி துகடனதந் நியங்க னன்மை தீமை
கள்சே ரினும்படிகச் செயல்போற் சித்தம், வெறி
திருக்கு மவனேமாத் தியாகி யாவன் விரதமிம்மூன்
றுடையவரே வீடு ளோரே. 5

மெய்யுங் கொண்டபி ராரத் தந்தரு விதிவழி
நின்றிடவும், உய்யுங் கர்மிக ளுக்கது குணமா வுறு

தொழில் செய்திடவும், செய்புஞ் செய்கைமு
டிந்தவ னென்றுரை செப்புவ தெப்படியோ,
நையுந் துன்பம கற்றிய குருவே நலமா வருள்
வீரே. 26

ஆடவர் செய்தொழின் மூவகை யஃகும வித்
தைவ சத்துறுநாள், ஏடனை மமதைய கர்தைபு
ளார்க்கே யிகபர விவகாரம், வீடுறு குவமெனு
மிச்சையு ளார்க்கே வித்தைப டிப்பதெலாம்,
யாடன்மி குந்தொழி லாற்பல னுண்டோ பரிபூ
ரணமானல். 27

தூரவர்சி காமணி யேகே ளீர்நீர் கூறின வழி
யொக்கும், பரமூட னிகமுமி ழந்தவ ரன்றோ பழ
குவர் மெய்ஞ்ஞானம், விரவுமு யற்சியின் மீண்டவ
ரதையினி வேண்டுவ ரோவேண்டார், சிரவண
மனா திகள்வேண் டாவோ சித்தமு றைத்
திடவே. 28

கிளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்
டல்செ யக்கடனே, தளர்வறு சிந்தித் தலின்



முயல் வார்சிலர் சந்தே கங்களுளார், தெளிதவி
னிர்பார் விபரீ தப்பேய் தீரா வாதனையோர்,
வெளியுரு வாயறி வாய்நிறை வாயினர் வேண்டுவ
தொன்றுண்டோ. 29

ஐயா கேளீர் தத்துவ ஞாநியு மஞ்ஞா நிகள்
போலே, செய்பா நின்றேன் கண்டே னுண்டேன்
சென்றே னெனலாமோ, பொய்யாம் விபரீ தங்கள
வற்குப் போயின வென்றீரே, மெய்யாம் பிரமவி
சாரமி தன்றே வெளியா வுரையீரே. 30

ஓய்ந்தக நாவிற் கண்டப ழங்கதை யோது
வன் வாதனையால், ஆய்ந்தறி வர்ரவ னப்படி
செப்புவ னுபா சனுமாகான், மாய்ந்தத னுடல்வே
மளவும் விண்ணவன் மநுடனெ னப்படுவான்,
வீய்ந்தசி தாபா சன்போ மளவும் விவகா ரந்தொ
டரும். 31

ஆனாலையா குருவே காண்ப தசத்திய மென்
றாலும், நாநா விவகா ரந்துய ரலவோ ஞாநசு கந்த
ருமோ, போறு லன்றோ நன்று நிட்டை பொருந்

திடல் வேண்டாவோ, தானு நிட்டைபு ரிந்தாற்
செய்கைத விர்ந்தவ னெப்படியோ. 32

தெரிதரு மகனே யாரம் பத்தொடு தீரும்
விகாரம், உரியதி யானமும் விகா ரங்களு முன்
னத் தொழிலன்றோ, துரியப ரம்பொரு ளானவர்
வேறொரு தொழில்செய் வதுமுண்டோ, அரியச
மாதிகள் பழகுவ னேலவ னூரு டனுமன்றே. 33

உத்தம குருவே யாரு டருமா யொருதொழி
லற்றவருள், சித்தம டங்குதி யானா திகள்சிலர்
செய்குவ தென்னென்றால், இத்தல மருவும் பிரா
ரத் தப்பிறி வெப்படி யப்படியே, முத்தரும் வெகு
வித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே.

நல்லவ னேகே ளுலகுப காரம் ஞானிகள் விவ
காரம், அல்லது வேறொரு பெறுபே றும்மிலை
யதனாற் பிணியுமிலை, வல்லசி ருட்டிமு தற்பல
தொழிலால் வருபுண் ணியபாவம், எல்லவ ருக்கும
நுக்கிர கஞ்செயு மீசன டைந்திலனே. 35



ஈசனு மாயரு வாயுரு வாகியெ ழுந்தரு ளுங்
குருவே, ஈசனு ஞானியு மொப்பென் றீரே யெப்
படி யொப்பென்றால், ஈசனு ஞானியு மமதைய கந்
தையி கந்தநி லையொப்பாம், ஈசனு மாம்பல சீவரு
மாமூல கெல்லா மிவனுமே. 36

எல்லாச் சீவரு மிவனு மென்றீ ரிவன்றான்
முத்தியடைந், தெல்லாச் சீவரு முத்திபெ றாமலி
ருப்பா னேனையா, எல்லாச் சீவரும் வெவ்வே
றானா லிவனெல் லாமலனே, எல்லாப் பொருளு
முரைத்தருள் குருவே யிதைநீர் மொழியீரே. 37

அகமெனு மாத்மா பூரண மேகம நேகவி தஞ்
சீவர், அகமெனு மந்தக் கரணோ பாதிக ளளவிலை
யாதலினால், சகமுழு துங்குளிர் சந்திர னேகஞ்
சலசந் திரர்பலராம், சகமதி லேரிகு ளஞ்சிறு குழி
சால் சட்டிகு டம்பலவால். 38

சட்டிகு டங்களி லொன்றாக சித்திடி னதி
னுட் சலசந்திரன், ஒட்டிமு தற்சந் திரனொடு கூடு
மொ ழிந்தவை கூடாவே, கட்டுமு பாதிந சித்திடு

சீவங் காரண வார்மாவில், கிட்டும யிக்கிய முபா
திகெ டாதவர் கேவல மாகாரே. 39

இவனயன் மால்சிவ னாகிய வீசரொ டெப்
படி யொப்பாவன், சிவன்முதன் மூவரு மகிலசி
ருட்டி திதிசா சங்கள்செய்வார், அவர்பிறர் மதி
களு முக்கா லங்களு மறிவார் விபுவாவார், தவமிகு
குருவே யிவனுக் கவையிலொர் சற்றுங் காணே
னே. 40

தடத்து நீர்நிலாத் திரியொளி யுபயமுந் தழு
வுமூர் தனைக்காக்கும், குடத்து நீர்விளக் கினி
லொளி யிரண்டுமோர் குடும்பமாத் திரங்காக்கும்,
அடுத்த மைந்தனே ஞானியு மீசனு மறிவினாற்
பிரிவில்லை, கெடுத்த மாயையின் குணங்களான்
மேலென் றுங் கீழென் றும் பிரிவாமே. 41

நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே
காரணன் முதலான, சுரர்கண் மாயைவல் லவரணி
மாதிக டொக்கமா தவமிக்கோர், தரணி மாநுடர்க்
கவைகளில் லாமையாற் சூழ்வன ராலும், பிரம



பாவனை யாலிவ ரவரெனும் பேதமொன் றிலையா
னாய். 42

முத்தி நல்கிய சற்குரு வேபல முநிகளுக்
கணிமாதி, சித்தி பூமியிற் கண்டிருக் கவுமந்தச்
செல்வமீ சனதென் றீர், புத்தி யொத்திட வுரைத்
தருளென் றிடிற் புகழுமீ சனைநோக்கிப், பத்தி
செய்திடுந் தவத்தினா லியோகத்தாற் பலித்த
தென் றறிவாயே. 43

சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்தி
முத் தியிரண்டும், தவமு ளோரடை குவரெனி
லவர்கள்போற் சகலரு மடைவாரே, அவர்கள் பூரு
வஞ் சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே,
இவர்கண் ஞானிக ளென்றிடிற் சித்திக ளிவர்க்
கிலா வகையேதோ. 44

காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதி
டாத் தவமென் றும், பூமி யிற்றவ மிருவகை சித்தி
யும் போதமுந் தருமைந்தா, ஆமி வற்றிலொன்
றியற்றினா லொன்றையே யடைகுவ ரிதுநீர்மை,

யாமு ரைத்தவவ் விரண்டையு மியற்றினா ரன்றள பெரியோரே. 45

அநக மைந்தனே முத்திஞா னத்தையே யடைந்தன ரல்லாமல், ஜநகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ, இனிய சித் தியே விரும்பினோர் சிலர்சில ரிரண்டையு முயன்றா ரம், முனிவர் சித்திகள் விநோதமாத் திரந்தரு முத்தியைத் தாராவே. 46

யோக ஞானமே முத்தியைத் தருமெனி லொழிந்தசித் திகள்வேண்டி, மோக மாயுடல் வருந்தினோர் சிலசில முத்தர்க ளேனென்றால், போக மாய்வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன் றே நசித்தேகும், ஆகை யாலந்தச் சித்திகள் பிரா ரத்த மாகுமென் றறிவாயே. 47

இலக்க மாயிரஞ் சுருதியா னூகத்தா லென் மன மசையாமற், பெலக்க வேண்டுமென் றருள் குரு வேயகப் பிராந்திபோய்த் தெளிவானேன், இலக்க மானகண் ணடியை யடிக்கடி துலக்கினாற்



பழுதன்றே, அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக் குறை யமிர்தங்க டெவிட்டாவே. 48

கைதவங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனையாளும், ஐய னேகுரு வேயென ராகிலு மநுபவித் தாலன்றிச், செய்த கர்மங்கள் விடாவென்ற வசநமுஞ் சென்மசஞ் சிதம்வேவத், துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசநமுந் துணிவ தெப் படிநானே. 49

சீவ பேதங்க ளளவில மைந்தனே செய் கையு மளவில்லை, ஆவ வாமவ ரவாதி காரங்க ளறிந் துபக் குவநோக்கிப், பூவ லர்ந்துபின் பலங்கள்காட் டுவனபோற் பூருவஞ் சித்தாந்தம், காவல் வேதங்க ளிரண்டையும் வசநிக்குங் காண்டமூ வகையாலே.

ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மானாலும், தாந மந்திர விரதவோ மங்களாற் றவி ருமென் பதுபொய்யோ, ஈன மாம்பல சர்மசஞ் சிதவினை யெத்தனை யானாலும், ஞாந மாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே. 51

என்ம நந்திருக் கோயிலாத் திங்குடி யிருந் தருள் குருமூர்த்தி, சென்ம சஞ்சித வினைகள்வே ரறுத்திடுந் தேவரீர் மெய்ஞ்ஞானம், தன்ம யந்தரு மகிமையை விபுதராஞ் சமர்த்தரு மறியாமல், கன்ம மாங்குழி யினில்விழுந் தழிகின்ற காரண முரையீரே. 52

அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யக முகத் தவர்சேர்வர், வழிந டப்பவர் பராமுக மாயினுன் மலர்ந்தகண் ணிருந்தாலும், குழியில் வீழ்வர்கா ணப்படி வெளிமுகங் கொண்டகோ மிகளானோர், பழித ரும்பிற விக்கட லழுந்துவர் பரகதி யடையாரே. 53

சிறந்த நன்மையுந் தீமையு மீசனார் செய்விக் குஞ் செயலன்றோ, பிறந்த சீவர்க ளென்செய்வா ரவர்கண்மேற் பிழைசொல்லும் வழியேதோ, துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதி நூற் பொருண்மார்க்கம், மறந்த மூடர்கள் வசனிக் கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய். 54



நிகழ்ந்த வீசனார் சிருட்டியுஞ் சீவனார் சிருட் டியும் வெவ்வேறே, சகந்த னிற்பொது வீசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம், அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல் லாம், இகழ்ந்த சீவனார் சிருட்டிக ளாகுங்கா ணீச னார் செயலன்றே. 55

மூவ ராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத் திசா தநமாகுஞ், சீவ னார்செய்யுஞ் சிருட்டிக டங் களைச் செநிப்பிக்கும் பிணியாகும், தாவ ராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சகங்கள் நசியாவாங், கோப மாதிகள் நசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள்போமே. 56

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர்பவ மொழிந்தார்கள், தேச காலதே காதிக ளிருக் கவுஞ் சீவகா ரியமோகம், நாச மாகிய விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களானார், பாச மோகங் கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செய லன்றே. 57

அச்சு வத்தமென் றொருமா மதிலிரண்
டரும்பற வைகள்வாழும், நச்சு மங்கொரு பறவை
யம் மாக்கனி நன்றுநன் றெனத்தின்னும், மெச்சு
மங்கொரு பறவைதின் னாதென வியங்கியப்
பொருளாக, வைச்சு மாமறை சீவனை யீசனை
வகுத்தவா றறிவாயே. 58

இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவன்
செய லென்னாமல், அந்தத் தேவனால் வருமென்ற
மூடர்க ளதோகதி யடைவார்கள், இந்தச் சீவனால்
வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்,
அந்தத் தேவனா லன்றெனும் விவேகிக ளமலனை
யடைவாரே. 59

நலமெய் யையனே யெல்லவர்க் குந்தெய்வ
நாயகன் பொதுவானால், சிலரை வாழ்வித்தல் சில
ரொடு கோபித்தல் செய்வதே னென்றாயேல்,
குலவு மக்களைத் தந்தைபோற் சிட்டரைக் குளிர்த்
துதுட் டரைக்காய்வன், கலைக ணல்வழி வரச்செ
யுந் தண்டமுங் கருணையென் றறிவாயே. 60



மனைவி லங்கறு மைந்தனே கற்பக மாங்
கனல் புனன்மூன்றும், தனைய டைந்தவர் வறு
மையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாளும், அனைய
வீசனு மடைந்தவர்க் கருள்செய்வ னகன்றவர்க்
கருள்செய்யான், இனைய குற்றங்க ளவர்குற்ற
மாகுமென் றெண்ணிநீ யறிவாயே. 61

ஒன்று கேள்மக னேபுமான் முயற்சியா
லுரைத்துமா னுடர்க்கீசன், நன்று செய்பவை
காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பின்னே,
சென்று துட்டவா தனைவிட்டு விவேகராய்ச்
செநித்தமா யையைத்தள்ளி, நின்று ஞானத்தை
யடைந்தவர் பவங்கள்போ நிச்சய மிதுதானே. 62

இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி
லிடைவிடா விசாரத்தால், வந்த டைந்திடும் விசா
ரந்தா னெதெனின் மநாதியாஞ் சரீரத்தில், இந்த
நானெவன் சித்தெது சடமெது வீரண்டுமொன்
றாக்கூடும், பந்த மேதுவீ டேதென வுசாவுதல்
யதர்விசா ரமதாகும். 63

போன சன்மங்க டமிலநுட் டித்தநற் புண்
ணிய பரிபாகம், ஞான மாக்குமே விசாரமே னென்
றிடி னுமுறைத் திடக்கேளாய், ஆன புண்ணிய
மீசுரார்ப் பணஞ்செயி னசுசிபோஞ் சுசியாகும்,
மான தம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென்
றறிவாயே. 64

பத்தி யும்வை ராக்கிய மும்பர லோகமு மணி
மாதி, சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியான
முஞ் சாரூப, முத்தி யுந்தரும் விசித்திர கருமங்
கள் மோகமாத் திரந்தனும், பத்தி தந்திட லரு
மையோ விசாரமேன் புண்ணிய குருமூர்த்தி. 65

வேட மாறிய பேர்களை யறியவே வேண்டி
னுன் மகனேகேள், கூட மாமவர் சுபாவங்கள்
சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல், ஓடி யுங்குதித்
துந்தலை கீழ்நின்று முயர்ந்தகம் பத்தேறி, ஆடி
யும்பல கருமங்கள் செய்யினு மவருண்மை தெரி
யாதே. 66



இன்ன வாறந்தப் பிரமத்தை யறிவிக்கு
மிலக்கணத் தால்வேதம், சொன்ன ஞானமும்
விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்தா
லும், அந்த தானங்க டவங்கண்மந் திரங்களா சாரங்
கள் யாகங்கள், என்ன செய்யினுந் தன்னைத்தா
னறிகின்ற நிலைகளால் வாராதே. 67

துளங்கு தர்ப்பண மழுக்கறக் கைக்கொண்டு
துலக்கினாற் போமன்றி, விளங்கு புத்தியா லுலகி
லார் துலக்கினார் விமலதே சிகமூர்த்தி, களங்க
மாகுமஞ் ஞானமு மப்படிக் கருமத்தாற் கழுவாமல்,
உளங்கு றித்தஞா னத்தினா லெப்படி யொழியுமீ
தருள்வீரே. 68

தர்ப்ப ணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ்
சகசமா தலின்மைந்தா, கற்ப ளிங்கினிற் கரு
கிறஞ் சகசமாக் கறுத்ததன் றாரோபம். தர்ப்ப
ணத்தினி லழுக்கறவேண்டினார் சாதநத்தொழில்
வேண்டும், கற்ப ளிங்கிலா ரோபமே கறுப்பென்று
கண்டிட மநம்போதும். 69

இங்கு மப்படிச் சச்சிதா நந்தத்தி லிடர்சடம் பொய்மூன்றும், தங்கு மாயையின் கற்பித மன்றியே சகசவாஸ் தவமன்றே, பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா துறவாக்கும், துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே. 70

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடநா ளழுதாலும், நினைத்து ணர்ந்தபின் கிட்டுமெப் படியிந்த நின்மல வாத்மாவும், அநர்த்த மான தன் மறதியைக் கெடுத்துத்தன் னறிவினாற் காணாமல், கனத்த கர்மங்க ளாயுகஞ் செய்யினுங் காணுமோ காணாதே. 71

நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே யெனும்வேதம், தர்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர், சென்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ் சுகமென்று, கன்ம காண்டத்தில் விதித்ததென் விதித்தன காரண முரையீரே. 72



திரமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர்காட்டிக், கனம ருந்தக மொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றாய்போலே, மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று மலர்ந்தவா சகஞ்சொல்லும், நினைவு வேறுகாண் சுவர்க்ககா மிகளந்த நிண்ணயந் தெரியாரே. 73

போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகாண், ஆக மங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியாதோ, காக மேகறுத் திடுநெருப் பேசுடு கசந்திடு வேம்பேநீ, வேக வாயுவே யசையென வொருவரும் விதித்திடல் வேண்டாவே. 74

கள்ளு மூனுநீ விரும்பினன் மகங்கள்செய் காமத்தின் மநதானல், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந் தொடானென்றே, தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும், விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன்றே. 75

மதுவி றைச்சிக ளுண்ணென்ற சுருதியின் மணந்துபா ரெனல்பாராய், மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபாராய், இதையும் விட்டொழி யதிநயிட் டிகவங்கிக் கிகழ்ச்சிபற் றதும்பாராய், அதைய றிந்துகன் மங்களாசைகளொழிந் தானந்த மடைவாயே. 76

உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழிகூடும், பலவு மானவஞ் ஞானமு ஞானமும் பகையென்ப துளதானால், நிலவி லேமறைப் போலவஞ் ஞானமு நிமலஞா னத்தோடே, குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி. 77

சொரூப ஞானமும் விருத்திஞா னமுமென்று சோதிஞா னமுமிரண்டாம், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன்றும்வே றிலைமைந்தா, சொரூப ஞானமஞ் ஞானசத் துருவன்று சுழுத்தியிற் கண்டாயே, சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்விருத் தியின்ஞானம். 78



துருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாததற் சொரூபஞா னந்தானே, விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா லுலகெங்கும், பரித்த சூரியன் சூரிய காந்தத்திற் பற்றியக் கினியாகி, எரித்த வாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென் றறிவாயே. 79

அருளு மையனே திரிவித கரணத்தா லாகிய தொழிலெல்லாம், கரும மல்லவோ விருத்திஞா னமுமந்தக் காரணகா ரியமன்றோ, உரிய கர்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென் றோதினு லாகாதோ, பெரிய ஞானமென் றதற்கொரு பெயரிட்ட பெருமையை யுரையீரே. 80

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கிலுமைந்தா, ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்ற துலகெங்குங் கண்டோமே, கருத்த னாகிய புருடதந் திரங்களாங் கருமங்க ளவைபோல, வருத்த ஞானமும் புருடதந் திரமன்று வஸ்துதந் திரமாமே. 81

வருத்த கர்மங்கள் செய்யவுந் தவிரவு மற்
றொன்றாக் கவுங்கூடும், மிருத்த ஞானமப் படி
யன்று தியாகமும் விவேகஞா னமும்வேறே,
செகத்தி லொன்றையொன் றாவிவன் பாவிக்குந்
தியாகங்கற் பிதயோகம், முகத்த மாக்கண்ட ஞான
மே வாஸ்தவ மோகமாய் மயங்காதே. 82

கண்ட நிந்தது ஞானங்கேட் டதுதனைக்
கருதுபா வனையோகம், கண்ட பேர்சொலக் கேட்
டது மறந்துபோங் கண்டது மறவாதே, கண்ட
வஸ்துமெய் தியாகவஸ் துக்கள்பொய் கறவியஞ்
ஞானத்தைக், கண்ட வக்கணைங் கொல்வது ஞான
மே கருமமன் றறிவாயே. 83

சருவ முத்தியைத் தருகின்ற தியாகமுஞ்
சத்திய மன்றென்றால், சருவ முத்தியுஞ் சத்திய
மன்றென்று சங்கியா தேநீகேள், உருவங் கேட்ட
வன் றியாகிக்கும் பொழுதிலவ் வுருவம்வாஸ்
தவமன்றே, உருவ மாகுமப் பொழுதுகண் ணைற்
கண்ட வுருவம்வாஸ் தவமாமே. 84



சடம தாகிய தியாகமெய் யாகிய சர்வமுத்
தியைநல்கும், திடம தானதெப் படியெனி லவ
னவர் தியாகமே பிறப்பாகும். உடல மாசையாற்
றியாகிக்கிற் றியாகித்த வுடல்களா குவர்மைந்தா,
தொடர்ப வங்கெடச் சொரூபமே தியாகிக்கிற்
சொரூபமா குவர்மெய்யே. 85

பிரம ரூபத்தைத் தியாகித்த பேர்களும் பிர
மமா குவரென்றால், நாச ரீரமாங் குரவனை விசார
மேன் ஞானமே னென்றேதே, பரம பாவனை
பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்
சம், திரவி சாரமா ஞானமா முத்தியாக் தீர்வையி
தறிவாயே. 86

வீட தாம்பரி பூரண சொரூபத்தில் விருத்தி
ஞா னமுங்கூடிச், சேட மாகினு லகண்டமா மநு
பவ சித்தியெப் படியென்றால், சாடி நீர்மண்ணைப்
பிரித்ததேற் றும்பொடி தானுமண் ணொடுமாயும்,
ஊடி ஞானமு மறிவிலா மையைக்கெடுத் தொக்க
வே கெடுந்தானே. 87

415



இந்த நிச்சய முத்தரு ளநுபவ மிருப்பதெப்
படியென்றால், சிந்தை யற்றபூ மண்டல விராச
னுஞ் சிசுவும்போற் சுகமாவர், பந்த முத்திகண்
மறந்துபோ முண்டென்று பலர்சொல்லி னகை
யாவர், அந்த ரத்தையுண் டமிழ்ந்ததோர் கொசு
கெனு மவர்களை நகையாரோ. 88

மலடி மைந்தனுந் தானும்விற் புருடனும்
வான்மலர் முடிசூடி, இலகு கந்தர்ப்ப நகரிலே
சுத்திகை யிரசதம் விலைபேசிக், கலக மாய்முயற்
கொம்பினாற் குத்தியே களைத்திரு வருமாண்டார்,
அலகை யாயினோ ரெனும்விவ காரத்தை யறிந்த
வன் மயங்கானே. 89

மாயை யென்பது பொய்யெனி லதுபெற்ற
வகையெலாம் பொய்யாமே, தாயை யன்றிமக்
களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ,
சேய சொர்க்கமு நரகமு நன்மையுந் தீமையும்
பாராமல், தூய சத்துச்சித் தானந்த பூரண சொரூப
மா யிருப்பாயே. 90



பங்க யாசநன் முதற்பல தேவரும் பாருள
பெரியோரும், கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேச
முங் காலமு மறைநாலும், அங்க மாறுமந் திரங்
களுந் தவங்களு மசத்திய மெனச்சொன்னால்,
எங்க ளையக னேயத னாற்குற்ற மில்லையோ
மொழியீரே. 91

சொற்ப நந்தனிற் கண்டதைப் பொய்
யென்று சொல்வது பிழையானால், அற்ப மாயை
யிற் றோன்றிய சகங்களை யசத்தெனல் பிழை
யாமே, சொற்ப நந்தனிற் கண்டதைப் பொய்
யென்று சொல்லலா மெனின்மைந்தா, அற்ப
மாயையிற் றோன்றிய சகமெலா மசத்திய மென
லாமே. 92

பொய்யை மெய்யென்ற மூடர்புண் ணிய
ரென்று புராணங்கூப் பிடுமானால், மெய்யை மெய்
யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத் திர
முண்டோ, பொய்ய தேதெனி னாமரு பங்களாம்
பூதமா கியமாயை, மெய்ய தேதெனிற் சச்சிதா
னந்தமாய் வியாபிக்கு மாத்மாவே. 93

மாயை யென்பதே துடையா ரெப்படி வந்தது வருவானேன், மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே, மாயை யென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யாமே, மாயை யென்றமே தங்களுக் கொருசண்ட மாருத குருமூர்த்தி. 94

அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையா லவாச்சிய வடிவாகும், இதுத னக்குளதுடலியா னுலகுமெய் யெனுமவ ருடையோர்கள், கதையி லாதபொய் வந்தடிப் படியென்று கண்டபேரிலைமைந்தா, விதந மாயையேன் வந்ததென் றற்புத்தி விசாரமற் றதனுலே. 95

அருவ மாகுமா யாவிவித் தைகள்விளை யாடுமுன் றெரியாவே, உருவ மாம்பல கந்தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியாகும், பிரம சத்திக ளநந்தமா மதைக்கண்டு பிடித்திடல் கூடாதே, பாவு பூதங்கள் கண்டது மாநத்தாற் பலருக்கும் வெளியாமே. 96



காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் காணுமற் றதுமாயம், பாரி னின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்காணும், வீரி யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படா ததுபோல, பேரி யர்பிரமத்துக்கு மூலருக்கும் பிறிதுசத் திகளுண்டே. 97

சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனு மாயாவி, வித்தை காட்டிய விந்திர சாலம்பொய் வித்துவான் மெய்போலப், புத்தி மைந்தனே சத்திமா னுகிய பூரண வாத்மாவின், வத்து நிர்ணயஞ் சொன்னதிட் டார்த்தத்தின் வழிகண்டு தெளிவாயே. 98

இல்லை யாகிய சத்தியை யுண்டென்ப தெப்படி யெனக்கேட்கில். புல்லை யாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப் பனபாராய், நல்லை யாமக னேயதிற் சிற்சத்தி நடந்திடா திருந்தக்கால், தொல்லை யாய்வருஞ் சாரசா வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறாமே. 99

கருப்பை முட்டையுட் பறவைகள் பலநிறங் கலந்தசித் திரம்பாராய், அருப்ப மாஞ்சத்தி நியம

மில் லாவிடி லரசிலா நகர்போலாம், நெருப்பு நீர தாங் கசப்புமே மதுரமா னீசனு மறையோதும், பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவந மிப் படிப்போமே. 100

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடிவென்றும், சேர்க்கு நாமரூ பப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்சத்தி, போர்க்கு மாறெங்ஙன் பிறித்திடப் படாதெனிற் பிரமபா வனையொன்றாப், பார்க்கு மாறெங்ஙன் முத்தியா றுவதெங்ஙன் பரமசற் குருமூர்த்தி. 101

வாயுத் தம்பநஞ் சலத்தம்ப நம்மணி மந்திர மருந்தாலே, தேயுத் தம்பநஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங்கே, நீயச் சச்சிதா நந்தமாய் வேறொன்று நினைந்திடா திருப்பாயேல், மாயச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற் காணோமே. 102

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித் திடவேண்டில், நாவினான்மண்ணைக் குடமென்ப ரக்குட நசிப்பது நாவாலே, பாவு நாமரூ பங்களை மறந்துமண் பார்ப்பதே பரமார்த் தம், சீவ பேதகற் பிதங்களை மறந்துநீ சின்மய மானாயே. 103



பூரிக் குங்கந சச்சிதா நந்தத்திற் பொய்சடந் துயர்மூன்றும், தூரத் தாயினுந் தோன்றுபாழ் விபரீதந் தடைப்பதெப் படியென்றால், நீரிற் றோன்றுந்தன் னிழறலை கீழதாய் நின்றலை யினு நேராய்ப், பாரிற் றோன்றிய தன்னைநோக் கிடலந் தப் பாழ்நிழல் பொய்யாமே. 104

ஞானங் காரண மறிபொருள் காரிய நாமரூ பப்பேய்கள், ஆன தெப்படி யழிந்ததெப் படியென வாய்குதல் பலனன்றே, மான மைந்தனே தீர்க்கசொப் பநசகம் வந்ததும் பாராமல், போன தும்நினை யாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பாயே. 105

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினா லம்மட்டும், நிசத்தி லுன்விழிப் பார்வையா

மிப்படி நிரந்தரப் பழக்கத்தால், வசத்தி லுன்மன
நின்றுசின் மாத்திர வடிவமா யிடின்மைந்தா,
கசத்த தேகத்தி லிருக்கினு மாநந்தக் கடல்வடி
வாவாயே. 106

தானன்றி வேறொன்று மில்லாத பூரணச்
சச்சிதா நந்தகுணமாய், ஊனின்ற வுயிர்தோறு
மொன்றாகு மென்றாலஃ தொக்கின்ற படிகண்டி
லேன், நானென்ற சீவன்கள் சத்தான வகை
யொக்கு ஞானங்கள் வெளிகண்டதால், ஆநந்த
மிதுபோல வெளியாக வுதியாத வடைவேது குரு
நாதனே. 107

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொருபூவி
லொன்றாகு மென்றாலுமே, கரணங்க ளோ
ரொன்றி லோரொன்று தெரியுங்க ணக்கன்றி
வாராதுகாண், அருமந்த சச்சிதா நந்தச்சு பாவங்க
ளாத்மாவின் வடிவாகிலும், பிரபஞ்ச மயமாம்வி
ருத்திபே தத்தினாற் பேதங்க ளாமைந்தனே. 108



தாமதமி ராசதஞ் சாத்துவித முக்குணத்
தால்வரும்வி ருத்திமூன்றும், ஆமவைகண் மூட
முங் கோரமுஞ் சாந்தமும் மபிதாந மாகுமகனே,
எமுறவி ருக்கின்ற சச்சிதா நந்தங்க ளென்
றென்று மொன்றாகிலும், நாமுரைக் கும்விருத்
திப்பிரிவி னாற்சொருப ஞாநாதி பிரிவாகுமே. 109

சடமான மூடத்த ருக்கல்லு மண்களிற் சத்
தொன்று மேதோன்றுமால், விடயான காமாதி
கோரத்தி லாநந்தம் விளையாது மற்றவைகளாம்,
திடமான வொழிவாதி சாந்தத்தி லேசச்சி தாநந்த
மூன்றும்வெளியாம், மடமான மூடங்கள் கோரங்
கள் விடுசாந்த மநமாகி லாநந்தமே. 110

இகமான குருநாத னேசச்சி தாநந்தமெனு
மிலக் கணமறிகிலேன், அகலாத சத்தாவ தேது
சித் தாவதே தாநந்த மேதென்றிடில், மிகுகால
மூன்றுங்கெ டாதிருப் பதுசத்து வேறுபா டறி
தல்சித்தாம், மகிழ்காம துகர்போது சுகமாகு மநு
பூதி வாழ்வென்ப தாநந்தமே. 111

காசச்ச ரீரத்தி ருக்குஞ்ச ரீரிதனை நால்வேத
மாவாக்கியம், நீசச்சி தாநந்த மென்றிடினு மாசிரி
யர் நீபிரம மாகுமெனினும், மாசற்ற சச்சிதா
நந்தனா னென்னவிவன் மன்னுமநு பவமெங்ஙனே,
கோசப்பு ரங்களை யிடித்துத்த கர்க்குமத குஞ்சரக்
குருநாதனே. 112

செக்மார்த ரஞ்செய்த வினைகளுட றருமெ
னிற் செல்சால மிவனுண்டலோ, கன்மாநு பவ
நாக சொர்க்கமெனில் வருகின்ற காலத்து மிவ
னுண்டலோ, உன்மாத யாதநா வுடல்கடவு
ளுடன்பது வுடன்மாறி மாறியழியும், தன்மாய
வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு சத்தென்ப
தொக்குமகனே. 113

இருளாக மூடுஞ்சு ழுத்தியிலி ராத்திரியி
லிவிசுட ரற்றபொழுது, மருளாம லிருளையும்
பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு சித்தா
தமே, பெருவாழ்வு மிக்கதா னேதன்னி டத்தி
னிற் போாத பிரியமதனால், அருகாத பிரியஞ்சு
கத்திவ்வரு மாதலா லாநந்த மாமைந்தனே. 114



அந்நபா நாதிசுக சாதநம தாகையா லார்க்
கும்வெகு பிரியமாகும், இன்னவா ருங்மாவு
மாநந்த சாதநமெ னக்கருதல் பொருளல்லவே,
சொன்னவாங் மாவையொரு சுகசாத நங்களொடு
சொல்லுவா யாகின்மகனே, உன்னதா நந்தம்வே
றேதநுப விப்பதா ருபயவாங் மாவமுளவோ. 115

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும்
வெகுபிரிய மாங்மாவிலாம், விடயசுகம் வருபிரிய
மாறிவரு மாங்மாவில் வெகுபிரிய மாறுதுகாண்,
விடயசுகம் விடலுமாங் கொளலுமா மாங்மாவை
விடுவதெவர் கொள்வதெவர்பார், விடயசுக
போகங்கள் விடுமவனை யவனுவ்வி டப்படா
தொருநாளுமே. 116

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்
கொன்று விடுகிறே னென்றசிலபேர், சாகின்ற
படியினாற் றன்னையே தான்கொன்று சாவனெ
னல் சங்கையலவே, தேகந்த னைக்கொல்லு மவ
னுவ்வி டப்பட்ட தேகமவ னல்லன்மகனே,

ஆநந்த னிற்கோப மலதுதனை யொருநாளு மாக்
மாவெ றுப்பதிலையே. 117

தாகப்ப டும்பொருளி லும்மகன் பிரியமாக்
தநயனிலு முடல்பிரியமாம், ஆகத்தி லும்பிரிய
மிந்திரிய மாங்கரண மதனிலும் பிரியமுயிராம்,
ஏகப்பி ராணனிலும் வெகுபிரிய மாம்மாவி லிந்த
வார் மாமுக்கியம், ஊநத்தி னுற்கௌண மித்தை
கர்த் தாமூன்று மோரொன்றி லதிகமகனே. 118

கெடலான பொழுதிவன் காணிக்கு மகனுனை
கெவுணவார் மாமுக்கியம், விடலாத வுடலம்ப
ரிக்குநா ருடலான மித்தையார் மாமுக்கியம், திட
மான நன்மைகதி வேண்டினுற் கர்த்தனுஞ் சீவ
வார் மாமுக்கியம், சடமாயு முத்தியினின் ஞாந
வார் மாவான தானேம காமுக்கியம். 119

புலியுமநு கூலமெனி லிட்டமாம் பகைமெ
னிற் புதல்வனெனி னும்வெறுப்பாம், உலகிவிரு
வகையுமல் லாதபுல் லாதியிலு தாசீந மாமாதலால்,
மலிநமறு சிந்மயன் பலவகையு மிப்படி மகிழ்ச்சி



யில் விருப்பமிகுமான், அலகிலா நந்தவடி வாகு
முன் சொரூபத்தை யாராய்ந்து பாரமைந்தனே.

மாநஞ்சி றந்தகுரு நாதனே யாநந்த வகைக
ளெத் தனையென்னிலோ, ஞாநந்தி சழ்ந்தபிர
மாநந்தம் வாசநா நந்தம்விட யாநந்தமென், றூநந்த
மூன்றுவித மெட்டுவகை யென்பர்சில ரவ்வைந்து
மிதிலடக்கம், யானந்த வகைசொலக் கேண்
மைந்த னேயெட்டு மிஃதின்ன தின்னதெனவே.

போகத்தில் வருசுகம் விடயசுக நித்திரைப்
போதுளது பிரமசுகமாம், மோகத்த நந்தலிற்
சுகம்வாச னைச்சுகமு மூப்பிரிய மாம்மசுகமாம்,
யோகத்தி லுளதுமுக் கியசுகமு தாசீந முற்றசுக
நிசசுகமதாம், ஏகத்தை நோக்கலத் துவிதசுகம்
வாக்கியமெ ழுந்தசுக ஞாநசுகமே. 122

இவ்வா றுரைசெயுஞ் சுகமே தங்களி னியல்
பா மவைசொல மகனேகேள், ஒவ்வா நாவினி
னுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சயநம துறநே
ரம், செவ்வா மாமக முகமா மதிவொளிர் சித்தின்

சுகிழல் சேருங்காண், அவ்வா றிவனுள மகிழ்வா
மநுபவ மதுதான் விஷயசு காநந்தம். 123

ஈனந் தருசுக விடயந் திரிபுடி யிடரா மென
மந மசையாமல், சோநந் தனதுரு வாயந் தனில்
விழு செயல்போ னித்திரை செறிசீவந், தானந்
தமில்பா னுடனென் றுவனொரு தனையல் லது
பிற நினையாமல், ஆநந் தமயனா மாவன் சுகமிரு
மதுதா னுயர்பிர மாநந்தம். 124

தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப்
பொருள்விழி துயில்வோர்கள், தாங்கும் மலரணை
நன்றா கச்சிலர் சம்பா திப்பது தானாகம், தீங்குந்
தன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா
தமளிசெய் பொழுதேபோல், ஆங்குள் வெளிகளு
மறியா வநுபவ மதனா லதுபிர மாநந்தம். 125

உதவும் புவியினி லொருவன் னநுபவ
மொருவன் மநதினி லுதியாதே, மதியுங் கெடுகிற
துயில்கொண் டாநந்த மயனன் றேசுக முறுகின்
றான், இதுவிஞ் ஞாந மயனுஞ் சிந்தையி னினை



வாய் வந்திட லழகன்றே, சுதைவிண் ணோர்புகழ்
குருவே நீரிது சொல்லீர் சகலமும் வல்லீரே. 126

நெய்யும் வெண்ணெயு மிருபேர் களுமறி
நினைவிற் பிறிவறி வினிலில்லை, செய்யுங் கனவினி
லிறுகும் மநமொடு சேருஞ் சின்மய விஞ்ஞாநன்,
நையுந் துயர்மந நழுவும் பொழுதுணர் ஞானச் சுக
முறு மாநந்தன், பெய்யுந் துளிகளு நீருங் குள
மொடு பாகும் போலிவர் பிறிவன்றே. 127

ஒன்றா கியபிர மாநந் தச்சுக மொழிவா
னேன்வெளி வருவானேன், என்றான் முன்
செய்த கருமம் வெளியினி விழுக்குஞ் சுழுத்தி
விட் டெழுந்தோனும், நன்றா யினசுக மகலான்
வெளியினு நடவான் மறதியும் பெறமாட்டான்,
அன்றா மெனவிருந் துறங்குஞ் சிலகண மதுவே
வாதனை யாநந்தம். 128

அந்தக் கணமுட லகமென் றிடர்களி லலைந்
தே சுகந்தனை மறந்தேபோம், முந்தைச் செயும்
வினை சுகதுக் கந்தரு மோகந் தருநவ வடிவே

காண், எந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந்
தே னெனலநு பவமாகும், இந்தப் படிதனு தாசி
ஈச்சுக மிதுவே நிசமெனு மாநந்தம். 129

நிசமா னதுமுக் கியமோ குடத்துள நீரன்
றேவெளி யீரந்தான், வசமா வகங்கா மறைந்தா
னிசமது படிந்தான் முக்கிய வகையாகும், திசை
யார் இரிசய மறியா தேதுயில் செறியா தேயுட
றறிபோலே, அசையா தேமதி சமமா கியநிலை
யதுதான் முக்கிய வாநந்தம். 130

மநுடன் மநுடகந் தருவன் றேவநன் மாகந்
தருவெனுண் பிதிரோடே, பனுமா ஜாநர்கள் கரு
மத் தேவர்கள் பகர்முக் கியரிந் திரனுசான், கன
மார் பிரஜா பதியென் விராட்டுபொன் கர்ப்பப்
பிரமனென் றின்னோர்கள், பினவா நந்தங்க
ளுளையாம் பிரளய வெள்ளக் கடல்பிர மாநந்தம்..

எவனு மிலுமிக்தத் துரியா தீதத்தி லேழாம்
பூமியி லிருந்தானேல், அவனு ஈதன்சுகன் சிவன்
ஊ லயன்முத லறிவோ ஈநுபவ சுகபோதம்





விவகா ரதிர்சய மிதுவே யநுபவ மெனமுன்
சொல்லிய விவகாரி, உவமா நமுமறி மகனே யவ
னடி யுதிரும் பொடிகனென் முடிமேலே. 132

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினோம் வித்
தைசுக மினிமேற் சொல்வோம், முந்தமா யையுஞ்
சச்சி தாநந்தப் பொருளுமே மொழியும் போதில்,
அந்தமா மத்துவித சுகமாந்ம சுகமிரண்டு மங்கே
சொன்னோம், தொந்தமாற் றியமகனே யின்ன
முனக் கையமுண்டேற் சொல்லு வாயே. 133

குகன்றனையு மெனையுமுல கினையுமீன்
றளித்தருளுங் குருவே கேளீர், புகன்றசச்சி
தாநந்தப் பதங்கடனித் தனியாகிப் பொருள்வே
றானல், உகண்டமந முறைப்பதெங்ஙன் பரியாய
பதங்களைப்போ லுறவு காணேன், அகண்டமா
யொருசுவையாய்த் தேனீக்கூட் டியமதுவா யறி
விப் பீரே. 134

குளிரினகல் வெண்மையென்ற பதங்களினு
னீர்மூன்று கூறு யிற்றே, ஒளிதவநஞ் செம்மை

யென்ற பதங்களா லக்கியு மொருமூன் றாமோ,
வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட னெனப்
பிரித்து விலக்கி வேதம், எளிதறிய மூன்மொ
ழிந்த சத்தாதி யெனும்பிரம மேகந் தானே. 135

நித்தியம்பூ ரணமேகம் பரமார்த்தம் பரப்பிரம
நிதானஞ் சாந்தம், சத்தியங்கே வலந்துரியஞ் சமக்
திருக்குக் கூடஸ்தன் சாட்சி போதம், சுத்தமிலக்
கியஞ்சநா தனஞ்சீவன் றத்துவம்வின் சோதி யாக்
மா, முத்தம்விபு சூக்குமமென் றிவ்வண்ணம் விதி
குணங்கண் மொழியும் வேதம். 136

அசலநிரஞ் சநமமிர்த மப்பிரமே யம்விமலம்
வசநா தீதம், அசடமநா மயமசங்க மதுலநிரந் தர
மேநா சரம கண்டம், அசமநந்த மவிநாசி நிர்க்
குணநிட் களநிரவ யவம நாதி, அசரீர மவிகார
மத்துவித மெனவிலக்கா மநேக முண்டே. 137

இன்னவகை விதிவிலக்குக் குணங்களைன்
றாய்ச் சேர்ந்தொருமித் தெல்லாங் கூடிச், சொன்
னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை யொரு





பொருளைச் சொல்லுஞ் சொற்கள், பிந்நபத மாமத
னாற் சத்தாதி குணப்பொருளாம் பிரம மேகம்,
அன்னபொரு ளொருமையறிந் தகண்டபரி பூரண
மா யாவாய் நீயே. 138

நிர்க்குணவத் துவின்குணங்க ளுரைப்பது
தாய் மலடியென நிகரென் றோதே, சற்குணனே
வத்துநிலை யுரையாம லறியவல்ல சதுர ருண்டோ,
நற்குணமே தங்களிந்தச் சீவன்முத்தி பெறப்பிரம
ஞானந் தோன்றச், சொற்குணங்கள் பிரமத்தின்
குணங்களன்று பிரமமாஞ் சொரூபந் தானே. 139

மோகவிருள் கெடக்கோடி யருணனென
வருகுருவே மொழியக் கேளீர், ஏகபரி பூரணமா
மென்சொருப மென்னுளத்தி லிறுகும் வண்ணம்,
ஆகமங்கள் சொன்னபடி யென்னையகண் டார்த்த
மா வறிந்தே னையா, ஊகமுமொத் திடவுரைத்
தாற் பசுமரத்தி லாணிபோ லுறைக்கு நெஞ்சே.

சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்தா
னாற் சாட்சி யெங்கே, சித்தேசத் தாகுமய

வெளிற்சடமாஞ் சடங்களுக்குத் திதியுமில்லை,
ஒத்தேதோன் றியசத்துஞ் சித்துநல்ல சுகமாகு
ஜகத் துக்கோர், வித்தேயங் கியமாகிற் சடமசத்
தாஞ் சுகாநுபவம் விளைந்தி டாதே. 141

வீயாத சத்துமுன்னம் விளங்குவது தன்னா
லோ வேறொன் றாலோ, வாயால்வே றெனிலதுவு
மசத்தோசத் தோவசத்தேன் மலடி மைந்தன்,
பேயாகா ரியஞ்செயுமோ சத்தெனவிப் படியதை
யும் பிரித்துச் சொன்னால், ஓயாத வவத்தையாங்
குதர்க்கவிகற் பங்களைவிட் டொழிந்தி டாயே. 142

சுருதியுத்தி யொத்ததுபோ லநுபவமுங்
கேள்சுழுத்திச் சுகவா நந்தம், மிருதிவடி வாதலி
லவ் வாநந்த மேயறிவாம் வேறங் கில்லை, கருதுபிர
ளயஞ்சுழுத்தி யிரண்டிலுநீ யிருந்திருளைக் காண்
கின் றாயே, இருதயத்திப் படிநோக்கி யேகபரி
பூரணமா யிருந்தி டாயே. 143

பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவ
னுமநு பவம்வி டாமல், பலமலரின் மதுப்போலே



சச்சிதா நந்தமொன்றாம் பரமார்த் தத்தைப், பல
பொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்
துப் பார்த்த போது, பலவடிவாஞ் சராசரித் திரங்
களெலாந் தோன்றுமொரு படமா னானே. 144

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே
விநோதமின்றி யினிவே றுண்டோ, அதையு
ரைத்து மதைநினைத்து மிருப்பதன்றோ ஞானி
களுக் கான நீதி, முதலுரைத்த துரியாதீ தமுமே
ழாம் பூமியுமுக் கியமா மென்ற, பதமுமதின் வகை
யுமெனக் கெளிதாகத் தெளியும்வண்ணம் பணித்தி
டீரே. 145

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூ
மிகளே ழென்பார், இனியவற்று ளஞ்ஞான பூமிக
ளே ழையுமுந்தி யியம்பக் கேளாய், தனிவித்துச்
சாக்கிரஞ்சாக் கிரமகா சாக்கிரஞ்சாக் கிரத்தைச்
சார்ந்த, கனவுகனாக் கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்
றெழுபேர் கணித்தார் மேலோர். 146

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திர
மதுதான் முதல்வித் தாகும், இந்தவறி விற்பன்

டில் லாவகந்தை மூளைபோலா மிதுந நாவாம்,
வந்துவந்து பிறவிதொறு மகமமதை வளருமது
மகாந நாவாம், நந்துமகங் கொடுநவின் மநோ
ராச்சி யஞ்செயலே நநாக்க நாவே. 147

உண்டுறங்கி மநோராச்சி யஞ்செயல்சொப்
பநமெனும்பே ருடைய தாகும், பண்டுகநாக் கண்டு
மறந் தலைமீண்டு நினைப்பதுசொப் பநந நாவாம்,
மண்டுமிருண் மூடுவது சுழுத்தியா மஞ்ஞாந
வகைகள் சொன்னோம், விண்டுவிறை முத்திதரு
ஞாநபூ மிகளேழும் விளம்பக் கேளாய். 148

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சைவிசா ரணை
யிரண்டாம் பூமி யாகும், நலதநுமா நசிமூன்றும்
பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி, சொலுமசம்சத்
திப்பேரும் பதார்த்தாபா வனைப்பேருந் துரியப்
பேரும், மலிநமறு மகனேயைந் தாறேழு பூமிகளா
வருத்தார் மேலோர். 149

துர்ச்சங்க நிவிர்த்திவந்து சிவஞாநம் விரும்பு
வது சுபேச்சை யாகும், நற்சங்க மொழிவினவி



ஞாநநூல் பழகல்விசா ரணையா நம்பி, முற்சங்க
வேடணைகள் விடறநுமா நசியிந்த மூன்றி னாலும்,
சற்சங்க மாநிலுண்மை யறிவுதித்தல் சத்துவா
பத்தி தானே. 150

தத்துவத்தின் மநமுறைத்து மித்தையெலா
மறத்தலசம் சத்தியாகும், அத்துவிதா நந்தம்வருந்
திரிபுடிபோம் பதார்த்தபா வனைய தாகும், வத்து
நிலை யிருந்தபடி யிருந்தமௌ நசுபாவந் துரிய
மாகும், இத்துரிய பூமியைமுன் றுரியாதீ தப்பத
மென் றதுவுங் கேளாய். 151

முற்புவிமூன் றினுமுலகந் தோன்றுதலாற்
சாக்கிரமா மூன்றற் கப்பால், சொற்பநமா மதுவு
மென்ன நழுவுமைந்தாம் பூமியே சுழுத்தி யாகும்,
அற்புதமாஞ் சுகாநுபவ மிகுமாறும் புவிதுரிய
மதற்கப் பாலோர், கற்பனையி லாதவிட மிதீத
மென்று மௌநமாக் காட்டும் வேதம். 152

துரியநிலந் தனைத்துரியா தீதமெனின் மயக்
கமென்று கருதி மேலோர், அரியதொரு விதேக

முத்தி யதீதமென்பா ரதுகணக்கி லாறும்பூமி, மருவுசுழுத் தியிற்காட்சி சுழுத்தியென்பா ரொன் பதுநீ மநத்திற் கொள்வாய், பெருமைதரு ஞானபூமியின்விகற்ப மின்னமுண்டு பேசக் கேளாய்.

முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள் வான்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேதமாகும், சொன்ன நடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந் தூய முத் தர், இன்னமுமப் பூமிகளின் பெருமைதனை நீயறிய யான்சொல் வேனே. 154

நாலாம்பூ மியல்வருமுன் மூன்றுபூ மியு மடைந்து நடந்து மாண்டோர், மேலான பத மடைந்து பிறந்துமெள்ள மெள்ளவந்து வீடு சேர் வார், மாலான பவத்தில்விழார் முதற்பூமி யிடைப் பதுவே வருந்த மைந்தா, காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே. 155

இப்புவியி லிஞ்ஞாந பூமியொன்றி லிரண்டி லடைந் திருந்தா ராகில், அப்புருடர் மிலேச்சரா



கிலுமுத்தர் குருபாதத் தாணை மெய்யே, தப்புரை யென் றவர்கெடுவார் நடுவான மறைகளைநீ சங்கி யாதே, செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென் றிருந்து தெளிந்தி டாயே. 156

பொல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞான பூமி யென்று, செல்லாகி முளைக்குமெ னைத் தண்டுலமாக் கியகுருவே நீர்சொன் னீரே, இல்லாளுங் குடும்பம்விட்டுச் சந்நியா சம்புகுந்தே காங்கி யானோர், அல்லாமன் முத்திபெறா ரென்று சிலர் சொலுமயக்க மகற்று வீரே. 157

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கைகன்று தெரியக் கேளாய், கட்டழியுந் துறவுநால் வகை யாகு மவைகளுக்கங் காகும் பேர்கள், பட்டதுயர் கெடுங்குடீ சகம்வெகூ தகமம்சம் பரம வம்சம், விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றி வேட மன்றே. 158

மந்தமுந்தீ விரமுந்தீ விரதரமு மெனமூன்று வகைவி ராகம், வெந்துயரம் வரும்பொழுது குடும்

பத்தை வெறுத்துவரும் விராக மந்தம், இந்தவுடலளவுமனை தாம்வேண்டா மெனவிடறீ விரமென்பார்கள், அந்தணனூர் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்தி டாயே. 159

பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்களொன்றும் பலித்தி டாதே, தீவிரத்திற் குடீசகமும் வெகூதகமு மென்றிரண்டு திறங்க ளுண்டாம், தாவிநடந் திடத்திடமி லாதவர்க்குக் குடீசகமுஞ் சகங்க ளெங்கும், மேவிநடந் திடத்திடமுள் ளவர்க்குவெகூ தகமுமென விதித்தார் மேலோர்.

இருவகைதீ விரதரத்து மம்சனென்றும் பாமாம்ச னென்றுஞ் சொல்வர், வருமம்ச னுக்கு முத்தி சத்தியலோ கத்தன்றி வாரா தென்பார், பரமாம்ச னுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்கு மென்பார், திரமருவும் பரமாம்சன் றானு மிரு வகையாகச் செப்பக் கேளாய். 161

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவரிற்சிஞ் ஞாசு, மெய்ஞ்ஞான பூமியின்முன் மூன்



றுபூ மியுணடக்கும் விவேகி யானோன், சுஞ்ஞானவானென்போன் சீவந்முத்தி யடைந்திருக்குந் தூய மேலோன், அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய். 162

பந்தமனை துறந்துசில ரதிதிகளா யிருந்தடைவர் பரம ஞானம், அந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர் ஞானம், இந்தவகைச் சாத்திரத்து மூலகத்து கடப்பதுகண்டிருந்து மைந்தா, சிந்தனையின் மயக்கமென்னே சுருதியுத்தி யநுபவத்தாற் றெளிந்தி டாயே. 163

பிறந்ததுண் டானு லன்றோ பிறகுசா வதுதா னுண்டாம், பிறந்ததே யில்லை யென்னும் பிரமமா வதுவு நானே. பிறந்தது நானென் றாகிற் பிரமமன் றந்த நானே, பிறந்தது மிறந்த தற்ற பிரமமா நானே நானே. 164

நானென்ற பிரம மான நானேநா னறிவே னென்றால், நானென்ப தேது பின்னை நம்முடைப் புந்தி யென்னில், தானது மயக்கந் தன்

னிற் சாகுமே சாவா தாகி, நானென நிறைந்தி
ருந்த ஞாநமா நானே நானே. 165

நிறைந்தவா றெந்த வாறு நிலைதெரிந் தில
னென் றாயேல், அறிந்ததாஞ் சுழுத்தி தன்னி
லாநந்த மதுவே யாகும், குறைந்ததற் கானந் தந்
தான் குவலயந் தன்னி லில்லை, நிறைந்ததே யிந்
வாந்மா நிதாநமிவ் வறிவு தானே. 166

மநத்தினா லெண்ணித் தானே வந்தவிவ்
வுலக மாகும், நினைத்திடி லநேக லோக நிற்பதவ்
வறிவி லன்றோ, அனைத்தையுங் கடந்தப் பாலு
மந்தமற் றறிவி தாமென், றெனைத்தனி விசாரித்
திட்டா லேகமாய் நிறைந்தோ னானே. 167

அந்தவா றிருந்து கொண்டே யாநந்த மநுப
விக்க, எந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது
தெரியு மென்னில், இந்தமூன் றவஸ்தை தம்மு
ளெழுந்திடும் விருத்தி நீக்கில், அந்தவா றிருந்து
நீயு மாநந்த மடைய லாமே. 168



வாதநா வசத்தி னாலே வருகிற விருத்தி
யெல்லாம், எதினா லடக்க லாகு மென்றுதான்
விசாரஞ் செய்யில், போதமா மிராசன் றானாய்ப்
புந்தியைம் புலன்க ளெல்லாம், தாதரா யிருக்கப்
பெற்றாற் சகலமு மடங்குந் தானே. 169

விருத்திக ளடக்க வின்னம் விநோதமாம்
யோகத் தாலே, திருத்திபோ லூது மூச்சைச்
சுகமுட னடக்கி நிற்கும், கருத்ததற் கில்லை
யென்னிற் காரண சரீர மாகிப், பெருத்ததோ
ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே.

காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வா
றென் றோதில், ஆரணம் பொய்சொல் லாதே
யதன்பொரு ளகத்தி லுய்த்துப், பூரண மாகு
மென்மேற் புவநங்க டோற்ற மென்று, தாரணை
வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே. 171

அப்படி யிருக்கச் சித்த மலைதலால் விவகா
ரத்தில், எப்படி கூடு மென்னி லென்னைவிட்
டொன்று மில்லை, இப்படி கண்ட வெல்லா மென்

மயமென்க னாப்போல், கற்பித மென்று தானே
காண்கின்ற சித்து நானே. 172

சித்துநா னிறைந்தோ னென்ற திடமற
வாதி ருந்தால், எத்தனை யெண்ணி னாலு மேது
செய் தாலு மென்ன, நித்திரை யுணர்ந்த பின்பு
நிற்கின்ற கனாவே போல, அத்தனை யும்பொய்
தானே யானந்த வடிவு நானே. 173

நானென வுடலைத் தானே நம்பினே னநேக
சன்மம், ஈனராய்ப் பெரியோ ராகி யிருந்தவை
யெலாமிப் போது, கானலில் வெள்ளம் போலக்
கண்டுசற் குருவி னாலே, நானென வென்னைத்
தானே நம்பியீ டேறி னேனே. 174

என்னபுண் ணியமோ செய்தே னெதுபாக்
கியமோ காணேன், நன்னிலந் தனிலெ ழுந்த
காரணன் கிருபை யாலே, தந்நிய னானே னானுத்
துரீயத்தை வீசு கின்றேன், தந்நிய னின்று
நானே தாண்டவ மாடு கின்றேன். 175



தத்துவ ஞானம் வந்த சந்தோட வதிச யத்
தால், நித்தமா னென்கா னென்ற நிலைமுன்ன
மேய நீந்த, சத்திய மதனா லன்றோ தாண்டவா
வென்ற ழைத்தார், அத்தனை மகிமை யுள்ளோ
னன்னையும் பிதாவுந் தாமே. 176

வந்ததோ ரிவ்வா னந்த மகிழ்ச்சியா ருடன்
சொல் வேன்யான், சிந்தையி லெழுந்து பொங்கிச்
செகமெலா நிறைந்து தேங்கி, அந்தமில் லாத
தாயிற் றப்படிக் குருவே தாந்த, மந்திர மருளு
மீசன் மலரடி வணங்கி னேனே. 177

வித்தியா னந்த மிந்த விதமென விளம்பி
னோமே, பத்தியா லிந்த நூலைப் பார்த்தது
பவித்த பேர்கள், நித்திய தரும நிட்டை நிலை
தனை யறிந்து சீவன், முத்தியை யடைந்தி ருந்த
முனிவர ராகு வாரே. 178

ஆரணப் பொருளாம் வித்தி யானந்தம்
விளங்க வேதும், காரணங் குறைவி லாமற் கை
வல்ய நவநீ தத்தைப், பூரண மாக்க வேண்டிப் பூர்

வமா னன்னி லத்தில், காரண குருந மக்கு நவில றனர் யோகில் வந்தே. 179

குலவுசற் குருவின் பாதக் குளிர்புனற் றலை மேற் கொண்டால், உலகினிற் றீர்த்த மெல்லா முற்றபே றடைவார் போல, நலமையா குங்கை வல்ய நவநீத நூலைக் கற்றோர், பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய் வாழ்வார். 180

சந்தேகந் தெளிதற் படலம் முற்றிற்று.

கைவல்ய நவநீதம் முற்றுப் பெற்றது.

படலம் இரண்டிற்குச் செய்யுள் 281.

பாயிரச் செய்யுள் 7, மொத்தம் செய்யுள் 288.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்